லட்சிய பூமி

MUNICIPAL HIGH SCHOOL
PALNI

ஏ.பீ.கத்ரி (ஜூனியர்)



வ
போர்ட்லண்ட்
கொலம்பியா நதி
ஆரிகன்
மிசௌரி நதி
பிளேட் நதி
இண்டிப்பெண்டன்ஸ்
ஓகையோ நதி
மிசிசிப்பி நதி
பசிபிக் பெருங்கடல்
அட்லாண்டிக் பெருங்கடல்
0 200 400 600 மைல்
ஆரிகன் தடம்

ஐக்கிய அமெரிக்கா

லட்சிய பூமி

(THE WAY WEST)

ஆசிரியர்

ஏ. பி. கத்ரி (Jr.)

தமிழாக்கம்

கே. எஸ். ஜம்புநாதன்

PRINTED AND PUBLISHED BY
THE DIOCESAN PRESS, MADRAS
1953

லட்சிய பூமி

1. ஆசை

வானம் வெளி வாங்கிக் கிழக்கு வெளுத்தது. இரவு பெய்த மழையினால் எங்கு பார்த்தாலும் நசுநசுப்பு; சமையல்கட்டிலும் மற்ற இடங்களிலும் ஈரம் பாய்ந்து சாமான்கள் நனைந்திருப்பதைக் கண்டான் விஜி இவான்ஸ். சேணத்தைச் சீர்படுத்தல், ஆயுதங்களைத் தீட்டுதல் என்று பலபல வேலைகள் இருந்தும் அவனுக்கு வேலை ஓடவில்லை. அவன் சோம்பேறியல்ல; ஆனாலும் அவனுக்கு வேலைமீது கவனம் செல்லவில்லை.

"ரெபெக்கா" என்று மனைவியைக் கூப்பிட்டான் விஜி. "ஒரு வேளை நான் டவுனுக்குப் போகக்கூடும்" என்றான்.

"அரிகானைப்பற்றித் தகவல் தெரிந்துகொள்ளத் தானே?" என்று கேட்டாள் அவள்.

"ஏன் அப்படிக் கேட்கிறாய்? எதைப்பற்றியும் நான் சிந்திக்கவில்லை" என்றான் அவன்.

அர்த்தபுஷ்டியுடன் அவள் தன்னை உற்றுப்பார்ப்பதை அவன் கவனித்தான். ஆனால் அந்தப் பார்வையை அவன் லட்சியம் செய்யவில்லை. அவள் எப்போதுமே அப்படித்தான்.

"எல்லாருக்குமே ஏன் இப்படிப் பைத்தியம் பிடித்திருக்கிறதோ தெரியவில்லை. ஒவ்வொருத்தரும் அரிகானைப்பற்றித்தானே பேசுகிறார்கள்!" என்றாள் அவள் வியப்புக் கலந்த குரலில்.

"ஒவ்வொருவரும் என்று சொல்லாதே. ரொம்பப் பேர் ஒன்றுமில்லை" என்று இடைமறித்தான் விஜி.

"வெறுங் கூத்தாகப் போய்விடப்போகிறது, பாரேன்" என்றாள் அவள்.

இவான்ஸ் அதை ரசிக்கவில்லை. பேச்சைமாற்றும் தோரணையில் நட்டநடுவில் படுத்திருக்கும் நாயைப் பார்த்துக்கொண்டே "நல்ல நாய்தான்—நம்முடைய ராக்"—என்றான்.

ராக் என்ற பெயரைக் கேட்டதும் நாய் தலை நிமிர்ந்து பார்த்தது. மெள்ள எழுந்துவந்து அவனுடைய மடியில் தலையைச் சாய்த்துக்கொண்டது. வேட்டைநாய் வம்சத்தைச் சேர்ந்த இருசாதிப் பிறவியான அந்த நாய் நீலமும் வெளுப்பும் கலந்த வர்ணத்துடன் அழகாகத்தானிருந்தது. "இதற்கும் வயசாகி விட்டது" என்று சொல்லித் தட்டிக்கொடுத்தான் லிஜி.

அவனுடன் வெளியே கிளம்பத் தயாராக இருப்பதுபோல சோம்பல் குறித்துக்கொண்டு நாய் எழுந்தது. "நீ கிளம்பாதே, தம்பீ, டவுனிலிருக்கிற நாய்கள்மீது பாய்ந்து பிடுங்கிவிடுவாயே" என்று சொன்னான் இவான்ஸ்.

அவனுடைய வார்த்தையை நாய் புரிந்துகொண்டதோ என்னமோ; ரெபெக்கா சொன்னாள்: "என்னமோ எனக்கு நம்பிக்கையில்லை. அரிகானுக்கு நீ போவாய் என்று தோன்றவில்லை. . . ."

"பெக்கி, நீயாக எதையாவது சொல்லிக்கொண்டிருக்காதே" என்று குறுக்கிட்டான் இவான்ஸ்.

அவள் முணுமுணுக்க ஆரம்பித்தாள். பேச்சு வார்த்தை தடித்துவிடும் என்று இவான்ஸ் பயப்பட்டான். அவளுடைய கனத்த மார்பகமும் முரட்டு சரீரமும், சண்டைக்காரியோ என்று சந்தேகப்படும்படியான தோற்றமளித்தாலும், அவள் இவான்ஸுடன் இணங்கிப் போகக்கூடிய செளஜன்ய சுபாவமுள்ளவள்தான்.

"ப்ரௌனியும் என்னுடன் வருகிறான், கேள்" என்றான் இவான்ஸ்.

"மீன்பிடிக்கப் போகிறான் போலிருக்கிறது. தூண்டில் புழு சேகரித்துக்கொண்டிருக்கிறான்."

"நல்ல காரியம்தான்."

"உன்னையேதான் உரித்துவைக்கிறது. உன் குணத்திலே பாதி அவனுக்கும் இருக்கிறது" என்றாள் அவள், அவனை ஊடுருவிப்பார்த்துக்கொண்டே.

இவான்ஸ் சிரித்துக்கொண்டான். எப்போதுமே அவனை மட்டம் தட்டுவதில் அவளுக்குத் திருப்தி. அதையும் அவன் ரசிப்பதுண்டு. "அரிகான் நல்ல செழிப்பான பூமியாம். அங்கே குடியேறுவது அமெரிக்காவுக்கு—நம்முடைய நாட்டுக்கு—உதவி செய்வதாகும். அங்கே நல்ல வேட்டை கிடைக்கும்; ஏராளமாக மீன் கிடைக்கும். இங்குபோல, முயல்களையும், குழிக் காடிகளையும் வேட்டையாடித் திண்டாடிக்கொண்டிருக்க வேண்டாம். ப்ரௌனியும் அங்கு வருகிறானாம்" என்றான் அவன்.

"முன்னால் சொன்னதுபோது, செழிப்பான பூமி என்றுதானே சொன்னாய்?" என்று கேட்டாள் ரெபெக்கா.

"அப்படி ஒன்றும் வளமான தேசமில்லை என்கிறான் டிக் ஸம்மர்ஸ். அங்குள்ள இந்தியர்களும், கம்பிளித் தோலுள்ள வேட்டை மிருகங்களும்தான் அவனை வசீகரித்துவிட்டன. பயிரிடுவதைப்பற்றி பிரமாதமாக அவன் எண்ணவில்லை."

"எதற்கும் அவனைப்பார்த்து விபரம் தெரிந்துகொள்ளவேண்டும். அவனுடைய மனைவிமாட்டி நோய் வாய்ப்பட்டு ரொம்ப பலவீனமாக இருக்கிறாள்" என்றாள் ரெபெக்கா.

வாசற்கதவைத் தள்ளிக்கொண்டு ப்ரௌனி உள்ளே நுழைந்தான். அவனைப் பார்த்ததும், "நகரத்துக்கு வருகிறாயா, தம்பி" என்று கேட்டான் இவான்ஸ்.

"இல்லை அப்பா, நான் மீன்பிடிக்கப்போகிறேன்."

"சரி" என்றான் இவான்ஸ். அவன் ப்ரௌனியை ஒருமுறை பாதாதிகேசம்வரைப் பார்த்தான். "கொஞ்சம், உடம்பில் சதைப்பிடிப்பு ஏற்பட்டுவிட்டால், நீ நன்றாகத்தான் இருப்பாய்" என்றான். கூச்சமும், பயமும் தெளிந்துவிட்டால் பையன் நன்றாக வளர்ந்துவிடுவான். இதுதான் புத்திமாறும் வயசு. சரியான பயிற்சி கொடுத்தால் மாற்றிவிடலாம்—இப்படித்தான் அவன் நினைத்தான்.

ரெபெக்கா கதவைத்திறந்து இவான்ஸை வழியனுப்பத் தயாரானாள். அவன் எழுந்து வெளியே வந்தபோது, ரெபெக்கா சொன்னாள்: "மறுபடியும் சொல்கிறேன். எதையும் யோசித்துச் செய், விஜி—நீ இளமை ததும்பும் வாலிபன் இல்லை என்பது நினைவில் இருக்கட்டும்" என்று.

"இல்லைதான். ஆனால் நான் கிழவனாகிவிடவில்லை, பெக்கி. எனக்கு இப்போதுதான் முப்பத்தைந்து வயதாகிறது."

தொழுவத்துக்குச் சென்று கோவேறு கழுதைக்குச் சேணமிட்டுப் பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்தான் அவன். பக்கத்திலுள்ள இன்டிபெண்டென்ஸ் என்ற நகரம் அங்கிருந்து ஆறு மைல் தூரத்திலிருந்தது. வெயிலேறுந் தருணத்தில் அவன் அங்கு போய்ச் சேரமுடியும். அரிகானுக்குப் புறப்படத் தயாராக இருக்கும் கோஷ்டியில் தானும் சேர்ந்து கொள்ள முடியுமா என்பதைப்பற்றி அவனால் ஊகிக்க முடியவில்லை. மூஸோரி நல்ல பிரதேசம்; அதை விட்டு

விட்டு எங்கோ இருக்கும் அரிகான் தேசத்துக்குச் செல்ல நினைப்பது சிந்தனைக்குரிய விஷயந்தான். ஆனால் யோசித்துக்கொண்டே இருக்கக்கூடிய சந்தர்ப்பமல்ல அது. வசந்தகாலம் வரப்போகிறது என்பதற்கறிகுறியாக, மரங்களில் பசுமைதட்ட ஆரம்பித்துவிட்டது. பிரயாணத்தைப்பற்றி நினைக்காவிட்டால், ஊரிலே தங்கி விவசாயம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். வெளிதேசப் பிரயாணம் என்று நினைக்கும்போதே அவனுக்கு உற்சாகம் பிறந்தது. அந்த வளமான பூமியைப்பற்றிய கற்பனைகள் மனத்தில் இன்ப ஊற்றைப் பெருக்கலாயின.

சேற்றில் காலை அழுந்தி வைத்து மெள்ள நடந்து சென்றுகொண்டிருந்தது அவன் சவாரி செய்த கோவேறு கழுதை. பருவ காலங்களைப்பற்றியோ, இயற்கையின் மாறுதல்களைப்பற்றியோ எவ்விதமான சிந்தனையும் அதற்கில்லை. வசந்தம் வந்துவிட்டதைப் பறைசாற்றுவதுபோல கூச்சலிட்டுப் பறக்கும் செங்கொண்டைப் பறவைகளையோ, கூடு கட்டுவதற்காக இங்குமங்கும் பறந்து திரிந்து குச்சிகளைப் பொறுக்கும் கொண்டைலாத்திப் பறவைகளைப்பற்றியோ சிந்திக்காமல் அந்தக் கோவேறு கழுதை அசைந்து அசைந்து நடந்து சென்றது. அதனுடைய அமைதியான நடையைப் பார்க்கும்போது, மனிதனைவிடத் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறதோ இந்த மிருகம் என்றும் தோன்றிற்று.

தூரத்திலிருந்த நகரம் கண்ணுக்குப் புலப்பட்டது. நெருங்க நெருங்க, ஊர் ஓரமாக இருக்கும் மரக் குடிசைகளையும், இரவு பெய்த மழையினால் நசுநசுத்திருக்கும் பூமியையும், கூரையையும் விஜி பார்த்தான். தெருக்கோடியிலிருந்த கடைகளில் கூட்டம் அதிகமாக இருந்தது. சாமான்களை வாங்க வருவோரும் போகிறவர்களும் சுறுசுறுப்பாக இருந்தார்கள். ஹிச்காக்கின்

கடைவாசலில் இரண்டுபேர் நின்றுகொண்டிருப்பதை இவான்ஸ் கவனித்தான். அவர்களில் ஒருவன் இல்லி ஞய்ஸைச் சேர்ந்த டாட்லாக். அவன் எப்போதுமே காரியவாதி. ஒற்றைநாடிச் சரீரியான மற்றவன் டாட்லாக் பேசுவதைக் கேட்டுத் தலையாட்டிக்கொண் டிருந்தான்.

"டாட்லாக், சௌக்கியந்தானு?" என்று கேட்டுக் கொண்டே அவர்களை நெருங்கினுன் இவான்ஸ்.

டாட்லாக் சட்டென்று திரும்பினுன். "ஓ, இவான்ஸா, வந்தனம் அப்பா" என்றுன்.

இவான்ஸ் பக்கத்திலிருந்த தூண் ஓரமாக கோவேறு கழுதையை ஓட்டி அணைத்தான். கீழே இறங்கி, தூணில் கழுதையைக் கட்டினுன். பிரயாணம் செய்த தினுல் அவனுடைய கால் மரத்துப்போயிருந்தது. காலை வருடிவிட்டுக்கொண்டு, முழங்காலை அமுக்கிக் கொண்டான். பிறகு டாட்லாக்கிடம் சென்றுன்.

"இவன்தான் ஹென்ரி மக்பி, இதோ இவன்தான் இவான்ஸ்" என்று பரஸ்பரம் அறிமுகம் செய்துவைத் தான் டாட்லாக். "பிறகு, மக்பி அரிகானுக்குச் செல்லு கிறுன். என் அப்படித்தானே, நிச்சயந்தானே?" என்று கேட்டான் டாட்லாக்.

"நான் எதுவும் முடிவாகச் சொல்வதற்கில்லை" என்றுன் மக்பி.

"மக்பி, உனக்கு எந்த ஊர்?" என்று கேட்டான் இவான்ஸ்.

"தெற்கு ஓஹியோ. சின்சினுட்டி என்றுகூடச் சொல்லலாம்."

"ரொம்ப துணிச்சலான பேர்வழி" என்றுன் டாட்லாக்.

மக்பி சிரித்தான். "ஆமாம் திடீரென்றுதான் முடிவு செய்தேன். அங்குள்ளவைகளை விற்று எடுத்துக்கொண்

டேன். பெண்டாட்டி, பிள்ளைகளை ஒரு படகில் ஏற்றிக் கொண்டு நானே தண்டு வலித்துக்கொண்டுக் கிளம்பி விட்டேன். அரிகான் வாழ்க, எங்கள் முயற்சி வெல்க'' என்றான் உத்சாகத்துடன்.

இவான்ஸ் மௌனமாகத் தலையசைத்தான். அந்தப் பொன்னாட்டைப்பற்றிய எண்ணங்கள் மனத்தில் சுழல ஆரம்பித்தன. "வாருங்கள், கொஞ்சம் தாகசாந்தி செய்துகொள்ளலாம்'' என்றான் இவான்ஸ்.

"நான் குடிப்பதில்லை'' என்றான் டாட்லாக். இவான்ஸும் மக்பியும் கடைக்குள் சென்றார்கள். அங்கே விதம்விதமான மணம் கிளம்பி மூக்கைத் துளைத்தது. பச்சைத் தோல் நாற்றம், கீழே சிந்திக் கிடக்கும் சாராயத்தின் நெடி, திறந்து கிடக்கு பெட்டியிலிருந்து வரும் புதுத்துணி வாசனை, டின் நெய்யின் மணம்!

"ஹிச்காக், சாராயம் ஊற்றித் தருகிறாயா?'' என்றான் இவான்ஸ்.

"புத்திசாலித்தனமான கோரிக்கை. ஆண்டவன் அருள்புரியட்டும்'' என்று சொல்லிக்கொண்டே ஹிச்காக் இரண்டு கிளாஸ் டம்ளர்களில் சாராயத்தை ஊற்றி அவர்களிடம் நீட்டினான். தானும் ஒரு கிளாஸ் சாராயம் எடுத்துக்கொண்டான். அதன் கிரயத்தையும் இவான்ஸிடமிருந்து வசூலித்துவிடலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு.

"அரிகானைப்பற்றி நினைக்கும்போதே ஓர் ஆசை தோன்றுகிறது. நம்பிக்கை கிளைக்கிறது'' என்று ஆரம்பித்தான் மக்பி.

ஹிச்காக் பெட்டியில் சாய்ந்துகொண்டே, "அது வெறிநாய் கடி மாதிரிதான். அரிகான் பைத்தியம்—அதுதான் வெளிநாட்டைப்பற்றிய ஆசை—பிடித்து விட்டால் அவ்வளவுதான்....'' என்றான்.

“அப்படியானால் அரிகான் செல்கிறது சரியில்லை என்று எண்ணுகிறாய்? வாய்ப்புக் கிடைத்தாலும் நீ கிளம்பமாட்டாயே?” என்று கேட்டான் மக்பி.

“குடிப்பதற்கு இங்கே விஸ்கி கிடைக்கும் வரையில் இடத்தைவிட்டு அசைவானா?” என்றான் இவான்ஸ்.

ஹிச்காக், அவனை வெறித்துப் பார்த்தான். “ஏன் அப்பா, இந்த மூஸோரி நாட்டுக்கு என்ன குறைச்சல்! நம்முடைய ஜனங்களுடன் வாழ்கிறோம். வேண்டிய அளவுக்கு உணவும் வசதிகளும் இருக்கின்றன.”

“நீ இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அந்த நாடு பொன் கொழிக்கும் பிரதேசம்” என்றான் மக்பி.

“வேண்டாம் வேண்டாம் ஹிச்காக், நீ கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு வழிகாட்டியாகக் கிளம்பிவிடாதே. மற்றவர்கள் அங்குபோய் குடியேறட்டும். நீ சாவகாசமாக, பணக்காரனாகி விடவேண்டும் என்ற ஆசை உந்த உன்னுடைய சாராயப் பீப்பாயை எடுத்துக்கொண்டு, அங்கு வந்து சேர்” என்றான் இவான்ஸ்.

“வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்கள் உண்டு, விஜி, மளிகைக் கடை வைத்துவிடுவது சுலபமல்ல. துப்பாக்கியிலுள்ள குதிரைமீது கைவைத்துக்கொண்டு எச்சரிக்கையாக இருப்பதுபோலக் கண்ணும் கருத்துமாக சுறுசுறுப்புமாக இருக்கவேண்டும்” என்றான் ஹிச்காக்.

வாசற்கதவு கிரீச்சிட்ட சப்தம் கேட்டு இவான்ஸ் திரும்பினான். கதவைத் தள்ளிக்கொண்டு இருவர் பின் தொடர டாட்லாக் உள்ளே வந்துகொண்டிருந்தான்.

“இவான்ஸ், நண்பர்களுடன் கைகுலுக்கு, இவர் தான் சார்லஸ் பெயர்மன். இதோ இவர்தான் கர்டிஸ் மாக். தோழர்களே, இந்த நண்பர் பெயர் ஹென்றி

மக்பி” என்று பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தான் டாட்லாக்.

எல்லோரும் கைகுலுக்கிக்கொண்டார்கள். சார்லஸ் இளம் வயதினன்; கர்டிஸ் வயசானவன்.

“இவர்களிருவரும் என்னுடன் அரிகானுக்குக் கிளம்புகிறார்கள். இல்லினாய்ஸிலிருந்து மிகவும் கொஞ்சமாகவே ஆள்திரட்டியிருக்கிறேன். கூட்டம் சேர்த்துக் கோஷ்டியைப் பெரிதாக்க நான் விரும்பவில்லை” என்றான் டாட்லாக்.

“மொத்தம் நீங்கள் எத்தனை பேர்?” என்று கேட்டான் மக்பி சார்லஸைப் பார்த்து.

“என் மனைவியும் பையனுந்தான்” என்றான் சார்லஸ்.

“எங்கள் குடும்பம் பெரிது. பதினேழு வயதுப் பெண் ஒருத்தியிருக்கிறாள். என் மனைவியைச்சேர்த்து ஆறுபேர் உண்டு” என்றான் மக்பி.

இதற்குள் வந்தவர்களுக்கும் சாராயம் ஊற்றிக் கொடுத்தான் ஹிச்காக். சாராயக் கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்ட சார்லஸ், “நோய்நொடியற்ற பொன்னாடு அது” என்று சொல்லிக்கொண்டே குடித்தான்.

“ஆண்டவன் அருளட்டும். ஆம் அந்த நாடு, பொன்னாடுதான். அங்கு வளமான பூமி. ஆணியை நட்டாலும் கதிராக வளரும். அங்கு வைக்கோலைச் சேகரிக்கவேண்டிய அவசியமே இல்லை என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். எதேச்சையாக ஆடுமாடுகள் மேயலாம். வருஷத்துக்கு இரண்டு ஈடு ஆடுகள் கன்று போடுமாம்” என்றான் மக்பி.

சார்லஸ் அதை ஆமோதித்தான். “புது இடம்; புது முயற்சி என்பது இருக்கட்டும். அரிகானைப்பற்றி

எண்ணும்போதே நான் செய்வதுதான் சரி என்ற உள்ளுணர்வு ஏற்படுகிறது" என்றான்.

"வாழ்க்கையும் புதிது என்று சொல்" என்றான் இவான்ஸ்.

"நீயும் எங்களுடன் புறப்பட்டுவிட வேண்டும், இவான்ஸ்" என்று இடைமறித்தான் டாட்லாக்.

"ஏன், அப்பா, இந்த முஸோரி நாட்டுக்கு என்ன குறைவு?" என்று கேட்டான் ஹிச்காக். அவனுடைய கேள்விக்குப் பதில் கிடைக்கு முன்னேயே வாசற்புறம் நிழல் தட்டவே ஹிச்காக் அந்தப் பக்கமாகத் திரும்பினான். அவனுடைய பார்வை சென்ற வழியில் இவானும் பார்த்தான். கதவைத் தள்ளிக்கொண்டு ஒரு யுவதி உள்ளே நுழைந்தாள். உள்ளே கூட்டமாக இருப்பதைக்கண்டு கூச்சம் மேலிடத் தியங்கிநின்றாள். அவளுடைய உருவமும் முகத்திலிருந்த பொலிவும் இவான்ஸின் மனசிலே கிளர்ச்சியூட்டின. சாதாரணமாகப் பார்க்கும் பெண்களுக்கும் இவளுக்கும் வித்தியாசம் இருப்பதை அவன் கவனித்தான். மிகவும் சாதாரண ஆடையைத் தொளதொளப்பாக அணிந்துகொண்டிருந்தாலும், அவளுடைய எடுப்பான சரீரமும் விம்மும் மார்பகமும் அணிந்த ஆடைக்கும் கவர்ச்சியூட்டி அவளையும் அழகாகக் காட்டின. முகம் வெளிறினாற் போலிருந்தாலும், வழுவழுப்பான கன்னங்களும், நீலோத்பலம் போன்ற கருவிழிகளும் தேனூறும் வாயும், பார்ப்பவரை மயக்குவதுடன் வாயுடன் வாய் வைத்து முத்தமிடவேண்டும் என்ற கிளர்ச்சி யூட்டுவதாக இருந்தது.

"அப்பா" என்றாள் அவள் இனிமையான குரலில்; "அம்மா உன்னைக் கூப்பிடுகிறாள்" என்றாள் தொடர்ந்து.

"முடிந்தால் வருகிறேன். போ" என்று சிடுசிடுத்தான் மக்பி.

அந்தப் பெண் மெதுவாக அசைந்து திரும்பினாள். அடிமேலடிவைத்து வாசலைத்தாண்டி வெளியேறினாள்.

"இந்தப் பெண்களே இப்படித்தான். ஏதாவது வேலை வைத்துக்கொண்டேயிருப்பார்கள். தொந்தரவு கொடுப்பார்கள். இவள்தான் என்னுடைய பெண் மெர்ஸி" என்றான் மக்பி அலுப்புடன்.

"நமக்கு ஒரு வழிகாட்டி வேண்டுமே! அதைப் பற்றி நாம் எதும் முடிவுக்கு வரவில்லையே!" என்று ஆரம்பித்தான் டாட்லாக் பேச்சைத் திருப்பும் தோரணையில்.

"ஆடம் இருக்கிறான். இல்லாவிட்டால் மீக் இருக்கிறானே?" என்று கேட்டான் மாக்.

"அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாதே?" என்றான் மக்பி.

"லாராமி கோட்டைக்கு அப்பால் ஆடம் போனதே கிடையாது" என்றான் டாட்லாக். பிறகு இவான்ஸிடம் "உனக்குத் தெரிந்தவர்கள் எவராவது இருந்தால் சொல்லேன்" என்று கேட்டான்.

"தெரியாது" என்றான் இவான்ஸ்.

டாட்லாக் சிறிது நேரம் யோசித்தான்.

அப்போது, "ஆமாம், ஒருவன் இருக்கிறான். இப்போதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. டிக் சம்மர்ஸ் சுற்றாத ஊர் கிடையாது. கண்ணை மூடிக்கொண்டு அவன் வழிகாட்ட முடியும். ஆனால் அவன் ஒப்புக் கொள்வானா என்பது சந்தேகம்" என்றான் இவான்ஸ்.

"ஏன்? எதற்காக அவன் மறுக்கவேண்டும்?"

"மறுத்துவிடுவான் என்றும் சொல்லுவதற்கில்லை. நேரில் கண்டு பேசவேண்டும்."

"அவனையே அழைத்துவர முடியாதா?"

"சொல்வதற்கில்லை; அப்பா. அவனுடைய மனைவி நோஞ்சல் பேர்வழி. அடிக்கடி நோய்வாய்ப்பட்டு விடுவாள்" என்றான் இவான்ஸ்.

"ஆனால் அவன் நிச்சயமாக வழிகாட்ட முடியும் என்று நீ நம்புகிறாயோ? உதவாக்கரைப் பேர்வழிகளை நம்பிக்கொண்டு நாம் திண்டாட முடியாது" என்றான் டாட்லாக்.

"எனக்குத் தெரிந்தமட்டில் டிக் சம்மர்ஸைப் போன்றவர்கள் வேறு எவருமே இல்லை. அவன் ஒப்புக் கொண்டால். . . ."

"சரி, எங்களுடன் வாயேன் போய்ப் பார்க்கலாம்" என்றான் டாட்லாக் ஆவலுடன்.

"இப்போதேயா? வேண்டாம். நாளைக்கு அல்லது வேறு ஒரு நாள் போய்ப் பார்க்கலாம்" என்றான் இவான்ஸ்.

"நல்லது, இதற்குள் அவனுக்கு என்ன சம்பளம் கொடுக்கலாம் என்பதைப்பற்றி நாங்களும் கலந்து ஆலோசிக்கிறோம்" என்றான் டாட்லாக்.

எல்லோரும் மீண்டும் ஒருமுறை சாராயம் ஊற்றிக் குடித்தார்கள். பிறகு, இவான்ஸ் விடைபெற்றுக் கொண்டு கோவேறு கழுதையின்மீது ஏறினான். சவாரி செய்யும்போதே எதிர்காலத்தைப்பற்றிய எண்ணங்கள் மனத்தில் எழலாயின. டிக் சம்மர்ஸ் வழி காட்டியாக வர ஒப்புக்கொண்டால் நானும் போகலாம். இல்லாவிட்டாலும்தான் என்ன? புறப்படலாமே! சுதந்தரமும் துணிச்சலும் கொண்ட சகாக்கள். இடமும் புதிது. தொல்லை ஏதுமற்ற ராஜ்யம். நாமேதான் ராஜா! நல்ல சீதோஷ்ண நிலை, வளமான பூமி. வேட்டையாடச் சிறந்த காடுகள். நோயற்ற — ஆரோக்கியமான தேசம்! வாழ்க அரிகான்! — நாமும் புறப்பட்டுப் போகலாம் — இப்படித்தான் எண்ணிக் கொண்டே வீடு சேர்ந்தான்.

சேணத்தை அவிழ்த்து, கோவேறு கழுதையைத் தொழுவத்துக்கு விரட்டிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான். வாசலில் நின்ற நாய் வாலை ஆட்டி அவனை வரவேற்றது. கதவைத் திறந்ததும், கணப்படியில் குளிர் காய்ந்துகொண்டிருந்த மனைவியைப் பார்த்து, "பெக்கி, ஏற்பாடுகளைச் செய், நாமும் அரிகான் பிரதேசத்துக்குப் பிரயாணப்படப்போகிறோம்" என்றான் உத்சாகம் ததும்பும் குரலில்.

2. ஆயத்தம்

இவான்ஸ் சாராயக் கடையை விட்டுச் சென்றதும், கூட்டம் கலையலாயிற்று. வேலையிருக்கிறது என்று டாட்லாக் கிளம்பினான். மனைவி அழைத்தாளே என்ற எண்ணம் வந்துவிடவே மக்பியும் நகர்ந்தான். வாசலில் வந்ததும், போய்க்கொண்டிருக்கும் இவான்ஸைப் பார்த்துக்கொண்டே டாட்லாக் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தான். "இவனைப் போன்றவர்கள் நம்முடைய கோஷ்டியிலிருக்கவேண்டும் என்பது என் விருப்பம்" என்றான் வாய்விட்டு.

அப்படித்தான் சார்லஸும் நினைத்துக்கொண்டிருந்தான். இவான்ஸின் ஆகிருதியும், களை சொட்டும் முகமும், இனிமையான குரலும், திறமையைக் காட்டும் பார்வையும் அவனைப் பெரிதும் வசீகரித்துவிட்டன. அதிகாரமும் கம்பீரமும் நிறைந்த டாட்லாக், உம்மணா மூஞ்சியான மாக், சோகக் களையுள்ள மக்பி, இவர்களைவிட இவான்ஸ் எவ்வளவோ சிறந்தவன் என்றும், சிறந்த வழித்துணை என்றுமே அவன் நினைத்தான்.

தொப்பியைத் தலையில் வைத்துக்கொண்டு கிளம்பிய மாக், "இவான்ஸ் நம்முடன் கிளம்பிவிடுவான் என்பது நிச்சயம், பந்தயம் வேண்டுமானால் கட்டுகிறேன்" என்றான் திடமான குரலில்.

சார்லஸ் விடை பெற்றுக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். வீட்டு வாசலில் அவனை மனைவி வரவேற்றாள். கதவை நன்றாகத் திறந்து வழிவிட்ட அவள், "உங்களைத் தேடிக்கொண்டு யாரோ வந்தார்கள்" என்றாள்.

"யார் அது? நம்முடன் பிரயாணம் செய்ய விரும்பும் எவரையாவது பற்றிச் சொல்கிறாயா?" என்று கேட்டான் சார்லஸ்.

"வருகிறேன் என்றுதான் சொன்னான். ஆகாரமும் பிரயாண வசதியும் கிடைத்தால் போதுமாம். மறுபடியும் வருகிறேன் என்று விடைபெற்றுச் சென்றிருக்கிறான்" என்றாள் ஜூடித்—அவனுடைய மனைவி.

சார்லஸ் வீட்டுக்குள் சென்றான். மனைவியின் சிரித்த முகம் அவனுக்குக் கிளுகிளுப்பூட்டியது. "டாடீ, அப்பா வந்திருக்கிறார்" என்று ஜூடித் சொன்னதைக் கேட்டதும் அவன் நிமிர்ந்து பார்த்தான். கால்களின் நடுவே ஒரு தடியை வைத்துக்கொண்டு தத்தித் தத்தி ஓடிவந்தான் டாட். அவனுக்கு, தான் குதிரை சவாரி செய்வதாக நினைப்பு. சவுக்கால் அடித்துக் குதிரையை ஓட்டுவதுபோல 'ஹைஹை' என்று கத்தினான் அவன்.

"படுசுட்டியாக இருக்கிறாயே நீ?" என்று கொஞ்சிக்கொண்டே அணைக்கச் சென்றான் சார்லஸ்.

டாட், காலை மடக்கி, தடியை வெளியே இழுத்தான், குதிரையைவிட்டுக் கீழே இறங்கும் பாவனையில். "இந்தக் குதிரையிலே சவாரி செய்துதான், அப்பா அரிகானுக்கு வரப்போகிறேன்" என்றான் அவன்.

"பரவாயில்லை, உடம்பு தேறிக்கொண்டுவருகிறது" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான் சார்லஸ். நோயிலிருந்து விடுதலை பெற்றுவிட்டாலும், டாட் இன்னும் பூர்ண ஆரோக்கியம் பெறவில்லை. ஒடிசலாக இருந்தாலும் அவனுடைய கண்கள் பிரகாச

மாக இருந்ததால் அவனுடைய உடம்பு தேறிக் கொண்டு வருகிறதென்று ஊகிக்க முடிந்தது.

"உடம்பு நல்லாப்போச்சு, அப்பா, இப்போதே நாம் புறப்படலாமா?" என்று கேட்டான் டாட் வெடுக்கென்று.

சார்லஸ் பெயர்மன் சமையலறைக்குள் சென்று மேஜையின் பக்கத்தில் உட்கார்ந்தான். "நாம் புறப் பட வேண்டியதுதான் ஜூடி. பிரயாணத்தைப்பற்றி நினைக்கும்போதே, குதூகுதுப்பும் சந்தோஷமும் ஏற்படுகிறது. நமக்கு நல்ல வழித்துணையும் கிடைத்து விட்டது" என்றான் சந்தோஷத்துடன். மனம் கற்பனை யில் திளைத்தது. அரிகான் பிரதேசத்தில் கிடைக்கப் போகிற அனுபவம், வாழ்க்கைச் சுகம் இவற்றை எண்ணும்போதே, விசாலமான தோட்டமும் பண்ணை யும் தனக்கு ஏற்பட்டுவிடும். அதில் ஓடியாடி டாட் பலம் பொருந்திய இளைஞனாக வளர்ந்துவிடுவான் என்று எல்லாம் தோன்றிற்று. மேஜையின்மீதிருந்த சமைத்த கோழிக் கறியை எடுத்துச் சுவைத்தான் அவன். மீண்டும் கற்பனை! அரிகான் தேசத்தில் ஸ்தாபிக்கப்போகும் பண்ணையில் கோழிகள் எப்படி வளரும்! அவற்றின் கறி எவ்வளவு ருசியாக இருக்கும்!! இப்படி எண்ணி மகிழ ஆரம்பித்தது மனம்.

"ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டப்படத்தான் வேண்டும். முரட்டு வாழ்க்கைதான்" என்றான் சார்லஸ் வாய்விட்டு.

அமெரிக்கக் கண்டத்தின் மேற்குக் கரையில்—பஸிபிக் பிரதேசத்தில்—இருக்கும் அரிகான் பகுதி யில் குடியேற அவனும் மற்றவர்களுடன் கிளம்பி விட்டான். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருக் கும் அந்த நாட்டுக்குச் செல்ல அவன் நாட்கணக்காக ஏற்பாடுகள் செய்தான். நீண்ட தூரம் பிரயாணம் செய்யவேண்டி யிருப்பதால், வண்டிக்குப் பட்டா

மாற்றினான். சாதாரணமாக உள்ள இரண்டு அங்குலப் பட்டாவுக்குப் பதிலாக மூன்று அங்குல அகலமுள்ள பட்டாவைப் போட்டான். அவனிடமிருந்த இரண்டு வண்டிகளுக்கும் கூண்டு மாற்றினான். வண்டி நிரம்பச் சாமான்களை ஏற்றினாலும் சமயம் நேர்ந்தால் மேலே ஏறிப்படுப்பதற்குவசதியாக தகட்டுக்கூரை போட்டுக் கட்டினான். ஏர், மண்வெட்டி, ஆடுமாடுகளைக் கட்டக் கயிறு, கம்பி, குடியிருக்க கூடாரம், எண்ணெய் அடுப்பு, இரும்பு அடுப்பு, சேணம், நுகத்தடி, கட்டப் பாறை, துப்பாக்கி, சுழல் துப்பாக்கி, கத்தி, பாத்திரங் கள், தட்டுமுட்டுச் சாமான்கள் என்று விதம் விதமான சாமான்களைச் சேகரித்துக்கொண்டான்.

பிரயாண காலத்தில் உணவுப் பொருள்கள் வேண்டுமே! ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து செல்ல மாதக்கணக்காக ஆகுமே! போகுமிடங்களில் வசதிகள் கிடைக்குமோ, கிடைக்காதோ. ஆகவே போதுமான அளவு உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லவேண்டும். பொழுதுபோக்குக்கான புத்தகங் கள், சிறுவர்கள் மாதக்கணக்காகச் சும்மா இருக்க முடியுமா? அவர்களுக்கு வேண்டிய பள்ளிப் புத்த கங்கள்—இவைகளை எல்லாம் எடுத்துச் செல்லவேண் டும். மாவு, அரிசி, மாமிசம், சர்க்கரை, இறைச்சி, உப்பு—காபிப்பொடி, வற்றல்கள், சாராயம் என்று பலபல பொருள்களைப்பற்றிப் பட்டியல் போட்டான். புது நாட்டில் குடியேறிவிட்டாலும், அங்குள்ள நிலத் தைப் பண்படுத்தி விவசாயம் செய்ய வசதிகள் வேண் டாமா? ஆகவே ஆடுமாடுகளைப்பற்றியும், கோவேறு கழுதைகளைப்பற்றியும் அவன் சிந்திக்கவேண்டிய தாயிற்று. எத்தனை எருதுகளை ஓட்டிச் செல்வது? கறவை மாடு வேண்டாமா? நீண்டதூரப் பிரயாண மாயிற்றே. வண்டிகள் நிரம்பச் சாமான்களை ஏற்றி விட்டு நடந்துசெல்ல முடியுமா, சவாரிக்கு கோவேறு கழுதைகள் வேண்டாமா? ஆடுகளும் கோழிகளும்

எடுத்துச் சென்ருல் வழியிலும் ஆகாரத்துக்கு உபயோகப்படும். அங்கு சேர்ந்தபிறகு அவை பலுகி சிறந்த உணவாகவும் பயன்படும். தூரதேசத்தில் நோய்வாய்ப்பட்டுவிட்டால் என்ன செய்வது? கைவசம் கொஞ்சம் மருந்துகள் வேண்டாமா? இப்படி எல்லாம் யோசித்து சாமான்களைத் திரட்டத் திட்டமிட்டான்.

அவன் வெளியே வந்தபோது யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. "மேற்கே போவதற்கு ஆள் தேடிக் கொண்டிருக்கிறீர்களாமே?" என்று கேட்டான் ஒடிசலான ஒரு மனிதன். அவனுடைய ஆடையும் கசங்கி மடிந்து கிடந்த தொப்பியும் பார்க்கச் சகிக்கவில்லை.

"ஆமாம்" என்ருன் சார்லஸ்.

"என்னை 'ஹிக்' என்று கூப்பிடுவார்கள். ஹிக்கின்ஸ் என்ற பெயர் அப்படிச் சுருங்கிவிட்டது. வயிற்றுக்குச் சோறு கிடைத்தால் போதும், புறப்பட்டுவிடுகிறேன். எனக்கும் பிரயாணம் செய்ய ஆசை" என்று மளமள வென்று பேசினுன் அவன்.

அவனுடைய முகத்தில் சோகம் குடிகொண்டிருந்தது. வயதாகவில்லை என்ருலும் வாயிலிருந்த பற்கள் விழுந்து கிழக்கலை தட்டிவிட்டது. கண்களில் சஞ்சலம் தெறித்தாலும், அவனுடைய பரந்த நெற்றியைப் பார்க்கும்போதே புத்திசாலி என்று ஊகிக்கமுடிந்தது.

"நீ என்ன வேலை செய்வாய்? ஆடுமாடுகளை மேய்ப்பது, வண்டி ஓட்டுவது—விவசாயத்தில் எனக்கு உதவியாக இருப்பது—இப்படிப்பட்ட வேலைகளில் . . . .?" என்று ஆரம்பித்தான் சார்லஸ்.

"எல்லாம் நன்ருகச் செய்வேன், ஐயா, ஆளைப் பார்த்தால் நோஞ்சாஞக இருக்கிறேனே என்று எண்ணவேண்டாம். நல்ல அழுத்தமான கட்டைதான்" என்ருன் அவன்.

"என்ன வயசாகிறது உனக்கு?"

"எனக்கா? என்னுடைய தகப்பனர் சொல்லுவார், சாகிற வயசில்லே, ஆனல் பிறருடைய பாதுகாப்பில் வாழாமல் தனித்து நிற்கும் வயசு என்று."

சார்லஸ் சிரித்தான். மற்றவனும் சிரித்தான்.

"போகுமிடமோ புதிது. கஷ்டநஷ்டங்கள் ஏற்படலாம். பயமில்லாமல் இருக்கவேண்டும். கடினமான வேலைக்கும் அஞ்சக் கூடாது."

"வேலையில் நான் துடியில்லே. ஆனல் சோம்பேறியாக இருக்கமாட்டேன்; சோற்றுக்குப் பாரமாக நான் உன்னுடன் வரவில்லை. மனம் சோர்ந்து நிற்கும் போது தமாஷாகப் பேசவும், உற்சாக மூட்டவும், பிடில் வாசித்துக் குஷிப்படுத்தவும் என்னல் முடியும், தூசியும் புழுதியும் புயலாக எழும்பி வாட்டும்போதும், அனற் காற்றும், அலுப்பும் நம்மை அலட்டும்போதும், 'அரிகான் பிரதேசத்தில் சொர்க்கத்தைக் காணலாம் என்று கிளம்பிவிட்டாயே இந்த அவதியைப் படுவது யார்' என்று பெண்டுபிள்ளைகள் இடித்துக் காட்டும் போதும், உனக்கு உற்சாக மூட்டவும் தைரியம் சொல்லவும் என்னைப்போன்ற ஒருவன் வேண்டும் என்றுதான் சொல்வேன்."

சார்லஸ் பெயர்மன் அவனுடன் பேசலானன். ஹிக்கின்ஸ் போன்றதொரு மனிதனின் உதவி அவனுக்கு அவசியமாகத் தானிருந்தது.

"நான் கொஞ்சநாள் பற்றவைப்பு வேலைசெய்து பழகியிருக்கிறேன். கருமார வேலையிலும் பரிச்சயம் உண்டு. துப்பாக்கிகளையும், சிறு யந்திரங்களையும் பழுதுபார்க்கவும் தெரியும்" என்றான் ஹிக்கின்ஸ் பேச்சுவாக்கில். பிறகு டாட்டிடம் "நீயும் நானும் தோழர்களாக விளையாடலாம். உனக்கு வேடிக்கை

காட்டுவேன். கதை சொல்வேன்'' என்றான் கொஞ்ச லாக.

டாட் அதை ரசித்துச் சிரிப்பதை சார்ல்ஸ் கவனித் தான். ''என் பெயர் டாட், மாமா, என்னிடம் சவாரி செய்ய ஒரு நல்ல குதிரையிருக்கிறதே'' என்றான் பையன்.

''டாட், நல்ல பெயர்தான்'' என்றான் ஹிக்கின்ஸ். ''சரி, நம்முடைய பேச்சு நிச்சயமாகி விட்டதல்லவா, மிஸ்டர், என்னை வேலைக்கு அமர்த்திவிட்டீர்களா?'' என்று சார்லஸிடம் கேட்டான்.

''சுமைதூக்கவும் சவாரிக்கும் கோவேறு கழுதை கள் வாங்கப்போகிறேன்.....'' என்று ஆரம்பித்தான் சார்லஸ்.

ஹிக்கின்ஸ் அன்புடன் டாடின் கையைப் பிடித் துக்கொண்டான். பையனும் அவனுடன் சகஜமாகப் பழக ஆரம்பித்ததைக் கவனித்த சார்லஸ், ஆள் அமர்ந்து விட்டான் என்றே நினைத்துக் கொண்டான்.

முள் வேலிக்கு வெளியே குதிரை வியாபாரி வந்து கொண்டிருப்பதை சார்லஸ் பார்த்தான். வீட்டை நெருங்கியதும் அவன் வெளியிலிருந்தவாறே ''ஐயா, நீங்கள் கோவேறு கழுதைகள் வாங்கப்போவதாகக் கேள்விப்பட்டேனே?'' என்று கேட்டான்.

''அப்படித்தான் யோசனை'' என்று பதிலளித்தான் சார்லஸ்.

''என்னிடம் நல்ல உருப்படிகள் இருக்கின்றன. அதோ அந்தப் பெரிய கழுதையை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று சுட்டிக் காட்டினான் வியாபாரி. அவன் காட்டிய திசையிலிருந்த கோவேறு கழுதையை சார்லஸ் பார்த்தான்.

''சவாரிக்கும் பழக்கமானது, வண்டியிலும் பூட்ட லாம், ஏர் கட்டியும் ஓட்டலாம், எல்லா வேலைக்கும்

அது லாயக்கானது, ஐயா! திடமானநடை; சுறுசுறுப்பாக வேலை செய்யும் வேறு சில கழுதைகளும் என்னிடமுண்டு. ஒன்றோ, பத்தோ, எத்தனை வேண்டுமானாலும் தருகிறேன்" என்று சொன்னான் வியாபாரி.

"சவாரிக் கழுதைகள்தான் எனக்கு வேண்டும். வண்டியில் பூட்ட எருதுகளை வாங்கிக்கொள்கிறேன்" என்றான் சார்லஸ்.

"நான் சொல்கிறேன், கேளும். நான் அரிகானுக்குச் செல்வதாக இருந்தால்கோவேறு கழுதையில்தான் போவேன். அது சீக்கிரமாகவும் போகும்; சுமையை இழுத்துக்கொண்டும் ஓடும். எல்லா வேலைகளுக்கும் உபயோகமாகக்கூடிய பிராணி" என்றான் வியாபாரி.

"அடேயப்பா, ஒரே அளப்பாக இருக்கிறதே" என்று சிரித்தான் ஹிக்கின்ஸ்.

அந்தச் சமயம் தெருவழியே போய்க்கொண்டிருந்த குதிரை வீரன் ஒருவன் இவர்களுடைய சம்பாஷணையைக்கேட்டு, குதிரையை அடக்கி வேலி ஓரமாக வந்து நின்றான்.

வியாபாரி சொன்னான், "எருதுகள் வஞ்சகமில்லாமல் வேலைசெய்யும் என்பது உண்மைதான். ஆனால் நீண்டதூரப் பிரயாணத்துக்கு அவை லாயக்கில்லை. அசந்துபோய்க் கீழே விழுந்துவிட்டால், அட கடவுளே! அவற்றை எழுப்புவது சுலபமான காரியமல்லவே!" என்று.

சார்லஸ் பெயர்மன் யோசிக்கலானான். சட்டென அவன் "என்ன விலை?" என்று கேள்விபோட்டு நிறுத்தினான்.

"ஒன்று நாற்பது டாலர்தான். கொள்ளை மலிவு"

"உன்னுடைய அபிப்பிராயம் வேண்டாம், அப்பா, வியாபாரம் செய்யத்தானே வந்திருக்கிறாய்" என்றான்

சார்லஸ். பிறகு வெளியே நின்றுகொண்டிருந்த குதிரை வீரனிடம், "நீ என்ன ஐயா சொல்கிறாய்? இந்த விலை தாளக்கூடிய கோவேறுகழுதை தானா?" என்று கேட்டான்.

"சிவப்பு இந்தியர்கள் கோவேறு கழுதையைக் கண்டால் சும்மா இருப்பார்களா?" என்று கேட்டான் குதிரைவீரன்.

"தங்களுக்குப் பிடித்த பொருளைத் திருடியாவது இந்தியர்கள் அடைந்து விடுவார்கள்" என்று இடைமறித்தான் ஹிக்கின்ஸ்.

"அப்படியானால் யோசிக்கவேண்டிய விஷயந்தான்."

வியாபாரி ஆத்திரமடைந்தான். "நீயா வாங்கப் போகிறாய், சம்பந்தமில்லாமல் தலையிடாதே, வாங்குகிறவன் மனசைக் கலைக்கிறாயே. உன்னை இங்கிருந்து விரட்டிவிடமுடியும்" என்றான் கோபத்துடன்.

"நியாயமான பேச்சு" என்று சொல்லிக்கொண்டே குதிரைவீரன் நகர ஆரம்பித்தான். ஹிக்கின்ஸைப் போல, தானும் அந்த வியாபாரத்துக்குச் சம்பந்தமில்லாதவன் தானே என்று தோன்றிற்று அவனுக்கு.

"நீ யார் என்று சொல்லவில்லையே?" என்றான் வியாபாரி.

"டிக் சம்மர்ஸ் என்று என்னைச் சொல்வார்கள்" இப்படிச் சொல்லிக்கொண்டே அவன் குதிரையைத் திருப்பி ஓட்டலானான்.

அவனைக் கூப்பிடவேண்டும் என்றே சார்லஸ் பெயர்மன் விரும்பினான். அரிகானுக்குப் போகும் கோஷ்டிக்கு வழிகாட்டியாக அவன் வரமுடியுமா என்று கேட்க நினைத்தான். ஆனால் வாயிலிருந்து வார்த்தை கிளம்பவில்லை. அவன் சென்ற திசையையே பார்த்துக்கொண்டிருந்தான்.

3. தீர்மானம்

டிக் சம்மர்ஸ் பட்டுப்போன ஒரு மரக் கட்டையின் மீது சிந்தனை வசப்பட்டு உட்கார்ந்திருந்தான். அவனுடைய வாழ்க்கையிலும் பசுமை மாறும் சம்பவம் நேர்ந்துவிட்டது. வசந்தத்தின் வரவைக் காட்ட, மரங்கள் துளிர் விட்டு நின்றன. செடிகொடிகள் அரும்பு கட்டி அசைந்தன. குட்டைகளிலிருந்த தவளைகள் "தொண-தொண" வென்று குரல் கொடுத்து வசந்த காலத்தை வரவேற்றன. தொழுவத்திலிருந்த பசுவைக் கறக்கவேண்டும் என்ற நினைப்பு வந்தாலும் எழுந்திருக்க மனமின்றி டிக் உட்கார்ந்திருந்தான். இயற்கையின் பூர்ணப் பொலிவினால் உலகமே மகிழ்ந்து கிடக்கும்போது அவனுடைய மனசு சூன்யமாகி விட்டது.

ஆள் அரவங்கேட்டு டிக் திரும்பினான். அண்டை வீட்டுக்காரனான விஜி இவான்ஸ் ஒரு பாட்டிலும் கையுமாக டிக்கை நோக்கி வந்துகொண்டிருந்தான். இவான்ஸ் அரிகான் பிரதேசத்துக்குக் குடியேற நிச்சயித்து பிரயாண ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தான். கையிலிருந்த சாராயப் புட்டியை உடைத்துக்கொண்டே "டிக், சாராயம் கொஞ்சம் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டான். அவனைக் குஷிப்படுத்தவே விஜி சாராயப் புட்டியைக் கொண்டுவந்தான். இருவரும் சாராயமருந்திவிட்டு சுருட்டுப் புகைக்க ஆரம்பித்தார்கள்.

"நல்ல போதைச் சரக்கு" என்று ஆரம்பித்தான் விஜி. டிக் தலையை யசைத்து ஆமோதித்தான்.

"இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லையா, டிக்?" என்று கேட்டான் விஜி.

டிக் மறுபடியும் இல்லை என்று சொல்லும் பாவனையில் தலையை ஆட்டினான். வாயைத் திறந்து பேச முடியாமல் துயரம் நெஞ்சை அழுத்திற்று.

"உன்னுடைய தீர்மானத்தை சீக்கிரத்தில் தெரிந்து கொள்ளவேண்டும், டிக். பிரயாணத்தை ஒத்திக் கொண்டிருக்க இனிமேல் முடியாது" என்றான் விஜி.

"அப்படியா?" என்றான் டிக்.

விஜி அவனைப் பேச்சுக்கு இழுப்பது எப்படி என்று சிந்தித்தான். டிக்கை விட்டுச் செல்லவும் அவன் விரும்பவில்லை. தன்னுடைய கேள்விகளை அவன் ரசிக்கவில்லை என்பதையும் விஜி புரிந்துகொண்டான். நீண்ட பெருமூச்சுத்தான் கிளம்பிற்று.

"அந்தப் பேய் இலந்தை மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. வாசனை மூக்கைத் துளைக்கிறது. பழங்கள் தான் வாயில் வைக்கமுடியாது" என்று பேச்சை ஆரம்பித்தான் விஜி, எதிரேயிருந்த மரத்தைக் காட்டி.

டிக் திரும்பிப் பார்த்துவிட்டு மௌனமாகவே இருந்தான். விஜி சொன்னான்: "உன்னைப்பற்றி நான் டாட்லாக்கிடம் ஒரு முடிவு சொல்லித்தீரவேண்டும். டிக்! எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை. கைக்கும் வாய்க்கும் எட்டும்படி ஆயுள் முழுவதும் உழைத்துச் சாப்பிடுவதில் அலுப்பு ஏற்பட்டுவிட்டது. சுகமாக வாழ்ந்து கொஞ்சம் சேமிப்பும் வேண்டும். நான் அரிகானுக்குச் செல்ல நிச்சயித்துவிட்டேன்."

அப்போதும் டிக் வாயைத் திறக்கவில்லை. பேச்சை நிறுத்திவிட்டு டிக்கைப் பார்த்த விஜி மறுபடியும் பேசலானான்! "எனக்கு மட்டும் அலுத்துப்போகவில்லை டிக், என் மகன் ப்ரௌனிக்கும் அரிகானுக்கும் போக வேண்டும் என்ற ஆசை. என் மனைவியும் கிளம்பத் தயார். எல்லாருடனும் நாமும்தான் புறப்படுவோமே என்று தோன்றிவிட்டது . . . ."

டிக் சம்மர்ஸ் எழுந்து நின்றான். எந்தவிதமான பதிலும் கூற அவன் தயாராக இல்லை என்று முகபாவம்

காட்டிற்று. "பால் கறக்கவேண்டும், போகிறேன்" என்றான் அமைதியான குரலில்.

"சரி உட்காரு. பால்தானே கறக்கவேண்டும்! டேய் ப்ரௌனி-ப்ரௌனீ!" என்று கத்தினான் விஜி.

பக்கத்து வீட்டிலிருந்து ஒரு நோஞ்சான் வெளியே வருவதை டிக் கவனித்தான். குச்சிபோன்ற கையுங் காலும் நீண்ட கழுத்தும், தளர்ந்த நடையுமுள்ள அந்தப் பையன் அருகே வந்ததும் "என் கூப்பிட்டாய், அப்பா" என்று கேட்டான்.

"பால் கறக்க மறந்துவிட்டானும் டிக். ஓடு, பசுவைப் பிடித்துக் கட்டி பாலைக் கற" என்றான்.

"சரி" என்று நகர்ந்தான் பையன். அவனுடைய குரலிலிருந்த கரகரப்பை டிக் கவனித்தான். "பையனுக்கு என்ன வயசு?" என்று கேட்டான்.

"பதினேழு முடிந்துவிட்டது. வளர்ச்சி குன்றியிருக்கும் இவனை உத்தேசித்தே இடம் மாற்றலாம் என்று தோன்றுகிறது"

"நல்ல பையன்" என்றான் டிக்.

"அவனுக்கும் உலகம் தெரியவேண்டாமா? ஆனால் ஊரார் பயமுறுத்துவதைப் பார்த்தால் கொஞ்சம் யோசிக்கத்தான் வேண்டியிருக்கிறது. அவ்வளவு கடுமையான பிரயாணமா, டிக்?" என்று நிறுத்தினான் விஜி.

"கால் நடையாகப் போகலாம். குதிரை சவாரியும் செய்யலாம். செப்பனிட்டபாதை கிடையாது. காடு காம்புகளில் வண்டிகளுடன் செல்வது சிரமம் தான்" என்றான் டிக்.

"உன்னைத் தூண்டித் தூண்டிக் கேட்கவேண்டியிருக்கிறது. உனக்கு நான் ஏதாவது உதவி செய்யட்டுமா?" என்றான் விஜி.

"ஒன்றும் வேண்டாம்".

மீண்டும் அவர்களுடைய பேச்சு அறுந்துவிட்டது. துயரப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதனைத் தனியாக விட்டுவைப்பது மனித இயல்பல்ல. தனிமையில் சிந்தனை கிளைத்து மேலும் மேலும் பாரமேறித் துன்பப் படுவான். டிக்கின் வீட்டில் துயரம் படர்ந்து விட்டது. அவனுடைய மனைவிமாட்டி, (நீண்டகாலம்) நோய்வாய்ப்பட்டு இறைவனடி சேர்ந்துவிட்டாள். டிக் பித்துப்பிடித்துப்போய் உட்கார்ந்துவிட்டான். அக்கம் பக்கத்தார் அவனுடைய வீட்டுக்கு வந்தார்கள். வீட்டைச் சுத்தம் செய்தார்கள். பிணத்தை எடுத்து ஒரு சவப்பெட்டியில் கிடத்தினார்கள். டிக்குக்கு இறைச்சியும் ரொட்டியும் தயாரித்துக் கொடுத்தார்கள். பிணத்தை அடக்கம் செய்யும் வரையில் அந்த வீட்டில் தங்க எல்லோரும் நிச்சயித்தார்கள். மதபோதகனுக்கு ஆள் அனுப்பப்பட்டது. டிக் அவர்களுடன் இருக்க மனம் பிடியாமல் தோட்டத்தில் வந்து உட்கார்ந்தான். கூடியிருந்த மக்களில் ஆண்கள் சுருட்டுப் புகைத்துக்கொண்டே அரட்டையடித்தார்கள். பெண்களோ ஊர் வம்பு பேசிக்கொண்டிருந்தார்கள்.

"டாட்லாக் நல்லவன், டிக்! உணர்ச்சி வசப்பட்டவன்தான் என்றாலும், எங்கள் கோஷ்டிக்குத் தலைமை வகித்து அழைத்துச் செல்வதில் அவன் உத்சாகம் காட்டுகிறான்" என்று ஆரம்பித்தான் இவான்ஸ்.

டாட்லாக்கின் குணாதிசயங்களைப்பற்றி டிக் சிந்திக்கவில்லை. அவனைச் சந்திக்கவேண்டும் என்ற விருப்பம் கூட அவனுக்கு எழவில்லை. "உள்ளே போகலாம் வா" என்று எழுந்தான் அவன்.

டிக் உள்ளே நுழைந்ததும் அரட்டையடித்துக் கொண்டிருந்தவர்கள் பேச்சை நிறுத்தினார்கள். பெண்களோ, எழுந்து ஒதுங்கி நின்று அவனுக்கு வழி விட்டார்கள். அவர்களுடைய குரல் அடங்கி குசுகுசு வென்று பேசிக்கொண்டார்கள். சாவுவீட்டில் கொம்

மாளமாகப் பேசிக்கொண்டிருக்கும் தங்களைப்பற்றி டிக் தவருக நினைத்துக் கொள்வானே என்ற ஐயமும் சிலருக்கு எழுந்தது. நிமிர்ந்து பார்க்காமல் அடி மேல் அடிவைத்து டிக் உள்ளே சென்ருன். படுக்கை யறையில், மேஜையின்மீது வைக்கப்பட்ட சவப் பெட்டியில் கிடந்த மனைவியின் உருவத்தைப் பார்த்த தும் அவனுடைய கண்களில் அரும்பு கட்டியது.

ரெபெக்கா இரண்டடி முன் வந்து டிக் இடம் சொன்னுள்: "உள்ளே போய் நின்றுவிடாதே, டிக், ஆண்டவன் அருள் அவ்வளவுதான். ஒரு முறை பார்த்துவிட்டு வெளியே வா. ஒரு கவளம் உணவு எடுத்துக்கொள். பட்டினி கிடப்பதில் என்ன பலன்" என்று.

ரெபெக்கா ஸ்தூல சரீரமுள்ளவள். விம்மிக் கொண் டிருக்கும் ஸ்தனபாரம் குலுங்க, ஒரு மெழுகு வர்த் தியைக் கொளுத்தி எடுத்துக்கொண்டு அவள் டிக்கைத் தொடர்ந்தாள். "செத்துப்போனவர்களுக்காக நாம் பட்டினி கிடக்கமுடியுமா? துக்கத்தை ஒதுக்கிவிட்டுச் சாப்பிடத்தான் வேண்டும். மற்றவர்கள் சாப்பிட வில்லையா" என்ருள் அவள் மீண்டும். டிக் பதில் கூற வில்லை. ரெபெக்கா மெழுகு வர்த்தியைத் தூக்கிப் பிடித்து, பிணத்தின் முகத்தில் வெளிச்சம் படும்படிக் காட்டினுள்.

நெஞ்சின்மேல் கையைமடக்கி வைத்துக்கொண்டு மாட்டி—அதுதான் இறந்துபோன டிக்கின் மனைவி —கிடந்தாள். தலையைச் சீவிப் பின்னல்போட்டு, நல்ல உடையுடுத்தி, அவளைக் கிடத்தியிருந்தார்கள். டிக்கின் நெஞ்சம் நெகிழ்ந்தது. சாமர்த்தியசாலியல்ல என்ருலும் மாட்டி குடும்பப்பொறுப்புள்ள பெண். அழ கில்லாவிட்டாலும், கவர்ச்சிகரமான பேச்சும், அனு சரணையும் அவளிடமிருந்தது. மெழுகுவர்த்தி செய் தல், மாவு அரைத்தல், துணிமணிகளைத் தைத்தல்

என்று குடும்பவேலைகளை அவளே கவனித்து வந்தாள். இனிமேல்! இனிமேல் அவளுடைய கைத்திறனை அவன் காண முடியாது. உபசரிப்பை அனுபவிக்கமுடியாது. இனியபேச்சையோ கேட்கமுடியாது! அவள்—அவனுடைய வாழ்க்கை—போய்விட்டாள்!! உணர்ச்சி வசப்பட்டாலும் சமாளித்துக்கொண்டே டிக் வெளியே வந்தான். கூடத்திலிருந்த பெண்களைப் பார்த்து "உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றான் நடுங்கும் குரலில்.

"என்ன களை தெரியுமா? தூங்குகிறவளைப்போல இருக்கிறது" என்றாள் ரெபெக்கா தன்னையறியாமல்.

டிக் அந்த வார்த்தைகளைக் கவனித்தானோ என்னமோ, லிஜி இவான்ஸ் குறுக்கிட்டான் "டிக், மத போதகர் வந்துவிட்டார். நீ பார்க்கிறாயா?" என்றான் அவன்.

டிக் மௌனமாக இவான்ஸின் கையைப் பிடித்துக் கொண்டான். இதற்குள் அங்கேவந்த மதபோதகர் "என்னை ஜோசப் வெதர்பி என்று சொல்வார்கள், சகோதர! எனக்கு இந்தியாவுப்பகுதி சொந்தப் பிரதேசம். ஆண்டவன்தான் என்னை இங்கு அழைத்தான் என்று எண்ணுகிறேன். உன்னுடைய துயரத்தை மாற்ற அவன் பெயரைத்தானே சொல்லவேண்டும். சடங்குகளை நடத்த டக்கர் அண்ணா என்னை அழைத்தான். உனக்குப் பிடித்த சுவிசேஷம் எது? அல்லது இறைவனடி சேர்ந்தவளுடைய பிரியமான சுவிசேஷம் தெரிந்தாலும் போதும்" என்றார். அவருடைய பேச்சு தொடர்ந்து அமைந்தாலும் நிதானமாக இருந்தது.

"எனக்கு ஏதுமே தோன்றவில்லை. நீங்களே எதையாவது சொல்லுங்கள்" என்றான் டிக்.

கன்னங்களில் குழிவிழுந்து, நீண்ட முகமும், ஆழ்ந்த பார்வையும், ஒடிந்து விழக்கூடிய சரீரமும்

உள்ள அந்தக் கிழவர் தலையை ஆட்டிக்கொண்டே "அரிகானுக்குப் போகும் கோஷ்டிக்கு நீ வழிகாட்டியாக இருக்கப்போவதாகக் கேள்விப்பட்டேன்" என்றார்.

அந்தப் பேச்சை டிக் ரசிக்கவில்லை என்றாலும் பதில் சொல்லாமலிருக்க முடியவில்லை. "இருக்கலாம்" என்றான் ஒரே வார்த்தையில்.

"நானும் வருகிறேன். ஆண்டவன் அந்த கண்காணாத புது இடத்தில் சேவை செய்ய அழைப்பது போலத் தோன்றுகிறது" என்றார்.

"நீண்ட தூரப் பிரயாணம்தான். கஷ்டங்களை சகித்துப் பழக்கமில்லாதவர்களுக்கும் வயதானவர்களுக்கும் சிரமமாகயிருக்கும். ஆனாலும் உங்களைச் சேர்த்துக்கொள்ள எத்தனையோ பேர் இருப்பார்கள். இன்டிபென்டன்ஸ் நகரிலிருந்து செயின்ட் ஜோவரையிலுள்ள ஊர்களிலிருந்து எத்தனையோ கோஷ்டிகள் பிரயாணமாகிறார்கள்."

"உன்னுடைய கோஷ்டி எப்போது புறப்படுகிறது?"

"என்னுடைய கோஷ்டி என்று எதுமே கிடையாது. நானே புறப்படுகிறேனா என்று நிச்சயிக்கவில்லை. கோஷ்டி கோஷ்டியாகக் கிளம்புகிறார்கள். தங்களுக்குள் சட்ட வரம்புகளையும் ஒப்பந்தங்களையும் செய்துகொள்கிறார்கள். உங்களைச் சேர்த்துக்கொள்ள எல்லாருமே விரும்புவார்கள்."

இவான்ஸ் டிக்கின் கையைப்பிடித்து இழுத்தான், "வா, அப்பா, கொஞ்சம் சாப்பிடு" என்றான் கெஞ்சும் குரலில்.

"உங்களுக்காக நான் டாட்லாக்கிடம் பேசுகிறேன். இவான்ஸுடன் போய் விட்டு வந்துவிடுகிறேன்" என்று டிக் கூறினான்.

வீட்டுவாசலில் டாட்லாக் நின்று கொண்டிருந்தான். டிக்கின் குரல் கேட்டு அவன் வந்து நின்றுனே என்று தோன்றிற்று. "அசந்தர்ப்பமான நேரத்தில் நாங்கள் வந்திருக்கிறேம். மன்னிக்கவேண்டும். மிகவும் அவசரமாக உன்னுடன் பேசவேண்டும். கொஞ்சம் வருகிருயா?" என்ருன் டாட்லாக் டிக்கைப் பார்த்ததும்.

டிக்கிற்கு டாட்லாக்கைத் தெரியும். ஆனல் அதைக் காட்டிக்கொள்ளாமல் "யார் அது?" என்று கேட்டான்.

"நாங்கள் நான்கைந்துபேர் வந்திருக்கிறேம்" என்ருன் டாட்லாக். இப்படிச் சொல்லிக்கொண்டே அவன் வெளியே செல்லத் திரும்பினன்.

தோட்டத்திலிருந்த ஒரு பெரிய மரத்தடியில் நான்கு பேர்கள் இருந்தார்கள். விஜி இவான்ஸும் அங்கே வந்து சேர்ந்தான். அவர்களை வைத்துக் கொண்டு இவான்ஸ் சொன்னன்: "டிக், என் மீது சந்தேகப்படாதே. நான் இவர்களை வரச்சொல்லவில்லை" என்று.

"யாராவது பொறுப்பு ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்?" என்று ஆரம்பித்தான் டாட்லாக். "இந்தச் சமயத்தில் உன்னைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று ஒதுங்க முடியவில்லை. பிரயாணத்தை ஒத்தி வைத்துக்கொண்டு போகும் சந்தர்ப்பமில்லை இப்போது. அரிகானுக்குச் செல்லும் முதல் கோஷ்டி நாமாக இருக்கவேண்டுமென்பது எங்களுடைய விருப்பம். எங்களுக்கு வழிகாட்ட நீ சம்மதிக்கிருயா? உன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு தான் வேறு ஆளைப் பார்க்கவேண்டும். வசந்தகாலத்துக்குள் நடுவிலிருக்கும் வரண்ட பிரதேசத்தைக் கடந்துவிடவேண்டும். இல்லாவிட்டால் மண்ணையும் தூசியையும் அனல்காற்றையும்தான் அனுபவிக்க

நேரிடும். எல்லாருக்கும் முன்னதாகப் புறப்பட்டால் தான் கன்று காலிகளை மேய்த்துக்கொண்டு நிதானமாகப் பிரயாணம் செய்யலாம்" என்றான் டாட்லாக்.

"எங்களுடன் நீயும் வரத்தான் வேண்டும், டிக்" என்றான் இவான்ஸும்.

"சரி, ஏற்பாடு செய்யுங்கள்" என்றான் டிக். மனம் விட்டுப் பேச அவனால் முடியவில்லை. மேலும் டாட்லாக்கின் பேச்சு அவனுக்குப் பிரமிப்பூட்டியது. பிறருக்காக எந்தக் காரியத்தையும் செய்யும் சுபாவம் அவனிடமில்லை.

ஊரைவிட்டே போய்விடவேண்டும்—அதுவும் அரிகான் யாத்திரை செய்யவேண்டும் என்றுதான் டிக் சம்மர்ஸ் தீர்மானித்தான். மனைவியை அடக்கம் செய்து சடங்குகளை முடித்துக்கொண்ட பிறகு வெளியூர் செல்ல ஏற்பாடுகளைச் செய்ய அவன் நினைத்திருந்தான். "ஆடுமாடுகளையும், இதர சொத்துக்களையும் விற்றுவிடவேண்டும். நிலத்தை விற்கவேண்டாம். ஒருவேளை திரும்பிவந்தால் இருக்க இடம் வேண்டுமே! மாடுகளை ஓட்டிச்சென்றாலும் புதிய இடத்தில் வேலைக்கு உதவும். கிடைக்கும் பணத்தை எடுத்துச் செல்வது நல்ல யோசனையல்ல. இங்கேயே வைத்துவிடவேண்டும். தோட்டத்தில் விழுந்து கிடக்கும் பெரிய மரத்தில் பொந்து செய்து பணத்தை வைத்து மூடிவிடலாம். எவரும் அதைக் கவனிக்கமுடியாது"—இப்படி எல்லாம் அவன் யோசித்துத்தானிருந்தான். இவற்றைச் செயலாக்க வெகுநேரம் பிடிக்காது என்பதும் அவனுக்குத் தெரியும்.

4. பிரயாணம்

லிஜியும் ரெபெக்காவும் பிரயாண ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அழகான தட்டுகளையும், விலையுயர்ந்த பாண்டங்களையும் கோதுமை

மாவை அடைத்துள்ள பெரிய பீப்பாயில் செருகி வைத்தார்கள். பிரயாணத்தினல் ஏற்படும் ஆட்ட அசைவினல் சாமான் நெரிந்து நொறுங்கிவிடக் கூடாதே என்ற பயம் ஒருபுறமிருக்க, மற்றவர்களு டைய கண்ணில் படாமலிருக்கவேண்டும் என்ற நினைப்பும் சேரவே, அவர்கள் மிகவும் எச்சரிக்கை யுடன் பெட்டி பேழைகளைக் கட்டி வண்டியிலேற்றினர் கள். வீட்டிலே சிறு துரும்பைக்கூட விட்டுவைக்க மனமின்றி, ஒவ்வொன்றையும் சீராகக் கட்டினர்கள்.

சமையல் சாமான்கள், பாத்திரங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், என்று தனித்தனியாகக் கட்டி வழிந்து விழுவதுபோல வண்டி கொள்ளாமல் சாமான்களை ஏற்றிவிட்டார்கள். மேஜை நாற்காலிகளையும், வேறு சில மரச்சாமான்களையும் வண்டிக் கூட்டில் கட்டினர் கள். சிலவற்றை கீழே இருசில் சேர்த்துக் கட்டித் தொங்கவிட்டார்கள். படுக்கைகளையும் துணி மணி களையும் தனித்தனியாகச் சுருட்டி வண்டியில் வைத் தார்கள்.

கட்டிய வீட்டைத் தவிர மற்ற எல்லாவற்றையும் வண்டியிலேற்றியாகிவிட்டது. தங்களுடையது என்று சிறுபிராயமுதல் வசித்த வீட்டில் இனிமேல் யார் வசிக்கப் போகிறர்கள் என்று எண்ணிப்பார்க்கவில்லை இவான்ஸூம் அவனுடைய மனைவியும். கண்காணுத தேசத்தில் கொழிக்கும் செல்வத்தை ஆண்டு அனுப விக்கப் போகிறேம் என்ற ஆசையில் உத்சாகம் கொண்டு வாலிபர்களும் மற்றவர்களும் சுற்றித்திரிவ தைப்போலவே ரெபெக்காவும் குதூகலமாக இருந் தாள். சிறு வயது முதல் பழகின தேசம், நாம் ஆண்டு அனுபவித்த வீடு, உறவினர், நட்பு இவற்றை ஒதுக் கிச்செல்கிறேமே என்ற ஏக்கம் அவளுக்கு ஏற்படவே யில்லை. பழகின இடத்திலிருந்து பிரியும்போது பெண் கள் வருந்துவார்களே, அந்தச் சலனம்கூட அவளுக்கு

ஏற்படவில்லை. அந்த வீட்டிலிருந்த ஒவ்வொரு அறையும் அவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களை எடுத்துக் கூறும். தோட்டத்திலிருந்த ஒவ்வொரு செடியும் ரெபெக்காவின் கரம் பட்டு வளர்ந்தது. வீட்டிலே இருந்த ஒவ்வொன்றும், ஒவ்வொரு விதத்தில் அவர்களுடன் இணைந்து உறவு கொண்டவை. இன்ப துன்பங்களைப் பாகுபடுத்திப் பார்க்காத இளமைப் பருவத்தில் அவர்கள் இந்த வீட்டுக்கு வந்தார்கள்! இப்போது . . . .

வழிநடைச் செலவுக்காக ஆகாரப் பொருள்களை இவான்ஸ் சேகரித்தான். அரிகானில் என்ன கிடைக்கும், கிடைக்காது என்று அவனுக்குத் தெரியாது. ஆகவே, தேவை என்று தோன்றிய ஒவ்வொன்றையும் அவன் வண்டியில் ஏற்றிவிட்டான். நுகத்தடி, ஏர்க்கால், கொழு, கொம்பு, சேணம், மாவு அறைக்கத் திரிகைக்கல், சம்மட்டி, உலைக்கண சாமான்கள், மண்வெட்டி, கோடறி, கத்தி, அரிவாள் என்று பலப் பல பொருள்களைச் சேகரித்து இரண்டாவது வண்டியில் நிரப்பினான்.

உணர்ச்சி ததும்பும் குரலில், உத்சாகத்துடன் கூவிப் பேசிக்கொண்டு இங்குமங்கும் ஓடிக்கொண்டிருக்கும் லிஜியைப் பார்த்து ரெபெக்கா பெருமை கொண்டாள். எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு அவன் இப்படித்தான் சுற்றினான்; பேசினான்: குதூகலமாகக் கொம்மாளமடித்தான். அரிகானைப் பற்றிய கற்பனைகள் அவனுடைய மனத்தில் நிரம்பின. அவனுக்கு—என்! அவளுடைய மகன் ப்ரௌனிக்கும்—வேண்டியதெல்லாம், சுகமான வாழ்க்கை, சௌகர்யம் நிறைந்த திருப்தியான வாழ்க்கை! இங்கே, இந்த முஸோரியிலிருப்பதைவிடச் சந்தோஷமும் வசதியும் நிறைந்த வாழ்க்கைவேண்டும். அதையடைவதற்குத் துணிச்சல்வேண்டும். இடையேயுள்ள இன்னல்களைச்

சமாளித்துவிட்டால் சொர்க்கபோகம் காத்துக்கொண்டிருக்கிறது! விஜி பேராசைக்காரனல்ல: திருப்தி நிறைந்த வாழ்க்கையில் அவனுக்கும் நாட்டம் உண்டு. கஷ்டப்பட்டு ஜீவிக்காமல், குஷிப் பேர்வழியாக வாழ்ந்த சாது விஜி, திடீரென்று இவ்வளவு உத்சாகம் காட்டுகிறானே என்று மற்றவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். வாழ்க்கையில் அதிருப்தியேற்பட்டு அவன் வேறு இடம் செல்ல விரும்புகிறான் என்றும் சொல்ல முடியவில்லை.

வீட்டிலே 'தும்பு தூசி' யில்லாமல் வண்டியில் ஏற்றிவிட்டார்கள். காலி வீட்டைச் சுற்றி வந்த ப்ரௌனி "அம்மா நம்முடைய நாய், ராக்கூட தயார், அம்மா நீ இன்னும் கிளம்பவில்லையே" என்று கேட்டான். அவனுடைய குரல் அந்தக் காலி அறைகளில் எதிரொலி எழுப்பியது. விஜி ஒருமுறை சுற்றி, வண்டியில் எல்லாச் சாமான்களையும் ஏற்றிவிட்டோமா என்று பார்த்துவந்தான். "எல்லாவற்றையும் ஏற்றிவிட்டதாகத்தான் தோன்றுகிறது. புறப்படலாமா?" என்று ரெபெக்காவைக் கேட்டான்.

"இதோ கிளம்பிவிட்டேன்" என்று தலையில் தொப்பியைச் சரிசெய்துகொண்டாள் ரெபெக்கா.

"நான் கோவேறு கழுதைகளைக் கவனித்துக் கொள்ளவேண்டும் என்று அப்பா சொல்லுகிறார் அம்மா, இறங்கி நடக்கும்போது, நீயும் அப்பாவும், ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டுவரலாமாம்" என்றான் ப்ரௌனி அவளிடம் குதூகலத்துடன்.

"ரொம்ப சரி" என்று சொல்லிக்கொண்டே ரெபெக்கா தெருவில் இறங்கி நடந்தாள். தெருக் கதவை இழுத்துத் தாளிட்டு, சரியாகப் பூட்டிக்கொண்டிருக்கிறதா என்று நிச்சயம் செய்துகொண்டு வீதியில் கால்வைக்கும்போது அவள் நின்று நிமிர்ந்து தெருக் கதவைப் பார்த்துவிட்டு நடந்தாள்.

5. காதல்

ஆவேசமூட்டும் பிரசங்கங்களை விஜி இவான்ஸ் கேட்டிருக்கிறான். விஷயத்தை எடுத்துச் சொல்லாமல் மக்களுடைய உணர்ச்சியைத் தூண்டிவிடும் பேச்சாளர்களையும், உத்சாகத்துடன், வெறி மூண்டெழும் ஜனத்திரளையும் அவன் பார்த்திருக்கிறான். அரிகான் யாத்திரைக் கோஷ்டியில் கலந்துகொண்டதும் அவனுக்கு ஆவேசப்பிரசங்கிகளைப்பற்றிய நினைப்புத்தான் வந்தது. கோஷ்டியைச் சேர்ந்த எல்லோரும்கூடி, பிரயாண காலத்தில் நடக்கவேண்டிய வேலைகளைக் கவனிக்கத் தங்களுக்குள் சில நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் சந்தர்ப்பம் வந்தபோதுதான் அவனுக்கு, கோஷ்டியைச் சேர்ந்தவர்களுடைய உணர்ச்சியைத் தூண்டிவிட்டு உத்சாகப்படுத்தவேண்டும் எனத் தோன்றிற்று. நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும், பிரயாண வசதிகளைக் கவனிக்க வேண்டும், சட்டதிட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும் . . . .

அவர்கள் கூடியிருந்த இடம் ஒரே சந்தை இரைச்சலாக இருந்தது. வாய்மூடாமல் பெண்கள் இரைந்து பேசிக்கொண்டிருந்தார்கள்; சிறு சிறு கோஷ்டியாகப் பிரிந்து நின்றுகொண்டிருந்த ஆண்களோ, அங்குமிங்கும் ஓடப்பார்க்கும் குதிரைகளையும், மாடுகளையும் மிரட்டும் குரல் கொடுத்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்தார்கள். புதிதாகச் சிநேகம் பிடித்துக்கொண்ட சிறுவர்களோ, கத்திக் கூவிக்கொண்டு விளையாட்டும் சண்டையுமாக இருந்தார்கள்; நாய்கள் குறைத்தன, கோவேறு கழுதைகள் கனைத்தன. மாடுகளும் 'அம்மா' என்று குரலெடுத்து கோஷ்டி இறைச்சலில் தங்களுடைய பங்கைக் கொடுத்தன. கண்காணாத தூரத்திலுள்ள அந்தப் பொன்னாட்டைப்பற்றியும், அங்கு

போய் தாங்கள் நடத்தப் போகும் வாழ்க்கையைப் பற்றியும் ஒரு சிலர் பேசிக்கொண்டேயிருந்தார்கள்.

இவான்ஸ் கூட்டத்தின் நடுவே சுற்றி வந்து ஏற்பாடுகளைக் கவனித்தான். ஆண்டவனுடைய தூதனுகத் தம்மை எண்ணிக்கொண்ட வெதர்பி, அமைதியும் சோகமும் கலந்ததொரு முகபாவத்துடன் மக்களின் நடுவே சுற்றித்திரிந்து "ஆண்டவன் நல்ல மனதுள்ளவர்களை நேசிக்கிறுர் என்பதை நினைவுகூருங்கள்" என்று சொல்லிக்கொண்டே தொப்பியை ஏந்தித் தர்மம் வசூலித்தார்.

டாட்லாக்கும் ஒவ்வொருவரையும் தனித்தனியே சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தான். அந்தக் கோஷ்டியின் தலைமைப்பதவியைத் தானே வகிக்கவேண்டும் என்பது அவனுடைய ஆசை. வேறு எவருமே அவனுடன் போட்டியிடத் தயாராக இல்லை என்றுலும் அவன் மும்முரமாகத் தனக்கு ஆதரவு தேடிக்கொண்டிருந்தான். அந்தக் கோஷ்டியில் தன்னையும் டிக்கையும் தவிர வேறு எவருக்குமே அரிகான் யாத்திரையைப்பற்றி விவரங்கள் தெரியாது என்பது அவனுடைய நினைப்பு. அரிகான் பிரயாணத்தைப்பற்றித் தகவல்கள் சேகரித்த ஒரு புத்தகமும் கையுமாக அவன் எப்போதும் காட்சியளித்தான்.

இண்டிபெண்டன்ஸ் நகரிலிருந்து மேற்கே இருபது மைல் தூரம்தான் அவர்கள் பிரயாணம் செய்தார்கள். இடையே ஒருசில காட்டுமிராண்டிகளைத்தான் அவர்கள் சந்தித்தார்களே தவிர கொடுமை மிக்க சிவப்பு இந்தியர்களைப் பார்க்கவேயில்லை. முஸோரியின் இயற்கைக் காட்சிகளுக்குப் பழக்கமான அவர்களில் பலருக்கு வெகுதூரம் பிரயாணம்செய்வதற்குள் அந்நியப் பிரதேசத்தில் புகுந்துவிட்டதுபோன்ற பிரமை ஏற்பட்டுவிட்டது. சூரியன் வானவீதியில் மிதந்து மேற்கே சாய்ந்துகொண்டிருந்தான். ஓங்கிவளர்ந்த புல்களின்

மீது வீசும் காற்று, அலை அலையாக மிதந்து ஓசை எழுப்பிற்று. பட்டியிலடைபடும் வாத்துக்களைப்போல கோஷ்டியினர் பெருங்கூச்சலிட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆண்டவன் ஸ்ரீமதி டார்லிக்கு நெஞ்சும் நாக்கும் ஒன்றாகப் படைத்துவிட்டான். அவள் வாய் ஓயாது பேசிக்கொண்டிருந்தாள். கோடறியைச் சுழற்றிக்கொண்டு ஆஜானுபாகுவாக எதிரே நிற்கும் ஓர் சிவப்பு இந்தியனைக் கற்பனை செய்துகொண்டு பீதியூட்டும் கதைகளை அளந்துகொண்டிருந்தாள் அவள். வெருளி என்றாலும் வாயாடியான ஸ்ரீமதி மக்பிக்கு இருபதுமைல் பிரயாணமே அலுத்துப்போய்விட்டது. சொந்தப் பிரதேசமான ஓஹியோவுக்குத் திரும்பிவிட வேண்டும் என்று அவள் முணுமுணுக்க ஆரம்பித்து விட்டாள். மனச்சோர்வையோ, அதைர்யத்தையோ வெளிக்காட்டாமல் மக்பியும் சாமர்த்தியமாக நடந்து கொண்டான். பெண்டாட்டிதாசன் என்று தன்னைப் பற்றி எவராவது நினைத்துக்கொள்ளக்கூடாது என்று எண்ணிய மக்பி மனைவியிடமிருந்து சற்று விலகியே இருந்துகொண்டான். மற்றவர்களோ—பெரும்பாலும் கவலை தோய்ந்த முகத்துடனிருந்தார்கள்.

காட்டுப் பிரதேசத்திலுள்ள மிருகங்களைப் பற்றியும், பாம்பு பட்சிகளைப் பற்றியும் காட்டு மிராண்டிகளைப் பற்றியும் டிக் ஸம்மர்ஸ் கூறியிருக்கிறான். "அசந்துபோனால், கன்று காலிகளையோ குதிரையையோ அவிழ்த்துக்கொண்டு போய்விடுவார்கள். கோழிகளையும் வாத்துக்களையும் நரி தூக்கிக்கொண்டு போய்விடும். பருந்து கொத்திக்கொண்டு போகும்"— இப்படி எல்லாம் டிக் எச்சரிக்கை செய்ததால் முகாம் போட்டுவிட்டாலும் ஒவ்வொருவரும் தம் தம் உடைமைகளின் மீது கண்ணாகவே இருந்தார்கள். வண்டியின் நிழல் சாய்ந்துள்ள இடத்தில் ரெபெக்கா உட்கார்ந்து கொண்டிருந்தாள். ப்ரௌனியும், ஹிக்கின்

ஸூம் வேறு சிலருடன் சேர்ந்துகொண்டு கன்று காலி களை மேய விட்டுவிட்டுக் காவல் காத்து நின்றார்கள்.

இவான்ஸ் ரெபெக்காவின் அருகில் வந்தான். "நாம் புறப்பட்டுவிட்டோம் என்பதாகவே தோன்றவில்லை, பெக்கி" என்று ஆரம்பித்தான். "என்ன யோசனை? புறப்பட்டு விட்டோமே என்ற கவலையா உனக்கு?" என்று கேட்டான் பிறகு.

ரெபெக்கா புன்முறுவல் காட்டினாள். மனத்தில் குமுறிக்கொண்டிருக்கும் எண்ணங்களை அடக்கிக் கொண்டாலும், அவளுடைய முகம் சிவந்துவிட்டது. கண்களில் நீர்துளும்பாவிட்டாலும் அழுகை பீறிட்டுக் கொண்டுவந்தது. உணர்ச்சியை அடக்கிக்கொண்டு அவள் சிரித்தாள். வீட்டைவிட்டுக் கிளம்பும்போது, க்ஷண நேரம் அவள் அழுதாள். கண்களைத் துடைத்துக் கொண்டு லட்சியப் பிரதேசமான அரிகான் இருக்கும் திசையை நோக்கித்திரும்பிய அவள் பிறகு பின்புறம் பார்க்கவேயில்லை. சொந்த வீட்டையும் பழகின இடத் தையும் விட்டு வெளியேற எந்தப் பெண்ணுக்குத்தான் மனம் வரும்?

"ஒன்றுமில்லை விஜி. மனது என்னமோ செய்கிறது. பிரயாணத்தைப்பற்றிக் கேட்கிறாயே, ஏன், உன் மனம் மாறிவிட்டதா?" என்று கேட்டாள் ரெபெக்கா.

விஜி பதில் சொல்லவில்லை, அவளும் மேலே பேச வில்லை. இருவரும் உணர்ச்சிவசப்பட்டு நின்றார்கள். அவர்களிடையே நிலவிய மௌனம் தாங்க முடியாம லிருந்தது. நல்லவேளையாக டிக் ஸம்மர்ஸ் அந்தப்பக்கம் வந்தான். நல்ல உயரம், நரையோடிய தலை, நிமிர்ந்த பார்வை, உருண்டு திரண்ட அவயவங்கள், சிவப்பும் வெள்ளையுமாகக் கட்டானிட்ட சட்டையும், உடம் புடன் ஒட்டிய சல்லடமும் தரித்துக்கொண்டு அவன் சுற்றி வருவது, கண் நிரம்பிய காட்சியளித்தது.

"ஹலோ, டிக் வருகிறான்" என்றாள் ரெபெக்கா, மௌனத்தை முறித்து.

டிக் அவர்களை நெருங்கினான்.

"ஒரே களேபரமாக இருக்கிறது. ஒரு சிலர் திரும்பி விடுவார்கள்போல் இருக்கிறது" என்றான் இவான்ஸ்.

சுங்கானில் புகையிலையை அடைத்துக்கொண்டே, "நான் சரிசெய்து விடுகிறேன்" என்றான் டிக்.

"டாட்லாக் சுத்தமோசம், ஸ்திரபுத்தி யில்லாத வனாகவும் முகஸ்துதிக்கு ஆசைப்பட்டவனாகவும் இருக்கிறான். அவன் தைர்யசாலியாக இருக்கலாம். கோஷ்டிக்குத் தலைமை வகிக்கவும் லாயக்குள்ளவனாக இருக்கலாம் . . . ." என்றான் இவான்ஸ்.

அதை ஏற்றுக்கொள்ளாததைப் போல டிக் தலையசைத்தான். "நாம் கொஞ்சம் கண்டிப்பாக இருந்தால் எல்லாம் சரியாகிவிடும்" என்றான்.

இவான்ஸ் சுருட்டுப்பிடிக்க, சுங்கானையும் புகையிலையையும் எடுத்தான். தேர்தல் நடக்கப்போகிறது என்று அறிவிக்கக் குழல் ஊதும் சப்தம் கேட்கவே இருவரும் பேச்சை நிறுத்திவிட்டு முகாமை நோக்கி நடந்தார்கள். பெண்களும், குழந்தைகளும், ஆண்களும் அங்கு கூடியிருந்தார்கள். ஆண்களுக்குப் பின்னே பெண்கள் குழுமியிருந்தார்கள். குழந்தைகள் விளையாட்டை மறந்துவிட்டு அங்கே வந்து நின்றார்கள். கோஷ்டிக்குத் தற்காலிகமாகத் தலைமை வகிக்கும் பொறுப்பை டாட்லாக் ஏற்றுக்கொண்டதால் அவனே இப்போது எல்லோரையும்கூட்டித் தேர்தல் நடத்தும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. பெரிய மரத்தொட்டியைக் கவிழ்த்துப் போட்டு அதன்மீது ஏறி நின்றான் டாட்லாக். கூட்டத்தின் ஒழுங்குக்கு மணி அவசியமாகையால், அதற்குப் பதிலாக ஒரு தகர டப்பாவையும் கரண்டியையும் கையில்

வைத்துக்கொண்டான். காண்டியினுல் டப்பாவைத் தட்டிச் சப்தம் எழுப்பியதும் கூட்டத்தில் நிசப்த மேற்பட்டது. டாட்லாக்கின் உருவமும் பேச்சும் இவான்ஸை வசீகரித்துவிட்டன. பார்வை, ஆகிருதி, பாவம், ஒழுங்காகக் கத்திரித்து விடப்பட்ட தாடி, வெண்மையான பற்கள், எல்லாமே கச்சிதமாகவும் கம்பீரமாகவுமிருந்தன. கண்களில் தைர்யமும் நிதான மும் தெறிக்க, மிகவும் நிதானமான குரலில் டாட்லாக் பேசலானுன். அவனுடைய அமர்ச்சியான தோற்றத் தைக் கவனித்த இவான்ஸ், தலைமைப் பதவிக்கு ஏற்ற மனிதன் தான் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

டாட்லாக் பேசலானுன்: "நண்பர்களே, நாம்தான் முதல் முதலாகக் கிளம்பியுள்ள கோஷ்டி என்று நம்பு கிறேன். ஸெயின்ட் ஜோ நகரிலிருந்து வரும் கோஷ்டி யினர் புறப்படச் சில தினங்கள் பிடிக்கக்கூடும். ஆகவே, நாம்தான் எதிரேயுள்ள அபாயங்களைச் சமா ளிக்கப்போகிறோம். இடையேயுள்ள வரண்ட பிர தேசத்தில், உஷ்ணக்காற்று வீசி பசுமை மறைந்து விடுவதற்குள் நாம் கடந்துவிடுவோம். நம்முடைய கன்றுகாலிகளுக்கு ஏராளமான மேய்ச்சல் கிடைக் கும் என்று நம்புகிறேன். நாம்தான் முதலாவதாக வில்லாமட்டி பிரதேசத்தில் போய்ச் சேரப் போகி றோம் . . . ."

"தலைவர் அவர்களே, தலைவர் . . . ." யாரோ கூப் பிடும் குரல் கேட்டு டாட்லாக் பேச்சை நிறுத்தினுன். மதபோதகர் வெதர்பி கூட்டத்தை விலக்கிக்கொண்டு முன்வந்து "நாம் பிரார்த்தனை செய்யவில்லையே. பிரார்த்தனையில்லாமல் கூட்டம் துவங்கலாமா?" என்று கேட்டார்.

டாட்லாக் மனங்கலங்கவில்லை. "மன்னிக்கவேண் டும், சகோதர, கவனமில்லாமல் ஆரம்பித்துவிட்டேன்.

இப்போதுதான் பிரார்த்தனை செய்யுங்கள்" என்றான் நிதானமாக.

வெதர்பி மண்டியிட்டுக் கண்களை மூடிக்கொண்டார். "ஆண்டவனே பாவிகளை மன்னிப்பீராக. கருணைக்கடலே, நீண்டகாலமும், வழிநெடுக அபாயமும் உள்ள பிரயாணத்தை உம்மீது பாரத்தைபோட்டுவிட்டுத் துவங்கியிருக்கிறோம். இயற்கையின் கோபத்திலிருந்தும், காட்டுமிராண்டிகளின் தாக்குதலிலிருந்தும துஷ்டமிருகங்கள், விபத்து, பிணி, சாக்காடு இவற்றிலிருந்தும் எங்களைக் காப்பாற்றுவீராக. எப்பேற்பட்ட இன்னல்கள் வரினும் எதிர்த்து நின்று வெல்லும் சக்தியை அளிப்பீராக."

பிரார்த்தனை முடிந்ததும் டாட்லாக் பேசலானான்: "நண்பர்களே, நமக்குள் சில கட்டுதிட்டங்கள் வேண்டும். ஒரே குடும்பம்போல நாம் வாழ, நமக்குள் ஒரு அமைப்பையும் ஒவ்வொருவருக்கும் சில வேலைகளையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இனிமேல் நம்முடைய பிரயாணம் ஆபத்து நிறைந்ததாக இருக்கக்கூடும். ஆகவே கஷ்ட நஷ்டங்களைச் சமாளிக்கமுடியாதவர்களும், நெஞ்சுரமற்றவர்களும் இப்போதே விலகிக்கொண்டு ஊர் திரும்பிவிடலாம் . . . , நாம் இப்போது வேலை துவங்கலாமா?"

மாக், இரண்டடி முன்வைத்து வந்தான்: "நான் பின்வருமாறு பிரேரேபிக்கிறேன். நம்முடைய கோஷ்டிக்கு இர்வின் டாட்லாக்கைத் தலைவனாகவும், சார்லஸ் பெயர்மனை உபதலைவனாகவும், கன்றுகாலிகளைக் கவனிக்கும் படைத்தலைவனாக ஹென்ரி ஷீல்ட்ஸும் தேர்ந்து எடுக்கவேண்டும் என்று சிபார்சு செய்கிறேன். பிரயாணம்முடிந்து நாம் புது நாட்டில் குடியேறுமட்டும் இவர்களே இந்தப் பொறுப்புக்களை ஏற்கவேண்டும்" என்றான்.

இல்லினாய்ஸைச் சேர்ந்த ப்ரூவர் ஆமோதித்தான். ஹாங்மக்பி எழுந்து அதை ஆதரித்தான். திடீரென்று

எதையோ நினைத்துக்கொண்டு டாட்லாக் தொட்டியி லிருந்து கீழே இறங்கினன். "தேர்தல் நடக்கும் போது நானே தலைமை வகிப்பது ஒழுங்கல்ல. வேறு யாராவது முன் வருகிறீர்களா?" என்று கேட்டான்.

"பரவாயில்லை, நீயே கூட்டத்தை நடத்து, நீயே தலைமை வகித்து நடத்து" என்று பல குரல்கள் ஏககாலத்தில எழுந்தன.

"சரி, ஏகமனதாகக் கேட்டுக்கொண்டால், நானே பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்" என்றான் டாட்லாக்.

"ஆமாம், ஆமாம்" என்று குரல்கள் எழுந்தன.

"நன்றி, என்னால் முடிந்த அளவுக்குச் சேவை செய்கிறேன். நாம் மேல் நடத்தவேண்டியது என்ன?" என்றான் டாட்லாக், மீண்டும் தொட்டியின்மீது ஏறிக்கொண்டு.

மாக் எழுந்து நின்று, தான் எழுதிவைத்துள்ள அறிக்கையைப் படித்தான். இவான்ஸ் கண்களை மூடிக்கொண்டே கவனிக்கலானான். அவனுடைய மன திலே, பிரயாணத்தைப்பற்றியும், புறப்பட்டுள்ள குடும்பங்களைப்பற்றியும் எண்ணங்கள் கிளைத்தன. நடு நடுவே மாக்கின் பேச்சொலி அவன் காதுகளில் அரை குறையாக விழுந்துகொண்டிருந்தது.

"இந்தக் கோஷ்டிக்கு அரிகான் யாத்திரைக் கோஷ்டி என்று பெயரிடச் சிபாரிசு செய்யப்படு கிறது . . . கோஷ்டி நிர்வாகத்துக்கு ஆறுபேர்கொண்ட சபையை தேர்ந்தெடுக்கச் சிபார்சு . . . . . வழிகாட் டிக்கு ஊதியமாகக் கொடுக்கும் இருநூறு டாலர் களும், வேறு வழிச் செலவுகளுக்குமாக, கோஷ்டியி லுள்ள ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் வரிபோட வேண்டும என்று . . . வைத்தியத் தேவைக்குமட்டும் வேண்டிய சாராய வகைகளை எடுத்துக்கொள்ளலாமே தவிர, வேறு எவ்விதமான போதைப் பொருளும்

கொண்டுவரக்கூடாது என்று தீர்மானிக்கிறது.... கோஷ்டியிலுள்ளவர்கள் நெறிதவறி நடந்தால் தினம் முப்பத்தொன்பது கசையடி வீதம் மூன்று நாட்களுக்குத் தண்டனை.... கொள்ளை கொலையில் ஈடுபெட்டுவிட்டாலோ மரண தண்டனை.... விபசாரம், கற்பழித்தல் போன்ற அதிக்ரமங்களைச் செய்வோரை நிர்வாண மாக நிறுத்தி வைத்து கசையடி கொடுத்தல்.... மட்டு மரியாதையின்றி நடப்பவர்களைக் கண்டிக்க ஒரு சபை நியமித்தல்.... தினசரி காலையில் ஏழு மணிக்குப் பிரயாணம் துவங்கி பத்துப் பதினைந்து மைல்கள் செல்லுதல்.... நபர் ஒன்றுக்கு இருநூறு ராத்தல் மாவு, எழுபத்தைந்து ராத்தல் குருணை, ஐம்பது ராத்தல் இறைச்சி என்ற விகிதத்தில் ஒவ்வொருவரும் குறைந்த பக்ஷ உணவு எடுத்துக்கொள்ளவேண்டும்.... பிரயாண வசதிகளைக் கவனித்துக்கொள்ள மூன்று இன்ஸ்பெக்டர்களை நியமித்தல்....

மாக் படித்துக்கொண்டே யிருந்தான். அந்த அறிக்கைக்கு முடிவு கிடையாதோ என்ற சம்சயம் கூட இவான்ஸுக்கு ஏற்பட்டது. டாட்லாக் இடைமறித்தான். "நாம் போகப்போக சட்டதிட்டங்களை வகுத்துக்கொள்ளலாம். எதிர்பாராமல் சிக்கல்கள் ஏற்பட்டால் நிர்வாக சபைகூடி ஒழுங்குசெய்யும். அதன் தீர்ப்பை நாம் ஏகமனதாக ஏற்றுக்கொண்டால் போதும்" என்றான் அவன்.

'மிகவும் நியாயமான பேச்சு' என்று எண்ணிக் கொண்டான் இவான்ஸ். டாட்லாக்கைத் தெரிந்து கொண்ட எவருமே டாட்லாக்கிடம் நம்பிக்கை வைப்பதுடன், சொன்னதைச் செய்யும் ஆற்றலுள்ளவன் என்பதையும் ஒப்புக்கொள்வார்கள். டாட்லாக் நிர்வாக சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தான். பிரயாண வசதிகளைக் கவனிக்க இன்ஸ்பெக்டர்களையும் நியமித்தான். இரண்டு ஜாபிதாவிலும் தன்னுடைய

பெயர் இருப்பதைக் கண்டு இவான்ஸ் ஆச்சரியமடைந்தான். நிர்வாக சபைக்கு மற்றவர்கள் அவனைத் தேர்ந்தெடுத்தார்கள்; இன்ஸ்பெக்டர்களில் ஒருவனுக அவனை டாட்லாக் நியமித்துவிட்டான். தேர்தல் முடிந்து கூட்டம் கலையும்போது இவான்ஸ் நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். எதிரே பரந்து கிடந்த புல்வெளியில் ஆடுமாடுகள் மேய்ந்துகொண்டிருப்பதையும், குதிரைகளும் கோவேறுகழுதைகளும் முளையடித்துக் கட்டப்பட்டிருப்பதையும், அவற்றுக்குக் காவலாக ப்ரௌனி குதிரைமீது சவாரிசெய்து சுற்றிவருவதையும் கவனித்தபோது, ப்ரௌனியின் பாதுகாப்பில் கால்நடைகளை ஒப்பிக்கலாம் என்றுதான் எண்ணினுன்.

சிந்தனையிலிருந்து மீண்டு திரும்பும்போது இவான்ஸின் திருஷ்டி ப்ரௌனியின்மீது விழுந்தது. அவனுடைய பார்வையில் சோகமிருந்தது; அடிக்கடி ப்ரௌனி, சிறிது அப்பாலிருந்த மெர்ஸி மக்பியைத் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்ததையும் இவான்ஸ் கவனித்தான். மக்பியின் பெண்ணுன அந்தப் பெண்ணும் ப்ரௌனியும் ஏறக்குறைய சமவயதினர்கள்தான். அவளுடைய பார்வையில் கலக்கமிருந்தாலும் அவளும் அடிக்கடி ப்ரௌனியைக் கவனித்துப் புன்சிரிப்புக் காட்டுவதை இவான்ஸ் பார்த்தான். சிவப்புத் தொப்பியும் தொளதொளவென்றுள்ள அங்கியும் தரித்த மெர்ஸியை இயற்கை பூர்ணமாகக் கடாட்சித்திருந்தது. அவளுடைய அங்கிகளைப் பிரிட்டுக்கொண்டு, விம்மும் இரு ஸ்தனபாரங்களைக் கண்ட எவரும் சிறிது மனங்கலங்காமலிருக்க முடியாது. நீண்டநேரம்வரையில் இவான்ஸ் அந்தப் பெண்ணையும் ப்ரௌனியையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டேயிருந்தான். மனசிலே என்ன என்னவோ எண்ணங்கள் எழுந்து நீண்ட பெருமூச்சுத்தான் வெளிவந்தது.

6. உணவுப் பிரச்னே

முகாமிலிருந்து சற்று அப்பால் சந்தடியற்ற இடத்தில் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தான் டிக் சம்மர்ஸ். இவான்ஸும் மற்ற இன்ஸ்பெக்டர்களும் ஒவ்வொன்றும் சரியாக இருக்கிறதா என்று பார்க்க இங்குமங்கும் போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. இரவுச் சாப்பாட்டுக்கு உணவு தயாரிப்பதில் சில பெண்கள் கவனம் செலுத்திக்கொண்டிருந்தார்கள். அடுப்பு கொண்டுவராத பெண்களோ, கற்களைக் குவித்து வைத்துக்கொண்டு ச்மையல் செய்துகொண்டிருந்தார்கள். பற்றி எரியும் அடுப்பிலிருந்து எழும் ஜ்வாலையும் புகையும் தாங்காமல் நீர்மல்க, கண்களை அவ்வப்போது துடைத்துக்கொண்டே அவர்களில் சிலர் சமையலைக் கவனித்தார்கள். தூரத்தில் இருந்த கிளைகளிலிருந்து ஆந்தையும் கூகையும் கீச்சிட்டுக்கொண்டிருந்த குரல் அவ்வப்போது கேட்டது. அந்திவேளையில் எழும் அந்த அலறல் டிக் சம்மர்ஸின் ஹிருதயத்தைத் தொட்டு என்ன என்னவோ நினைப்புக்களை மீட்டிவிட்டது. அந்த அலறல் அவனுக்கு மாட்டியின்—தன்னுடைய அருமை மனைவியின்—அந்திம வேளையை நினைப்பூட்டிவிட்டது. புழுதி புரள, சில்லிட்டு அவள் தரையில் கிடந்ததும், கண்மலர விழித்து விடைபெற்றுக்கொண்டு அவள் மீளாத நித்திரையில் ஆழ்ந்ததும் எண்ணும்போது நெஞ்சைப் பிழிந்துவிட்டது போலிருந்தது. அவள் இறக்கவேண்டியவள்தான். அங்குலம் அங்குலமாக அவளைத் தின்று கரைத்துவிட்டது நோய். ஆனால் அந்த நினைப்பு ரத்தம் பொங்குவது போல, உணர்ச்சியுடன் குழைந்து, நெஞ்சைப் பிழிந்துவிட்டது. துப்பாக்கிக் குண்டுபட்டு சுருண்டு விழுந்து துடிக்கும் சிவப்பு இந்தியனைப்போல மாட்டியின் நினைப்பு—நெஞ்சிலே படபடத்தது.

மனைவியின் மறைவு நெஞ்சாழத்தில் புதைந்து உறுத்திக்கொண்டே யிருக்கும் என்பதை டிக் உணரவேயில்லை. திண்ணிய நெஞ்சமுள்ள தனக்குக் கலக்கமேற்படும் என்று எண்ணவேயில்லை அவன். மண்ணும் பெண்ணும் அவனுக்கு என்றுமே பாசக் கயிறாக இருந்ததில்லை. வேடுவர்களுடனும், வீரர்களுடனும் அவன் பொன்னையும் பொருளையும் கருதாது சுற்றித் திரிந்தவன். சென்றதை எண்ணி ஏங்கும் வழக்கமேயில்லாத அவனுக்கு இப்போது ஏற்பட்ட அனுபவம் புதிது. இப்போது அவன் வீரத்தையும் வேட்டையையும் எண்ணிச் சுற்றும் மக்களுடன் புறப்படவில்லை. இவர்களுடைய பண்பும் ஆசையும் வாழ்க்கையுமே மாறுபட்டது. வாழ வகைதேடிக்கொண்டு, சுகமாக இருக்க இடம் தேடிக்கொண்டு கிளம்பிய இவர்களுக்கு ஒவ்வொன்றிலும் பயனும் வாழ்க்கையும் பிரதிபலிக்கவேண்டும் என்ற அவாத்தான் இருந்தது. புல்வெளிப் பிரதேசத்தில் பயிரிடமுடியுமா? மரம் மட்டை கூட இல்லாதவெட்டவெளியில்எந்தப்பயிருமே முளைக்காது. போத்துகளை வெட்டி வைத்தாவது நிழல்படச் செய்யவேண்டாமா? இப்படிப்பட்ட வார்த்தைகளையும் அவற்றையொட்டி எழுந்த விவாதமுமே அவன் கேட்கமுடிந்தது. அவர்கள் விவசாயிகள்; பெண்டு பிள்ளைகளுடன் வாழ்க்கையின் இன்பம் நுகரவேண்டும் என்ற ஆசையில் பண்பட்ட மனமுள்ள குடும்பஸ்தர்கள். திண்ணமும் தைரியமும் முரட்டுச் சுபாவமும் குடும்ப வாழ்க்கை என்ற கல்லில் தேய்ந்து பதப்பட்டு விட்டன. கடுமையும் கஷ்டமும் ஆபத்தும் நிறைந்த காட்டு வாழ்க்கையை வரவேற்கும் மனப்பான்மையை அவர்களிடம் காணமுடியாது. பண்ணை, பள்ளிக்கூடம், அமைதியான வாழ்வு, நீதியும் நிர்வாகமும் நிறைந்த சர்க்கார் என்று கட்டுதிட்டங்களுக்குள் பட்ட அமைதியான வாழ்க்கையில் அவர்கள் நாட்டமுள்ளவர்கள்.

லிஜி இவான்ஸ் சம்மர்ஸ் இருக்குமிடத்துக்கு வந்தான். அவனும் அரிகானைப்பற்றிச் சிந்திப்பவன் தான். அந்த நாட்டில் பற்று வைத்தவன். ஆனால் அவனுக்கும் டிக் சம்மர்ஸுக்கும் வித்தியாசமிருந்தது.

சம்மர்ஸின் எண்ணம் ஓட ஆரம்பித்தது: "லிஜி சமாதானப் பிரியன். மற்றவர்களும் அமைதியான வாழ்க்கையில் நாட்டமுள்ளவர்கள். அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து பஸிபிக் சமுத்திரம் வரையில் பரந்து கிடக்கும் இந்த அமெரிக்க நாடு நம்முடைய நாடு என்ற எண்ணமில்லாமல் வாழும் மக்கள்! அவர்களுக்குக் குடும்பந்தான் பெரிசு! பிரிட்டிஷாருடைய ஆதிக்கத்தில் அரிகானைவிட்டுவிட அமெரிக்கா விரும்பவில்லை. அதற்குக் காரணமில்லை என்றே தோன்றுகிறது . . . .

மற்ற அமெரிக்கர்கள் வீட்டைவிட்டுக் கிளம்பாத காலத்தில் டிக்கின் தந்தை அமெரிக்கப் படையில் சேர்ந்து பிரிட்டிஷாரை எதிர்த்துப் போரிட்டார். இப்போது சந்தர்ப்பம் நேர்ந்தால் டிக்கும் தாய் நாட்டுக்காகப் போரிடத் தயார், மீண்டும் சிந்தனை!

"லிஜி வாட்டசாட்டமானவன். போரிடும் குணம் அவனுள் மறைந்து கிடக்கிறது. ஆனால் அவனால் போரிடமுடியுமா? அவன் அன்பு நிறைந்தவன்; நட்புக்கு ஏற்றவன். ஆனால் தாழ்வு மனப்பான்மையுடன் அவன் பழகும்போது . . . .? ஏன் அவனைப் போலவேதான் மற்றவர்களும்?" — இப்படித்தான் எண்ணினான் டிக். அவனுடைய ஒரே ஆசை அரிகான் பிரதேசத்தில் அமெரிக்கர்களைக் குடியேற்றி அங்கு அமெரிக்கா வாழ்க்கையை—அமெரிக்கா முத்திரையை —ஏற்படுத்தவேண்டும் என்பதே.

இவான்ஸ் டிக் சம்மர்ஸையும் கீழே கிடந்த அவனுடைய பொருள்களையும் பார்த்தான். ஒரு போர்வை, தோல் பையிலுள்ள ஒரு போத்தல் விஸ்கி, கொஞ்சம்

குருணை, இறைச்சி, காப்பித்தூள், புகையிலை, இரண்டொரு கத்தி, கைத்துப்பாக்கிகள், ஒரு இரட்டைக் குழல் துப்பாக்கி இவைகள் தான். அவனிடம் வேறு சில பொருள்களும் இருந்தன. சிவப்பிந்தியர் விரும்பிக் கேட்கும் பொருள்கள் அவை. நீலமும் வெள்ளையுமான பாசி மணிகள், தூண்டில் முள், புகையிலை, போர்வைத் துணி, சிவப்புச் சாயம் இத்யாதி. அவையும் மிகவும் கொஞ்சம்தான். அவனுடைய வாழ்க்கையே விசித்திர மானது. துப்பாக்கியும் கையுமாக குதிரைமீது சவாரி செய்துகொண்டே நாள்முழுவதும் சுற்றித்திரியும் ஆற்றலுள்ளவன்.

''ரொம்ப ஒன்றுமில்லை விஜி! இதுகூட அதிகம் தான் எனக்கு'' என்றான் டிக் விஜியைப் பார்த்ததும்.

''உனக்குத்தானே! ஆமாம்'' என்றான் விஜி.

''இது என்ன சாமான் அப்பா! மைல் கணக்காக நான் பிரயாணம் செய்தும் சாப்பிடக்கூட ஒன்றும் கிடைக்கவில்லை. என் துப்பாக்கியினால் சுட்ட ஒன்றிரண்டு ....'' அவனுடைய பேச்சு முடியவில்லை. சஞ்சலமுற்று நாற்புறமும் பார்த்துக்கொண்டிருக்கும் இவான்ஸைக் கவனித்து நிறுத்தினான். தோல் பையிலிருக்கும் விஸ்கி பாட்டிலைத்தான் இவான்ஸ் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் நட்புக்கு ஏற்றவன். கட்டுப்பாட்டுக்கு அடங்கி வாழவேண்டும் என்ற ஆசையும் உள்ளவன். பையின் மீதுள்ள துணியை விலக்கி இவான்ஸ் 'விஸ்கி' பாட்டிலைப் பார்த்துவிட்டான். அவனுடைய சந்தேகம் தெளிந்து விட்டது. இவான்ஸின் சஞ்சலத்தை உணர்ந்த டிக் ''சட்டம் எல்லாம் சரிதான் விஜி, என் விஷயத்தில் அவை சரிப்படா. என்னை நீ மறந்துவிட முடியாதா— விதி விலக்கு என்பது எதற்கும் உள்ளதுதானே!'' என்றான். அவன் கெஞ்சவில்லை; ஆனால் கோரிக்கையிருந்தது அந்தக் குரலில்.

இவான்ஸ் அசட்டுச் சிரிப்புச் சிரித்துத் தலையசைத்தான். "உன்னைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன், டிக். நீ வயது வந்தவன் அல்லவா? மேலும் லோக அனுபவமுள்ளவன், அதோ அந்தப் பாட்டிலைப் பார்த்தால் சாராயம் என்று தோன்றுகிறது. ஏன், நல்ல சரக்குதானே?" என்று கேட்டான்.

"நல்ல சரக்கு, ஆப்பிள் ரசத்திலிருந்து வடித்தது. தான்யச் சாராயம் எனக்குப் பிடிக்காது" என்றான் டிக் பெருமூச்சு விட்டுக்கொண்டே.

இவான்ஸ் கன்னத்தைத் தடவி விட்டுக்கொண்டான். சாராயத்தை ருசிக்கவேண்டும் என்ற சபலம் மனதில் எழுந்துவிட்டது. "மக்பி குடும்பத்தாரிடம் போதுமான உணவு இல்லை. டிக், டாட்லாக் கொஞ்சம் கொடுத்து உதவினான். மாக்கும் சிறிது உபகாரம் செய்தான். ஆனாலும் போதுமா? அவர்களிடம் பணமும் இல்லை. கொடுக்கவேண்டிய தலைக்கட்டு வரிகூட கொடுக்கவில்லை. ஒருவேளை நீயும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டியிருக்கும்" என்றான் ஸிஜி.

"பரவாயில்லை. மாக்கும் டாட்லாக்கும் ஏன் உதவி செய்தார்கள்?" என்று கேட்டான் டிக்.

இவான்ஸ் உடம்பைக் குலுக்கிக்கொண்டான். மக்பியைப்பற்றிப் பேசவே பிடிக்காததுபோலச் சிணுங்கினான்: "மக்பி ஒரு குடிகாரன். நம்முடைய கோஷ்டியில் குடிக்கக்கூடாது என்ற விதியுண்டு அல்லவா? ஆனால் அவனால் சும்மா இருக்க முடியவில்லை."

"அவனைப் பிடிக்கவும் முடியவில்லை. ஓஹியோவுக்குத் திருப்பி யனுப்பவும் முடியவில்லை, அப்படித்தானே?" என்று கேட்டான் டிக்.

"இல்லை, குடிப்பதேயில்லை என்று அவன் வாதாடுகிறான்" என்றான் ஸிஜி.

"போகட்டும், அவனுடைய பெண் பார்க்க நன்றாக இருக்கிறாள். களை சொட்டும் முகம்."

"என்ன களைகட்டும் முகம், போ. அப்படியொன்றும் . . . ?"

"உனக்குச் சஞ்சல மூட்டுகிறதோ?"

"அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. பார்க்கிற பெண்களைப்பற்றி எல்லாம் நினைத்துக்கொண்டிருப்பவன் நான் அல்ல. எந்தப் பெண்ணும் என்னை வசியப்படுத்திவிட முடியாது."

டிக் பேச்சை மாற்றினன். "வெதர்பி எப்படி?" என்று கேட்டான்.

"அவரிடம் என்ன இருக்கிறது? கொஞ்சம் குருணையும் இரண்டு தொத்தல் குதிரைகளும்தான் அவருடைய ஆஸ்தி. அவரையும் நான் கவனிக்கவேண்டியிருக்கிறது. நான் தனியனுக இருக்கிறேனே என்று ஒருவன் வருந்தும்போது என்ன செய்வது? ஆனல் அவருக்கு ஆண்டவனிடம் நம்பிக்கை யிருக்கிறது. அவரைப்பற்றியும் நான் கமிட்டியினரிடம் பேசவேண்டும்."

சம்மர்ஸ் எழுந்து நின்றான். முகாம் இருக்கும் திசையில் அவனுடைய பார்வை ஓடிற்று. மகபியும் வேறு சிலரும் முகாமை நோக்கி நடப்பதைப் பார்த்தான். அவாகள் இருவரும் சுருட்டுப் பற்றவைத்துக்கொண்டு முகாமை நோக்கி நடந்தார்கள்.

"பெக்கி உன்னைச் சாப்பிட அழைத்தாள், டிக். உன்னிடம் சரியான உணவுப்பொருள்கள் இல்லை என்பது அவளுடைய அபிப்பிராயம். இன்று முதல் நீ எங்களுடன் சாப்பிட வந்துவிடு" என்றான் விஜி இவானஸ்.

"மிகவும் நன்றி. அவளுடைய பெருந்தன்மையைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. உனக்கும் தாராளமான மனசுதான். இரு, என்னிடம் இறைச்சி இருக்கிறதா பார்க்கிறேன்."

அவர்களிருவரும், அங்கங்கு சமையல் செய்து கொண்டிருந்தவர்களையும், அடுப்புக்களையும், கூடாரங்

களையும், நிறுத்திவைக்கப்பட்ட வண்டிகளையும் கடந்து லிஜியின் வாசஸ்தலத்துக்குச் சென்றார்கள். அவர்களுடைய திட்டப்படி, வண்டிகளை வளைத்து அரண் போல அமைத்துக்கொண்டு, உள்ளே கன்றுகாலிகளை விட்டுக்கொண்டு நடுவில் இருக்கவேண்டும். போகப் போக, சிவப்பு இந்தியர்களுடைய தொந்தரவு இருக்குமாகையால் அவர்கள் கூடாரம் அடித்துக்கொண்டு தங்குவதற்கும் சில விதிகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். ஆனால் இங்கு மூலைக்கொன்றாக வண்டிகள் நின்றுகொண்டிருந்தன.

டாட்லாக் சபை கூட்டிக்கொண்டிருப்பதை அவர்கள் கவனித்தார்கள். பெயர்மனும் மாக்கும் அங்கே இருந்தார்கள். மற்றவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். முகாம் வசதிகளைக் கவனிக்கும் இன்ஸ்பெக்டர்களின் அறிக்கையைத் தெரிந்துகொள்ளவே டாட்லாக் சபை கூட்டியிருந்தான்.

இவான்ஸூம் சம்மர்ஸூம் அருகே வருவதைக் கவனித்த டாட்லாக் தன்னிடமிருந்த கடிதங்களைப் புரட்டிக்கொண்டே "இவான்ஸ், உன்னுடைய வேலை முடிந்துவிட்டதோ?" என்று கேட்டான்.

"முடிந்துவிட்டது."

"என்ன விசேஷம்?"

"எல்லாம் சரியாகத்தானிருக்கிறது. மதபோதகர் வெதர்பியிடம்தான் போதுமான ஆகாரம் இல்லை. யாத்திரை முடியுமட்டும் தேவையானவை இல்லை. மன்னிக்கவேண்டும், வெதர்பி அண்ணா, என் கடமை இது. உங்களிடமும் உள்ள நிலை ...."

"உண்மைதானா, வெதர்பி?" என்று கேட்டான் டாட்லாக் இடைமறித்து.

"வாஸ்தவம்தான். உங்களுடன் வந்தாலும் சரி, தனித்திருந்தாலும், என்னைக் காப்பாற்றும் பொறுப்பு ஆண்டவனைச் சேர்ந்தது" என்றார் வெதர்பி.

டாட்லாக் கோபம் பொங்க முகத்தைச் சுளித்துக் கொண்டான். "நம்பிக்கை மட்டும் போதாது. எங்களுடன் வரும்போது நம்பிக்கை வயிற்றை நிரப்பிவிடும் என்று எண்ணிக்கொண்டிருக்க முடியாது" என்ருன்.

வெதர்பி டாட்லாக்கை ஏறிட்டுப் பார்த்தார். "எனக்கு அறுபத்து நான்கு வயதாகிறது. என் ஆயுள் முழுவதும் அவனை நம்பியே வாழ்ந்துவிட்டேன்" என்ருர்.

மற்றவர்கள் சும்மா இருந்தார்கள். மத குருவிடம் அன்பு காரணமாகவே அவர்கள் மௌனமாக இருப்பதாக டிக் எண்ணினன்.

"இதோ பாருங்கள், வெதர்பி அண்ணு" என்று டாட்லாக் பேசலானன். ஒரு குழந்தையிடம் பேசி நிலைமையை விளக்கவைப்பதுபோல இருந்தது அவனுடைய பேச்சும் பாணியும். "ஆண்டவனிடம் நம்பிக்கை வைத்துக்கொண்டிருப்பது நல்லதுதான். ஆனல் உங்களைப் பட்டினி போட்டுவிட்டு நாங்கள் சாப்பிடமுடியுமா? உங்களுக்காக மற்றவர்களை கஷ்டத்துக்குள்ளாக்க நான் விரும்பவில்லை. தலைவன் என்ற முறையில் நான் சொல்கிறேன். அனுவசியமாக துன்பத்தை வரவழைத்துக்கொள்ள முடியாது" என்ருன்.

"லாபநஷ்டம் என்னேடு போகட்டும். உங்களைப் பாதிக்காது" என்ருர் வெதர்பி.

"தன்னிச்சையாக எவருமே இருக்கமுடியாது. கோஷ்டிக் கட்டுப்பாட்டுக்கு நீங்கள் அடங்கித்தான் இருக்கவேண்டும். நீங்கள் பட்டினி கிடக்கவும் முடியாது. மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுவதும் கஷ்டமே. பசி பட்டினியினல் நீங்கள் நோய்வாய்ப் பட்டால் நடுவழியில் உங்களை விட்டுச்செல்லவும் முடியாது. அழைத்துச் செல்வதிலும் சிரமம் இருக்கிறது."

"ஆண்டவன் இச்சைப்படியே நடக்கும். நான் போகிறேன்."

"கடவுள் கிடக்கட்டும். எங்களுடன் வரமுடியாது, தெரியுமா?"

வெதர்பி நாற்புறமும் சுற்றிப்பார்த்தார். ஒவ்வொரு முகத்தையும் ஊன்றிப்பார்த்தார். "ஆண்டவனுடைய அழைப்பு என் காதில் ஒலிக்கிறது. நான் தனியாகவே புது நாட்டை நோக்கிச் செல்கிறேன்" என்ருர் மிகவும் நிதானமாக.

"உங்களைத் தடைசெய்ய நாங்கள் தயாராக இல்லை. எவ்விதமான பொறுப்பும் ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இல்லை என்பதும் ஞாபகமிருக்கட்டும்" என்ருன் டாட்லாக்.

"நிறுத்து, டாட்லாக், அவரைக் காப்பாற்றும் பொறுப்பு என்னைச் சேர்ந்தது" என்று டிக் சம்மர்ஸ் திடீரென்று எழுந்து சொன்னுன்.

டாட்லாக் ஆச்சரியத்துடன் இவான்ஸை நோக்கினுன். "இவர்களுடைய பகுதிக்கு நீதானே இன்ஸ்பெக்டர், விஜி? இரண்டு பேருக்குப் போதுமான உணவுப்பொருள் சம்மர்ஸிடம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"அவன் சொன்னுல் சரி, வார்த்தையைக் காப்பாற்றுவான்" என்ருன் இவான்ஸ்.

"நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னுல் போதாதா?" என்று கேட்டான் டிக்.

"போதும் போதும்" என்ருன் சார்லஸ்.

சம்மர்ஸிடம் "ஆண்டவன் காப்பாற்றுவாராக, தோழ" என்ருர் வெதர்பி நன்றி ததும்பும் குரலில்.

வெகுநேரம் சென்ற பிறகு டிக் சம்மர்ஸ் இவான்ஸுடன் உட்கார்ந்து உணவு அருந்திக்கொண்டிருந்தான். மதகுரு வெதர்பிக்காக தான் கொடுத்த

வாக்கை எண்ணிப் பார்க்கும்போது, அவனுக்கே ஆச்சர்யமாக இருந்தது. "யார் என்ன செய்யமுடியும் என்று சொல்வதற்கில்லை" என்றான் வாய்விட்டு.

7. பூசல்

மேடும் பள்ளமும் கடந்து வண்டிகள் சென்றன. உளையில் மாட்டிக்கொண்ட வண்டிகளை இழுத்து வெளியேற்றினார்கள். மேட்டிலே ஏற முடியாமல் தவித்த மாடுகளுக்கு உதவியாக முட்டுக்கொடுத்துத் தள்ளினார்கள். தூசியும், சேறும், அனல்காற்றும் அனுபவித்துக்கொண்டு பிரயாணம் செய்தார்கள். பகலில் தகிக்கும் வெயில், இரவில் நடுக்கும் குளிர். கால்நடைகளை ஓட்டிக்கொண்டு வெயிலில் வழி நடந்தார்கள். வண்டிகளின்பின்னே கால் சுடக் கடுகி நடந்தார்கள். வண்டிகளில் சாமான்களை ஏற்றிப் பிரயாணம் செய்வதும், இறக்கி வைத்துக்கொண்டு முகாம் போடுவதும் சகஜமாகிவிட்டது. வண்டிகள் போய்க்கொண்டிருக்கும் போதே அசதி மிகுந்து 'மாடு மாதிரி'த் தூங்கினார்கள் சிலர். இரவு பகலாகக் கண்விழித்து அசதி மேலிட்டு நின்றார்கள் சிலர். கடிக்கும் ஈக்களையும் கொட்டும் பூச்சிகளையும் லட்சியம் செய்யாமல் பிரயாணம் செய்தார்கள். காடு, மேடு, ஓடை, நதி, பள்ளத்தாக்கு, மணற்குன்று என்று பலபல மார்க்கங்களில் கடந்து சென்றார்கள். அரிகான் வாழ்க என்ற கோஷம்! உத்சாகம், இவையே அவர்களை மேலே மேலே, தொடர்ந்து பிரயாணம் செய்யத் தூண்டின.

தன்னை மறந்து ஒவ்வொருவரும் பிரயாணத்தையே லட்சியமாகக் கொண்டிருந்தார்கள். ஆணும் பெண்ணும் அதே எண்ணத்தில் நடந்தார்கள். புருஷனும் மனைவியும் காதலை மறந்தார்கள். இரவில் ஒரே படுக்கையில் அசதி மேலிட்டுப் படுக்கும்போதுகூட அணைப்பில் காணும் குதுகுதுப்பு செயலில் பரிணமிக்க

இடம் கொடாமல் மனத்தை அடக்கிக்கொண்டார்கள். விருப்பு, வெறுப்பு, ஆசை, சந்தோஷம், குதூகலம் என்ற உணர்ச்சிகளுக்குப் பிரதான இடமேயில்லை. பகலில் வேலை, பிரயாணம்; இரவில் அலுப்பு மேலிட்டு உறக்கம், இப்படியாக நாட்கள் சென்றன.

கர்டிஸ் மாக்கும் அவனுடைய மனைவி அமாந்தாவும் புருஷனும் மனைவியுமாகக் கொஞ்சிப் பேசி எத்தனையோ நாட்களாயின. மனைவியிடம் மாக் அதிகமாகப் பேசுவதே கிடையாது. மிகவும் சிக்கனமாகவும் கேட்ட கேள்விக்குப் பதில் கூறுவதாகவுமே அவனிருந்தான். சிற்சில சமயங்களில் சீதோஷ்ணம், காற்று, தூசி என்று ஏதாவது பேச்சுக்கொடுத்துப் பார்ப்பாள் அமாந்தா. ஆனால் மாக் ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிடுவான். அவளுடைய முகம் சோர்ந்துவிடும். ஆனால் அவனோ சந்தோஷமாகவே இருந்தான். போகப்போகச் சரியாகிவிடும் என்று தனக்குத்தானே சமாதானம் செய்துகொள்வானே தவிர, பணிந்துசென்று சமரஸம் செய்துகொள்ளவேண்டும் என எண்ணியதே இல்லை. ஆனால் அன்றிரவு! காபிர தேசத்தைக் கடந்ததும் அவன் கெஞ்சியதைப் போல இனி அவனால் கெஞ்சிக் கூத்தாடிக்கொண்டிருக்கவும் முடியாது. மனைவியைத் திருப்தி செய்யவேண்டும் என்ற ஆசையில் தன் மதிப்பைக் குறைத்துக் கொள்வதுமில்லை.

அன்றிரவு அவன் தன்வச மிழந்துவிட்டான். வசந்த காலத்தின் பூர்ணச் சோபை எங்கும் நிறைந்து இருந்தது. அவனுள் அடங்கிக்கிடந்த ஆண்மை துள்ளிக் கிளம்பிற்று. மனைவியைக் கட்டித்தழுவி இன்பம் சுவைக்கவேண்டும் என அவன் தவித்தான். ஆசையும் உணர்ச்சியும்கூட அவன் அமாந்தாவை நெருங்கினான். அவளை அள்ளித் தழுவவேண்டும் என அங்கங்கள் துடித்தன. அதரத்திலே முத்தமிட வாய் ஊறிற்று.

"வேண்டாம், கர்டிஸ்" என்று ஒதுங்கினாள் அவள். "தயவுசெய்து சும்மா இரேன்" என்றான் கெஞ்சும் குரலில்.

அவளுடைய ஊடல் அவனுடைய உணர்ச்சியைப் பன்மடங்காக்கிவிட்டது. ஆனால் அவன் நிதானம் இழக்கவில்லை. "எத்தனையோ நாட்களாகிவிட்டது, அமாந்தா, என் செல்வமே?" என்றான் இரைஞ்சும் குரலில்.

"வேண்டாம், வேண்டாம், கர்டிஸ், மனதை அடக்கிக்கொள். எனக்குப் பயமாக இருக்கிறது" என்று கூறி அவனுடைய கைகளைத் தடுத்தாள். அணைக்க வரும் கைகளிலிருந்து விலகி நின்றாள்.

"பயமா, எதற்கு?"

"உனக்குத் தெரியாதா? வழியில் மருந்தா, மாயமா, அல்லது டாக்டர் உதவி உண்டா? வேண்டாம் கர்டிஸ், நான் தாய்மையை விரும்பவில்லை இப்போது" என்றாள் தீனக்குரலில்.

"என்றுதான் உனக்கு வேண்டியிருந்தது? என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை. பெண்களின் சுபாவமே உன்னிடம் .... வீடு திரும்பினாலும் நீ அந்தப் பேற்றை அடையப்போகிறாயா? உன்னிடம் நான் பெற்ற சுகம் பலாத்காரத்தினால் தானே! எப்போதும் நீ அப்படித் தான்."

சிறிது நேரம் அவன் மௌனமாக இருந்தான். மறுபடியும் கெஞ்சலானான். "அமாந்தா, என் கண்ணே, நான் படும் கஷ்டம் பாரேன். நானும் பொறுத்துப் பொறுத்துப் .... ஊஹூம் .... முடியாது .... அமாந்தா என் செல்வமே, இப்படியே என்னாலிருக்க முடியாது. தயவுசெய்து ....?"

மீண்டும் அவன் அவளை நெருங்கினான்.

"முடியாது. வேண்டாம் எனக்குப் பயமாக ..."

"வேண்டவே வேண்டாமா? எப்போதுமா? என் கண்ணே பிரயாணம் செய்யும்போது மட்டும்தானே" என்று கேட்டான் திடுக்கிடும் குரலில்.

அவள் காதோடு கிசுகிசுத்தாள். "கர்டிஸ், உன் மீது எனக்குப் பிரியமில்லாமல் இல்லை. ஆனால்.... நான் என்ன செய்யட்டும்?" என்றாள் தியக்கத்துடன். அவள் வாய்விட்டு அழ ஆரம்பித்துவிட்டாள். குரல் எடுப்பாக இல்லாவிட்டாலும் மெதுவாக விம்மி விம்மி அழலானாள்.

வேறு யாராக இருந்தாலும் அவளுடைய பிடிவாதத்தை மாற்ற அலலது தன்னுடைய ஆசையைத் தணித்துக்கொள்ள பலாத்காரத்தில் இறங்கியிருப்பான். ஆனால் மாக் கர்டிஸ் இளகிய மனமுள்ளவன். அவளுடைய பிடிவாதத்தின் காரணத்தை மாக் புரிந்து கொள்ளவில்லை என்றாலும் அவளுடைய மனத்தைப் புண்படுத்த அவன் விரும்பவில்லை. அவனுக்கு ஆண்டவன் மீதுதான் கோபம் வந்தது. "ஏன் இந்தக் கடவுள் பெண்களுக்கு அழகான முகமும், வசீகரிக்கும் ஸ்தனயங்களும் வழுவழுப்பான தந்தம்போன்ற துடைகளும் கொடுத்துவிட்டு, ஆணின் சல்லாபத்தை விரும்பாத சண்டித்தனத்தையும் கொடுத்தான்?" என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டான்.

சிறிது நேரம் மௌனத்துக்குப் பிறகு மீண்டும் கர்டிஸ் வாயைத் திறந்தான். "நான் எதற்காக வியாபாரத்தை நிறுத்திவிட்டு மேற்கே நோக்கிப் பிரயாணமானேன் என்று நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

அவள் பதில் பேசவில்லை.

"மனம் தெளிந்து நிம்மதியும் சந்தோஷமும் நிறைந்த வாழ்க்கையை நாடி வந்தேன்...."

அவள் மீண்டும் விம்மி விம்மி அழலானாள். அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லுவதுபோல

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு விக்கி விக்கி அழலானாள்.

"உனக்குப் புருஷன் எதற்கு? சந்நியாசி ஒருவன் உன்னைக் கட்டிக்கொண்டு.... நான் உன் முகத்தையே ஏறிட்டுப் பார்க்கமாட்டேன். உன்னிடம் இன்பம் துய்க்கவேண்டும் என்ற ஆசை மருகி...." கோபத்தால் வார்த்தை தடைப்பட்டது அவனுக்கு. தன்மீதே அவனுக்குக் கசப்பு ஏற்பட்டது. தன்னுடைய பலவீனத்தை எண்ணிப் பார்க்கும்போது தன்னைத்தானே வெறுத்தான்; நொந்துகொண்டான். மிகவும் சின்னக் காரியம், இதற்காகக் கெஞ்சிக்கொண்டிருக்கிறோமே, என்று எண்ணும்போது அவனுக்குத் தன்மீது, தன்னுடைய ஆண்மையின்மீது, சந்தேகம் வந்துவிட்டது.

"உன்னுடைய சண்டித்தனம் என்னை வேறு பெண்களிடம் நாட்டங்கொள்ளத் தூண்டுகிறது. அழகும் ஆகிருதியும் நிறைந்த பெண்களுடன் பேசும்போது என் மனம் தாவுகிறது. அவர்களைப்பற்றியே மேலும் மேலும் எண்ணுகிறது. ஒருநாள் என்னுடைய ஆசையைத் தணிக்க வேறு பெண்ணைத் தழுவுவேன்" என்றான் அவன் குரோதம்தெறிக்க.

"அதுதான் வேண்டுமென்றால் செய்யேன்" என்றாள் அமாந்தா.

படுக்கையில் கிடந்தவாறே, மெல்லிய குரலில் அமாந்தா அழுதுகொண்டிருப்பதை கர்டிஸ் கவனித்தான். "நான் வேறு பெண்ணின் நட்பைப் பெற வேண்டியதுதான்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். அவன் மனைவிக்குத் துரோகம் செய்ய என்றுமே விரும்பியதில்லை. ஆண்டவனுக்குப் பயந்து நேர்மையுடன் வாழ விரும்பினான். ஆனால் அவளுடைய சண்டித்தனம் கர்டிஸின் உறுதியைக் குலைத்தது. தன்னைத் துன்புறுத்தும் விரகவாதனையிலிருந்து தப்பிக்க அவன் விடபுருடனாக மாறிவிடக்கூடும். ஆனால் அவன்

மனம் தளரவில்லை. தன்னுடைய மனோவேகத்தையும் தார்மீகப் பண்பையும் போராடவிட்டு அவன் தவித்தான். அன்று நடந்த சம்பவங்கள் மனத்திரையில் எழுந்தன.

அன்று அவர்கள் ஒரு நதியைக் கடந்து எதிர்ப்புறமாக மேல் நோக்கிப் பிரயாணம் செய்யலானார்கள். கரையோரமாக இருந்த புல்வெளியில் பாடியிறங்கி இரவைக் கழிக்க நிச்சயித்தார்கள். நதியைக் கடப்பதற்கான பூர்வாங்க வேலைகளை டிக் மேற்பார்வை செய்தான். துணிச்சலுடன் டிக் ஆற்றில் குதிரையைச் செலுத்தி வழி நிர்ணயித்ததை கர்டிஸ் பார்த்தான். அவன் காட்டிய வழியில் வண்டிகள் இறங்கி மறுகரை சேர்ந்ததையும் கவனித்தான். ஆற்றிலிறங்கப் பயப்பட்டவர்களையும் பெட்டி பேழைகளையும் கடத்திச் செல்ல, மரக்கட்டைகளை கட்டிச் சேர்த்து கட்டுமரமாகச் செய்தான் டிக். மற்றவர்களும் அவனுக்கு உதவி செய்துகொண்டிருந்தார்கள்.

கர்டிஸ் அவர்களுடன் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி நின்றான். அவனுடைய பார்வை அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்த பெண்களின்மீது விழுந்தது. ஒவ்வொருவராக அவன் உற்றுப்பார்த்தான். மனசிலே என்ன என்னவோ எண்ணங்கள் குமிழியிட்டன. முதலில் அவன் ஜூடித் பெயர்மனைப் பார்த்தான். வெளிறிப் போன தேகம்தான். என்றாலும் உயரமும் அழகும் நிறைந்தவள். உயரத்துக்கேற்ற உடம்பு கிடையாது. உடம்புடன் பூசிமெழுகினதுபோன்ற மார்பகம் அவளுடைய பெண்மையைத்தான் காட்டிற்றே தவிர அழகு தரவில்லை. அடுத்தபடியாக ஸ்ரீமதி பாச், அவளுக்கு நல்ல உடல் வளர்ச்சிதான். ஆனாலும் கவர்ச்சியில்லை. அதோ ஸ்ரீமதி டாட்லாக், அமைதியும் அழகும் நிறைந்தவள். ரெபெக்கா இவான்ஸ், இருக்கிறாளே, கள்ளங்கபடமில்லாமல் எல்லாருடனும் சகஜ

மாகப் பழகுகிறாள். அவளுடைய இரட்டைநாடி சரீரமும், வைக்கோலை வைத்துக் கட்டிக்கொண்டதைப் போன்ற மார்பும், சேச்சே, அப்படி ஒன்றும் வசீகரமில்லை. ஸ்ரீமதி ப்ரூயர், பத்துக் குழந்தைகளைப் பெற்றவள். பார்க்கிறதற்கு அப்படித் தெரியவேயில்லை. கட்டுத் தளராத உடம்பு. கடைசியாக அவனுடைய பார்வை மெர்ஸி மக்பியின்மீது விழுந்தது. நல்ல வெளுப்பான உடம்பு, கருமை நிறைந்த கூந்தல், இளமை ததும்பும் முகம், கைபடாத கூம்பிய மார்பகம். அவளுடைய பார்வையிலிருந்தே வாழ்க்கையின் இனிப்பைச் சுவைக்கவில்லை என்று தெரிகிறதே. பெண்களுக்கு அதைக் கற்றுத்தர வகுப்பா நடத்த வேண்டும்?

அவனுடைய சிந்தனை கிளைத்தது. "என்னைப் போலவா மற்றவர்களும் இருக்கிறார்கள்? அவர்களுடைய வாழ்க்கை சப்பிட்டுவிட்டதா? மனம் வெறிமூண்டு, பெண்ணின் அணைப்புக்கு ஏங்கி அவர்கள் துயிலச் செல்கிறார்களா? மனிதனுக்கு வாழ்க்கையில் என்ன வேண்டும்? அன்பும் அணைப்பும் தானே! அமாந்தா என்மீது அன்பு செலுத்தவில்லையா? வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் அவளுக்கு என்மீது பிரியம் இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் என்னைச் சந்தோஷப்படுத்த, என் வாழ்க்கையைப் பூர்ணமாக்க அது போதாது ...."

அவனுடைய பார்வை மீண்டும் ஆற்றைக் கடக்க முயலும் கோஷ்டியின்மீது பாய்ந்தது. பெண்களும், வண்டிகளும் அக்கரை சேர்ந்துவிட்டார்கள். ஆடுமாடுகளும், கோவேறு கழுதைகளும், குதிரைகளும் ஆற்றில் இறக்கப்பட்டன. அவற்றைப்பற்றி ஓட்டிக்கொண்டே தலைவர்களாக இருப்பவர்கள் தண்ணீரில் இறங்கினார்கள். மற்றவர்களும் இறங்கினார்கள். நடுத் தண்ணீரில் கோடு போட்டதுபோல ஒரே வரிசையாக அவர்கள்

நீந்திச் சென்றார்கள். மிகவும் சுலபமாக எவ்விதமான சேதமுமின்றி எல்லோரும் மறுகரை சேர்ந்துவிட்டார்கள். தண்ணீரின் வேகம் அபாயகரமாக இல்லை. ஆடுமாடுகளோ, சாமான் சட்டுகளோ நாசமாகாமல் எல்லாம் மறுகரை போய்ச் சேர்ந்தன. கூட்டத்துடன் வந்த அண்டங்காக்காய், அசந்திருக்கும் வேளையில் கொத்திச் சென்ற ஒரு சில பொருள்களோ, கோழிக்குஞ்சுகளோதான் நஷ்டமாயின.

மாக் படுக்கையிலிருந்து எழுந்தான். அமாந்தாவின் மீதுள்ள போர்வையை எடுத்துக்கொண்டான். காலில் சராயை மாட்டிக்கொண்டு துப்பாக்கியுடன் வெளியே கிளம்பலானான். "இவளுடைய அழுகையை, யாரால் சகித்துக்கொண்டிருக்க முடியும்?" என்று சொல்லிக்கொண்டே வெளியே நடந்தான். வட்ட வளையமாக நிறுத்தியிருந்த வண்டிகளுக்கும் கூடாரங்களுக்கும் இடையேயிருந்த பாதை வழியே அவன் நடந்து சென்றான். அந்த இடைவெளியில் அங்கங்கே குதிரைகளைக் கட்டியிருந்ததை அவன் கவனித்தான். முகாமில் நிசப்தம் நிலவியது. குளிர்காய அங்கங்கு மூட்டப்பட்ட கணப்புகள் ஜ்வாலையற்றுத் தணிந்திருந்தன. எங்கோ ஓர் ஓநாய் ஊளையிட்டது. ஒருவேளை அது சிவப்பு இந்தியனின் ஒலமாக இருக்குமோ என்ற சந்தேகமும் அவனுக்குத் தோன்றியது. எதுவாக இருந்தாலும் ஆபத்துத்தான். தோளிலிருந்த துப்பாக்கியைத் தூக்கிக் கையில் பிடித்துக்கொண்டான்.

இருட்டிலிருந்து யாரோ "என்னப்பா, தூக்கமில்லையா?" என்று கேட்டது அவன் காதில் விழுந்தது.

"நன்றாகத் தூங்கினேன். இனிமேல் உறக்கம் வராது" என்றான் மாக். எதிரே டிக் நின்றுகொண்டிருந்தான். அவனும் தூங்கவில்லையா என்று தனக்குத் தானே மாக் கேட்டுக்கொண்டான்.

"ஏதாவது ஆபத்து நேருமா?" என்று கேட்டான் மாக். அவனுடைய குரல் கரகரத்தது.

"நேரலாம், பசியைத் தீர்த்துக்கொள்ள ஓநாய்கள் வரக்கூடும். திருடுவது சிவப்பு இந்தியர்களுக்கு பொழுதுபோக்கு" என்றான் டிக்.

"அனாவசியமான தொந்தரவு" என்றான் மாக்.

"யாருக்கு? அவர்களுடைய வழி அவர்களுக்கு; நம்முடைய வழி நமக்கு. சொல்லப்போனால் நாம் தான் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறோம்" என்றான் டிக்.

மாக் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"நான் போய் ஆடுமாடுகளைப் பார்த்து வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டான் மாக்.

முகாமுக்கு வடபுறத்தில் ஆடுமாடுகளை பட்டி அடைத்து நிறுத்தியிருந்தார்கள். தளதளவென்று புல் வளர்ந்து மெத்துமெத்தென்றிருந்ததால், மாக் நடக்கும்போது சப்தமே கேட்கவில்லை. சிறிது தூரம் சென்றதும் அவன் யாரோ நடமாடுவதைக் கண்டான். அருகில் சென்றதும் அடையாளங் கண்டுகொண்ட அவன் "ப்ரௌனி, எல்லாம் சரியாக இருக்கிறதா?" என்று கேட்டான்.

"கோவேறு கழுதைகள்தான் மிரளுகின்றன. பக்கத்தில் சிவப்பு இந்தியர்கள் நடமாட்டம் இருக்கும் என்று சந்தேகிக்கிறேன்" என்றான் ப்ரௌனி.

"இந்தியர்களா? எப்படித் தெரியும்?"

"அவர்கள் இல்லாவிட்டால் ஓநாய்கள் வரலாம்."

"அடுத்த காவல் நேரம் வந்துவிட்டதுபோலிருக்கிறதே?"

"சிறிது நேரம் இருக்கிறது."

"வேறு யார் யார் இருக்கிறார்கள்?"

"உல்டிரிச், மக்பி, பாச் மூவரும் ஆடுமாடுகளின் நடுவே இருக்கிறார்கள். சில சமயங்களில் ஓநாய்களைப் போல ஊளையிட்டுத் திசைமாற்றம் காட்டி, ஆடுமாடு களைத் திருடிக்கொண்டுபோக இந்தியர்கள் வருவார்கள் என்று டிக் சொல்கிறான்."

"டிக் சம்மர்ஸுக்கு எல்லாம் தெரியுமோ?"

மாக்கிற்கு டிக்கிடம் பிரியம் உண்டு. டிக்குக்கு ப்ரௌனியிடம் அன்புண்டு. ஆனாலும் மாக், "சம்மர் ஸைப்போல வேறு புத்திசாலி நம்மிடையே இல்லை யாக்கும்?" என்று கேட்டான்.

ப்ரௌனி பதில் சொல்லவில்லை. மரியாதையை உத்தேசித்து பெரியவர்களிடம் எதிர்வார்த்தை யாடாமல் சிறுவர்கள் ஒதுங்குவதைப்போல ப்ரௌனி மௌனமாக இருந்தான். தூரத்தில், ஆடுமாடுகளின் பட்டிக்கப்பால் துப்பாக்கி வேட்டுக் கேட்டது. ப்ரௌனி துப்பாக்கியைச் சரியாக வைத்துக்கொண்டு "இந்தியர்கள், இந்தியர்கள்" என்று கத்தினான்.

முகாமில் பரபரப்பு ஏற்பட்டது. இருட்டிலே ஆள் நடமாட்டம் தெரியாவிட்டாலும் கத்திக்கொண்டே சிலர் இங்குமங்கும் ஓடுவதும் கட்டுத் துறையிலிருந்த மாடுகள் கழுத்துச் சங்கிலியை அசைத்துக் குதிக்கும் சப்தமும் கேட்டது.

பட்டிக்கு அப்பாலிருந்து மீண்டும் வெடிச்சப்தம் கேட்டது. மாடுகள் மிரண்டும் எழுந்தும் குதித்தன. "ப்ரௌனி! எங்கே இருக்கிறாய், ப்ரௌனி?" என்று கத்திக்கொண்டே லிஜி இவான்ஸ் வந்தான்.

"இதோ, இங்கே இருக்கிறேன், அப்பா."

இவான்ஸ் தடதடவென்று ஓசையெழ ஓடி வந்தான். மீண்டும் ஒரு வேட்டுக் கேட்டது. மாக் வெடியோசையைக் கேட்டான், மாடுகள் அடியெடுத்து வைத்து ஓடும்போதுள்ள குளம்பொலியைக் கேட்

டான். தூரத்தில் இருட்டினூடே தெரியும் மங்கிய வெளிச்சத்தில் ஒரு சிலர் ஓடுவது தெரிந்தது. யாரோ "குதிரை! குதிரை ஏறுங்கள்!" என்று கத்தினார்கள். தூரத்தில் கோடிட்டது போல அசைந்த இடத்தில் உற்றுக் கவனித்தான் மாக். "இருங்கள்! பொறுங்கள்!" என்ற குரல் எதிரொலித்தது.

மாக் பிரமையுற்று நின்றான். அவன் எதிரே டிக் சம்மர்ஸ் வந்து நின்றான். "இந்தியர்கள்! நீ பார்த்தாயா அவர்களை?" என்று கேட்டான்.

மாக் இல்லை என்று தலையசைத்தான். மாடுகள் ஓடும் சப்தம் தெளிவாகக் கேட்டது. அதை அமுக்கிக் கொண்டு கிளம்பியது காவலாளிகளின் கூக்குரல்.

"இந்தியர்கள்தான் வந்துவிட்டார்களா?" என்று கேட்டான் டிக் சம்மர்ஸ்.

இதன் நடுவே மக்பியும் பாச்சும் அங்கு வந்து சேர்ந்தார்கள். "அட கடவுளே, அவர்கள்தான்" என்று கூவினான் மக்பி.

"இருக்காது" என்றான் பாச் சந்தேகக் குரலில்.

அவர்களுடைய திகைப்பை நீக்குவதுபோல இருளைக் கிழித்துக்கொண்டு டாட்லாக்கின் குரல் எழுந்தது. "எதுவானாலும் சரி, ஏறுங்கள் குதிரை மீது" என்றான் டாட்லாக்.

"பொறு!" என்றான் சம்மர்ஸ்.

"உனக்கு என்ன உடம்பு? டிக், இந்தச் சமயத்தில் கூட்டம் போட்டு ஆலோசிக்கச் சொல்கிறாயா" என்று எரிச்சலுடன் கேட்டான் டாட்.

டிக் பதில் சொல்லவில்லை. ஆனால் இவான்ஸ் சொன்னான்: "அவனிடம் பொறுப்பை விட்டுவிடேன்" என்று.

"டிக் சம்மர்ஸ் நம்முடைய தலைவன் இல்லை என்பது ஞாபகமிருக்கட்டும். நான் உத்தரவிடுகிறேன். ஏறுங்கள் குதிரைமீது" என்றான் டாட்லாக்.

அவனுடைய குரலிலிருந்த கண்டிப்பும் கடுகடுப்பும் மாக்கிற்குப் பிடித்திருந்தது. ஆனாலும் அவனுடைய உத்தரவுக்குப் பணிய அவன் விரும்பவில்லை. "உன்னை மறந்து கோபம் கொண்டுவிடுகிறாய், டாட்" என்றான் சமாதானம் செய்யும் நோக்கத்துடன்.

"என்னையும் மறக்கவில்லை. அதோ திருடர்கள் ஓட்டிச் செல்கிறார்களே, அந்த மாடுகளையும் நான் மறக்கமுடியாது. நான் தலைவன்—பொறுப்புள்ளவன் என்பது ஞாபகமிருக்கட்டும்" என்றான் டாட்லாக்.

பாச் சமரசம் செய்ய முன்வந்தான்; "மாக், உன்னுடைய மாடுகள்தான் அவை என்று தோன்றுகிறது" என்றான்.

"அவனுடையது என்றாலும் இழந்துவிட்டுச் சும்மா நிற்கவேண்டுமா?" என்று கத்தினான் டாட்.

மாக் பதில் பேசவில்லை.

"நம்முடைய சட்டப்படி நான்தான் யுத்த சபை கூட்டி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்" என்றான் டிக்.

"சபை அமைத்து வேலை செய். நானா வேண்டாம் என்கிறேன்?" என்றான் டாட் ஆத்திரத்துடன்.

"திருடர்கள் இந்தியர்களா, வேறு காட்டுச் சாதியாரா என்பது தெரியவில்லை. மேலும் இரவு வேளையில் அவர்களைத் தாக்குவது சுலபமல்ல, விடியட்டும், நான் மாடுகளை மீட்டு வருகிறேன். அவர்களுடைய உடைமைகளைக்கூடப் பறித்துவருகிறேன். யுத்த சபை அமைக்க வேண்டுமா? நானேதான் அந்தச் சபை. நீங்கள் வண்டிகளையும் முகாமையும் காத்து நில்லுங்கள்" என்றான் டிக் சம்மர்ஸ். உடனே இருட்டில் தாவி மறைந்து விட்டான்.

மறுநாள் விடிந்தது. முகாம் நகரலாயிற்று. மீண்டும் யாத்திரை! மேடுகளிலும் பள்ளங்களிலும் வண்டி

கள் உருண்டு ஓடின. சேற்றிலமுழ்ந்திய சக்கிரங்களைத் தூக்க ஆண்கள் தோள் கொடுத்தார்கள். தூசியும் அனலும் வீச வழி நடந்தார்கள். வெயில் ஏற ஏற வழி நடந்தார்கள். அந்தியில் தங்கி முகாம் அடித்தார்கள். வெயிலின் கொடுமை தாளாது வெயர்வை வெள்ளத்தில் தவித்தார்கள். இரவிலே வீசும் கடுங்குளிர்க் காற்றுத் தாங்காமல் போர்வைக்குள் பதுங்கினார்கள். மேலே, மேலே, மேற்கு நோக்கி அவர்கள் போய்க்கொண்டேயிருந்தார்கள்.

8. சலனம்

காடுகளையும் புல்வெளிப் பிரதேசங்களையும் கடந்து அவர்கள் சென்றுகொண்டேயிருந்தார்கள். கா, வாகாரூஸா, வெர்மிலியான் என்று பல பகுதிகளையும் கடந்து விட்டார்கள். வழியிலே எத்தனையோ சம்பவங்கள்: ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொருவிதமான சோதனை; நஷ்டம். எல்லாவற்றுக்கும் ஈடுகொடுத்துக்கொண்டே அவர்கள் சென்றார்கள்.

சென்றுபோன சம்பவங்கள் ரெபெக்காவின் மனசில் பசுமை கட்டின. அங்கங்கு குழந்தைகள் அழுததும், பாடித்தீயில் காபி தயாரித்ததும், குளிர் காய்ந்ததும் நினைப்பு வந்தது. பிரயாணத்தின்போது எவருடனுமே பேசும் வாய்ப்பு அவளுக்குக் கிடைப்பதில்லை. அவளும் பேசுவதில்லை. பாடி இறங்கி, மாடுகளை அவிழ்த்துவிட்டு, வண்டிகளை ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்திப் பிணைத்து அரணாக அமைத்து, கூடாரம் அடிக்கும்போதுதான் இவான்ஸுடனோ, ப்ரௌனியுடனோ பேச அவளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். புதுப் பிரதேசத்தில் தாங்கள் அமைக்கப்போகும் பண்ணையைப்பற்றியோ, முஸோரியில் வாழ்ந்த நாட்களைப்பற்றியோ அவர்கள் பேசி மகிழ்வார்கள்.

ஊர்ந்து செல்லும் மாடுகளைக் குரல் காட்டி ஓட்டினாள் ரெபெக்கா. வண்டியில் உட்கார்ந்து அவளுக்கு அலுத்துவிட்டது. இறங்கி, வண்டியின் அருகே நடந்து சென்றாள். செப்பனிடாத அந்த பாட்டையில் வண்டிகள் செல்லும்போது ஏற்படும் ஆட்டத்தினால் சவாரி செய்பவர்களுடைய அங்கம் குலுங்கி, இசிவு எடுத்துவிடும். மேடு பள்ளங்களில் வண்டி ஏறி இறங்கும்போது, உடம்பு குலுங்கி ஊமைக் காயமேற்பட்டு வலி எடுக்கும். உடம்பு முழுவதும் பச்சைப் புண்ணாக நோவ, ரெபெக்கா கீழே இறங்கி நடந்தாள். அவளைத் தொடர்ந்து ராக்—என்ற நாய் சென்றுகொண்டிருந்தது. முன்னே சில கஜங்களுக்கப்பால் சென்றுகொண்டிருந்த விஜி அவ்வப்போது திரும்பிப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சென்றான்.

விஜியும் ப்ரௌனியும் சந்தோஷமாகவே இருந்தார்கள். அவளும் சோர்வின்றித்தான் இருந்தாள். பிரயாண காலத்தில் ஏற்படும் அலுப்பும், சீதோஷ்ண நிலைமையினாலும், வழியிலும் ஏற்படும் கஷ்டங்களும் பெரிதாகப் பாராட்டாமல் எல்லோருமே உத்சாகத்துடன் சென்றுகொண்டிருந்தார்கள். ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு காட்டுச் சாதியார் மறைந்தபோது எல்லோருக்குமே திகிலாகத்தானிருந்தது. ஆனால் அதிசீக்கிரமே டிக் மாடுகளைத் திருப்பி ஓட்டி வந்துவிட்டான். ஒரே ஒரு மாடு தவிர மற்றவை மீட்கப்பட்டுவிட்டன.

ரெபெக்கா எப்போதுமே முன்னே செல்லும் வண்டிகளில்தான் சென்றுகொண்டிருந்தாள். அவளுடைய வண்டி இரண்டாவதாக இருக்கும். பயமில்லாத பாட்டையாக இருந்தால் மாடுகளையும் வண்டிகளுடன் ஓட்டிச் செல்வார்கள். வண்டியில் சென்றாலும், நடந்து சென்றாலும் அவள் விஜியையும் ப்ரௌனியையும் டிக்கையும் கவனித்துக்கொண்டே சென்றாள். இப்போ

தெல்லாம் டிக் அவர்களுடைய குடும்பத்திலொருவனுகி விட்டான். பிரயாண காலத்தில் டிக் சம்மர்ஸ் அசுர வேலை செய்வான். முன்னேடியாகச் சென்று வழி சரியாக இருக்கிறதா என்று வேவு பார்த்து வருவான். இடையிலே காட்டுச் சாதியாரின் குடிசைகளிருக் கின்றனவா என்று கவனித்துத் திரும்புவான். பிரயாணி களின் சாப்பாட்டுக்கு வேண்டிய வேட்டை எங்கு கிடைக்கும் என்று ஆராய்ந்து வருவான். குதிரைமீது அவன் உட்கார்ந்துவிட்டால், பொழுது செல்வதே தெரியாது. வெதர்பியைப் பாதுகாக்கும் பொறுப்பை அவன் ஏற்றுக்கொண்டபிறகு தினந்தோறும் வேட்டை யாடலாஞன். ஒவ்வொருநாளும், வாத்து, மடை யான், புறு என்று விதம் விதமான வேட்டை கொண்டுவருவான். ஒரு நாள் காட்டு ஆடு கொண்டு வந்தான்.

டிக் நல்லவன், சாமர்த்தியசாலி—இப்படித்தான் எண்ணிஞள் ரெபெக்கா. மற்றவர்களைப் பற்றியும் மனம் எடைபோட்டது. விஜியும் பொறுமைசாலி, சுறுசுறுப்பாகவும், கஷ்டப்பட்டும் உழைக்கக்கூடிய வன். டாட்லாக்கைப்போல அமர்த்தலாகவும் அதிகா ரத்துடனும் பேசமாட்டான். அடக்கமாகவும் நயமாக வும் பேசும் அவன் தன்னுடைய கடமையை உணர்ந்து நடப்பான்.

நாள் முழுவதும் ப்ரௌனி மாடுகளைக் காவல் காத்துக்கிடந்தான். அவ்வப்போது அவனைப் பார்த்து ரெபெக்கா உத்சாகமூட்டுவாள். சிறு பையன் என்ருலும் ஓர் ஆள் வேலையை அவன் செய்தான். பிரயாணச் செலவைச் சரிக்கட்ட அவன் மாக் கர்டிஸின் மாடுகளை மேய்க்கும் பொறுப்பேற்றுக்கொண்டான். மாக்கிடம் ஏறக்குறைய நாற்பது மாடுகளிருந்தன.

கையிலிருந்த குச்சியினுல் மாட்டைத் தட்டி ஓட்டி ஞள் ரெபெக்கா. சிற்சில சமயங்களில் அவளுடைய

வண்டி சாரியிலிருந்து பிரிந்து வெகுதூரம் முன்னேறி விடும். ஆனால் இன்று அவளுடைய உடலும் உள்ளமும் சோர்ந்திருந்தது. முதல் நாளிரவு மழை பெய்து பூமி நன்றாக நனைந்திருந்ததால், தூசி கிளம்பி மூச்சுத்திணற வில்லை. கடந்துசெல்லும் பிரதேசங்களை ரெபெக்கா கவனித்துக்கொண்டே வந்தாள். இடத்துக்கு இடம் மாறி, சீதோஷ்ணம் வேறுபட்டது. காடும் மலைகளும் கடந்த பிறகு பரந்த புல்வெளிப் பிரதேசம் அதன் பிறகு புதரும், காடாரம்பமும், அதற்கப்பால் ராக்கி மலைகள்—இது அவளுடைய கற்பனை.

வெர்மிலியன் பிரதேசத்தில் குன்றுகளும் காடு களும் நிறைந்திருந்தன. கண்ணுக்கு எட்டியமட்டில் ஒரே வெளியான பிரதேசத்தில் அவர்கள் இப்போது சென்றுகொண்டிருந்தார்கள். காற்று ஜிவ்ஜிவ்வென்று வீச ஆரம்பித்தது. மரங்கள் அசைந்தாடின. பின்னு லிருந்து வீசிய காற்று வண்டிகளையும் மாடுகளையும் அடித்துக்கொண்டு போய்விடும்போல இருந்தது.

பிரயாணம் முடிந்து அவர்கள் கூடாரம் அடிக்க நிச்சயித்தபோது ரெபெக்கா சந்தோஷமடைந்தாள். வலி எடுத்த கால்களையும் கழுத்தையும் அமுக்கிப் பிடித்துவிட்டுக்கொண்டாள். சோம்பல் முறித்து, உடலைத் தன்வசப்படுத்திக்கொண்டாள். முதுகை நெளித்து ஆற்றிக்கொண்டு விஜியைத் தேடிக்கொண்டு சென்றாள். அவளைப் பார்த்ததும் "இந்தக் கோவேறு கழுதைகளைப் பார்த்துக்கொள், பெக்கி, எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது" என்றான் விஜி.

"இரு, விஜி, உன்னுடன் பேசவேண்டும்."

"பேசேன். என்ன வேண்டும்? அலுப்பாக இருக் கிறதா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

"மனசிலே கவலை எழுந்துவிட்டதா?"

"அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்."

"எதற்குக் கவலே, பெக்கி? எல்லாம் சரியாகத் தானே இருக்கிறது?"

"எனக்கு இந்தக் காற்றுத் தாங்கவில்லே."

காற்றும் மழையும் தாங்கும் சக்தி தனக்கு உண்டு என்பதை அவள் அறிவாள். அவளுக்கு அலுப்பு ஏற்பட்டுவிட்டது. வலிமை பொருந்திய அவனுடைய அணைப்பிலே, அன்பான வார்த்தைகளிலே, சாந்தி காண அவளுடைய மனம் விழைந்தது.

"எல்லாம் போகப்போக நல்லபடியாகிவிடுமா, விஜி?" என்று கேட்டாள் அவள் ஆவலுடன்.

"நன்ருக, சந்தோஷமாக, அன்பே" என்ருன் விஜி.

அவர்களுடைய பேச்சு வளரவில்லே. டாட்லாக் அங்கு வந்தான். "விஜி, வண்டிகளே வளேத்து நிறுத்தி டேரா அடிக்கவேண்டியதுதான். இந்த இடத்தை விட்டால் வெகுதூரம் வரையில் மரம் கிடையாது என் கிருன் டிக். வண்டிகளுக்கு வேண்டிய் இருசு, நுகத்தடி இவைகளே நாம் சேகரித்துக்கொள்வதும் நல்லது."

"டிக்குக்குத் தெரியுமா?"

"சில பெண்களுக்கும் இங்கே தங்கவேண்டும் என்று ஆசை. குளித்து, துவைத்துக்கொண்டு ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்புகிருர்கள். என்ன செய்வது? இந்த மாதிரி தங்கித்தங்கிச் செல்வது எனக்குப் பிடிக்கவே யில்லே."

"சாமான்கள் வேண்டும் என்கிருயே?"

டாட்லாக் விடைபெற்றுக்கொண்டான். "பெக்கி, டாட்லாக் போகிருனே, பார்த்தாயா. எப்போதும் அவன் என்னே ஆத்திரமூட்டுகிருன்" என்ருன் விஜி, டாட்லாக் செல்வதைப் பார்த்துக்கொண்டே.

"நீயும் அவனும் ஒன்ருக இழைந்தீர்களே?" என் ருள் வெடுக்கென்று ரெபெக்கா.

"உண்மைதான். இப்போதும் அவனை ஒதுக்கிவிட வேண்டும் என்று நினைக்கவில்லை. அவன் போக்குப் பிடிக்கவில்லை என்றுதான் சொல்ல வந்தேன்."

"வேறு சிலருக்குக்கூடப் பிடிக்கவில்லையாமே? அப்படித்தானே, விஜி?"

"அவனுடைய பேச்சே அப்படித்தான். பார்ப்பதற்கு அதிகாரம் செய்வது போலிருக்கிறது. ரொம்பப் பதட்டமாகவும் மிடுக்குடனும் அவன் பேசுகிறான். நிற்காமல் பிரயாணம் செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறான். ஆனால் அவனுடைய குதிரைகளும் கோவேறு கழுதைகளும்தான் சப்பைகளாக இருக்கின்றன. வேகமாக கால்போடவில்லை. தலைமைப் பதவி வகிப்பதில் அவனுடைய அதிகாரமும் பலமும் அதிகமாகி விட்டது. ஆனால் நன்றாக உழைக்கிறான். அவனைப் போல மற்றவர்கள் உழைக்கமுடியுமா என்பது சந்தேகம்தான். சிலருக்கு வேகமாக, எங்குமே தங்காமல் போகவேண்டும், சிலருக்கு நிதானமாகப் பிரயாணம் செய்யவேண்டும், வேறு சிலரோ சிவப்பு இந்தியர் என்றபேச்சைக் கேட்டதுமே நடுங்குகிறார்கள். வேறு சிலரோ ஊரையும் உற்றாரையும் விட்டுப் புறப்பட்டு விட்டோமே என்று ஏங்குகிறார்கள். எல்லாரையும் இழுத்துப்பிடித்து, தாஜா செய்து பிரயாணம் செய்வது சிரமமான பொறுப்புத்தான். இதை எண்ணிப் பார்க்கும்போது நம்முடைய கோஷ்டியிலேயே இந்தப் பதவி ஏற்க அவனைப்போல வேறு எவரும் இருப்பதாகத் தெரியவில்லை."

"ஏன், நீ இல்லையா?" என்றாள் ரெபெக்கா.

"நானா! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்று கேட்டான் விஜி. அவனுடைய முகம் கருத்தது.

ரெபெக்கா பதில் சொல்லவில்லை. விஜியை அவளுக்குத் தெரியாதா? தன் பலம் தெரியாத ஆண்மகன்

அவன். சிறிது உத்சாகமூட்டி, பொறுப்புக் கட்டி விட்டால், அவன் பிரமிக்கத்தக்க முறையில் பொறுப் பேற்று நடத்துவான் என்பது அவளுக்குத் தெரியும். கைகளை மார்பின்மீது மடக்கிக் கட்டிக்கொண்டு அவள் சிந்தனையிலாழ்ந்தாள்.

9. போகும் வழியில் . . . .

"பிளாட்டி போய்ச் சேர்ந்ததும்தான் நம்முடைய பிரயாணம் உண்மையில் ஆரம்பமாகிறது" என்றான் டிக் சம்மர்ஸ்.

இவான்ஸ் தலையசைத்தான். டிக் சொல்வதன் அர்த்தம் அவனுக்கு விளங்காமல் இல்லை. பிளாட்டி சேர்ந்துவிட்ட பிறகு அவர்கள் மலைப்பிரதேசத்தில் பிரயாணம் செய்யவேண்டும். காடுகளையும் குன்று களையும் வரண்ட பிரதேசங்களையும் தாண்டி அவர்கள் வந்துவிட்டார்கள். இவை எல்லாம் சமவெளிப்பிர தேசம் என்றே சொல்லிவிடலாம். மலைப்பிரதேசத் தைக் கடந்ததும் அரிகானை அடைந்துவிடலாம். மலை மீது ஏறி அப்பால் செல்லுவதிலுள்ள சிரமத்தையே டிக் சொல்லாமல் சொன்னான்.

பாச், டார்டி, மார்டின் ஆகியவர்களும் டிக்குடன் சவாரி செய்துகொண்டிருந்தார்கள். முன்னோடியாகச் சென்று வண்டிகள் வரக்கூடிய தடம் இருக்கிறதா என்று பார்ப்பதற்காகக் கிளம்பிய கோஷ்டி அது. மேலும் அந்த வட்டாரத்தில் சிவப்பு இந்தியர்களால் இடைஞ்சல்கள் ஏற்படக்கூடும் என்று டிக் சம்சயித் தான். டிக், ஒரு கந்தல்துணியிலிருந்து சிறுசிறு துண்டு களாகக் கிழித்து, குச்சியில் சுற்றி கொடிபோலச் செய்து, வழிநெடுக நட்டுக்கொண்டே போனான். பின் னால் வரும் கோஷ்டிக்கு அடையாளம் காட்டவே அவன் கொடி நட்டுக்கொண்டு சென்றான்.

இவான்ஸ் குதிரைமீதிருந்தவாறே திரும்பிப்பார்த்தான். அவனுடைய நாய்—ராக்—வாலையாட்டிக்கொண்டே குதிரைக்குப் பின்னால் வந்துகொண்டிருந்தது. மலைச்சரிவில் நின்றுகொண்டிருந்த இவான்ஸ், கீழே, ஏறக்குறைய ஒரு மைலுக்கு அப்பால் வளைந்து வளைந்து மலை ஏறிக்கொண்டிருக்கும் வண்டிகளின் சாரியைப் பார்த்தான். மிருகங்களின் குளம்புபட்டுக் கிளம்பும் புழுதிப்படலம் மேலே எழுந்து, காற்றுடன் கலக்காமல் தனித்து நிற்பதை அவன் பார்த்தான். வண்டிகளுக்குப் பின்னால் குதிரைகளும், அவற்றுக்குப் பின்னே மாடுகளும் வந்துகொண்டிருந்தன. அங்கு மிங்கும் மிரண்டு ஓடாதபடி கண்காணிக்க மாடுகளின் இரு மருங்கிலும் குதிரைவீரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். பின்னால் வந்துகொண்டிருந்த குதிரை வீரர்கள் குரல் கொடுத்து மாடுகளை விரட்டிக்கொண்டேயிருந்தார்கள். புழுதியிலிருந்து விலகி, சிறிது தூரத்தில் பெண்களும் சிறுவர்களும் நடந்து வந்தார்கள். வெயிலேறி, சூர்யன் உச்சியை அடைந்துவிடவே, கால்கள் சுட, வியர்வை சொட்ட, மேட்டை நோக்கி அவர்கள் தள்ளாடிக்கொண்டே நடந்தார்கள். அவர்களுடன் முன்னும் பின்னுமாகச் சென்று ஒவ்வொரு வண்டிக்காரனுடனும் பேசிவரும் தனி மனிதனை இவான்ஸ் பார்த்தான். நடைதளர்ந்து நிற்கும் கோஷ்டியினரை உத்சாகப்படுத்திக்கொண்டு டாட்லாக்தான் முன்னும் பின்னும் போய் வருகிறான் என்று இவான்ஸ் ஊகித்துக்கொண்டான். டாட்லாக் சிறந்த குதிரை வீரன் அல்ல. அதனால்தான் அவன் தலைமை வகித்து கூட்டத்தின் முன்னே குதிரையில் வருவதற்குப் பதிலாக, மக்களுடன் மக்களாகக் கலந்துகொண்டு விட்டான். ஆனாலும் அவனுடைய பொறுப்பும் நிர்வாகமும் பாராட்டக்கூடியதாகவே இருந்தது. சிறந்த தலைவன்தான் என்று எல்லாருமே சொல்லிக்கொள்வதும் உண்டு.

வண்டிகளின் வரிசையில் தன்னுடைய இரண்டு வண்டிகள் எங்கே வருகின்றனவென்று இவான்ஸ் ஊன்றிக் கவனித்தான். ஒரு வண்டியின் பக்கத்தில் பெண் ஒருத்தி நடந்து வருவதுபோலத் தோன்றவே அந்த வண்டியே தன்னுடையது என்றும் அவளே ரெபெக்கா என்றும் எண்ணிக்கொண்டான். இரண்டாவது வண்டியில் ப்ரௌனி இருக்கக்கூடும் என்று ஊகித்த அவனுக்கு, தான் அவர்களைப்பற்றி எண்ணுவதைப்போலவே அவர்களும் தன்னைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கலாமல்லவா என்று தோன்றிற்று.

"நாமும் நல்ல வேலை செய்கிறோம் என்று டாட்லாக் எண்ணுவதில்லை" என்றான் இவான்ஸ் சட்டென்று, சிந்தனை கலைந்து.

"அவனுக்குத் தன்னைப்பற்றியே பெருமை அதிகம். சுத்த அகம்பாவக்காரன்" என்றான் பாச்.

"அவனைமாதிரி ஓர் ஆள் நமக்கு வேண்டியது தான்" என்றான் இவான்ஸ்.

"அதற்காக, நமக்கு வழிகாட்டித் தலைமைவகிக்க, ஆண்டவனே தன்னை நியமித்துவிட்டதாக அவன் எண்ணிக்கொள்ளவேண்டாம், இல்லையா டார்டி?" என்று கேட்டான் டிக். அவனுடைய குரலில் ஆத்திரமும் கோபமும் இருப்பது தெளிவாக இருந்தது.

டார்டி அவர்களுடைய பேச்சில் கலந்துகொள்ளவில்லை. ஐரிஷ்காரனாக இருந்தாலும், அவன் எப்போதுமே அதிகமாகப் பேசுவதில்லை.

"தள்ளு அவனுடைய பேச்சை" என்றான் இவான்ஸ் அலுப்புடன்.

அவர்கள் ஐவரும் மௌனமாகவே சிறிது நேரம் சவாரி செய்தார்கள். அன்று பிரயாணத்தை முடித்துக்கொண்டு முகாம்போட டிக் ஓர் இடத்தைக் குறிப்

பிடும் வரையில் எல்லாரும் மௌனமாகவே சென்றார்கள். சரிவில் சிறிது துருத்திக்கொண்டிருக்கும் சமப் பிரதேசத்தில் பாடி இறங்க அவர்கள் தீர்மானித்தார்கள். அங்கு தண்ணீர் கிடையாது என்று ஏற்கனவே ஊகித்த டிக், வண்டிகளில் தண்ணீர் நிரப்பிவர ஏற்பாடு செய்திருந்தான். அந்தச் சரிவிலிருந்து பிளாட்டி வரையில் தண்ணீர்ப் பஞ்சம் என்பது டிக்கிற்கு ஏற்கனவே தெரியுமாகையால் முன்னிரவிலேயே முகாம் இறங்கிய இடத்தில் அவன் தண்ணீரைச் சேகரிக்க ஆயத்தம் செய்தான்.

உச்சிப்பொழுதுக்கு வண்டிகள் அந்த இடத்தைச் சேர்ந்தன. வண்டியிலிருந்து மாடுகளைப் பூட்ட விழ்த்துவிட்டதும், பெண்கள் ஆகாரம் தயாரிக்க முற்பட்டார்கள். எல்லாரும் அவசரம் அவசரமாக உணவு அருந்தினார்கள். அன்றே பிளாட்டி போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்றே ஒவ்வொருவரும் பேசிக்கொண்டார்கள். புறப்படத் தயாராகவேண்டும் என்பதை அறிவிக்கக் குழல் ஊதப்பட்டதும், ஒவ்வொருவரும் ஆயத்தமானார்கள். இவான்ஸ் குதிரையேறி, முன்னால் சென்றுகொண்டிருந்த டிக்கின் கோஷ்டியுடன் சேர்ந்துகொண்டான்.

நாற்புறமும் சுற்றிப்பார்த்துக்கொண்டே டிக் சென்றான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் ஒரு வழிப்பாட்டையைக் கடந்து சென்றார்கள்.

"இது மலைசாதியினர் உபயோகிக்கும் பாட்டை, அர்கான்ஸாஸ் வரையில் இது செல்கிறது. இதற்கு மேலே அவர்களுடைய நடமாட்டம் அதிகம்" என்றான் டிக். குதிரையை நிறுத்திப் பிடித்துக்கொண்டு அங்கவடியின்மீது நின்று அவன் சுற்றிப்பார்த்தான். "அதோ தெரிகிறதே, கரை, அதைப்பற்றித்தான் யோசிக்கிறேன்" என்றான்.

அவன் காட்டிய இடத்தில் ஒரு மணல்குன்றுத் தொடர்தான் தென்பட்டது. இவான்ஸும் மற்றவர்களும் மலைச்சாதியினரைப்பற்றியும் அவர்களுடைய தாக்குதல்களைப்பற்றியும் எண்ணியவாறே டிக் காட்டிய திசையில் பார்த்தார்கள்.

"மணற்குன்றுகள் தான். இதைத்தான் இங்குள்ள சுதேசிகள் 'நெப்ராஸ்கா கரை' என்று சொல்வார்கள்" என்றான் டிக்.

நாற்பது அடி உயரமும் சில இடங்களில் அறுபது அடி உயரமுமுள்ள அந்தக் குன்றுகளை நெருங்கும் போது, கீழே உப்புப் பாரித்த தரையாக இருப்பதை அவர்கள் கவனித்தார்கள். இவான்ஸ் குன்றின் உச்சியை அடைந்து அப்பாலிருந்த பிரதேசத்தைப் பார்த்தபோது ஆச்சர்யத்தினால் ஸ்தம்பித்துப்போய் நின்றான். பிளாட்டியைப்பற்றி அவன் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறான். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் சமவெளியாக இருக்கும் அந்தப் பிரதேசத்தைப் பார்த்தபோது அவன் பிரமித்துப்போனான். அவனுடைய நாய், ஒரு குள்ளநரியைத் துரத்திக் கொண்டு ஓடிற்று. நாயின் குரல் கேட்டு, சரிவில் மேய்ந்துகொண்டிருந்த மான் ஒரு மிரண்டோடிற்று. சரிவில் புதர் மண்டிக்கிடக்க, சற்றுத் தொலைவில் ஒரு நதி வளைந்து வளைந்து ஓடிக்கொண்டிருந்தது. இருபுறத்திலும் பசும்புல்லால் விளிம்பு கட்டியது போல மணற் பரப்பும், நடுநடுவே திட்டுத் திட்டாகச் சிறு தீவுகளுமிருக்க அந்த நதி ஓடிக்கொண்டிருக்கும் காட்சி ரம்மியமாக இருந்தது. தன்னுடைய வாழ்க்கையில் காணக்கிடைக்காத காட்சியைக் கண்டு அனுபவிப்பதாகவே இவான்ஸ் எண்ணினான். அவனையறியாமலே "ஆண்டவனே, என்ன அற்புதம், டிக், இந்தக் காட்சி . . . ." என்று வாய்விட்டுக் கூறினான். மேலே பேசமுடியாமல் அவன் திகைத்துப்போனான். டிக் தலையசைத்துப் பதிலிறுத்தான்.

டிக்கும் பாச்சும் இருபுறமும் நிற்க, மார்டின் பின் வந்துகொண்டிருக்க, இவான்ஸ் குதிரையை இழுத்துப் பிடித்து நிறுத்தினுன். "டிக், இந்த அற்புதக்காட்சி என்ன ஆனந்தமாக இருக்கிறது; நான் இப்படி இருக்கும் என்று எண்ணவே இல்லை" என்முன் இவான்ஸ் மீண்டும்.

டிக் குதிரையைத் தட்டிவிட்டான். அவர்கள் நால்வரும் மெள்ள மலைச்சரிவில் இறங்கலானுர்கள். பின் தொடர்ந்துவரும் கோஷ்டிக்கு வழிகாட்ட, ஒரு புதரில், நன்ருகத் தெரியும்படி டிக் ஒரு கொடியைக் கட்டிவிட்டுச் சென்முன். சரிவிலிருந்து இறங்கி, சமவெளியைத் தாண்டி அவர்கள் ஆற்றங்கரையை அடைந்தார்கள்.

10. சந்திப்பு

பதினேழு வயது நிரம்பிய சிறுவனுனுலும் ப்ரெளனியின் செயல் மனித வளர்ச்சியை அடைந்துவிட்டது. குதிரையைத் தட்டிவிட்டுக்கொண்டே அவன் சிந்தனையிலாழ்ந்தான். எண்ணங்கள்! மனசில் அலை மேல் அலையாக எழுந்து அமுங்கிக்கொண்டிருந்தன. வீட்டைவிட்டுப் புறப்படும் நாள்வரையில் அவன் விளையாட்டுப் பிள்ளையாக இருந்தான். எதைப்பற்றியும் தீவிரமாகச் சிந்திக்கவே அவன் முயன்றதில்லை. இப்போது? . . . .

"மனசிலே கவலைகள் குமிழியிட்டன. ஆவலும் பொறுப்பும் இடம் பிடித்துக்கொள்ள, அவன் இங்குமங்கும் பார்த்துக்கொண்டே குதிரைமீது சென்றுகொண்டிருந்தான். ஆபத்து நிறைந்த பிரதேசத்தில் பிரயாணம் செய்கிருேமே" என்று எண்ணும்போது அவனுடைய கண்களும் காதுகளும் எச்சரிக்கையடைந்தன. சிறு சப்தம் கேட்டாலும் அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்ப்பான். நிழலாடினுல்கூட

அவன் கூர்ந்து கவனிப்பான். பரந்த சமவெளியான பிரதேசமென்றாலும் ஓங்கி வளர்ந்த புற்காடுகள் நிறைந்திருந்தது. காட்டு எருமைகள், மாநாய், சிவப்பு இந்தியர், செந்நாய் என்று பலபல ஆபத்துக்களைச் சமாளித்துச் செல்லவேண்டும் என்று அவன் தெரிந்து கொண்டதால் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே சென்றான்.

முன்னே டிக் சம்மர்ஸூம் அவனுடன் செல்லும் ஒற்றர்படையும், சற்றுத் தொலைவில் செல்லும் வண்டிகளும் நன்றாகத் தெரிந்தது. வெயிலேறி கதிரவன் உச்சியை அடைந்தபோது, டிக்கும் டாட்லாக்கும் பாடி இறங்க இடம் தேடுவதையும், மற்றவர்கள் ஆற்றோரமாகப் பள்ளம் தோண்டிக்கொண்டிருப்பதையும் ப்ரௌனி கவனித்தான். குழம்பலாகச் செல்லும் ஆற்று வெள்ளத்தைக் கவனித்த பிறகுதான், அவர்கள் எதற்காகப் பள்ளம் தோண்டுகிறார்கள் என்று விளங்கிற்று.

உடன்வந்த ஹிக் சொன்னான் ''பிளாட்டி நதிக் கரையில் சொருகுமணல் அதிகம், ப்ரௌனி, இறங்கினாலும் குழம்பலான அந்த நீரைக் குடிக்க முடியாது. ஊற்றுத் தோண்டித்தான் தண்ணீர் பருகவேண்டும்'' என்று.

ஹிக்; மார்டின், பாட்டர், மக்பி, இவர்கள் எல்லோரும் கோஷ்டியின் பின்வரிசையில் மாடுகளை ஓட்டிக்கொண்டு வருவதுண்டு. அடிக்கடி இவர்கள் முறை மாற்றிக்கொண்டாலும் ப்ரௌனி எப்போதுமே பின்வரிசையில் வந்துகொண்டிருந்தான். கோஷ்டியில் வரும்போது மார்டின் வாயைத் திறப்பதே கிடையாது; ஹிக் ஊர்வம்பு அளப்பான். பாட்டர் எப்போதுமே குதிரைகளைப்பற்றியும் மாடுகளைப்பற்றியுமே பேசுவான். அவர்களுடைய பேச்சும், கொம்மாளமும் ப்ரௌனியைக் கவர்ந்தாலும், தன்னைப்

போல அவர்களும் பொறுப்பு உணர்ந்து ஏன் நடக்க வில்லை என்று அவன் எண்ணினான். அவர்களுடைய போக்கு அவனுக்கு அப்படித்தான் தோன்றிற்று. பிரயாண கோஷ்டியில் செல்லும் விவசாயியாக அவன் தன்னைப்பற்றி எண்ணவில்லை. படை எடுத்துச் செல் லும் ராணுவத்தைச் சேர்ந்த யுத்த வீரனாகவே எண் ணிக்கொண்டான். அவனுடைய ஆதர்ச புருஷன் டிக் சம்மர்ஸ்தான். சுறுசுறுப்பாகவும் துணிச்சலுடனும் அவன் எப்போதுமே இருப்பதைக் காணும் ப்ரௌனி யும் அவனுக்கு ஒப்பாகவே எண்ணி நடந்தான். இரு வருக்கும் வயதில்தான் வித்யாசம். ப்ரௌனியைச் சிறுபிராய முதல் அறிந்தவர்களுக்கு, அவனுடைய சுபாவமாறுதல் ஆச்சர்யத்தை அளித்தது. டிக்கின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவான் ப்ரௌனி என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

பாடி இறங்கவேண்டிய நேரம் நெருங்கியதும் இவான்ஸ் ப்ரௌனியைச் சந்தித்தான். "ப்ரௌனி, கொஞ்சம் அடுப்பு எரிக்க, காய்ந்த சாணமும் சுள்ளி களும் வேண்டும், காட்டெருமைகள் போட்ட சாணம் காய்ந்து கிடக்கும், பொறுக்கி வா" என்று சொல்லிக் கொண்டே ரெபெக்கா நின்றிருந்தபுறமாகத் திரும் பினான். அலுப்புமேலிட்டு அவள் நிற்பதைக் காண இவான்ஸ் சொன்னான்: "பால் கறந்துகொடு, ப்ரௌனி, அம்மாவுக்கும் உதவி செய்ததுபோல இருக்கும்."

"வேண்டாம், நானே கறந்துகொள்கிறேன்" என்றாள் ரெபெக்கா.

"எதற்காக நீ கஷ்டப்படுகிறாய், பெக்கி?" என்று கேட்டான் இவான்ஸ் பரிவுடன்.

"பால் கறப்பது ஒரு பெரிய வேலையா? வண்டி யிலே ஏற்பட்ட குலுக்கலால் உடம்பு முழுவதும் இசிவு எடுத்துவிட்டது" என்றாள் அவள்.

"சரி" என்று நகர்ந்தான் ப்ரௌனி.

வண்டிகளை நிறுத்தி, மாடுகளை அவிழ்த்துப் புல் தரையில் ஓட்டிவிட்டார்கள். சாமான்களைக் கீழே இறக்கி கூடாரம் அடிப்பதிலும், சமையல் செய்வதிலும் ஆண்களும் பெண்களும் கவனம் செலுத்தலானார்கள்.

இவான்ஸ் பிரமித்து நிற்கும் ப்ரௌனியைப் பார்த்தான். "ஏன் கலங்கி நிற்கிறாய், ப்ரௌனி? எல்லாருக்குமே இப்படித்தான்" என்றான்.

"பால் கறந்திருக்கிறேனே, அப்பா, பழக்கப்பட்ட வேலைதானே" என்றான் ப்ரௌனி தயக்கத்துடன்.

"பால் கறப்பதைச் சொல்லவில்லை, தம்பீ, சாணம் பொறுக்குவது கொஞ்சம் சிரமமான வேலை என்றுதான் சொல்லுகிறேன்."

"நான்தான் செய்கிறேன் என்று சொல்லிவிட்டேனே, அப்பா, எனக்கு ஒன்றும் சிரமமில்லை."

சாணமும் சுள்ளியும் பொறுக்குவது சுலபமான வேலையா அல்லவா என்பதைப்பற்றி ப்ரௌனி நினைக்கவில்லை, அவனுக்கு வெட்கமாக இருந்தது. அந்த வேலையைச்செய்ய வெட்கமாக இருக்கிறது என்று தந்தையிடம் சொல்லவும் அவனுக்குக் கூச்சமாக இருந்தது.

மானம் அவமானம் என்று யோசித்துக்கொண்டிருப்பது கடினம்தான். எரிதுரும்பு சேகரிக்க வேண்டியது அவசியம் என்று ப்ரௌனிக்குத் தெரியும். சுற்றிலும் கண்ணுக்கு எட்டிய தூரம்வரையில் சிறு புதர்கூட இல்லாத புல்வெளியே இருந்தது. சில பெண்களும் சிறுமிகளும் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தார்கள். தலை கொதிக்கும் வெயிலில் ஒதுங்கக்கூட நிழலில்லை. வண்டிகளுக்குள்ளேயே இரும்பு அடுப்புகளை வைத்திருந்ததால் சில பெண்கள் வெயிலின் கொடுமைக்கு ஆளாகாமல் தப்பினார்கள். மற்றவர்

களோ ஒரு யுக்தி செய்தார்கள். சில பெண்கள் வட்ட வளையமாக நின்றுகொண்டார்கள். நடுவில் நிழலும் மறைப்பும் ஏற்பட்டுவிடவே மற்றவர்கள் அடுப்புப் பற்ற வைத்தார்கள். பெண்களுடைய கஷ்ட நஷ்டங் களைக் கவனியாமல் ஆண்கள் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பொறுப்பு அவர் களுக்கு!

தன்னைப்போல அபாக்கியவான் வேறு எவருமில்லை என்று எண்ணிக்கொண்டே ப்ரௌனி வெளியே சென் றான். தீய்ந்துகிடந்த புல்வெளியில் காய்ந்துகிடக்கும் சாணத்தை அவன் பொறுக்கலானான். புரூவரின் குழந்தைகளும், ஜோடர்லி, ஜெப்பெர்ட், ஹாரி, டார்டி இவர்களுடைய குழந்தைகளும் அங்கு இருந்தார்கள். தாமே உணவு தயாரித்துக்கொள்ளவேண்டிய நிலையி லுள்ள வெதர்பியும் வேறு சில ஆண்களும்கூட அங்கு காணப்பட்டார்கள்.

கைநிரம்புமட்டும் ப்ரௌனி நிமிர்ந்து பார்க்காமல் பொறுக்கிக்கொண்டேயிருந்தான். நிமிர்ந்து பார்த்த போது எதிரே மௌலி மக்பி நின்றுகொண்டிருந்தாள். அவனையே பார்த்துக்கொண்டிருந்த மௌலி வாய் திறந்து பேசவில்லை. அவளுடைய கண்கள் மனத் திலே எழுந்த உணர்ச்சியைக் காட்டிப் பேசின. கன் னத்தில் இரத்தமேறிச் சிவக்க, முகம் பிரகாசமடைய அவள் வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்து நின்றுகொண்டிருந்தாள்.

அவனும் உணர்ச்சிவசப்பட்டு நின்றான். மௌலி யுடன் பேசவேண்டும் என்ற ஆவலூற வெட்கமேலிட் டுச் சிறிதுநேரம் மௌனமாக நின்றான். கடைசியில், "நான் நிறையச் சேகரித்துவிட்டேன்" என்றான்.

மௌலி திடுக்கிட்டாள், நாணத்தால் தலை கவிழ்ந்து நின்ற அவளுடைய உடல் பதறிற்று. கையில் வைத் திருந்த சாணப்பொறுக்குகள் நழுவிக் கீழே விழுந்தன.

சட்டென்று ப்ரௌனி பாய்ந்து அவளை நெருங்கினான் "இரு, இரு. நான் பொறுக்கித் தருகிறேன். உனக்காக எதைச் செய்தாலும் சந்தோஷமாக இருக்கிறது" என்றான்.

அவனுடைய பேச்சையும் பாவத்தையும் மௌர்ஸி ரசித்தாள். "நானே பொறுக்கிக்கொள்கிறேன்" என்று தியங்கித் தியங்கிச் சொன்னாள். அதற்குமேல் அவளால் அங்கு நிற்கமுடியவில்லை. மெள்ள மெள்ள அடியெடுத்து வைத்து நகர்ந்தாள். அவ்வப்போது அவள் குனிந்து சாணி பொறுக்கினாள். அவளுடைய முகத்திலே பொலிவு இருந்தது; நாணம் தெறித்தது, கம்பீரம் பிரகாசித்தது.

அவளையே பார்த்துக்கொண்டிருந்த ப்ரௌனி, கீழே சலசலப்புக் கேட்கவே, அவளுடைய காலடியில் பாம்புதான் ஓடுகிறதோ என்ற எண்ணத்துடன் பாய்ந்து சென்றான். சப்தம் கேட்ட இடத்தில் காலை வைத்து ஓங்கி மிதித்தான். அவனால் அங்கு நிற்க முடியவில்லை. வேலையிலும் கவனம் செல்லவில்லை. "மௌர்ஸி, மௌர்ஸி" என்று அடிக்கொருதரம் கூப்பிட்டு என்ன என்னவோ பேசிக்கொண்டே வண்டிகள் நிற்குமிடம் வந்து சேர்ந்தான்.

அன்று முழுவதும் மௌர்ஸியின் நினைவே அவனைச் சூழ்ந்திருந்தது. இரவில் அவன் கனவு கண்டான். அன்பும் ஆசையும் ததும்ப மௌர்ஸி தன்னை அணைக்க வருவதுபோலக் கனவு காண்பான், விழித்துக்கொள்வான். கண்ணை மூடும்போது கண்களில் முத்துத் தெறிப்பதுபோன்று அவள் வந்து நிற்பாள். அவன் தன்னை அசட்டைசெய்துவிட்டானே என்று காட்டும் பாவத்தில் கண்ணீர் மல்கத் தோன்றுவாள். அவன் திடுக்கிட்டு எழுந்துவிடுவான். தான் கண்டது கனவு என்று தோன்றும். ஏமாற்றத்துடன் படுக்கையில் சாய்வான். மௌர்ஸி மறுபடியும் வந்துவிடுவாள். தன்

னுடைய தேனூறும் வாயை அவனுடைய அதரத்தில் பொதித்து முத்தமிடுவாள். ஆவலுடன் அவள் அணை யக் கையை விரிப்பான்; விழித்துக்கொள்வான். அவ னுடைய உள்ளம் கொதித்தது, ஆண்மை வெறியேறி, கட்டுக்கடங்காமல் தான் இருப்பதைக் கண்டு வெட்கி னான். இரவு எப்படியோ கழிந்தது.

11. சண்டையும் சாவும்

வண்டியோரமாக வந்து நின்றுகொண்டு "மார்டின், மார்டின்" என்று டாட்லாக் கூப்பிட்டான். பதில் கிடைக்கவில்லை. வண்டியை நெருங்கிச் சிறிது உரத்த குரலில் 'மார்டின்' என்று கத்தினான் அவன். பிரயா ணம் துவங்கியதிலிருந்து, விடியற்காலையில் நான்கு மணிக்கே மார்டின் விழித்துக்கொள்வது வழக்கம். ஒருநாள்கூட அவன் அந்த நேரத்துக்குப் பிறகு படுக் கையில் இருந்ததில்லை.

வண்டியின்மேலே, சுருண்டு படுத்துக்கொண்டிருக் கும் ஓர் உருவம்தான் கண்ணுக்குத் தென்பட்டது. போர்வையைப்போல, படுதாத் துணியை அள்ளி மேலே போட்டுக்கொண்டு சுருண்டுகிடந்தான் மார் டின். டாட்லாக்கின் குரல்கேட்டு மெள்ள அவன் அசைந்தான். "நண்ப, உடம்பு சரியாக இல்லை" என்றான் தீனக்குரலில்.

"சரி வெளியே வா, வேறு ஒரு வண்டியில் படுக்கை போட்டுத் தருகிறேன்" என்றான் டாட்லாக்.

கையிலிருந்த சாட்டையினால் தரையில் கோடு கிழித்துக்கொண்டே யோசனையிலாழ்ந்தான் டாட் லாக். நல்ல சீதோஷ்ணமும், காற்றும் உணவும் கிடைக்கும் இந்தப் பகுதியில் உடல் நலமற்றுப் போவ தென்றால் அவனால் நம்பமுடியவில்லை. ஒருவேளை மார்டின் பொய் சொல்கிறானோ என்ற சந்தேகமும்

அவனுக்கு எழுந்தது. பிரயாணம் தொடங்கியதி லிருந்து, அவர்களுடைய கோஷ்டியில் எவருமே நோய் வாய்ப்படவில்லை. வயிற்றுவலி, ஜலதோஷம் என்று யாராவது வருந்தியிருக்கலாம், ஆனால் எவருமே படுக் கையை விரித்துப் படுத்ததில்லை.

அவனிடம் இரண்டு வண்டிகள் இருந்தன. இரண் டிலும் சாமான்களைத் திணித்து அடைத்திருந்தான். வேறு வண்டிகளில் சாமான்களை மாற்றினால் கால்நீட் டிப் படுக்கும்படி ஒரு படுக்கையை விரிக்கமுடியும். "மார்டின், மெள்ள இறங்கிவா, நான் படுக்கை விரிக் கிறேன்" என்றான் அவன். மார்டின் கீழே இறங்கு கிறானா என்றுகூடப் பார்க்காமல் அவன் இவான் ஸிடம் ஓடிவந்தான். இவான்ஸுடன் டிக் சம்மர்ஸும், ரெபெக்காவும் இருந்தார்கள்.

"லிஜி, மார்டினுக்கு உடம்பு சரியாக இல்லை" என்றான் டாட்லாக் கவலையுடன்.

"என்ன உடம்பு?" என்று கேட்டான் லிஜி.

"அவனுக்கு வண்டியிலேயே ஒரு படுக்கையை விரித்துவிடவேண்டும். தொடர்ந்து பிரயாணம் செய்ய வேண்டும் என்பதே என் விருப்பம்" என்றான் டாட் லாக் தோள்களை குலுக்கிக்கொண்டே.

"லிஜி, நீ போய் பார்த்துவாயேன்" என்றாள் ரெபெக்கா.

"ஊம்" என்றான் லிஜி இவான்ஸ். டாட்லாக் ஆச் சரியத்துடன் நின்றான். "ஆஜானுபாகுவாக இருக் கும் இந்த லிஜிக்கு சொந்தப் புத்தி கிடையாது போலிருக்கிறது. டிக் சம்மர்ஸோ, ரெபெக்காவோ புத்தி சொல்லவேண்டி யிருக்கிறதே" என்று நினைத் துக்கொண்டான்.

இவான்ஸும் சம்மர்ஸும் எழுந்து நடந்தார்கள். மார்டின் சுருட்டிக்கொண்டு கிடந்தான். மூவரும் குனிந்து அவனைக் கவனித்தார்கள்.

"என்ன உடம்பு, அப்பா?" என்று கேட்டான் டிக் சம்மர்ஸ்.

மார்டின் கண்களை அகல விரித்துப் பார்த்தான். நாக்கினால் உதட்டை நக்கிக்கொண்டே "ஆண்டவனே மேலுக்கு முடியவில்லையே" என்றான்.

"சரி எழுந்திரு. இப்படிப் படுத்துக்கிடக்க முடியுமா?" என்றான் டாட்லாக்.

"அவனை விரட்டாதே, டாட், நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று குறுக்கிட்டான் டிக்.

இதற்குள் மார்டின் எழுந்திருக்க முயன்றான். நிமிரமுடியாமல் கைகளை ஊன்றித் தவழ்ந்து வந்து கீழே இறங்க முயன்றான். முடியவில்லை, தொப்பெனக் கீழே விழுந்துவிட்டான்.

சம்மர்ஸ் கைகொடுத்து மெள்ள அவனைத் தூக்கினான். நெற்றியிலே கைவைத்துப் பார்த்தான். "சாதாரண ஜுரம்தான்" என்றான் மற்றவர்களிடம் திரும்பிப் பார்த்து.

"ஆண்டவனே!" என்று சொல்லி மார்டின் மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். இதற்குள் வேறு சிலர் அங்கு வந்து கூடிவிட்டார்கள். "என்ன விசேஷம்?" என்று சிலர் ஏககாலத்தில் கேட்டார்கள்.

டாட்லாக்குக்குக் கூட்டம் சேருவதில் விருப்பம் இல்லை. ஒவ்வொருவரும் அபிப்பிராயமும் ஆலோசனையும் சொல்லத் துவங்குவார்கள். அதனால் காலவிரையம்தான் ஏற்படும் என்று அவன் நினைத்தான். மார்டினை உத்தேசித்து, பிரயாணத்தை ரத்துசெய்து, அங்கேயே தங்கிவிடவும் அவன் விரும்பவில்லை. இதன் நடுவே இவான்ஸ் சொன்னான்: "சாதாரண ஜுரம்" என்று. அவனுடைய பதிலைக் கேட்டு வந்தவர்கள் சும்மா சென்றுவிடவில்லை.

"ஒட்டுவாரொட்டி வியாதியாக இருக்குமோ?" என்று கேட்டான் ஒருவன் சந்தேகத்துடன்.

“அதெல்லாம் இல்லை. புறப்பட ஆயத்தம் செய்யுங்கள். இவான்ஸ், என் வண்டியிலிருக்கும் சில சாமான்களை உன்னுடைய வண்டிக்கு மாற்றிவிட்டால், மார்ட்டின் சுகமாகப் படுத்துக்கொண்டு பிரயாணம் செய்யமுடியும்” என்றான் டாட்லாக் சட்டென்று.

“சரி, டாட்லாக், நாம் செய்யவேண்டியதைப்பற்றிச் சிந்தித்தாயா? இந்த நிலைமையில் பிரயாணம் செய்யலாமா?” என்று கேட்டான் இவான்ஸ்.

“நான் எவ்விதமான பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன். கோஷ்டித் தலைவன் நான்தானே?” என்றான் டாட்லாக் அலட்சியமாக.

அவனுடைய பேச்சை இவான்ஸ் ரசிக்கவில்லை.

“இந்த மாதிரிச் சந்தர்ப்பத்தில் எல்லாரையும் கலந்து ஆலோசிக்கவேண்டும், டாட்” என்றான் பாச்.

டாட் சட்டெனத் திரும்பினான். அவனுடைய முகத்தில் ஆத்திரம் தெறித்தது. “எல்லாருமாகச் செய்யவேண்டாம் என்று யார் சொல்கிறார்கள்? அவன் வண்டியில் தானே வருகிறான். நம்முடன்தானே வருகிறான்?” என்றான் டாட்.

“அவன் சொல்வது வேறு, டாட், மார்டினை வழியில் விட்டுச் செல்லவேண்டுமா அழைத்துச் செல்ல வேண்டுமா? என்பதைப்பற்றிப் பேசவே எல்லாரும் கூடவேண்டும் என்று பாச் சொல்கிறான்” என்று விளக்கம் கூறினான் இவான்ஸ்.

டாட்லாக் கோபம் பீறிட உதட்டைக் கடித்துக் கொண்டான். “முட்டாள்கள், இது என்ன பிரமாதம், கூடிப் பேசவேண்டுமாம், ஆலோசிக்கவேண்டுமாம்” என்று முணுமுணுத்துக்கொண்டான். தன்னுடைய அதிகாரத்துக்கும் கௌரவத்துக்குமே பங்கம் வந்து விட்டதுபோல அவன் எண்ணினான்.

"மார்டினுக்கு ஓய்வு கொடுத்து, சிகிச்சை செய்ய வேண்டும், டாட். வண்டியில் போட்டு அலக்கழித்துச் செல்வது நல்லதல்ல" என்றான் இவான்ஸ்.

ஆச்சரியத்துடன் டாட் அவனை ஏறிட்டுப் பார்த்தான். அங்கே தங்குவதில் அவனுக்கு ஆக்ஷேபணை கிடையாது. ஏற்கனவே, கோடை வெயிலில், புற்பூண்டுகள் கருக ஆரம்பித்துவிட்டன. வழி நெடுகப் புல் கிடைப்பது அருகிவிடுமுன்னே அந்தப் பிரதேசத்தைக் கடந்துவிடவே அவன் விரும்பினான். மேலும், அவர்களைப் போலவே, அரிகானை நோக்கிச் செல்லும் வேறு கோஷ்டிகளும் பின்னால் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை முந்திச் செல்ல அனுமதித்துவிட்டால், கால் நடைகளுக்குத் தீவனம் கிடைக்காமல் போய் விடுமோ என்ற பயமே அவனைப் பிடித்துக்கொண்டது. தன்னுடைய பயத்தையும் அவன் வாய்விட்டுச் சொன்னான்.

"நீ சொல்லுவது உண்மைதான், டாட், ஆனால் இந்த ஜுரத்தினால் எலும்புகளிலும் பூட்டுக்களிலும் வலி இருக்குமே. பிரயாணத்தின் அதிர்ச்சியைத் தாங்க அவனால் முடியாது" என்றான் டிக் நிதானமாக.

"சிறிது குணமாகும் வரையில் நாம் எல்லோரும் இங்கு தங்கிவிடவே நான் விரும்புகிறேன்" என்றான் பாச்.

மற்றவர்களும் அதை ஆமோதித்தார்கள். அபிப்பிராயம் கூறுமளவுக்கு இப்போது கூட்டம் பெருகி விட்டது. மார்டினுக்கு உடல் நலமில்லை என்ற செய்தி கேட்ட ஒவ்வொருவரும் அங்குவந்து கூடிவிட்டார்கள். தலைவன் என்ற முறையில் கோஷ்டியிலுள்ள ஒவ்வொருவருடைய நலனையும் கருதாமல் பிரயாணத்தில் கருத்தாக இருக்கும் டாட்லாக்கைப் பார்த்துச் சிலர் முணுமுணுத்தார்கள். இருந்தாலும் கட்டுப்பாட்டை உத்தேசித்து அவனைத் தாக்கிப்பேச எவரும் துணிய

வில்லை. சுகமாகவும், முன்னதாகவும், சீக்கிரமாகவும் அரிகான் போய்ச்சேரவேண்டும் என்றே எல்லோரும் எண்ணினார்கள். டாட்லாக் என்ன பதில் கூறப்போகிறானோ என்று அவனையே எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

டாட்லாக்கின் கோபம் அத்துமீறிவிட்டது. "நாம் புறப்படவேண்டும், தெரிந்ததா? நான் சொல்லுகிறேன். உங்களுடைய தலைவன் சொல்லுகிறேன். நாம் புறப்படத்தான் வேண்டும்" என்று கத்தினான்.

மற்றவர்கள் அசையாமல் நின்றுக்கொண்டிருந்தார்கள். இவான்ஸ் சொன்னான்: "நாலுபேரைக் கலந்துகொள், டாட், இது சாதாரணமான விஷயமல்ல, நிர்வாக சபைகூடி ஆலோசிக்கவேண்டிய விவகாரம் என்றே நான் கருதுகிறேன்" என்று.

நிர்வாக சபையைத் தன் வசமாக்கிக்கொள்ள அவனால் முடியும். ஆனாலும் அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாகத்தானிருந்தது. புரூவர், மாக், பெயர்மன் ஆகியவர்கள் அங்குதான் இருந்தார்கள். அவர்கள் எப்போதுமே டாட்லாக்கின் கட்சிதான். கூட்டம், ஆலோசனை என்று விவகார ரீதியில் வேலைசெய்ய ஆரம்பித்தால், காலத்தை வீணாக்க நேரிடுமே என்றுதான் அவன் எண்ணினான். கோபச் சிரிப்புடன் அவன் சொன்னான்: "இருங்கள், இன்னும் ஒருமணி நேரத்தில் சபை கூடும். அரிகான் யாத்திரையைப்பற்றி ஒரு முடிவு செய்வோம்."

அதன்பிறகு அவனால் அங்கு நிற்க முடியவில்லை. மக்பியைக் கூப்பிட்டு, நிர்வாக சபை அங்கத்தினர்களுக்குத் தகவல் தெரிவிக்கச் சொல்லி அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். தன்னுடைய தீர்மானத்தை ஆதரிக்கும்படி நிர்வாக சபை அங்கத்தினர்களைக் கேட்க முடியும் என்பதில் அவனுக்கு நம்பிக்கையுண்டு. போட்டதிட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்ற

மிருக்கும் நல்ல குணங்களுக்காக அவனைப் பாராட்டாமலுமிருக்க முடியவில்லை. அவன், சிறந்த வழிகாட்டி, குறி தவருமல் சுடும் வேட்டைக்காரன், எதிரிகளை அடிபணிய வைக்கும் ஆற்றல் மிகுந்தவன், சிறந்த ஒற்றன், கண் துஞ்சாமல் காவல் காக்கும் திறமைசாலி, எப்போதுமே கடினமான வேலைகளைச் செய்யும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் டிக் சுறுசுறுப்பாகவும், உத்சாகமாகவும் வேலைசெய்வான். அவனை அடக்கியாள்வது சுலபமல்ல. அவனுடைய கம்பீர்யத்திலும் தைர்யத்திலும் பிறர் மயங்குவதுதான் சகஜம்.

டிக் சம்மர்ஸ் நல்ல அனுபவசாலி. எதையும் ஆய்ந்துபார்க்கும் திறமைசாலி. தறிகெட்டுத் திரியும் மாட்டை, கன்றுபோலக் கதறி அழைத்துவிடுவான். கன்று காலிகளையும், எருமைகளையும், கோவேறு கழுதைகளையும், குதிரைகளையும் அடக்கியாள்வதில் அவனுக்கு நிகரானவர்கள் அந்த முகாமிலேயே கிடையாது. வேட்டை எங்கு கிடைக்கும், தண்ணீர் எங்கு கிடைக்கும் என்று ஊகித்துச் சொல்வதுபோலவே, இந்தியர்களைப்பற்றியும் அவன் ஊகித்துவிடுவான். அவன் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் திறமை மிளிரும். ஆனால் அவனிடம் வெறியும், முரட்டுத் தனமும் இருந்தது. அறிவாளியான டிக்கிடம் இந்தக் குணங்களும் இருக்கிறதே என்று எண்ணியவாறே டாட்லாக் சபைக் கூட்டத்துக்குச் சென்றுன்.

இவான்ஸ், டார்டி, மாக், புரூவர், பெயர்மன் ஆகிய சபை அங்கத்தினர்கள் டாட்லாக்கிற்காகக் காத்திருந்தார்கள். அவர்களுக்கு நடுவே போய் உட்கார்ந்ததும் இவான்ஸைப் பார்த்து "மார்டினுக்கு எப்படி இருக்கிறது" என்று கேட்டான் டாட்லாக்.

"மத குரு வெதர்பியும், என் மனைவியும் அவனைக் கவனித்துக்கொண்டிருக்கிறுர்கள். வேறு சிலரும் இருக்கிறுர்கள்" என்றுன் இவான்ஸ்.

டாட்லாக் தலையசைத்துக்கொண்டே எவ்வளவு தூரம் வெயிலேறி யிருக்கிறது என்று பார்த்தான். "இப்போது புறப்பட்டாலும் பத்து மைல் தூரம் போய்விடலாம்" என்ருன் அவன்.

"சரிதான், மார்டின் ஜுரவேகத்தில் பிதற்றிக் கொண்டிருக்கிருன்" என்ருன் டார்டி.

"ஏசுவே, ஆண்டவனே" என்று கத்திக்கொண்டே இருக்கிருன். 'பரம பிதாவே, உன்னையே பிரார்த்திக்கிறேன்' என்ற சுவிசேஷத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்கிருன்" என்ருன் இவான்ஸ்.

அவர்கள் மனம்விட்டுப் பேசவில்லைபோலத் தோன்றிற்று டாட்லாக்கிற்கு. "சரி, நாம் எப்படியும் ஒரு முடிவுக்கு வந்துதாளுகவேண்டும். நாம் அரிகான் போய்ச் சேருவதற்குள் பனிக்காலம் ஆரம்பித்துவிடும். ஆகவே நாம் கொஞ்சம் வேகமாகவே பிரயாணம் செய்யவேண்டும் என்று விரும்புகிறேன்" என்ருன்.

இவான்ஸ் எதையோ யோசித்தவாறே கையினல் கன்னத்தைத் தடவி விட்டுக்கொண்டான். "நீ சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். டாட், ஒன்று அல்லது இரண்டு தினங்கள் தங்கிப் பார்த்துக்கொண்டு செல்வது நலம் என்று எண்ணுகிறேன்" என்ருன் அவன்.

"இன்னும் போகப்போக எத்தனையோ இடையூறுகளைச் சமாளிக்கவேண்டியிருக்கும்" என்ருன் டாட்.

இவான்ஸ் மற்றவர்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு "நாம் அவசரப்படுவதில் பலனில்லை. இப்போதுள்ளது மிகவும் முக்கியமான பிரச்னை என்றே நான் கருதுகிறேன்" என்ருன்.

அதற்குள் மாக், "நீ பந்தயக் குதிரைமாதிரி, மனேவேகமுள்ளவன் டாட், உன்னைப்போல எல்லாரும் வேகமாக இருக்கமுடியாது" என்ருன்.

"சரி, மேலே நடக்கவேண்டியதைப் பேசலாமே" என்றான் புரூவர்.

"யாராவது ஒருவர் பொறுப்பு ஏற்றுக்கொண்டு துரிதப்படுத்த வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் இடத்தைவிட்டு நகரமாட்டோமே" என்றான் டாட் எரிச்சலுடன்.

"அனுவசியமான தாமதமா இது? நம்மில் ஒருவனுக்கு உடல் நலமில்லை. இருந்து பார்த்துக்கொண்டு புறப்படுவதுதான் நியாயம்" என்றான் பெயர்மன்.

எல்லாருமே தனக்கு எதிராகச் சதிசெய்வது போலத் தோன்றிற்று டாட்லாக்குக்கு, ஆனாலும் அவன் மனம் தளரவில்லை. "மாக், பெயர்மன், நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? என்னுடைய முடிவை நீங்கள் ஆதரிப்பீர்கள் என்றே நம்புகிறேன்" என்றான்.

"இல்லை" என்றான் மாக் வாய்விட்டு. பெயர்மனோ மௌனமாக, முடியாது என்னும் பாவனையில் தலையசைத்தான்.

"நாம் சிறிது காத்திருந்துதான் போகவேண்டும். டாட்" என்றான் இவான்ஸ்.

"பைத்தியக்காரத்தனம்" என்றான் டாட் கோபமாக.

மாக் மிகவும் நிதானமாக, "இன்றிரவு நம்முடைய முகாமிலுள்ள அனைவரும் கூடிப் பேசப்போகிறோம்" டாட், பொது சபைக் கூட்டம்" என்றான்.

"எதற்காகவாம்?" என்றான் டாட் அலட்சியமாக.

அதை மாக் பொருட்படுத்தவில்லை. "உன்னை நீக்கிவிட்டுப் புதுத் தலைவனைத் தேர்ந்தெடுப்பது பற்றி ஆலோசிக்கத்தான்" என்றான் அவன்.

"பொய்யன், பொய்யன்" என்று கத்தினான் டாட்.

"வாயை அடக்கு. இதற்காக நீ மன்னிப்புக் கேட்கவேண்டும், டாட்" என்றான் மாக்.

மாக்கின் பேச்சு வேகத்தையும் அவனுடைய உறுதி வாய்ந்த முகத்தையும் கவனித்தபோது டாட்லாக் அசந்துவிட்டான். எல்லோரும் சேர்ந்து தன்னை நீக்கி விட்டுப் புதிய தலைவனைத் தேர்ந்தெடுக்கக்கூடும் என்பது அவனுக்கு விளங்கிவிட்டது. "சரி, அதைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம். மார்டினைப்பற்றி நான் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டேன்" என்றான்.

"உன்னுடைய பேச்சில் அகங்காரம்தான் இருக்கிறது. உன்னுடைய அகம்பாவம்தான் மற்றவர்களுக்கு அலுப்பூட்டிவிட்டது" என்றான் மாக்.

"உன்னிடமுள்ள மாடுகளும் குதிரைகளும்தான் மெள்ள நடைபோடுகின்றன. அவற்றைப்பற்றி ஓட்ட உன்னிடம் போதுமான ஆட்கள் கிடையாது. ஆனால் நீயோ வேகம் வேகம் என்று பறக்கிறாய்" என்றான் டார்டி.

"என்மீது உனக்கு வருத்தமில்லை என்று சொன்னாயே! நீ இப்போது பேசுவதின் நோக்கம் என்ன?" என்று கேட்டான் டாட்லாக்.

"நோக்கம் என்ன இருக்கிறது? ஒற்றுமையும் ஏகோபித்த அபிப்பிராயமும்வேண்டும் என்பதுதான்."

"பெய்ர்மன், உன் அபிப்பிராயம் என்ன?"

"அதேதான்."

"நிச்சயமாகவா?"

"புரூவர், நீதான் கொஞ்சம் அவனுக்குச் சொல்லேன்" என்றான் டார்டி.

"நானும் மக்பியும் உன்னை ஆதரிக்கிறோம். ஆனாலும் அது போதாதே" என்றான் புரூவர்.

டாட்லாக் நிலைமையை உணர்ந்தான். ஒன்று தானே விலகிக்கொள்ளவேண்டும். அல்லது தன்னுடைய தீர்மானம் தோல்வியுற்றதால் ஏற்படும் அவமா

னத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். பூருவர் பொய் சொல்லவேண்டிய அவசியமில்லை. அவன் அப்பட்டமாகத் தன்னை எச்சரிக்கை செய்துவிட்டான் என்றே டாட்லாக் எண்ணினன். "உண்மையாக உழைத்தவனுக்குக் கிடைத்த மரியாதை இது. நான் உங்களுக்காக மகத்தான பொறுப்பை ஏற்றுக்கொண்டேன், கஷ்டப்பட்டேன், தலைகொடுத்துப் பாடுபட்டேன்..."

"அதனல்தான் நாங்களும் தயங்குகிறோம், டாட்" என்று குறுக்கிட்டான் இவான்ஸ். ஆமோதிப்பது போல மாக்கும் தலையசைத்தான்.

"என்னை ஆதரிக்கும் நண்பர்களும் இங்கு இருக்கிறார்கள். நான் கோஷ்டியை இரண்டாகப் பிரித்துவிடுகிறேன்" என்றான் டாட் வெறுப்புடன்.

"உன்னுடைய ஊகம் தவறு" என்றான் இவான்ஸ்.

டாட்லாக் சிறிது தயங்கினன். கோபத்தினல் அவனுடைய முகம் சிவந்தது. நரம்புகள் விம்மிப் புடைத்தன. "எப்படியாவது தொலையுங்கள்" என்று எழுந்து நடந்தான். சிறிது தூரம் சென்றதும் அவன் திரும்பிப் பார்த்து "நான் தலைமைப் பதவியை ராஜினமாச் செய்கிறேன்" என்று சொன்னன். அவர்களுடைய பதிலை எதிர்பார்க்காமலே தன்னுடைய வண்டி நிற்குமிடத்தை நோக்கி நடந்தான். மனைவியைப் பார்த்தும், "நான் பதவியிலிருந்து விலகிவிட்டேன். ராஜினமாச் செய்யவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. இல்லாவிட்டால் பதவியிலிருந்து கீழே இறக்கி விடுவார்கள் போலாகிவிட்டது" என்றான். கோபமும் வருத்தமும் பீரிட மேலே பேசமுடியாமல் தவித்தான் அவன்.

அவனுடைய மனைவி "மார்டினுக்கு அபாயமாக இருக்கிறது. நீ ஒருவன்தானே அவனுடைய நண்பன். உன்னை நம்பிக்கொண்டிருக்கும் மார்டினை விட்டுவிட்டு எப்படிச் செல்வாய்?" என்று கேட்டாள்.

"அவனுக்கு நான் என்ன செய்யமுடியும் என்று தெரியவில்லையே" என்றான் டாட்லாக்.

மனத்தில் சஞ்சலம் ஊற அவன் மார்டின் படுத்துக் கிடந்த கூடாரத்தை நோக்கி நடந்தான். கூடாரத்துக்கு வெளியே பைபிளை வைத்துக்கொண்டு மதகுரு வெதர்பி உட்கார்ந்திருந்தார். ஏக்கம் கலந்த அவருடைய பார்வையைக் கண்டு டாட்லாக் மனங்கலங்கினான். "பிரார்த்தனை செய்வதைத் தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை; பிரார்த்திக்கிறேன். ஆண்டவன் இச்சைப்படி நடக்கட்டும்" என்றார் வெதர்பி டாட்லாக்கைப் பார்த்ததும்.

"அவ்வளவு மோசமாகவா இருக்கிறது? உளறுகிறானா?" என்று கேட்டான் டாட்லாக்.

"ஆமாம்" என்றார் அவர்.

டாட்லாக் உள்ளே எட்டிப் பார்த்தான். அரைக் கண்ணும் விழியுமாக மார்டின் மல்லாந்து படுத்துக் கிடந்தான். உதடு வரண்டு, முகம் வெளிறி, ஜுர வேகத்தில் மேல்மூச்சுவாங்க அவன் படுத்துக் கிடப்பதைக் காணச்சகியாமல் டாட்லாக் வெளியே வந்தான். "நான் என்ன செய்யமுடியும்?" என்று எண்ணியவாறே அவன் அங்கிருந்து கிளம்பலானான். வெதர்பி தலையசைத்து விடை கொடுக்கவே டாட்லாக் தன்னுடைய வண்டி நிறுத்தியிருக்குமிடத்துக்கு வந்தான்.

வெறுப்பு, வருத்தம், அவமானம் என்று பல்வேறு உணர்ச்சிகள் வாட்ட அவன் நாள் முழுவதும் வெளியே செல்லாமல் வண்டியிலேயே கிடந்தான். ஒன்றிரண்டு தடவைமட்டும் வெளியே சென்று மார்டினைப் பார்த்து வந்தான். அலட்சியமாகவோ, அசட்டையாகவோ அவனிருப்பதாக எவருமே குற்றம்சாட்ட முடியாது. நிமிஷத்துக்கு நிமிஷம் மார்டினுடைய நிலைமை மோசமாகிக்கொண்டு வந்தது. சாவுடன் போராடிக்கொண்

டிருக்கும் நண்பனுக்கு எவ்விதம் உதவிசெய்து காப்பாற்றமுடியும் என்ற சிந்தனையில் பிற்பகலில் பெரும் பகுதியைக் கழித்துவிட்டான்.

அவன் எதிர்பார்த்ததைப் போலவே அன்றிரவு நடந்த கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. அதைப் பற்றி நினைக்கும்போதே அவனுக்கு ஆச்சர்யமாகத் தானிருந்தது. கூட்டத்தின் தலைவனாக பாச் தேர்ந்தெடுக்கப்படுவான் என்று அவன் எண்ணியதற்கு மாருக இவான்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவன் ஆச்சர்யமடைந்தான். இவான்ஸின் பெயரை மாக் பிரேரேரித்ததும், இவான்ஸே திடுக்கிட்டுப் போனான். ஆச்சர்யத்துடன் அவன் ரெபெக்காவிடம் திரும்பி, "என்னைத் தலைவனாகவா?......நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லையே? இங்கிருந்து தப்பமுடியவில்லையே?" என்றான். அவனுடைய குரலில் தொனித்த தடுமாற்றத்தை ரெபெக்கா கவனித்தாள்.

தேர்தல் முடிந்ததுமே, கூட்டத்தில் குழப்பமேற்பட்டதும் டாட்லாக்குக்கு நினைப்பு வந்தது. இவான்ஸின் பெயரைப் பிரேரேக்கும்போதே டர்லி எழுந்து நின்று "நான் குடும்பத்துடன் திரும்பிப்போக விரும்புகிறேன்" என்று கத்தினான். அவனைத் தாண்டிவிட்டு வேடிக்கை பார்த்தான் பாச்.

ஸ்ரீமதி டர்லி "ஆமாம், ஆமாம்" என்று கூச்சல் போட்டாள்.

"நாங்கள் திரும்பத்தான் போகிறோம். எங்களுடன் யார் வந்தாலும் சரி, வரவேற்கிறோம்" என்று மீண்டும் கத்தினான் டர்லி.

"இது என்ன, சம்மர்ஸ்?" என்று ஒன்றுமே தெரியாதவனைப்போல பாச் டிக் சம்மர்ஸிடம் கேட்டான்.

"ஆபத்தான யோசனைதான்" என்றான் அவன்.

பாச் எழுந்து நின்றான்: "வேறு யாராவது திரும்பிப் போக விரும்புகிறீர்களா?" என்று கேட்டு நாற்புறமும்

திரும்பிப்பார்த்தான். கடைசியில் "பேர்டு, நீ என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டான்.

தான் இருப்பதாக பேர்டு பதில் சொன்னான்.

"யாராவது பிரிந்துபோக விரும்பினால், இப்போதே சொல்லிவிடுங்கள். நிலைமையைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்" என்றான் பாச். டாட்லாக் இருக்குமிடத்தை நோக்காமலேதான் பாச் இந்தக் கேள்வியைக் கேட்டான். மற்றவர்களோ டாட்லாக்கின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்களைப்போல அவனை நோக்கினார்கள்.

டாட்லாக் அசையாமல், மௌனமாகவே இருந்தான். "பிரிந்துபோவதா? எப்படிப் பிரிந்துபோவது? பயமுறுத்துவதற்காக நான் சொன்னேன். ஆத்திரத்தில், கோபத்தில், நான் அப்படிச் சொன்னேன். என்னுடன் யார் வருவார்கள்? மக்பி, புரூவர், மார்டின் இவர்கள்தானே! மார்டின் உயிர் பிழைத்துவிட்டால் என் பக்கம்தான் நிற்பான். பாவம்! அவன்தான் யமனுடன் போராடிக்கொண்டிருக்கிறானே! வண்டி இழுக்கப் போதுமான மாடுகள் இல்லாமல் நடந்து நடந்து, கால் கொப்புளமாகித் தவிக்கும் இவர்களா ..." மேலே சிந்திக்க முடியாமல் அவன் ஸ்தம்பித்துப் போனான். தன்னால் முடிந்த அளவுக்கு அவன் சேவை செய்து கோஷ்டிக்குத் தலைமை வகித்தானே!

கூட்டம் முடிந்து வெகுநேரம் வரையில் அவன் சிந்தனையிலாழ்ந்துகிடந்தான். அவனுடைய மனைவியோ எப்போதும்போல எல்லாருடனும் சகஜமாகவே பழகிக்கொண்டிருந்தாள். தன்னுடைய புருஷனை அவமதித்த மற்றவர்களுடன் சகஜமாகப் பழக அவளுக்கு எப்படித்தான் மனம் வந்தது என்று அவன் ஆச்சர்யப்பட்டான். நேரம் ஏற ஏற, ஒவ்வொருவராக விடைபெற்றுக்கொண்டு உறங்கச் செல்வதை அவன் கவனித்தான். நிசிநேரத்தில் எல்லோருமே உறக்கத்திலாழ்ந்து

நிசப்தம் நிலவிற்று. மார்டின் படுத்திருந்த இடத்தில் மட்டும் ஜனநடமாட்டம் இருந்துகொண்டிருந்தது. கணப்புக்காக அங்கங்கே எரிந்துகொண்டிருந்த நெருப்புச் சட்டிகள் ஜ்வாலை மங்கிச் சாம்பலாகிக் கொண்டிருந்தன. வானம் வெளுக்கும் வரையில் டாட் லாக் சிந்தித்தவாறே உட்கார்ந்திருந்தான்.

"இந்த உதிரிகளை நம்பிக்கொண்டு, ஸ்திரமான வேலையைவிட்டுக் கிளம்பினேனே! எதிர்காலத்தில் சுபிட்சமாகவும் சந்தோஷமாகவும் வாழலாம் என்ற ஆசையில்தான் கிளம்பினேன். ஆனாலும் இவர்களுடைய உத்சாகத்தில் மதிமயங்கி, தலைமைப்பதவி வகித்து, படாத பாடுபட்டுக்கொண்டு, இப்போது அவமதிப்புக்குள்ளுக்கும் ஆகியிருக்க வேண்டாம்..."

மனைவியின் கை தோள்மீது படவே, அவனுடைய சிந்தனை கலைந்தது. "வெகு நேரமாகிவிட்டது. இர்வின், கொஞ்ச நேரம் தூங்கு, எழுந்து வா" என்றாள் அவள் ஆதுரத்துடன்.

"தூக்கமா? உம்... மார்டின் எப்படி இருக்கிறான் என்று பார்த்து வருகிறேன்" என்று எழுந்தான் அவன்.

"இப்போதுதான் நான் போய் வந்தேன். நம்மால் செய்வது ஏதுமேயில்லை" என்றாள் அவள் துக்கத்துடன்.

"சரி, நீ படுத்துக்கொள்" என்றான் டாட். அவனுக்குத் தூக்கம் வரவில்லை. சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். மனத்திலிருந்த பாரம் இறங்கவில்லை. படுத்துப்புரளலாமே என்று அவன் கூடாரத்துக்குள் நுழைந்தான். கண்ணை மூட ஆரம்பித்தபோது மார்டின் இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கொண்டு வந்தார் வெதர்பி.

12. புதிய தலைவன்

இவான்ஸ் ஒற்றை மாட்டின் கழுத்தில் நுகத்தடியை வைத்து முளைக்குச்சியை மாட்டும்போதே மற்றொரு மாடும் தலையைக் கொடுத்துத் தயாராக நின்றது. நண்பன் ஒருவனுடன் பேசிக்கொண்டே, வண்டிகளைப் பூட்டிப் பிரயாணத்துக்கு ஆயத்தமானான் அவன். தலைவனாகத் தேர்ந்தெடுத்த பிறகு, மாக் அவனிடம் இரவலாகக் கொடுத்த கடியாரத்தில் மணி பார்த்தான் இவான்ஸ். ஆறு அடித்து நாற்பது நிமிஷங்களாகி யிருந்தது. தலைவன் என்ற ஹோதாவில் அவன் முதலாவதாகத் தயாராகிவிட்டான். மற்றவர்களோ சாமான்களைக் கட்டுவதும், வண்டிகளைப் பூட்டுவது மாகவே யிருந்தார்கள். சிலர் கூடாரங்களைப் பிரித்துக் கொண்டிருந்தார்கள். காலை நேரம், சள்ளைபிடித்தது என்றுதான் இவான்ஸ் எண்ணினான். மூட்டையைக் கட்டிப் புறப்படுவதற்குள் எத்தனையோ தொல்லைகள், தடைகள் ஏற்பட்டு விடுகின்றனவே!

இவான்ஸ் உடம்பை முறித்து, நீண்ட பெருமூச்சு விட்டுச் சோம்பலை நெறித்தான். காலை நேரத்துக் காற்று ஜிலுஜிலுவென்று வீசி இதவாகத்தானிருந்தது. எரிச்சலூட்டும்படி மற்றவர்கள் தாமதம் செய்தாலும், ‘அதுவும் நல்லதற்கே’ என்று அவன் எண்ணினான்.

“வேலையில் கருத்தாக இருக்கும் மனைவியைப் பார்த்து, ‘இன்றையப்பொழுது நல்லதாகப் போக வேண்டும், பெக்கி” என்றான் இவான்ஸ். சமையல் பாத்திரங்களையும், கெட்டில்களையும் ஒரு பெட்டியில் போட்டு மூடிக்கொண்டிருந்தாள் அவள்.

வானத்தில் துளி மேகங்கூட இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது. “இன்றையப்பொழுது விடிந்தபோது இருக்கிற தெம்பு எனக்கு என்றுமே இருந்ததில்லை” என்றான் இவான்ஸ் வானத்தைப் பார்த்துக்கொண்டே.

அதற்கும் அவனுடைய மனைவி பதில் பேசவில்லை. எல்லாரும் பிரயாண ஆயத்தமாகிவிட்டார்களா, எவருக்காவது உதவி வேண்டுமா என்று பார்ப்பதற்காக இவான்ஸ் கிளம்பினான். துள்ளிக்குதிக்கும் இளங் காளையை வண்டியில் பூட்ட ஹிக்கின்ஸும் பெயர்மனும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். ஹிக்கின்ஸ் தலைக் கயிறை இழுத்துப் பிடித்து மாட்டை அணைத்தான். பெயர்மன் நுகத்தடியை அதன் கழுத்தில் வைக்க முயன்றான். இவான்ஸைப் பார்த்ததும் இருவரும் வேலையை நிறுத்திவிட்டு நிமிர்ந்தார்கள். ஹிக்கின்ஸ் புன்சிரிப்புக் காட்டி அவனை வரவேற்றான்.

"இந்தத் துள்ளுமாட்டுக்குப் பதிலாக ஒரு எருமைக்கடாவை வண்டியில் பூட்டி ஓட்டலாம் என்று நினைக்கிறேன்" என்றான் ஹிக்கின்ஸ் அலுப்புடன்.

இவான்ஸ் மாட்டை நெருங்கி முதுகில் தட்டிக் கொடுத்தான். மாடு மிரண்டு குதித்தது. ஹிக்கின்ஸ், அதட்டி அதை இழுத்துப் பிடித்தான்.

"என்னிடம் நல்ல மாடுகள் இல்லையே என்று வருத்தமாகத் தானிருக்கிறது. இந்த மாடு கால்தாங்கி நடக்கிறது. மணலில் நடந்து நடந்து குளம்புகள் தேய்ந்துவிட்டன. கால் இடுக்கில் மணல் புகுந்து புண்ணாகிவிட்டது" என்றான் பெயர்மன்.

"எல்லாருடைய மாடுகளும் அப்படித்தான். மணலில் நடந்தாலும் கால்கள் உறுதிப்பட்டுவிடும். குளம்புகளைச் சுத்தம் செய்து வெடிப்புகளில் தாரைத் தடவுகிறேன் நான்" என்றான் இவான்ஸ்.

சிறிது தூரத்தில் குதிரைகளின்மீது மூட்டைகளை ஏற்றிக்கொண்டிருந்தான் டிக். அவனுக்கு உதவி செய்துகொண்டிருந்தார் மதபோதகர் வெதர்பி. இவான்ஸ் அவர்களுக்கு வந்தனம் செலுத்திவிட்டு மேலே செல்லலானான்.

"நான் தயார், அப்பா" என்றான் டிக்.

அனைவரும் புறப்பட ஆயத்தமாகத்தானிருந்தார்கள். எப்போதுமே காலதாமதம் செய்துகொண்டு தவிக்கும் மக்பி குடும்பத்தார்கூட இன்று பிரயாண சித்தமாகிவிட்டார்கள். காலாகாலத்தில் எல்லாரும் பயணமாகவேண்டும் என்பதே இவான்ஸின் கட்டளை. ஒருநாள் இரவு அவன் எல்லோரையும் கூட்டிப் பேசினான். அவனுக்கு உதவியாகவும் ஆதரவாகவும் மாக் இருந்தான். "காலதாமதம் செய்யும் குடும்பத்தார்கள் வரிசையின் கடைசியில் வரவேண்டும்" என்று அவன் கூறிய யோசனையை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள். அன்றிருந்து, ஒவ்வொருவரும் தம்தம் இடத்தைக் காப்பாற்றிக்கொள்ள சுறுசுறுப்பாக வேலை செய்தார்கள். இடத்தை இழந்து கடைசியாக வண்டியை ஓட்டிவர எவரும் விரும்பவில்லை.

"வந்தனம்," என்றாள் ஸ்ரீமதி மக்பி சிரித்துக் கொண்டே. இவான்ஸ் தலையசைத்து அதை ஏற்றுக் கொண்டான்.

"ஏன் தாமதம்? புறப்படலாமா?" என்று கேட்டான் மக்பி.

இவான்ஸ் கடியாரத்தைப் பார்த்தான் "புறப்பட வேண்டியதுதான்" என்றான்.

"இவான்ஸ், உன்னுடன் தனியாகப் பேசவேண்டும், சொந்த விஷயம்" என்றான் மக்பி.

'சொந்த விஷயமா, என்ன இருக்கப்போகிறது!' என்று எண்ணினான் இவான்ஸ். ஏனோ அவனுக்குப் பிடிக்கவில்லை, "எப்போதும் தயார், பேசலாமே" என்றான் அசுவாரஸ்யமாக.

சுற்றிப் பார்த்துக்கொண்டே, தன்னுடைய வண்டி நிற்குமிடத்தை இவான்ஸ் அடைந்தபோது, ரெபெக்கா, வண்டிக்குள் உட்கார்ந்திருந்தாள். புறப்படவேண்டிய நேரமும் நெருங்கிவிட்டது. சமிக்ஞை காட்டும்

வெள்ளி எக்காளத்தைக் கையில் வைத்துக்கொண்டு டாட்லாக், டிக் சம்மர்ஸுடன் பேசிக்கொண்டிருந்ததை இவான்ஸ் கவனித்தான். தலைமைப் பதவி மாறிவிட்டாலும், அந்த எக்காளம் ஊதி எல்லாருக்கும் கட்டளை இடும் பொறுப்பு டாட்லாக்கிடமே இருந்தது. அவனே அந்த வேலையைச் செய்யவேண்டும் என்று இவான்ஸ் கேட்டுக்கொண்டான். இவான்ஸ் கைதூக்கிச் சமிக்ஞை காட்டவே டாட்லாக் எக்காளத்தை ஊதி முழக்கினன். வண்டி யோட்டிகள் 'ஹை ஹை' என்று குரல் கொடுத்து மாடுகளை ஓட்டினார்கள். சவுக்குகளின் வீச்சொலி கேட்டது. மாடுகள் அடியெடுத்து வைத்து நகர்ந்தன. மசகு காய்ந்த இருசில் சுழலும் சக்கரங்கள் கிரீச்சிட்டு நகர்ந்தன. தூசிப்படலம் எழுந்தது. அரிகான் யாத்திரை கோஷ்டி கிளம்பிவிட்டது!

வண்டிகளின் வரிசையில் பின்புறமாகப் போய்க்கொண்டிருந்தான் இவான்ஸ். பாட்டையிலிருந்து சற்று விலகிநின்று பார்க்கும்போது, டிக் சம்மர்ஸும் அவனுடைய கோஷ்டியும் குதிரைகளின்மீது செல்வதையும் அவர்களைத் தொடர்ந்து வண்டிகள் ஊர்ந்து செல்வதையும் அவன் கவனித்தான். அந்தப் பிரதேசத்தில் சிவப்பு இந்தியர்களால் தொந்தரவு ஏற்படக்கூடும் என்பது அவனுக்குத் தெரியும். ஆனல் அவன் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அரிகான் நாட்டை நோக்கிச் செல்லும் குடியானவர்களுடைய பந்தோபஸ்துக்காக, சர்க்கார் ஒரு பட்டாளத்தை அனுப்பி உதவிற்று. பிரயாணிகளைத் துன்புறுத்தும் இந்தியர்களை மிரட்டிவிரட்டவே அந்தப் பட்டாளம் அனுப்பப்பட்டது. கர்னல் கீனியின் தலைமையில் ஏறக்குறைய முன்னூறு குதிரை வீரர்கள், இவான்ஸ் கோஷ்டியைக் கடந்து சென்றது. அவர்களைப் பார்த்த பிறகு இவான்ஸுக்குத் தெம்பு வந்தது; தான் ஏற்றுக்

கொண்டுள்ள பொறுப்பு சுலபமாகிவிட்டதாகவே அவன் எண்ணினான்.

மேலும், கோஷ்டியிலுள்ள எல்லாரும் உற்சாகத்துடனும் ஆரோக்கியமாகவுமே இருந்தார்கள். பச்சை இறைச்சியைத் தின்றதாலும், பிளாட்டி நதியில்வந்த புது வெள்ளத்தைக் குடித்ததாலும் ஒரு சிலருக்கு வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டதைத் தவிர, முகாமில் எவருக்குமே நோய் வரவில்லை. கோர்ட் ஹவுஸ்ராக் என்னுமிடத்தைச் சேர்ந்ததும் அவர்களுடைய உத்சாகம் எல்லை மீறிவிட்டது. சரியான பாதையில் பிரயாணம் செய்கிறோம் என்ற சந்தோஷமும், அதிசீக்கிரம் அரிகான் போய்ச் சேர்ந்துவிடுவோம் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு ஏற்பட்டுவிடவே, அந்த இடத்துக்கு வந்து சேர்ந்த நாளை நன்னாளாகக் கொண்டாடினார்கள். மதபோதகர் வெதர்பி, அன்று பிரார்த்தனை நடத்தினார். அவரிடம் எல்லாருக்கும் அன்பும் விசுவாசமும் ஏற்பட்டுவிட்டது. தங்களிடையே மார்டினும் டார்லி குடும்பத்தாரும் இல்லையே என்ற ஏக்கம் ஒவ்வொருவருக்கும் இருக்கத்தான் இருந்தது.

மார்டினைப்பற்றி எண்ணியதுமே, இவான்ஸின் மனத்தில் சென்றுபோன சம்பவங்கள் சுழன்று எழுந்தன. இவான்ஸ் தலைமைப்பதவி ஏற்றுக்கொண்டதும் டார்லி பிரிந்துவிட்டான். அரிகானை நோக்கி எல்லாரும் கிளம்பும்போது, டார்லி பாடி இறங்கியிருந்த இடத்திலேயேதான் இருந்தான். நோஞ்சலாக இருந்த இரண்டு குழந்தைகளையும் ஒரு சில ஆடுமாடுகளையும், பழைய வண்டியையும் வைத்துக்கொண்டு வந்த வழியே அவன் திரும்பிவிட நிச்சயித்துவிட்டான். வெகுதூரம் வந்த பிறகும்கூட, நின்று திரும்பிப் பார்த்தபோது, பிரயாண சித்தமின்றி டார்லி குடும்பத்தார் இருந்த இடத்திலேயே இருப்பதைக் காண முடிந்தது. அவர்களைத் தன்னந்தனியாக விட்டுக்கிளம்ப எவருமே

விரும்பவில்லை. ஆனால் டார்லியோ பிடிவாதமாகவே இருந்தான். திரும்பிச் சென்றாலும் ஊர்ப்போய்ச் சேரும் வரையில் ஆகார வசதிகள் வேண்டுமே என்று கவலைகொண்ட மற்றக் குடும்பத்தினர் டார்லிக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். ஸ்ரீமதி டாட்லாக்கும், ஸ்ரீமதி மாக்கும், ரெபெக்காவும், இறைச்சியும், மாவும், சர்க்கரையும், தான்யமும் கொடுத்தார்கள். ஒரே வார்த்தையில் நன்றி தெரிவித்துவிட்டுச் சும்மா இருந்தான் டார்லி. அவனுடைய மனைவியோ வாயைத் திறக்கவேயில்லை.

மார்டின்! அவனையும்தான் அங்கே விட்டு வந்துவிட்டார்கள். இறைவனடி சேர்ந்த அவனுக்கு மரியாதை காட்ட எல்லோரும் கூடினார்கள். மதபோதகர் வெதர்பி பிரார்த்தனை செய்து சவ அடக்கத்தை ஆரம்பித்தார். இவான்ஸூம், டாட்லாக்கும், சம்மர்ஸூம் சவக்குழியைத் தோண்டினார்கள். சவப் பெட்டியோ, பாடையோ கூடத் தயாரிக்க வசதியில்லை. போர்வையினால் பிரேதத்தை மூடி, குழியிலிறக்கி மூடினார்கள். சவ அடக்கத்தின்போது கலந்துகொண்ட ஒவ்வொருவரும் உணர்ச்சி வசப்பட்டு பேசமுடியாமல் மௌனமாகவே இருந்தார்கள். மண்ணைப்போட்டு மூடிய பிறகு, சரகுகளையும், குச்சிகளையும் குவித்து, வெடிமருந்து தீர்த்து நெருப்பிட்டான் டிக். மோப்பம் பிடித்து, ஓநாய்களோ, இந்தியர்களோ பிணத்தைத் தோண்டி எடுத்துவிடாமலிருக்கவே அவன் தீ மூட்டி வைத்தான்.

இவான்ஸ் மனம் தளர்ந்து கிடந்தான். மார்டினின் பூத உடலுக்கு மரியாதை செய்துவிட்டுக் கிளம்பிய போது அவன்தான் கோஷ்டியின் தலைவன். உடலுறுதி பெற்றிருந்தாலும், அவனுடைய உள்ளம் நெகிழ்ந்து கிடந்தது. ஒவ்வொன்றுக்கும் அவன் டிக் சம்மர்ஸின் யோசனையும் உதவியுமே நாடினான். அவனுடைய நட்

பினுல் தைரியமும் நம்பிக்கையும் ஏற்பட்டு இவான்ஸ் சந்தோஷமடைந்தான்.

தலைமைப்பதவி தாங்க தனக்கு லாயக்கு இருக்கிறதா என்று இவான்ஸ் யோசித்துப் பார்த்துக் கொண்டான். தன்னம்பிக்கையும் துணிவும், சுதந்தரமாகத் தீர்மானிக்கும் ஆற்றலும் தனக்கு இருக்கிறதா என்று தனக்குத்தானே கேள்வி கேட்டுக்கொண்டான். வழிகாட்டியாக இருக்கும் டிக் சம்மர்ஸிடம் ஆலோசனை கேட்கலாம். ஆனுல் அவனே தீர்மானம் செய்யும்படிப் பிரச்னைகளை வளரவிடுவது உசிதமல்ல என்பது அவனுக்குத் தெரியும். வழிநடையில் ஏற்படும் சிக்கல்களும், போகவேண்டிய பாதையை நிர்ணயம் செய்வதும், இந்தியர்களுடைய தாக்குதல் நேர்ந்தால் சமாளிக்கவேண்டிய பொறுப்பும் இப்படி எத்தனையோ பிரச்னைகள்! அவன் தலைமைவகித்து அதிகாரம் செலுத்தவே விரும்பவில்லை. உடனிருப்பவர்கள் தன்னிடம் நம்பிக்கைகொண்டு மரியாதை செய்ததாகவே எண்ணிக்கொண்டான். அடிக்கடி அவன் டிக் சம்மர்ஸிடம் கலந்தாலோசிப்பான். சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க அவன் நிர்வாக சபையைக் கூட்டுவான்.

புழுதி படிந்த முகத்தை இவான்ஸ் துடைத்துக் கொண்டான். மூக்கைச் சிந்திஞன்; கண்களைக் கசக்கிக்கொண்டான். ரெபெக்கா வண்டியிலிருந்து இறங்கி நடந்து வந்துகொண்டிருப்பதைக் காண, அவன் சமிக்ஞைசெய்து அவளைக் கூப்பிட்டான். பிரயாண அலுப்பினுல்—அவள்—முன்பு இருந்ததைவிட இப்போது இளைத்துப்போயிருந்தாள். ஆனுலும் இடையே அவளுக்கு ஏற்பட்ட அசதியும், பலவீனமும் இப்போது கிடையாது. அவளுடைய முகத்தில் தெளிவும் தெம்பும் இருந்தது.

மாடுகளை ஓட்டிக்கொண்டிருந்த மக்பி குதிரையைத் தட்டிவிட்டு முன்னே வந்தான். இவான்ஸை

நெருங்கியதும் அவன் "இன்று சீதோஷ்ணம் இதமாக இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே கீழே இறங்கினன்.

"ஆமாம்" என்றுன் இவான்ஸ் அசுவாரஸ்யமாக. அவனுக்கு மக்பி தம்பதிகளைக் கண்டாலே பிடிக்காது. அசுத்தமும் அசங்கியம் நிறைந்த அவர்களுக்கு எப்படி அழகும் சுறுசுறுப்பும் நிறைந்த மெர்ஸி பிறந்தாள் என்று ஆச்சரியப்படுவதுண்டு. வயதுவந்த சில குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டால், ஒருவேளை அவளும் பெற்றோர்களைப்போல .... அவனுடைய சிந்தனை அறுந்தது.

"நாம் வேகமாகச் செல்கிறேம்" என்று இளித்தான் மக்பி.

"ஆமாம், எப்போதுமே" என்றுன் இவான்ஸ். அவனுக்கு மக்பியின் பார்வையும் பேச்சும் பிடிக்கவில்லை. "மக்பி, நீ டாட்லாக்குடன் சேர்ந்துகொள்வதுதான் நலம்" என்றுன் பளிச்சென்று.

மக்பி உதட்டைக் கடித்துக்கொண்டான். "நான் அவனுடனிருக்கவே விரும்புகிறேன், சரி, நான் போய் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே குதிரைமீது தாவி ஏறிச் சென்றுன்.

மக்பியின்மீது இவான்ஸுக்கு நல்லெண்ணம் கிடையாது. "இவன் சூழ்ச்சிக்காரன், இவனுல் ஏதாவது விபரீதம் நேரக்கூடும், இவனைக் கவனிக்கவேண்டும். ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்று எண்ணிக்கொண்டான் இவான்ஸ்.

13. களங்கம்

மலைச்சரிவிலிருந்து, தென்கிழக்கே தூரத்தில் கொத்தளங்கள் இருப்பது தென்பட்டன. மரங்களின் நிழல் சாய்ந்து சில மங்கலாகத் தெரிந்தாலும் வெயில்

வீச்சிலே அவை வெள்ளைவெளேரெனப் பிரகாசித்தன. அவற்றுக்கும் அப்பால், கீழே சிவப்பு இந்தியர்களில் சூ வகுப்பார், காட்டு மிருகங்களின் தோலினாலான கூடாரங்கள் அடித்திருப்பதும் காணப்பட்டன. புதிய கூடாரங்கள் வெண்மையாகவும், சீதோஷ்ண நிலைமைக்குட்பட்டவை சிறிது நிறம் மாறியும் இருந்தாலும் பளிச்சென்று தெரிந்தன. அங்கு ஆண்களும் பெண்களும் நடமாடிக்கொண்டிருப்பதும் தெளிவாகத் தெரிந்தது.

குதிரைமீது நின்றுகொண்டே சம்மர்ஸ் சிந்தனையிலாழ்ந்தான். இந்தப் பிராந்தியத்துக்கு அவன் இளமைப்பருவத்தில் வந்திருக்கிறான். இப்போதும் வந்துவிட்டான். இடையே கழிந்த காலத்தில் எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டனவே? இளமையும், ரத்தத்துடிப்பும் துணிச்சலும் நிறைந்து பல வருஷங்களுக்கு முன்பு அவன் இங்கு வந்தபோது, இந்த நாடும் செழிப்பும் கொழிப்புமான வனமாக இருந்தது. இப்போது, ஐம்பது மைல் சுற்று வட்டாரத்தில்கூட ஒரு எருமையோ, நீர்நாயோ காணமுடியாதபடி அருமையாகிவிட்டதே! உஷ்ணமான காற்றும், கோவேறு கழுதைகளின் கனைப்பும்தான் இங்கு இருக்கின்றன. இயற்கையின் அழகு மறைந்து கூரையின்கீழ் குடியிருப்பது போன்ற பிரமையே தோன்றுகிறது. அங்கங்கே எல்லைப்புற ராணுவ முகாம்களும் கொத்தளங்களும் ஏற்பட்டுவிட்டன. முன்பு சம்மர்ஸ் இந்தப் பகுதிக்கு, மலைநாட்டுக்கு, வந்தபோது கோட்டை கொத்தளங்களே கிடையாது. இப்போது லாராமிப் பிரதேசத்திலும் பிளாட்டிப் பகுதியிலும் கொத்தளங்கள் ஏற்பட்டுவிட்டன. குன்றுகளுக்கப்பால், தூரத்தில் தேவதாரு, கருங்காலி முதலிய விருக்ஷங்களடர்ந்து கம்பீரமாக லாராமிச் சிகரம் நின்றுகொண்டிருந்தது. தூரத்தில் ரெட் பட்ஸ், ஸ்வீட்வாட்டர் போன்ற குன்றுகளும், தெற்குக் கணவாயும் தெரிந்தன. அங்குதான்

இளமைப்பருவத்தில் பெரும் பகுதியை டிக் சம்மர்ஸ் கழித்தான். இளமைப்பருவ நாட்கள் மனத்திலே எழுந்து இன்பமூட்டின.

டிக், உடம்பைச் சிலுத்துக்கொண்டான். சிந்தனையி லிருந்து விடுபட்டு நிமிர்ந்து நின்றான். ஆயுள் முழுவதும் மனிதன் அலைந்து திரிந்தே காலங்கழித்துவிட முடியும். இயற்கையின் அன்பிலே வாழமுடியும். லகானைப் பிடித்து, குதிரையைத் திருப்பிக்கொண்டு, மற்றவர்களுடன் வந்து சேர்ந்தான்.

அதே சமயத்தில் வழிநெடுக விஜி இவான்ஸும் ரெபெக்காவும் பேசிக்கொண்டே போனார்கள்.

"அந்தக் கோட்டைக்குப் போய்விட வேண்டும் என்று நான் துடித்துக்கொண்டிருக்கிறேன்" என்றாள் ரெபெக்கா.

"சீக்கிரம் போய்ச் சேர்ந்துவிடலாம்" என்றான் இவான்ஸ்.

"அங்கு எத்தனை நாட்கள் தங்குவோம்?"

"இரண்டு நாட்கள்தான். நாம் போய்க்கொண்டே இருக்கவேண்டும். வழியில் தங்கமுடியாது."

"லாராமி நடுவழியில் இருக்கிறதல்லவா?"

"ஏறக்குறைய பாதிக்குமேல் அறுநூறு மைல் இருக்குமென்று டிக் சொல்கிறான்."

"அங்கிருந்து?"

"ஆயிரத்து முன்னூறு மைல்கள்."

"சிரமமான பயணம்தான்."

இவான்ஸ் பதில் பேசவில்லை. சுங்கானை வாயில் வைத்துக்கொண்டு, அவன் மெல்ல நகர்ந்தான். அவனுடைய முகம் சந்தோஷத்தால் பிரகாசித்தது.

"நாம் கொஞ்சம் தங்கித்தான் போகவேண்டும். கோவேறு கழுதைகள் நொண்டுகின்றன" என்றாள் ரெபெக்கா.

"சரி என்று விஜி தலை யசைத்தான். நம்முடைய பயணம் இனிமையாக இருக்கிறது" என்றான் அவன்.

"ஆமாம்" என்றாள் அவள். அவளுடைய மனம் சிந்தனையிலீடுபட்டது. "இந்த ஆண்களே விசித்திரம்! பொறுப்பும் பதவியும் கிடைத்ததும் எப்படி மாறிவிட்டானே! உடலுழைப்பிலும், பிரயாணத்திலும்தான் எவ்வளவு உத்சாகம்? கஞ்சியில் கல்லும் மணலும் இருப்பதுகூடக் கவனிக்காமல் குடித்துவிட்டு உத்சாகமாக வேலை செய்கிறானே...."

அரிகானுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதும் அவளுக்குத் தெரியும். அதுவரையில் நாள் தவறாமல் பிரயாணம் செய்யவேண்டும் என்பதும் அவள் அறிந்ததுதான். அதற்காக தலைகால் தெரியாமல் உத்சாகத்தில் மூழ்கிக்கிடக்க அவளால் முடியவில்லை. நாள் முழுவதும் உழைப்பதால் அலுப்பு மேலிட்டு, இரவு வந்ததும் சோர்ந்து படுத்துவிடுவாள். மனத்தில் சோர்வு இருக்கும்போது உத்சாகத்துக்கு இடமேது? மறுநாள் விடிவதைப்பற்றி எண்ணாமல் தூங்க முயலுவாள். விவரிக்க முடியாததொரு உணர்ச்சி அவளைப் பிடித்துக்கொண்டது.

"அதோ டிக் வருகிறான்" என்றாள் ரெபெக்கா. முன்னே நின்றுகொண்டு வண்டிக்காரர்களை வேகமாக ஓட்டிவரும்படி அவன் சமிக்ஞைகாட்டிக்கொண்டிருந்தான். முகத்தில் வெயில் சுளீரென்று விழவே, கையை வைத்து மறைத்துக்கொண்டு, டிக் இருந்த திசையில் அவள் திரும்பினாள்.

வெயிலும் அலுப்பும் தாங்காமல் தன்னுடைய முகம் சிவந்திருக்கும் என்பது அவளுக்குத் தெரியும். இரட்டை நாடி சரீரமுள்ள தன்பார்வையில் ஆண்மைத்தனமிருப்பதையும் அவள் அறிவாள். ஆண்டவன் தனக்கு ஸ்தூல சரீரத்தையும் முரட்டுத்தனம் தெறிக்கும் முகத்தையும் அளித்துவிட்டானே என்று

அவள் கவலைப்படவில்லை. விஜி இவான்ஸை வசீகரிக்க தன்னை அழகு செய்து கொள்ளவேண்டும் என்றும் அவள் எண்ணவில்லை. இயற்கையாகவே, பெண்களுக்குள்ள ஆசையில், தன்னை அழகு செய்துகொள்வதிலும், சுத்தமான ஆடைகள் அணிந்துகொள்வதிலும், தேகத்தைப் பளபளப்பாக வைத்துக்கொள்வதிலும் நாட்டமிருந்தது. தூரத்தில் தெரியும் கொத்தளத்தின் அருகே சென்றதும் பாடி இறங்கவேண்டும் என்று அவள் விரும்பினாள். பச்சைப் புண்ணாக வலிக்கும் தேகத்தில் சுடுதண்ணீர் ஊற்றிக் குளிக்கவேண்டும் என்று எண்ணினாள்.

சமீபகாலமாக அவளுடைய உள்ளமும் உடலும் உத்சாகமாகத்தானிருந்தது. என்றாலும் இப்போது சோர்வு ஆட்கொண்டுவிட்டது. கீழே படுத்து ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும்போலிருந்தது. பாட்டையில் அவள் தயங்கி நின்றாள். தன்னுடைய நிலைமையை விஜி கவனித்துவிடாதபடி அதிசாமர்த்தியாக ஒதுங்கிக்கொண்டாள். தூக்கம் கண்ணைச் சுழற்றிற்று. அரிகான் போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்றே ஒரே குறியில் ஆவேசத்துடன் விஜி பிரயாணம் செய்து கொண்டிருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியும்.

மேட்டிலிருந்து வண்டிகள் கீழே திரும்பி இறங்கிக்கொண்டிருந்தன. தலைப்பில் செல்லும் வண்டிகள் திருப்பத்தில் செல்லும்போது மறைந்துவிட்டன. குரல் கொடுத்து விஜி வண்டிகளை நிறுத்தினான். உச்சியிலிருந்து, சரிவில் மிகவும் எச்சரிக்கையுடன் இறங்கிக் கீழே செல்லவேண்டும். வளைந்து வளைந்து செல்லும் பாட்டைக்கு அப்பால் கீழே ஆற்றோரமாக, மரங்கள் அடர்ந்த பகுதியில் கம்பீரமாக லாராமிக் கோட்டை இருப்பது தெரிந்தது.

ரெபெக்காவின் மனம் சந்தோஷத்தினால் துள்ளிற்று. "இங்கே ஒரு கட்டடத்தைப் பார்த்துச்

சந்தோஷப்படப்போகிறோம் என்று நான் எண்ணவே யில்லை. அங்கே நாற்காலிகள் இருக்குமா? விஜி, எனக்கு நாற்காலியில் உட்காரவேண்டும் என்று ஆசையாக இருக்கிறது" என்றாள்.

* * *

மெர்ஸி சந்தோஷமாக இருந்தாள். இதுவரையில் ருசித்தறியாத இன்பம் இது என்றே அவள் நினைத்தாள். இனிமையான சங்கீதம், கிளுகிளுப்பூட்டும் காற்று, இன்பமூட்டும் நட்சத்திரங்கள், எல்லாம் சேர்ந்து அவளுக்குப் போதை யூட்டின. அரிகானில் இப்படி இருக்குமோ என்னமோ? இங்குள்ள பரபரப்பும், சந்தோஷமும், வேகமும் இருக்கமுடியாது. அவளுடைய மனத்தில் எண்ணக் குவியல்கள் நிரம்பின!

"மாக் கர்டிஸ், சௌக்கியம்தானா, உன்னைப்பற்றி ... உன்னுடைய வெள்ளைச் சட்டையும், மடித்துவிடப்பட்ட கைகளும், சிந்தனையின் ரேகைபடர்ந்த நெற்றியும்... உன்னை மறந்துவிடவேண்டும் என்றாலும் முடியவில்லை . . . மனத்திலே உன் உருவம் தோன்றி ஜாலவித்தை காட்டுகிறதே . . . ."

உள்ளும் புறமும் சங்கீதத்தின் எதிரொலி! உள்ளத்தில் உத்சாகம், உடம்பிலே பூரிப்பு—இளமையும், சுறுசுறுப்பும் நிறைந்த ப்ரௌனியின் உருவம் தோன்றிற்று.

"ப்ரௌனி, உன்னை நினைக்கும்போது என்ன என்னவோ ஆசை கிளைக்கிறது, நீ . . . நான் . . . ."

"பேர்டு, உன்னுடைய நாட்டியம், என்னை வசீகரித்துவிட்டதே! உன்னோடு நடனமாடியபோது . . . ."

"மாக், மறுபடியும் வந்துவிட்டாயா? என்னை வதைக்காதே, உன்னுடைய மனைவி என்ன நினைப்பாள்? அவளுக்கு நடனமாடுவதில் விருப்பமில்லையா?"

சிந்தனை குவிந்தது.

மெர்ஸி நடனமாடினாள். இனிமையான சங்கீதத்துக்கு இணைந்து ஆடினாள். மேலே மின்னும் நட்சத்திரங்களைப் பார்த்து, தன் பல் வரிசை காட்டிச் சுழன்றுடினாள். அவளுடன் கைகோர்த்து ஆடிய ஆடவனுக்குச் சளைக்காமல் ஆடினாள். பதினாறு பிராயமே நிரம்பிய அவளுக்கு நாட்டியம் சந்தோஷமூட்டியது; ஆனால் இன்ப போதை ஏற்படவில்லை. தன்னை அணைந்து கொள்ளும் கரங்களின் ஸ்பரிசத்தினால் அவளுக்குக் குதுகுதுப்பேற்பட்டது. ஆனால் சமிக்ஞையைப் புரிந்து கொள்ளும் ஞானமும் சாகஸமும் அவளுக்கு இன்னும் ஏற்படவில்லை.

சங்கீதம் நின்றது, கையிலிருந்த பிடிலை மடிமீது வைத்துக்கொண்டு ஹிக் விரல்களை சொடுக்கிக்கொண்டான். பொக்கைவாய் திறந்து, மெர்ஸியைப் பார்த்துச் சிரித்தான். மெர்ஸியும் முறுவலித்தாள். ஹிக்கின்ஸின் சுபாவம் அவளுக்குத் தெரியும்.

அவளுடைய காதிலே மாக்கின் பேச்சு ஒலித்துக் கொண்டிருந்தது. சுற்றிலும் மனித நடமாட்டம் இருந்துகொண்டிருந்தது. அவர்களைப் பிரிந்து தனியாக அவனுடன் உலாவச் செல்வது எப்படி? கணப்பு நெருப்பைச் சுற்றி எல்லோரும் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது அவள் மட்டும் விலகி காலாற நடக்க . . . .

அவள் சிந்தித்தாள். போவோமே என்று தீர்மானித்தாள். மாக் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். மெர்ஸி நாற்புறமும் சுற்றிப் பார்த்துவிட்டு அவனைப் பார்த்தாள். இருவருடைய கண்களும் சந்தித்தன, பேசின. மெர்ஸி எழுந்துவிட்டாள். கூட்டத்தை விட்டு வெளியேறும்போது ப்ரௌனி அவளை நிறுத்தினான். "முகாமிற்கா போகிறாய்? மெர்ஸி, தனியாகவா, நானும் துணை வரட்டுமா?" என்று கேட்டான்.

"வேண்டாம், ப்ரௌனி, நானே போய்விடுகிறேன்" என்று நகர்ந்தாள் அவள்.

சற்றுத் தொலைவில் இருளுடன் இருளாக நின்ற மாக் குரல் காட்டினான். அவள் நின்றாள். "வந்து விட்டாயா?" என்று அன்பு பொங்க அவன் கேட்ட கேள்வி அவளுடைய நெஞ்சில் எதிரொலிக்கவில்லை என்றாலும் இதவாகத்தானிருந்தது.

அவளுடைய தொண்டை கம்மிற்று, "ஆமாம்" என்று மௌனமாகிவிட்டாள்.

"நான் வயதானவன், கிழவன் என்று நீ எண்ணு வாய், மெர்ஸி, என்னுடைய ரத்தத்தில் இளமைத் துடிப்பு இருக்கிறது. உன்னைப்போலவே சின்னஞ்சிறு பிராயமடைந்துவிட்டதாக உணர்வு வந்துவிட்டது" என்றான் மாக்.

அவர்கள் ஆற்றங்கரையோரமாக நடந்தார்கள். நீரின் சலசலப்புத்தான் மிஞ்சிற்று. தூரத்தில் எழுந்த சங்கீதமும் மக்களின் பேச்சொலியும் சிறிது சிறிதாகக் குறைந்துவிட்டது. மாக் உணர்ச்சி வசப்பட்டான். அவளுடைய இடையில் கைகொடுத்துத் திருப்பி, முகத்துக்கு முகம் வைத்துக்கொண்டான். தெளிவற்ற பயமும் பதட்டமும் வாட்ட மெர்ஸி அவனைப் பார்த்துக்கொண்டே நின்றாள். கண்களில் நீர் மல்கிற்று, உதடுகள் துடித்தன, தொண்டை நாளங்கள் உணர்ச்சி தாளாமல் விம்மின. ஆனால் வாயிலிருந்து வார்த்தை கிளம்பவில்லை. அவளுடைய உணர்ச்சியைக் கவனிக்காமல், அவளுடைய அதரத்தைச் சுவைத்து இன்பம் காண மாக் துடித்தான் . . . .

மெர்ஸியின் நெஞ்சிலே வேதனை? "இது நியாயம் தானா, மாக்! நீயோ வயதானவன், நானோ சிறுமி, என்னுடைய—நம்முடைய—உணர்ச்சி வரம்பு மீறியது." இப்படிச் சொல்லவே அவள் முயன்றாள். தொண்டையிலிருந்து சப்தம் எழுந்தால்தானே!

அன்பும் ஆதரவும் முதிர்ந்த கைகளின் அணைப்பில் மெர்ஸி தன் வசமிழந்து கிடந்தாள். நடன சங்கீதமும் ஆரவாரமும் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிக்கொண்டிருந்தது. அவளுடைய நெஞ்சிலே துள்ளிக்கொண்டிருந்த இன்பமடங்கிவிட்டது. இரவின் வெப்பமும் இருளும் புறத்தைத் தீண்டுவதுபோல, அகத்திலே இருள் கவியலாயிற்று. சங்கீதம் மீட்டிக்கொண்டிருந்த உணர்ச்சியும் உள்ளக் கிளர்ச்சியும் வேதனையாக மாறிவிட்டது. அவளுடைய உடம்பு முழுவதும் ஒரே இசிவு. உள்ளத்திலே சோர்வு,—கீழே தலை சாய்த்துக் கொண்டு விம்மி விம்மி அழவேண்டும்போலிருந்தது.

அவளுடைய மாறுதலை மாக் கவனித்தான் போலும்! “மெர்ஸி, மன்னித்துவிடு. மனிதன் ஒரு முட்டாள்தான்” என்றான்.

“வருந்தாதே, மாக். நீ வருந்துகிறாய் என்பதைக் கேட்க எனக்கு அழுகை வருகிறது” என்றாள் அவள் மெல்லிய குரலில்.

அவளுடைய நெஞ்சம், ஆதரவுக்காக ஏங்கிற்று. அவன்மீது தலைசாய்த்துக்கொண்டாள். அவளை இறுகக் கட்டித் தழுவிக்கொண்டான் மாக். “இதைக் காதல் என்று சொல்லமுடியாது, மெர்ஸி—நாம்—நாம் காதலிக்கிறோமா?” என்று கேட்டான் அவன்.

“எனக்குத் தெரியும்” என்றாள் அவள் ஒரே வார்த்தையில்; பிறகு “ஏதாவது விபரீதம் விளைந்துவிடுமா, மாக்?” என்று கேட்டாள் நடுங்கிய குரலில்.

“ஒன்றுமில்லை, மெர்ஸி, கவலைப்படாதே, வா போகலாம்” என்றான் மாக்.

அவனுடைய வார்த்தைகள் தைரியமூட்டின என்றாலும், அவளுக்கு அமைதி ஏற்படவில்லை. “எனக்கு இனிமேல் நடனமாட விருப்பமில்லை—முடியாது” என்றாள் அவள்.

"வேண்டாம், வா போகலாம், முகாமிற்கு அழைத்துச் செல்கிறேன்" என்முன் மாக்.

எழுந்து நின்று, ஆடையைச் சரிசெய்துகொண்டாள் அவள். மனத்திலே என்ன என்னவோ எண்ணங்கள்! அவனை நெருங்கி, நெஞ்சிலே தலைசாய்த்துக் கொண்டாள்.

"மெர்ஸி" என்று ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டான் அவன். "என் கண்ணே, மெர்ஸி எனக்குப் பைத்தியம்தான் பிடித்துவிட்டது. வெறி! உனக்கு ஏற்றவன் நான் அல்ல! என்னை மறுத்துப் பேசாதே! இல்லை என்று சொல்லாதே! நாளை இரவு நாம் சந்திப்போம்" என்முன் அவன்.

14. எருமைகள்!

ஆயிரமாயிரம் காட்டெருமைகள்! அவற்றை எண்ணுவதற்கு புருஷாயிசு போதாது என்றுதான் எண்ணினுன் இவான்ஸ். எருமைகள் பாய்ந்து சாடின. ஹுங்காரமிட்டன! கன்றுகள் கதறின! அவற்றின் குரலும், ஓட்டத்தின் ஓசையும் ஒன்ருகக் கலந்து வானைப் பிளந்தது! நல்லவேளை, பாய்ந்துவந்த வேகத்தில் அவை, சாரியாக வந்த வண்டிகளைத் தாக்கவில்லை. எட்டலில் நின்று விரைத்துப் பார்த்தன. சட்டெனத் திரும்பிப் புல்வெளி நோக்கி ஓடின. அவற்றின் ஓட்டம் மனத்திலே பீதியைக் கிளப்பிற்று—உடலில் நடுக்கம் காட்டிற்று.

"இதைப்பற்றி நீ கூறியிருந்தால் புரளிக்காரன் என்று தான் சொல்லியிருப்பேன். டிக், எருமையின் சுவடே இல்லாத பகுதி.—இல்லாவிட்டால், அவற்றின் ஆர்ப்பாட்டம் நிறைந்த இடம். இது வேடிக்கைதான்" என்முன் இவான்ஸ் பிரமிப்புக் கலந்த குரலில்.

அவனுடைய ஆயுளிலேயே இவான்ஸ் இம்மாதிரியானதொரு ஓட்டத்தை—எருமைகளின் படையெடுப்பைக் கண்டதில்லை. அவற்றின் ஆரவாரமும் ஹூங்காரமும் எவ்வளவு பயங்கரமாக இருந்தது!

இரண்டு நாட்கள் லாராமியில் தங்கியபோது அவர்கள் வழிநடைக்கு வேண்டிய பொருள்களைச் சேமித்துக் கொண்டார்கள். உணவுப்பொருள்களின் விலை அகாதமாக இருந்தாலும், கிடைத்ததே என்ற சந்தோஷம் தான் ஏற்பட்டது. இப்போதெல்லாம் அவர்கள் காலகாலத்தில் புறப்பட்டு, குறிப்பிட்ட தூரத்தைக் கடந்தார்கள். கட்டுப்பாடும், ஒழுங்கும், சந்தோஷமும் அங்கு காணப்பட்டது. இந்தியர்களால் அவர்களுக்குத் தொந்தரவும் ஏற்படவில்லை. இந்தியர்களுடைய தாக்குதல் நேருமென்று எதிர்பார்த்துக்கொண்டே எச்சரிக்கையாக கூட்டத்தாரும் சென்றுகொண்டிருந்தார்கள். தன்னுடைய திறமையினால்தான் இவை எல்லாம் ஏற்பட்டுவிட்டதாக இவான்ஸ் பெருமைப் பட்டுக்கொள்ளவில்லை. கோஷ்டியிலிருந்த ஒவ்வொருவரும் பொறுப்புணர்ந்து நடக்க ஆரம்பித்துவிட்டார்கள். கட்டுப்பாடும், சுறுசுறுப்பும் அவசியம் எனத் தெரிந்துகொண்டார்கள். டாட்லாக்கூட வரவர அகம்பாவமற்று எல்லாருடனும் சௌஜன்யமாகப் பழகலானான்.

"ஆபத்து வரும்போலிருக்கிறது" என்றான் டிக். இவான்ஸ் சிந்தனை கலைந்து நின்றான். தூரத்தில் எருமைகள் ஹூங்காரமிடுவதுபோலத் தோன்றிற்று அவனுக்கு.

"நாம் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான் விஜி.

"இதுவரை எருமைக் கூட்டத்தை நீ பார்த்ததே யில்லையா, விஜி?"

"இல்லை" என்றான் அவன். மேலும் பள்ளமுமான அந்த மலைப்பிராந்தியத்தில் புழுதிப் படலத்தைக் கிளப்பிக்கொண்டு புயல் வேகத்தில் அந்த மிருகங்கள் பாய்ந்து ஓடுவதை அவன் எண்ணிப்பார்த்தான்.

"குழந்தைகளும் பெண்களும் நம்முடனிருக்கிறார்களே" என்று ஆரம்பித்தான் டிக். "இல்லாவிட்டால் நான் பயப்படமாட்டேன்."

"கூட்டத்தைக் கண்டால்கூட—நம்முடைய வண்டிகளைப் பார்த்துக்கூட விலகி அவை ஒதுங்காதோ?" என்று கேட்டான் லிஜி.

டிக் தலையசைத்தான். ஆமாம் என்றும் சொல்லவில்லை, இல்லை என்றும் சொல்லவில்லை. அவர்கள் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தார்கள். இடையே ஒரு ஏரியை அவர்கள் கடக்க நேரிட்டது. நீர் வற்றி, கரைகளில் அடுக்கு அடுக்க உப்புப் படிந்திருந்தது. டிக் குதிரையைவிட்டிறங்கி, நடுவிலிருந்த தண்ணீரை ருசிபார்த்தான். "அப்பா, ஒரே துவர்" என்று சொல்லிக்கொண்டே திரும்பினான்.

"எதற்கும் நாம் இங்கே ஒரு கொடியை நட்டுச் செல்வோம். அதைக் கண்டு வண்டிகளும் மற்றவர்களும் விலகிச் செல்லட்டும். நீர் ஓரமாக வந்தால், தாகங்கொண்ட குதிரைகளும் கோவேறு கழுதைகளும் மோப்பங்கொண்டு வரிசையிலிருந்து விலகி தண்ணீர் குடிக்க வந்துவிடும்" என்றான் டிக்.

அவர்கள் மேலும் ஒரு மணி நேரம் சவாரி செய்து கொண்டேயிருந்தார்கள். எருமைகளின் ஓட்டத்தை விட்டு அவர்கள் விலகவேண்டும் என்றுதான் எண்ணினார்கள். ஆனால் மாளாமல் பாதை போய்க்கொண்டேயிருந்தது. சற்று தூரத்தில் தூசிப்படலம் தெரியவே டிக் அங்கவடியின்மீது நின்று எம்பிப் பார்த்தான். அங்கே பசுமை தென்பட்டது. சில எருமைகளும்

மேய்ந்துகொண்டிருந்தன. மந்தையிலிருந்து விலகிய எருமை மாடுகளாக இருக்கலாம். தண்ணீரில் குதித்துப் புரளுவதற்காக அவை மந்தையிலிருந்து பிரிந்து வந்திருக்கக்கூடும்.

டிக் குதிரையின் லகானைப் பிடித்து இழுத்து நிறுத்தினன். "ஒன்றிரண்டு மாடுகளைச் சுட்டு வீழ்த்துவோமா" என்று கேட்டுக்கொண்டே துப்பாக்கியை எடுத்துக் குறிவைத்தான். இவான்ஸும் துப்பாக்கியை எடுத்துப் பிடித்துக்கொண்டான். குறிபார்ப்பதில் அவனுக்குச் சிறிது நேரம் பிடித்தாலும் இலக்குத் தவருமல் சுட்டுவிட்டான்.

டிக் சுட்ட எருமை நீர்க்கரையருகில் விழுந்தது. இவான்ஸின் குண்டுபட்டு, இரத்தம் பீறிடவே, தண்ணீர் நிறம் மாறியது. அதற்கு முன்னேயே எருமைகள் நீரில் இறங்கி கலக்கியிருந்ததால் ஒரே குழம்பலாக இருந்தது. "இந்தத் தண்ணீர் குடிப்பதற்கு லாயக்கில்லை" என்ருன் இவான்ஸ்.

அதிசீக்கிரம் தெளிந்துவிடும். ஓடுகிற நீர்தான் என்ருன் டிக். பிறகு அவன் முகாம் இறங்குவதற்கு இடம் தேடச் சென்ருன். நாற்புறமும் சுற்றிப்பார்த்து அவன் ஓர் இடம் நிச்சயிப்பதற்கும் வண்டிகள் அங்கு வந்து சேருவதற்கும் நேரம் சரியாக இருந்தது.

"நான் போய் எருமைகளை உரித்து இறைச்சி எடுத்து வருகிறேன்" என்று டிக் சொன்ஞன். இவான்ஸ் தலையசைத்து விடை கொடுத்துவிட்டு தன்னுடைய குடும்பத்தார் இருந்த வண்டியை நோக்கிச் சென்ருன். வண்டிகளிலிருந்து ஒவ்வொருவராக இறங்கிக்கொண்டிருந்தார்கள். பூட்டுத் தறித்துவிட்டுச் சிலர் மாடுகளை மேய்ச்சலுக்கு விரட்டினர்கள். இவான்ஸ் குதிரையை ஒரு புறமாகக் கட்டிவிட்டுப் ப்ரெளனியிடம் வந்தான். "நம்முடைய நாய் எங்கே?" என்ற கேள்விதான் அவனுடைய வாயிலிருந்து கிளம்பிற்று.

"அது நொண்ட ஆரம்பித்தது, அப்பா, வண்டிக்குள் விட்டேன்" என்றான் ப்ரௌனி.

ரெபெக்கா வண்டியிலிருந்து இறங்கி இரத்த ஓட்டம் குன்றி மரத்துப்போன கால்களைப் பிடித்து விட்டுக்கொண்டாள். "அடேயப்பா, அந்த எருமைக் கூட்டம் எப்படி ஓடிற்று?" என்று ஆச்சர்யப்பட்டாள் அவள்.

"அம்மா நடுநடுங்கிப் போய்விட்டாள் அப்பா, அவளுடைய பீதியைப் பார்த்து நான் சிரித்தேன்" என்றான் ப்ரௌனி.

"பயமொன்றுமில்லை, அவற்றின் வேகமும் ஹுங்காரமும் என்னைத் திடுக்கிடச் செய்தன" என்றாள் ரெபெக்கா.

"நீ மாடுகளை ஓட்டிக்கொண்டுபோ, ப்ரௌனி, தண்ணீரும் காட்டி மேய்த்துக்கொண்டுவா. இருட்டுவதற்குள் திரும்பி வந்துவிடு. அதோ அங்கு பசுமை இருக்கிறது" என்று சுட்டிக் காட்டினான். வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. அதி சீக்கிரம் இருள் கவிந்ததுபோல்த் தோன்றிற்று.

"நான் குதிரையை அவிழ்த்துச் செல்கிறேன், அப்பா" என்று சொல்லிக்கொண்டே நகர்ந்தான் ப்ரௌனி. மாடுகள் முன்னே செல்ல, குதிரைமீதேறிக் கொண்டு அவன் பின்னே சென்றான்.

இவான்ஸ் முகாமைச் சுற்றிவரச் சென்றான். அங்கு அங்கு நின்று அவன் எருமைகளைப்பற்றி எச்சரிக்கை செய்தான். மாடுகளுக்கு நல்ல புல் கிடைக்குமிடத்தைச் சுட்டிக் காட்டினான். குதிரைகளை எங்கு கட்ட வேண்டும் என்று இடம் நிர்ணயித்தான். "முகாமைச் சுற்றி இன்று வண்டிகளை நெருக்கி நிறுத்தவேண்டும். குதிரைகளையும் மாடுகளையும் பட்டிக்குள்தான் நிறுத்த வேண்டும். சீக்கிரம் அவரவர் வேலைகளை முடித்து

விட்டு கணப்புக்கு விறகு வெட்டி வாருங்கள். காட்டு எருமைகளின் தொந்தரவு இருக்கக்கூடும்" என்றான் அவன். அன்று அவனுடைய தொனியில் மிடுக்கும் கம்பீரமுமிருந்தது. டாட்லாக்கைப் போலவே அவன் அன்று பேசினான்.

இவான்ஸ் மீண்டும் தன்னுடைய வண்டி நின்ற இடத்துக்கு வந்தான். சமையல் செய்வதற்கு உதவியாகச் சுள்ளிகளைக் கூட்டி, நெருப்புப் பற்றவைத்து ரெபெக்காவுக்கு உதவி செய்தான். பிறகு கோடறியை எடுத்துக்கொண்டு அருகிலிருந்த புதரில்போய் விறகு வெட்ட ஆரம்பித்தான். இதன் நடுவே மற்றவர்களும் வேலைகளை முடித்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். ஹால்ரிட்ஜும் டிக்கும் வந்து கலந்து கொண்டார்கள்.

"முகாமுக்கு வெளியே கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நாற்றிசைகளிலும் நெருப்புப்போட்டு எரிக்கப் போகிறேன், டிக்" என்றான் இவான்ஸ்.

டிக் பதில் சொல்லவில்லை.

"காட்டெருமைகள் எந்தத் திசையில் வரக்கூடும்? நெருப்பைக்கண்டு பயந்து விலகலாமல்லவா?" என்று கேட்டான் இவான்ஸ்.

"சொல்வதற்கில்லை. வடக்குப்புறமாக அவை ஓடலாம்" என்றான் டிக்.

"அப்படியென்றால் நம்முடைய மாடுகளை தென்புறமாக அடைத்து வைக்க பட்டிகட்டச் சொல்கிறேன். அதற்கப்பால் தீ மூட்டி போடச் சொல்கிறேன்" என்றான் இவான்ஸ்.

"இது எல்லாம் பிரமாதமல்ல. உன்னுடைய ஏற்பாடுகளிருக்கட்டும். காட்டெருமைகள் மிரண்டு தாக்க ஆரம்பித்துவிட்டால் கண் தலை தெரியாமல் பாயும்" என்றான் டிக் சம்மர்ஸ்.

"அப்படியென்றால் தெற்குப்புறமும் மிகப் பெரிய தீ மூட்டி போட்டுவிடுகிறேன்" என்றான் இவான்ஸ்.

வெட்டிய விறகை ஏற்றிச்செல்ல ஹால்ரிட்ஜ் வண்டி ஓட்டிவந்தான். குறிப்பிட்ட இடங்களில் விறகு கூட்டி வைத்தார்கள். ஜ்வாலையாக எரிவதைக் கவனிப்பதற்கும் காவலாக நிற்பதற்கும் அங்கங்கே ஆட்களை நிறுத்தினான் இவான்ஸ். "கையில் துப்பாக்கி இருக்கட்டும். வேறு உதவி வேண்டுமானாலும் கேளுங்கள். துப்பாக்கிச் சப்தம் கேட்டு எருமைகள் திரும்பி ஓடக்கூடும். இப்போதே தீ மூட்ட வேண்டாம். சாப்பாடு முடிந்தபிறகு தீ போடலாம்" என்றான் இவான்ஸ்.

வேலையை முடித்துக்கொண்டு இவான்ஸ் சாப்பிட வந்தபோது டிக் சம்மர்ஸும் வந்தான். இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

"ப்ரௌனி எங்கே, சாப்பிட்டானா?" என்று கேட்டான் இவான்ஸ்.

"இப்போதெல்லாம் அவனுக்குச் சாப்பிடக்கூட நேரம் கிடைப்பதில்லை. ஒரு கவளம் விழுங்கிவிட்டு மாடுகளைப் பார்த்துக்கொள்ள ஓடிவிட்டான். ஆனாலும், லிஜி, அந்தப் பையன் சக்திக்கு மீறி வேலை செய்கிறான்" என்றாள் ரெபெக்கா.

இருவருக்கும் ரெபெக்கா பிஸ்கோத்துகளைப் பறிமாறினாள். காற்று ஜிவ்ஜிவ்வென்று அடிக்க ஆரம்பித்தது. காற்றுடன் கலந்து புழுதியும் பறந்து வந்தது. "இது என்ன காற்று" என்று அலுத்துக்கொண்டாள் ரெபெக்கா. ஆனாலும் எருமைகள் ஓடியதைப்பற்றியும், அப்போது எழும்பிய புழுதிப் படலத்தையுமே அவள் எண்ணிக்கொண்டிருக்கிறாள் என்பதை இவான்ஸ் ஊகித்துக்கொண்டான். எருமைகளைப்பற்றி நினைத்ததுமே அவனுடைய மனத்திலும் 'பகீர்' என்றது. நாற்புறங்களிலும் எருமைகளின் நடமாட்டமிருக்கும்

போது, மாடுகளை மேய்த்துக்கொண்டு ப்ரௌனி சென்றிருக்கிறானே என்று கவலைப்பட்டான். ப்ரௌனி இன்னும் சிறு குழந்தையல்ல. வயது வந்த வாலிப னுடைய வேலையும் பொறுப்பும் அவன் ஏற்றுக்கொண்ட பிறகு ஆபத்துநேர்ந்தாலும் அவன்தான் சமாளிக்க வேண்டும் என்று சமாதானம் செய்துகொண்டான்.

மீண்டும் காற்று வீசிற்று. "எருமைகள்தான் வருகின்றன, விஜி" என்றான் டிக்.

பீதியுடன் இவான்ஸ் எழுந்து நின்றான். "எல்லா ரையும் கூப்பிடுகிறேன்" என்றான்.

வானத்தில் இடியும் குமுறலும் ஏற்பட்டது. பளிச் சென்று மின்னல் தோன்றி மறைந்தது.

"டாட்லக், பாச், புரூவர், இன்ஸோ, ஓடி வாருங் கள், தீ மூட்டத்திற்குச் செல்லவேண்டும்" என்று கத்தினான் இவான்ஸ்.

திடீரென்று பேய்க்காற்று வீச ஆரம்பித்தது. காற்றின் ஓலத்தில் இவான்ஸின் குரல் அமுங்கிவிட் டது. பெருங் குரலுடன் அவன் மீண்டும் "மாக், பெயர்மன், கிரஹாம்" என்று கத்தினான்.

தெற்கு நோக்கி இவான்ஸ் ஓடினான். அங்கு தானே மாடுகள் பட்டியடைத்து நிற்கின்றன! படபட வென்று தூறல்விழ ஆரம்பித்தது. முகத்தைத் துடைத் துக்கொண்டு அவன் விறகு குவித்துள்ள இடத்தை யடைந்தான். சுளுந்தும் சுள்ளியுமாகச் சேர்த்து, வெடி மருந்தைக் கொட்டி, கல்லைத் தட்டித் தட்டி நெருப் பூட்ட முயன்றான். இதற்குள் அவனருகே பாச் வந்து நெருப்பு மூட்டிவிட்டான். புகைந்து ஜ்வாலை கிளம் பிற்று. காற்று வீசி நெருப்பைக் கலைத்தது. அவர் களும் விடா முயற்சியாக நின்று ஜ்வாலை கிளப்பி விட்டார்கள்.

"அணையாமல் பார்த்துக்கொள், மேலும் மேலும் கட்டைகளைப்போடு" என்று சொல்லிவிட்டு இவான்ஸ் அப்பால் சென்றான். மாடுகளும் ப்ரௌனியும் இருக்குமிடம் நோக்கி அவன் ஓடினான். "ப்ரௌனி, ஓடிவா" என்று கத்தினான்.

வானம் குமுறிற்று. இடியும் மின்னலும் அதிகரித்தன. பூமியே பிளந்துவிடுவது போன்ற பேரிரைச்சல் கேட்டது. இடையே அவனுடைய காதுகளில் எருமைகள் ஓடிவரும் ஒலி கேட்டது. ஒன்று, பத்து, ஆயிரம், லக்ஷம், எருமைகள் ஓடிவரும் ஓசை!

"ப்ரௌனி! ப்ரௌனி!" என்று கத்திக்கொண்டே ஓடினான். "நண்பர்களே, வீரர்காள், வாருங்கள்" என்று இவான்ஸ் கத்தினான்: மேடும் பள்ளமும் நிகாப் படுத்தமுடியாமல் அவன் தடுக்கி விழுந்தான். எழுந்து ஓடினான். சப்தம் நெருங்கிவருவது போன்ற ப்ரமை! துப்பாக்கியை எடுத்துச் சுட்டான்! சப்தம் வரும் திசை நோக்கிச் சுட்டான். அவனுக்கு உலகமே முடிந்துவிட்டதுபோலத் தோன்றிற்று. வானமிடிந்து வீழ்ந்து பூமியைப் படுசூர்ணமாக்கி விட்டது போலத் தோன்றிற்று. ரெபெக்கா, ப்ரௌனி, என் எல்லாருக்குமே முடிவுகாலம் நெருங்கிவிட்டதாகவே எண்ணினான். அவனுடைய மனம் வெறியேறிவிட்டது. கைத்துப்பாக்கியிலிருக்கும் வேட்டுக்கள் தீருமட்டும் சுட்டுக்கொண்டே சென்றான். மீண்டும் ரவைபோட்டு துப்பாக்கியைக் கெட்டித்துக்கொள்ளக்கூட அவகாசமில்லை. எருமைகள் வந்துவிட்டால் என்ன செய்வது? கீழே விழுந்தாலும் அவற்றின் காலில் மிதிபட்டுச் சாகவேண்டும்.

பக்கத்தில் சில மிருகங்கள் வந்துவிட்டதை அவன் உணர்ந்தான். மின்னல் வெளிச்சத்திலே ஆடுமாடுகள் வலப்புறமாக வெறித்து ஓடுவதையும் அவற்றைத் துரத்திக்கொண்டு காட்டெருமைகள் செல்வதையும்

அவன் கண்டான். அவை ஓடும் திசையைப் பார்த்த பிறகு அவனுடைய நெஞ்சிலே தைர்யம் ஊறிற்று. வண்டிகளை வளைத்து நிறுத்தியிருக்கும் முகாமை நோக்கி அவை செல்லவில்லை என்பது தெளிவாயிற்று. மனைவி மக்களைக் காப்பாற்றிவிடலாம் என்ற தெம்பு ஏற்பட்டதும் அவன் நெருப்பு மூட்டம் இருந்த இடத்தை நோக்கிச் சென்றான். அப்போதும் ப்ரௌனி யைப்பற்றிய கவலையே மனதில் மேலோங்கி எழுந்தது. பாச் நெருப்பின் அருகில் நின்றுக்கொண்டிருந்தான். மற்ற இடங்களிலும் நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருப்பதை பார்த்தான்.

உணர்ச்சி வசப்பட்டு அவன் தவித்தான். மா பெரும் ஆபத்திலிருந்து தப்பிவிட்டோம் என்ற எண் ணத்துடன் ப்ரௌனியைப் பற்றிய கவலையும் கலந்து கொள்ளவே வாயிலிருந்து பேச்சுப் பிரியவில்லை. "ப்ரௌனி, ப்ரௌனி நீ எங்கே?" என்று முணு முணுத்தான்.

அவனுடைய கேள்விக்கு எவருமே பதில் கூற வில்லை. பாச் அவனைக் கூப்பிடுவது காதில் விழுந்தது. அவன் நிற்கவில்லை. "ப்ரௌனி, எங்கே இருக்கிறாய்?" என்று கூவிக்கொண்டே ஓடலானான்.

பாச் அவனுடைய கையைப்பிடித்து நிறுத்தினான். "நீ இங்கேவா, இவான்ஸ். முகாமில் ப்ரௌனி இல்லை என்றால் நாங்கள் எல்லாரும் சேர்ந்து தேடுகிறோம். அவன் அங்கேதான் இருப்பான்" என்று சமாதானம் கூறினான்.

இருட்டில் குளம்பொலி கேட்டது. அதைத் தொடர்ந்து, டிக்கின் குரலும் கேட்டது. "யார் அங்கே, பாச், நீதானா? இவான்ஸைப் பார்த்தாயா?" என்று கேட்டுக்கொண்டே குதிரையிலிருந்து இறங் கினான் டிக் சம்மர்ஸ்.

"இதோ இருக்கிறான்" என்றான் பாச்.

"அப்பா, சௌக்கியமாக இருக்கிறாயா?" என்று கேட்டுக்கொண்டே முன்னே தாவினான் ப்ரௌனி. ஆம், அவனேதான்!

இவான்ஸின் நெஞ்சம் சந்தோஷத்தால் துள்ளிற்று. "நல்லவேளை, குழந்தாய், வந்தாயே. உன்னைப் பற்றியே கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன்" என்று கூறி இவான்ஸ் அவனை அணைத்துக்கொண்டான்.

15. மீண்டும் சோதனை!

ஜூடித் பெயர்மன் கால்களை நீட்டி மடக்கிக்கொண்டாள், கைகளால் இடுப்பைப் பிடித்துவிட்டுக்கொண்டாள். முதுகில் தோன்றிய வலி நீங்க நிமிர்ந்து நெளிந்தாள். அவள் இப்போது கர்ப்பிணி. ஆரம்பத்தில் அவள் பிரசவத்தைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள். இப்போது கவலை விலகிவிட்டது. அவளைப்போல் வேறு சிலரும் தாய்மையடைந்திருந்தார்கள். புரூவரின் மனைவியும் பாச்சின் மனைவியும் சூல் கொண்டிருந்தார்கள். பேர்டின் மனைவி நிறைமாதக் கர்ப்பிணி. நேரம் வந்துவிட்டால், எங்காவது படுத்துப் பிரசவிக்க நிழல் கிடைத்துவிடும் என்று அவள் சொல்வதுண்டு. அவர்களைப் பார்த்த பிறகு ஜூடித்துக்கு தெம்பு ஏற்பட்டது.

அன்று எல்லோரும் ஓய்வாக இருந்தார்கள். பெண்களைத் தவிர மற்றவர்கள் குதூகலமாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தார்கள். சார்லஸ் பெயர்மன், டிக் சம்மர்ஸுடனும் இவான்ஸுடனும் கிளம்பிச் சென்றிருந்தான். அவர்களுடன் வேவு பார்த்துவிட்டுத் திரும்பும்போது உணவுக்கான இறைச்சியை வேட்டையாடி வருவதாக அவன் சொல்லியிருந்தான். அன்று ஜூலை மாதம் முதல் தேதி, சுதந்தர தினமான ஜூலை மாதம் நான்காம் தேதியை அவர்கள் திருவிழாக்

கொண்டாட எண்ணியிருந்தார்கள். ஆனாலும் அன்று சுதந்தரதினப் பிரசங்கம் செய்துவிட டாட்லாக் நிச்சயித்திருந்தான். அதற்காக எல்லாரும் சீக்கிரமே கூடிவிடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டான். அன்று ஓய்வாக இருந்தது ஜூடித்துக்குப் பிடித்தது. அவர்களைத் தொடர்ந்து வேறு பல கோஷ்டிகள் அரிகானை நோக்கி வந்துகொண்டிருந்தன. ஒருநாள் தவக்கப்பட்டால், ஒருவேளை அவர்கள் முந்திவிடக் கூடும். இதுவரையில் முதன்மையாக, முன்னோடும் கோஷ்டியாக இருந்துவிட்டுப் பின் தங்குவதா? போகட்டுமே என்றுதான் அவளுக்குத் தோன்றிற்று. பின்னால் வந்த கோஷ்டியினர் அவர்களைக் கடந்து சென்றனர். மிகவும் சிறிய கோஷ்டிதான்! அவர்களிடம் மிகவும் கொஞ்சமாக ஆடுமாடுகள்தான் இருந்தன. இவான்லை சந்தித்த கோஷ்டித் தலைவன் வழியில் நான்குபேர் இறந்துவிட்டதாகச் சொன்னான். நல்லவேளை, இங்கு சாவின்கை வேகமாக விழவில்லை, போகட்டும், அவர்கள் முந்திப் போகட்டும்.

எல்லாருக்குமே ஓய்வு அவசியம் என்று ஜூடித் எண்ணினாள். பிளாட்டியைத் தாண்டிய பிறகு அவர்களுடைய வேகம் குறைந்துவிட்டது. உழைப்பும் அதிகமாகிவிட்டது. எருமைகளால், தாக்கப்பட்ட கன்றுகாலிகள் மிரண்டு நாற்புறமும் சிதறியோடிவிட்டன. அவைகளைக் கண்டுபிடித்துச் சேர்ப்பதிலேயே ஒருநாளும் மறுநாளில் பெரும்பகுதியும் கழிந்தது. சில மாடுகளைக் காணவேயில்லை, சில சேற்றிலமுந்திக் கிடந்தன. சில கால்கள் ஒடிந்து விழுந்துகிடந்தன. சார்லஸின் இருபது மாடுகளில் மூன்று மாடுகள் காணமல் போய்விட்டன. அது பெரும் நஷ்டம்தான், ஆனல் ஜூடித் கவலைப்படவில்லை.

அவளுக்கு ஓய்வு அவசியமாக இருந்தது. குளிர்ந்த நீர், நிழல், ஓய்வு நினைக்கும்போதே மனசிலும்

குதூகலம் எழுந்தது. திரும்பத்திரும்ப வீட்டு வேலை—சை—என்ன வேலை! செய்ததையே திரும்பத் திரும்பச் செய்துகொண்டு! மற்றப் பெண்களுக்கு அலுப்பு ஏற்பட்டதோ என்னவோ, ஜூடித்துக்கு வீட்டு வேலையில் கவனம் செல்லவில்லை. சோம்பேறித்தனத்தை எண்ணி அவள் வருந்தினாள். ஆனாலும் அவளால் முடியவில்லை.

தொட்டியினருகில் உட்கார்ந்து சட்டைக்கு சோப்புத் தடவினாள். பிறகு கையால் தேய்த்து நுரையெழுப்பினாள். அலுப்பு! அலுப்புத்தான் விஞ்சியது!

"டாட், வெளியில் அலையாதே, அம்மா வேலை செய்கிறேன், பார், பக்கத்தில் இரு" என்று மகனைக் கூப்பிட்டாள்.

"நான் வெளியே போகக்கூடாதா, அம்மா?"

"அப்புறமாகப் போகலாம், இப்போது என் பக்கத்திலேயே இரு."

ரெபெக்கா அந்தப் பக்கமாக வந்தாள். ஜூடித்தைப் பார்த்ததும் அவள் நின்றாள். "என் வேலை முடிந்துவிட்டது ஜூடித், நீ விலகு, நான் உதவி செய்கிறேன். சோர்ந்து இருக்கிறாயே நீ" என்றாள் அவள்.

ரெபெக்காவுக்குச் சோர்வு என்பதே கிடையாது. அரிகானைப்பற்றியும், இன்னும் பலநாட்கள் பிரயாணம் செய்யவேண்டுமே என்று எண்ணும்போதும் அவள் மனம் சோர்ந்துவிடும். ஆனால் அவள் எப்போதுமே மனமிடிந்து உட்காருவதில்லை. உதறிக்கொண்டு எழுந்துவிடுவாள். கடினமான பிரயாணமோ, வெயிலோ, மழையோ, இந்தியர்களோகூட அவளுக்கு ஒருபொருட்டல்ல. அதிக தூரம் இருக்கிறதே, அரிகானுக்கு என்ற எண்ணம்தான் அவளுடைய விரோதி.

"ரொம்பதூரம் இருக்கிறதுபோல" என்று ஆரம்பித்தாள் ஜூடித்.

"இருக்கட்டுமே, ஜூடித், இந்தமாதிரி நீ மனம் குழம்ப இது சமயமல்ல. எங்கே இருந்தால் என்ன? அன்று அன்று நடப்பதைமட்டும் எண்ணிக்கொள். உனக்கு ஏதாவது உதவிவேண்டுமா, கேள். நான் செய்கிறேன்" என்றுன் ரெபெக்கா. பேசிக்கொண்டே அவள் அழுக்குத் துணிகளைக் கசக்கிக்கொண்டிருந் தாள்.

ஜூடித்துக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. "உன்னைமாதிரி நான் இல்லையே என்று வருந்துகிறேன், ரெபெக்கா. எனக்கு இந்தத் தொல்லை" என்று தன்னு டைய சூலைக் குறிப்பாலுணர்த்திஞள்.

"நான் எப்போதுமே மனம் தளரமாட்டேன், ஜூடித்! ஆண்டவன் எனக்கு நல்ல மகனையும் விசுவாச முள்ள புருஷனையும் அளித்திருக்கிருன். அதற்காக நான் அவனுக்கு நன்றி செலுத்தவேண்டும். குடும்பம் என்ருல் தொல்லைகள் இருக்காதா? ஜூடி, உன்னுடைய கணவனும் நல்லவன்தான்" என்ருள் ரெபெக்கா. அவ ளுடைய குரல் தொண்டையிலிருந்து வரவில்லை, இத யத்திலிருந்தே எழுந்தது.

சந்தோஷத்துடன் ஜூடித் தலையசைத்தாள். "விசு வாசமும், நல்லெண்ணமும், பிரியமும் உள்ளவன்தான் சார்லஸ்."

"நாம் ஆண்களைப்போல வீரதீரம் பேசிக்கொண் டிருக்கமுடியாது. சாகஸமான வேலைகளில் மனம் செலுத்தமுடியாது. ஆனுலும் அவர்களுடன் பங் கெடுத்துக்கொண்டுதான் வாழ்க்கை நடத்தவேண்டும். குடும்பத்தில் சமபங்கு எடுத்துக்கொண்டால்தான் உத்சாகமும் சந்தோஷமும் இருக்கும்" என்ருள் ரெபெக்கா.

ஜூடித் அதை ஏற்றுக்கொண்டாள். அவளுடைய முகம் மலர்ந்தது.

"உன் பையனு ஜூடி, குதித்துக்கொண்டிருக் கிருனே" என்று கேட்டாள் ரெபெக்கா.

"ஆமாம், அவனுக்கு தேகசுகம் ஏற்பட்டுவிட்ட தாக எண்ணம்."

"குழந்தைகள் சந்தோஷமாக இருந்தாலே ஆரோக் கியம்தான்."

டாட் தலைநிமிர்ந்து பார்த்தான். "அம்மா, நான் போகட்டுமா, அம்மா, அவர்களுடன் போய் விளை யாடுகிறேன்" என்று கெஞ்சினுன்.

அவனை ஏன் வெளியில் அனுப்பாமலிருக்கிருய் என்று கேட்கும் பாவனையிலிருந்தாள் ரெபெக்கா.

"அவன் ரொம்ப நாட்களாக வியாதியாக இருந் தவன். அதனுல்தான் எச்சரிக்கையாக இருக்கிறேன்" என்ருள். பிறகு டாடியைப் பார்த்து "இரு டாடி, கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து விடுகிறேன்" என்ருள் ஜூடித்.

வெளியே சென்று அவள் தண்ணீர் கொண்டுவந் தாள். தன்னுடைய அருகில் மகன் இருக்கவேண்டும் என்ற ஆசை இருந்ததே தவிர அதன் காரணத்தை ஆராய அவளால் முடியவில்லை. துணிகளைக் கசக்கித் தோய்த்தாள் ரெபெக்கா.

"பெரிய உபகாரம், ரெபெக்கா" என்று ஜூடித் அவளுக்கு நன்றி செலுத்தினுள்.

"எதைப்பற்றியும் கவலைப்படாதே, ஜூடி, உனக் குப் பிரசவநாள் நெருங்குவதற்குள் நாம் வில்லா மெட்டி போய்ச் சேர்ந்துவிடுவோம். நாம் நினைப்பது போல—பயப்படுவதுபோல கெடுதல்கள் சம்பவிப்ப தில்லை" என்று சொல்லி ரெபெக்கா விடை பெற்றுக் கொண்டாள்.

துணிகளை உலர்த்த ஜூடித் எழுந்தபோது ஹிக் வந்து சேர்ந்தான். அவளுக்கு வந்தனம் செலுத்தி விட்டு "டாடி, ஏன் ஊம் என்றிருக்கிறாய்" என்றான்.

"அம்மா என்னை விளையாடவிடமாட்டேன் என் கிறாள்" என்றான் டாட்.

"இப்போது அனுப்புவாள், பார். நீயும் நானும் கோட்டை கட்டி விளையாடலாமா, அதோ அந்த மரத்தை எடுத்துவா" என்றான் ஹிக்.

அவனுடன் சிறிதுநேரம் விளையாடிவிட்டு ஹிக் எழுந்தான். "இது நல்ல கோட்டை தம்பி, விளை யாடிக்கொண்டிரு. எனக்கு வேறு வேலை இருக்கிறது" என்றான்.

"விளையாடிக்கொண்டிரு, டாடி, துணிகளை உலரப் போட்டுவிட்டு நானும் வருகிறேன். இரண்டுபேரும் வெளியே போகலாம்" என்றாள் ஜூடி.

எழுந்து சென்று அவள் இரண்டு மரங்களைச் சேர்த்து கயிறைக் கட்டி, துணிகளை உலரப்போட் டாள். ஹிக்கின்ஸின் ஒடிசலான உருவமும், உல் லாசமான போக்கும், உற்சாகம் நிறைந்த உள்ளமும் அவளை வசீகரித்தன. வெடுக்வெடுக்கென்று அவன் பேசும் பேச்சும், கஷ்டத்தைப் பாராமல் உழைப் பதும், பிடில் வாசிப்பதில் இன்பம் காணும் உள்ளமும் அவளுக்கு ஆச்சரிய மூட்டின. அவன் எதற்குமே அஞ்சியதில்லை. கடுமையான உழைப்பு, நீண்ட தூரப் பிரயாணம், இருட்டு, வெளிச்சம், வெயில், பனி என்ற பேதமில்லாமல் வேலைசெய்தல் . . . . அவன் ஒரு விசித் திரப் பிறவி . . . .

துணிகளைக் காயப்போட்டுவிட்டுத் திரும்பும் போது, டாட் வெளியே ஓடிவிட்டதை ஜூடித் கவ னித்தாள். அவன் ஓடவேண்டும் என்று எண்ணவில்லை. பக்கத்திலிருந்த புல்தரையில் ஒரு தத்துக்கிளி வந்து

உட்கார்ந்தது. அதைப் பிடித்துவிடவேண்டும் என்று எண்ணினன் டாட். கையைக் குவித்துக்கொண்டு மெள்ள மெள்ள அதை நெருங்கி லபக்கென்று பாய்ந்த போது அது தத்திப்போய் வேறு இடத்தில் உட்கார்ந்தது.

மெல்ல மெல்ல அதை நெருங்கினன் டாட். கையைக் குவித்துக்கொண்டு பாய்ந்தபோது அது மறுபடியும் பறந்துவிட்டது. அலுத்துப்போய் அவன் நின்று நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். அம்மாவைக் காணவில்லை. சற்று எட்டலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளையும் காணவில்லை. அவர்களுடைய குரல்மட்டும் கேட்டது. தனிமை பயமூட்டவே தாயைத் தேடிக்கொண்டு அவன் கிளம்பினன்.

விர்ரென்று பறந்துசென்றது அந்தத் தத்துக்கிளி. அவன் நின்றுன். பறந்துசென்ற அந்த ஜந்து சற்றுத் தொலைவிலிருந்த கற்குவியலின்மீது போய் உட்கார்ந்தது. கண்களை உருட்டி விழித்து, தலையை அசைத்து அசைத்து நாற்புறமும் அது பார்த்துக்கொண்டிருந்தது வேடிக்கையாக இருந்தது. டாட் மெள்ள அதை நெருங்கினன். அது வாயைத் திறந்து சுவைத்தபோது, உள்ளே இருந்த நாக்குக்கூடத் தெரிந்தது. அதன் முகத்தைப் பார்த்தபோது ஒரு சிறு பையனின் சின்ன மனிதனின் முகம்போலத் தோன்றிற்று அவனுக்கு. ரம்பம்போன்ற வாய்! கொடூரமான கண்கள்!!

"மனிதனுடைய முகம்—அல்ல—பாம்பின் நாக்குப் போல அல்லவா நாக்கை நீட்டிற்று—பாம்புதான்! இப்படி எண்ணும்போது அவனுடைய மனம் அதிர்ச்சியடைந்தது. பாம்பு—பாம்பு!" பயத்தால் அவன் தன் வசமிழந்து நின்றுன்.

"டாடி! ஓ, டாடி!"—அன்னையின் குரல் கேட்டது.

பெயர்மன் சுற்றிப் பார்த்தான். படுக்கையில் அசைவு ஏற்பட்டது. ஜூடித் குனிந்து பையனைக் கவனித்தாள். "டாடி, தாகமாக இருக்கிறதா? குடிப் பதற்கு ஏதாவது வேண்டுமா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"டிக், டிக் எங்கே?" என்றான் இவான்ஸ். கூட்டத் துடன் கூட்டமாக டிக் நின்றுகொண்டிருந்தான். கீழே கிடந்த பையனையே அவன் பார்த்துக்கொண் டிருந்தான்.

"உடம்பு சில்லென்றிருக்கிறது, குளிருகிறதென்று அவன் தாயாரிடம் சொன்னான்" என்றான் பெயர்மன்.

கடிவாய் தடித்திருந்தது, பாதத்திலிருந்து அடித் தொடைவரையில் வீக்கம் கண்டு நீலம் பாரித்திருந் தது. இவான்ஸ் உற்றுப்பார்த்துவிட்டுத் திரும்பினான். அவனுடைய மனசு 'திக்' சென்றது. அவனுடைய பயத்தை ரெபெக்கா ஊகித்துக்கொண்டாள். "மிஸ்டர் பேர்டு, கடிவாயைக் குத்தி விஷத்தை எடுத்தார். வெடிமருந்தையும் உப்பையும் வைத்துத் தேய்த்தார். எங்களுக்குத் தெரிந்த வைத்தியம் எல்லாம் செய்து பார்த்தாகிவிட்டது" என்றாள் அவள்.

"நீ ஏதும் செய்யமுடியாதா, என் மகனைக் காப் பாற்றமாட்டாயா?" என்று கெஞ்சும் குரலில் கேட் டாள் ஜூடித். அவளுடைய குரல் மிகவும் சன்னமாக இருந்தது.

டிக் சம்மர்ஸின் மனம் நெகிழ்ந்துவிட்டது. அவன் என்ன செய்யமுடியும்? அவளைச் சமாதானம் செய்ய ஏதாவது பொய் சொல்லலாமென்றுகூட எண்ணினான். பிறகு, "கடிவாயிலிருந்து இரத்தத்தை உறிஞ்சித் துப் பினால் விஷம் இறங்குமே, யாராவது செய்தார்களா?" என்று கேட்டான்.

இல்லை என்று தலையசைத்தாள் அவள். கடமையிலிருந்து தவறிய குற்றவாளியைப்போல தலைதொங்க நின்றாள் அவள்.

டாட் மெதுவாக அசைந்தான் "அம்மா, வலிக்கிறது" என்றான்.

"வலிக்குமடா, என் கண்ணே! வலிக்கத்தான் வலிக்கும். தாகமாக இருக்கிறதா?" என்று கேட்டாள் ஜூடித். அவளுடைய முகபாவம் மாறவில்லை, என்றாலும் கண்ணில் நீர் மல்கி, கன்னத்தில் வழிந்தது.

டாட் பதில் சொல்லவில்லை, அசந்து படுத்துவிட்டான். சாவின் கை அவன்மீது பட்டுவிட்டதை இவான்ஸ் பார்த்துவிட்டான். டாடின் கண்கள் வெறித்தன. பொட்டு விழுந்தது; நாடி தளர்ந்தது. மேல்மூச்சு வாங்க ஆரம்பிததது.

"சும்மா நின்று வேடிக்கை பார்க்கவேண்டியது தானா?" என்று ஏங்கினான் சார்லஸ்.

"பயப்படாதே, சார்லஸ்" என்றான் இவான்ஸ் சமாதானப்படுத்தும் தோரணையில். பிறகு கூடாரத்துக்கு வெளியே சென்று "யாராவது கொஞ்சம் பாலை முறித்துக்கொண்டு வாருங்கள்" என்று அங்கே நின்று கொண்டிருந்த பெண்களைப் பார்த்துச் சொன்னான்.

மதபோதகர் வெதர்பி வாசலில் நின்றுகொண்டிருந்தார். "நான் ஏதாவது உதவி செய்யட்டுமா?" என்றார் இவான்ஸிடம்.

"தேவைதான், இருங்கள்" என்றான் இவான்ஸ். "டிக், கொஞ்சம் வாயேன்" என்று சொல்லி அவன் டிக்கை அழைத்துக்கொண்டு கூட்டத்தை விலக்கிக் கொண்டு சென்றான்.

"இனிமேல் ஒன்றும் செய்வதற்கில்லை, இவான்ஸ்" என்றான் டிக், இவான்ஸ் என்ன கேட்பான் என்பதை ஊகித்து.

"நமக்குத் தெரிந்த வைத்தியமெல்லாம் செய்தாகி விட்டது என்று ஜூடித்தை நம்பச்செய்யவேண்டும். ஆண்டவன் இச்சைப்படி நடப்பது இருக்கட்டும்" என்றான் இவான்ஸ்.

டிக் சிறிதுநேரம் யோசித்தான். "சரியான ஆள் அப்பா நீ, சூ ஜாதியார் ஒரு வேரை உபயோகிப்பார்கள். அது கிடைத்தாலும் இனிமேல் பிரயோஜனமில்லை. நான் போய்த் தேடுகிறேன்" என்றான் டிக்.

டிக் சம்மர்ஸை அனுப்பிவிட்டு இவான்ஸ் கூடாரத்துக்குள் நுழைந்தான். "மூலிகை மருந்து கொண்டுவர டிக் சென்றிருக்கிறான். சார்லஸ், இப்போதுகூட விஷயத்தை உறிஞ்சி எடுத்துவிடலாம் என்றுதான் அவன் சொல்கிறான்" என்றான் அவன்.

"சரி, அதுவும் செய்துவிடுவோம்" என்றான் சார்லஸ். கம்பள விரிப்பை மடித்துப் போட்டுக்கொண்டு பையனை மெதுவாகத் திருப்பினான்: கிழித்துப் போட்ட நாரைப்போல டாட் கிடந்தான். கடிபட்ட கால் கருநீலம் பாய்ந்து, வீங்கி பயங்காத்தோற்றமளித்தது.

"காலையில் அவன் விளையாட ஆசைப்பட்டான். நோயாளிக் குழந்தை என்று நான் கட்டுப்பாடு செய்தேன். . . ." என்று ஆரம்பித்தாள் ஜூடித் விம்மும் குரலில்.

வாய் நிரம்ப இரத்தத்தை உறிஞ்சித் துப்பினான் சார்லஸ். மீண்டும் குனிந்து கடிவாயில் வாய்வைத்து உறிஞ்சினான்.

"நானாவது அவனுடன் விளையாடியிருக்கலாம். என்னுடைய புத்தி இன்றைக்கு . . . ." என்று மறுபடியும் பேச ஆரம்பித்தாள் ஜூடித்.

"வீணாகக் குற்றஞ் சாட்டிக்கொள்ளாதே, ஜூடி, இப்படி எல்லாம் நடக்கப் போகிறதென்று உனக்குத் தெரியுமா, அலட்டிக்கொள்ளாதே" என்றாள் ரெபக்கா.

ஆத்திரம் பொங்க நிற்கும் ஜூடித்தைப் பார்த்து இவான்ஸ் திடுக்கிட்டான். வாய்விட்டு அழுது, அவள் மனசிலிருக்கும் பாரத்தை இறக்கி விட வேண்டும் என்றே அவன் எண்ணினான். இல்லாவிட்டாலும் அவளும் குமுறி, நெஞ்சம் வெடித்து . . . .

ஒரு கையில் சூடான பாலும், மற்றொரு கையில் காட்டுச் செடியின் வேரும் எடுத்துக்கொண்டு டிக் உள்ளே நுழைந்தான். வாயில் ஒரு துண்டு வேரைப் போட்டுக்கொண்டு நன்றாக மென்று கீழே துப்பினான். "சரி, நீ எழுந்திரு, சார்லஸ்" என்றான் பிறகு.

சார்லஸ் எழுந்துசென்று வாயைக் கொப்பளித்தான். நெஞ்சிலே நம்பிக்கை ஊற, ஆசை அடித்துக் கொள்ள, டிக் இட்ட வேலையைச் செய்ய அவன் காத்து நின்றான்.

ஜூடித் எடுத்துக்கொடுத்த கைக்குட்டையை டிக் பாலில் முக்கி எடுத்துக்கொண்டு பையனிடம் வந்தான். கம்பள விரிப்பைச் சரிசெய்து, கடித்த இடத்தில் மருந்து நிற்கும்படி காலைத்திருப்பிவிட்டான் சார்லஸ். வாயில் மீண்டும் வேரைப்போட்டுச் சுவைத்து கடிவாயில் துப்பினான் டிக். சூடான பாலில் நனைத்த கைக்குட்டையை கடிவாயின்மேல் போட்டான்.

டாட் அசையாமல் கிடந்தான். "நாம் அரிகான் மண்ணில் தலைசாய்க்கப்போகிறோம். இந்தப் பாவி இங்கேயே சாய்ந்துவிட்டானே" என்று அலறினாள் ஜூடித். அவளுடைய கண்களில் நீர் குபுகுபுவென்று பொங்கிற்று. விம்மி விம்மி அழலானாள். இவான்ஸ் இந்த மாறுதலைத்தான் வேண்டினான். ஜூடித்தை உற்றுப் பார்த்து விட்டு அவன் நெடுமூச்செறிந்தான்.

டாடின் கண்கள் செருகின. வாயிலிருந்து நுரை பிதுங்கிற்று. ஆண்டவனுடைய அழைப்பு வந்துவிட்டது என்பது தெளிவாகிவிட்டது.

டிக் சட்டென எழுந்தான். வாயிலிருந்த வேர்த் துண்டைத் துப்பிவிட்டு, "பிரயோஜனமில்லை" என்றான் வருத்தத்துடன். எட்டலில் மதபோதகர் வெதர்பி நிற்பதைப்பார்த்து அருகே அழைத்து, "பிரார்த்தியுங்கள்" என்றான் அமைதியாக. இந்தமாதிரிச் சந்தர்ப்பத்தில் ஆதரவுகாட்டவே ஆண்டவன் மதபோதகர்களை நியமித்தானே என்று தோன்றிற்று அவனுக்கு.

16. சவ அடக்கம்

அன்று விடியும்போதே சுளீரென்று வெயில் அடித்தது; உஷ்ணக்காற்று வீச ஆரம்பித்துவிட்டது. சூரியன் கிளம்பி உயருவதற்குள் உடம்பில் அனல் தாக்க ஆரம்பித்தது. இவான்ஸும் மற்றவர்களும் சவ அடக்கம் செய்யத்தயாரானார்கள். மதபோதகர் வெதர்பி பைபிளும் கையுமாக இருந்தார். அவருக்கு அருகில் டாட் பெயர்மனின் பூத உடல் கிடந்தது.

ஆண்டவனுடைய இச்சையையும் அவனுடைய லீலைகளையும் வெதர்பி எடுத்து சொல்லிக்கொண்டிருந்தார். ரெபெக்காவும், புரூவரின் மனைவியும் சடலத்தைக் குளிப்பாட்டி அலங்கரித்துக் கிடத்தினார்கள். இரவு முழுவதும் அவர்களிருவரும்தான் அந்தக் கூடாரத்தில் பிரேதத்துடனிருந்தார்கள். விம்மிக்கொண்டிருக்கும் ஜூடித்தைச் சமாதானம் செய்வார்கள். விக்கி விக்கி அழும் சார்லஸுக்கு ஆறுதல் கூறுவார்கள்.

ஏசுநாதரின் மொழிகளை வெதர்பி சொல்லிக்கொண்டிருந்தார்: "நீங்கள் சஞ்சலமடையாதீர்கள். பரம பிதாவிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும்

நம்பிக்கை கொள்ளுங்கள். என்னுடைய பரமண்டல பிதாவின் மாளிகையில் பல வாசஸ்தலங்கள் உண்டு...."

இவான்ஸ் திடுக்கிட்டான். "வாசஸ்தலங்கள்! மாளிகை! இந்தச் சிறுவனுக்கு அவை எதற்கு? அன்னையின் மடிதானே அவனுக்கு அரண்மனை! ஆண்டவனுடைய லீலைகளை அறிய முடியாது! அவருடைய இச்சை!"—இப்படித்தான் எண்ணிற்று அவன் மனம்.

இவான்ஸ் துக்கந்தாளாமல் சோர்ந்து போனான். இரவு முழுவதும் தூக்கமில்லாமல் கண்கள் கோவைப் பழம்போலச் சிவந்துகிடக்கும் ரெபெக்கா தைர்யத்துடன் பக்கத்திலிருப்பதைக்காண அவனுக்கு ஆச்சர்யமாகவே இருந்தது. அவளும் அழுது கண்ணீர் சிந்தியிருக்கிறாள். இந்தச் சாவு பல வருஷங்களுக்கு முன்பு தன் வீட்டில் நடந்ததொரு சம்பவத்தை இவான்ஸுக்கு நினைப்பூட்டியது. ப்ரௌனி பிறந்து பல வருஷங்களுக்குப் பிறகு ரெபெக்கா மீண்டும் தாய்மைப் பேறு அடைந்தாள். ஒரு வயதுச் சிறுவனாக இருக்கும்போதே அந்தக் குழந்தைக்கு ஆண்டவனின் அழைப்பு வந்துவிட்டது. அன்று ரெபெக்கா குமுறிக் குமுறி யழுதாள். பிறகு அவள் வாஞ்சை முழுவதும் ப்ரௌனியின்மீது சொறிந்தாள். அவனைச் சீராட்டினாள். தன்னைப்போலவே ரெபெக்காவும், இறந்துபோன தங்களுடைய குழந்தையை எண்ணித் துக்கப்படுவாளோ என்று நினைத்தான் இவான்ஸ்.

ப்ரௌனி மற்றொரு புறமாக நின்றுகொண்டிருந்தான். வாலிப முறுக்கேறி அவன் வாட்டசாட்டமாக இருந்தாலும் இவான்ஸுக்கு அவன் சின்னஞ்சிறு குழந்தைபோலத் தோன்றினான். அவனை அள்ளித் தழுவவேண்டும் போலத் தோன்றிற்று. மனசிலே குமிழியிடும் ஆசைகளையும் பாசத்தையும் அவன் எப்படி மகனிடம் சொல்லமுடியும்? சொன்னாலும் தான் அவனுக்குப் புரியுமா? சாவின் மோதலினால் எழும்

அலேகளை எப்படிச் சொல்லமுடியும்? மனத்திலே எழும் உணர்ச்சியை வெளிக்காட்ட முடியாமல் அவன் தவித்தான்.

சவப் பெட்டிக்கு அருகே முழங்காலிட்டு பெயர் மனும் ஜூடித்தும் பிரார்த்தனை செய்தார்கள். மற்றவர்கள் சற்று விலகி நின்ருர்கள். பிரார்த்தனை முடியுந் தருணத்தில் ஜூடித் குலுங்கக்குலுங்க அழுது விட்டாள். சவ வணக்கத்துக்குப் பிறகு—அவனை—தன்னுடைய அருமை மகனை—அவள் பார்க்கவே முடியாது.

"பொழுது சரிந்தது—அந்தி நெருங்கிற்று" என்ற பாட்டை எல்லோரும் பாடினர்கள். டிக், பாச், மாக் இவர்களுடன் இவான்ஸ் சவப் பெட்டியைத் தூக்கிச் சென்று குழியிலிறக்கினன். மதபோதகர் வெதர்பி பிடி மண்ணை எடுத்துக்கொண்டு 'மண்ணும் சாம்பலுமானுய்' என்ற சுவிசேஷத்தைச் சொல்லிச் சடங்கை முடித்தார்.

ஜூடித் விக்கி விக்கி அழுதாள். எல்லோரும் முகாமை நோக்கி நடந்தார்கள். இவான்ஸூம் டிக்கும் குழியில் மண்ணைத்தள்ளி மூடினர்கள். "இவான்ஸ் நீயும் போ, இந்தியர்களுடைய கண்ணில் இந்தச் சவக்குழி தெரியாமல் மறைத்துவிட்டு நான் வருகிறேன்" என்ருன் டிக்.

இவான்ஸ் முகாமை நெருங்கும்போது ப்ரௌனியைச் சந்தித்தான். "அப்பா, நான் கூடாரத்தை இழுத்து மடித்துவிட்டேன். வண்டிகளில் சாமான்களை ஏற்றி பிரயாண ஆயத்தம் செய்துவிட்டேன்" என்ருன் ப்ரௌனி.

"ஓ, அப்படியா?"

"நான் கால்நடைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டாம், அப்பா, முறை மாறிவிட்டது."

"நீ என்ன செய்யப்போகிறாய்?"

"அதோ அந்தப் பாறையில் மற்றவர்கள் தங்களுடைய பெயர்களைச் செதுக்கியிருக்கிறார்கள். என்னுடைய பெயரையும் பொறித்து வரப்போகிறேன்."

"எதற்காக? இதிலே என்ன உத்சாகம் உனக்கு?"

"அப்பா, போய்விட்டு வந்துவிடுகிறேன்" என்று கெஞ்சினான் ப்ரௌனி.

இவான்ஸைப் பார்க்காமல் தலைகுனிந்துகொண்டான் ப்ரௌனி. இவான்ஸுக்கு அவனுடைய ஆசையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. "இது என்ன ஆசை! பெயரைச் செதுக்கிவைப்பதில் என்ன லாபம்?" என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டான். சிறுவர்களுடைய உள்ளக் கிளர்ச்சியை வயது வந்தவர்கள் புரிந்துகொள்வது கடினம்தான். ஆவலுடன் அனுமதி கோரி நிற்கும் ப்ரௌனியை இவான்ஸ் கவனித்தான். "நீ என்ன சிறுபையனா, ப்ரௌனி! வயது வந்தவர்களைப்போல பொறுப்பும் வேலையும் ஏற்றுக்கொண்டிருக்கிறாய். அவசியம் என்று நினைத்தால் போ. சீக்கிரம் வந்துவிடு. உன்னைத் தனியே விட்டுச்செல்ல நான் விரும்பவில்லை" என்றான் இவான்ஸ்.

"ஒரே நிமிஷம், அப்பா, ஓடிவந்து விடுகிறேன். நீங்கள் புறப்படுவதற்குள்ளே வந்துவிடுவேன்."

"இந்தியர்களின் நடமாட்டம் இருக்கப்போகிறது எச்சரிக்கையாக இரு."

"சரி, அப்பா."

இவான்ஸ் சார்லஸின் கூடாரத்தை நோக்கிச் சென்றான். அது ஒன்றுதான் பிரிக்கப்படாமலிருந்தது. சார்லஸின் மாடுகள்தான் இங்குமங்கும் மேய்ந்துகொண்டிருந்தன. இவான்ஸ் உள்ளே நுழைந்தபோது கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு படுக்கையி

லமர்ந்து ஜூடித் விம்மிக்கொண்டிருந்தாள். அருகே பெயர்மன் சிலைபோல அசைவற்று நின்றுகொண்டிருந்தான்.

"சார்லஸ், நான் மாடுகளை இழுத்துப் பிணைக்கட்டுமா? நான் தயாராகிவிட்டேன். நாம் புறப்படவேண்டும். உதவி செய்யட்டுமா?" என்று கேட்டான் இவான்ஸ்.

"அதற்குள்ளாகவா, வேண்டாம், தயவு செய்யுங்கள்" என்று கதறினாள் ஜூடித். முகத்திலிருந்து கைகளை எடுத்துவிட்டு நீர்மல்க, அவள் சொன்னாள். "அவனை விட்டு எப்படிப் பிரிந்துபோவது? எங்களுடைய துயரத்தை நீங்கள் அறியவில்லையா? முடியாது! அவனை விட்டு நாங்கள் புறப்பட முடியாது" என்றாள் அவள்.

"அவன் இப்போது படுத்துக்கிடக்கும் தெரிகிறது இனிமேல் . . . . இவான்ஸ் . . . . அவனிருக்குமிடத்தை எப்படித் தேடுவேன்? . . . ." என்று குமுறினான் சார்லஸ்.

டிக் சந்தடியில்லாமல் உள்ளே நுழைந்தான். அவர்களுடைய வருத்தம் தோய்ந்த முகங்களைப் பார்க்க அவனுக்குச் சகிக்கவில்லை. "எப்போது வேண்டுமானாலும் அவனுடைய சடலமிருக்குமிடத்தை நான் உனக்கு அடையாளம் காட்டுவேன். அம்மா வருந்தாதே. ஆண்டவனுடைய இச்சையை நாம் மீற முடியாது" என்றான்.

17. ப்ரௌனிக்கு ஆபத்து

குதிரை மீதமர்ந்து, வண்டிகள் நகர்ந்து செல்வதை ப்ரௌனி கவனித்துக்கொண்டே யிருந்தான். கையை ஆட்டி ஆரவாரித்து அவர்களை வழியனுப்பி விட்டு அவன் பாறையை நோக்கிச் செல்லலானான். பாறையை நெருங்கியதும் குதிரையை ஒரு மரத்தில்

கட்டிவிட்டு, துப்பாக்கியையும் கீழே வைத்துவிட்டு, உளியும் சுத்தியும் எடுத்துக்கொண்டு பாறை மீதேறி ஞன். நெட்டுக்குத்தலாக இருக்கும் அந்தப் பாறை பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தாலும், ஏறுவதற் குச் சிரமமாக இல்லை. தொத்தித்தொத்தி அவன் ஏறிச் சென்ருன். உயரமான இடத்தில், பார்வையாக தன்னு டைய பெயரைச் செதுக்கவேண்டும் என்று அவனுக்கு ஆசை! முன்னே டிக் குதிரையில் சொல்வதும், சிறிது தூரத்துக்குப் பின்ஞல் வண்டிகள் அசைந்து செல்வ தும் தெரிந்தது. சற்றுத் தொலைவில், ஆஞல் வேறு திசையில் சில காட்டெருமைகள் மேய்ந்துகொண் டிருப்பதையும் அவன் கவனித்தான்.

உளியும் சுத்தியும் கையிலெடுத்துக்கொண்டபோது, நாய் குறைக்கும் சப்தம் கேட்கவே அவன் கீழே குனிந்து பார்த்தான். "ஹை ஹை, ராக், இதோ இங்கே இருக்கிறேன்—வா—"என்று குரல் கொடுத் தான் ப்ரௌனி. வாலையாட்டிக்கொண்டே அது மெள்ளமெள்ளச் சரிவிலேற ஆரம்பித்தது.

ப்ரௌனி மேலே மேலே சென்ருன். ஒரு குத்திட்ட இடம் அவனுக்குப் பிடித்தது. உளியும் சுத்தியும் எடுத்துக்கொண்டான். தன்னுடைய பெயர், மெர்ஸி யின் பெயர், வருஷம், மாதம், தேதி—இவைமட்டும் வெட்டிஞல் போதும். மெர்ஸி! அவளுடைய பெயரே மனசில் கிளுகிளுப்பூட்டியது.

மனம் அவளை எண்ணித் தாவிற்று! கல்நெஞ்சக் காரி! தன்னுடைய ஆசையை அடக்கிக்கொண்டு.... ஆசையும் பாசமும் உந்த அவளை அடையத் துடித்த போது அவள் சாகஸம் செய்து ஒதுங்கிவிட்டாளே! புருஷனும் மனைவியுமாக வாழ்வதுபோலக் கற்பனை எழுந்தது. ஒருநாள் அவள் அவனை முத்தமிட்டாள். அதிலேதான் எவ்வளவு ருசி! ஆனந்தம். அவளுடைய குரலில்தான் என்ன இனிமை! அன்பும் சிரிப்புமாக

அவள் "ப்ரௌனி, என்மீது நீ எவ்வளவு ஆசை வைத்திருக்கிறாய் என்று நான் அறிவேன். என்னிடம் உனக்கு அன்பு உண்டு ஆனால் அதைக் கேட்கக் கேட்க எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது தெரியுமா?" என்றாள் ....

ப்ரௌனி சிந்தனை தெளிந்தான். உளியின்மீது சுத்தியைத் தட்டி புள்ளிப்போட்டான். டக்-டக்-டக்-டக். மனத்திலே எண்ணுவது சுலபம், செயலாற்றுவதுதான் கடினம். உளியைப் பிடித்த விரல்கள் இரத்தம் கட்டிக் கன்னிப்போயின. சுத்தி பிடித்த கை வலியெடுத்தது.

குருவிகளை வேட்டையாடி விளையாடிக்கொண்டிருந்த ராக் அயர்ந்து வந்து படுத்தது. நாக்கில் நீர்சொட்ட அது இளைப்பாறிக்கொண்டிருந்தது. ப்ரௌனி மீண்டும் சுத்தியை எடுத்துக்கொண்டான். எழுத்துக்களைச் செதுக்கிவிட்டான். தேதியும் போட்டாகிவிட்டது. சுற்றிலும் கோடிட்டு முடிக்கவேண்டியதுதான் பாக்கி, இளைப்பாற எண்ணிச் சுத்தியைக் கீழே வைத்தான்.

சட்டென்று ராக் குதித்தெழுந்தது. காதுகளை நெறித்துக்கொண்டு நாற்புறமும் பார்த்தது, மூச்சிழுத்து முகர்ந்து பார்த்தது. நாயின் அமைதியற்ற நிலைமையை ப்ரௌனி கவனிக்கவேயில்லை. வேலையில் ஈடுபட்ட அவனுக்கு நேரம் சென்றதே தெரியவில்லை. அவன் எழுந்தபோது வெகுதூரத்தில் அவனுடைய கோஷ்டி செல்வது தெரிந்தது. இனம் தெரியாமல் புழுதிப்படலம் மறைக்க அவர்கள் செல்லுமிடத்தை மட்டும் அவனால் ஊகிக்க முடிந்தது. குதிரைமீது தாவி ஒரே ஓட்டமாக ஓடி அவர்களைப் பிடித்துவிட முடியும். மனதிலே விவரிக்க முடியாததொரு சூன்யம், தனிமை; எடுத்த காரியத்தை முடித்துவிட்டோம்

என்பதில் திருப்தி; பொறுப்புத் தீர்ந்தால் ஏற்பட்ட அலுப்பு!

ராக் நாற்புறமும் திரும்பிப் பார்த்தது. காற்றை முகர்ந்து தலையசைத்து உறுமிற்று. பிடரி மயிர் சிலிர்க்க அது சந்தேகத்துடன் சுற்றிச் சுற்றிப் பார்த்தது.

"என்ன செய்கிறது உனக்கு, ராக்? மிரட்டு கிறாயே!" என்று கொஞ்சினான் ப்ரௌனி.

கையிலிருந்த ஆயுதங்களைப் பையில் போட்டுக் கொண்டு விரல்களை நெறித்து விட்டுக்கொண்டான். தலையைக் குனிந்து, பூமியை முகர்ந்த ராக் மீண்டும் உறுமிற்று; சட்டென அதன் குரல் மாறிக் குரைத்தது. ராக் திரும்பி நின்று குரைப்பதைக் கண்டதும் ப்ரௌனி திரும்பிப் பார்த்தான். கீழே இந்தியர்கள் குதிரைமீது ஆரோகணித்து நின்றார்கள். அவர்களைப் பார்த்ததும், ராக் துள்ளிக் குதித்துக் குரைத்தது. தனிமை ஒருபுறம் வாட்ட, பயத்தினால் அவன் கல் லாய்ச் சமைந்து போனான்.

ஒரே தாவலில் அவன் மலைமீது ஏறி உயிர்தப்ப முயலலாம். ஆனால் ஆயுதங்களை ஆட்டிக் காட்டிக் கீழே இறங்கி வரும்படி, இந்தியர்கள் சைகை காட்டி னார்கள். அவர்களில் ஒருவன் வில்லை வளைத்து குறி பார்க்கலானான். அவன் தப்பி ஓடமுடியும் அல்லது முதுகில் அம்பு பாயக் காயப்பட்டு விழவும் கூடும். அல்லது ஒரே தாவாகக் கீழே நின்றுகொண்டிருந்த குதிரையின்மீது குதித்துத் தப்பி ஓடலாம். அப்படிக் குதிப்பதில் அபாயம்தான் அதிகமிருந்தது. இந்தியர் களிடம் சிக்கி உயிரை விடுவதைவிடத் தப்பி ஓட முயன்று காயம்பட்டுக் கொள்ளலாம். குதிரைமீது தாவ, அவன் குதித்தால், இசைபிசகாகக் கால் சுளுக்கிக்கொண்டோ எலும்பு முறிந்தோ கீழே

விழுந்துவிடக்கூடும். அல்லது சதை புரண்டு இரத்தக் காயம்பட்டுக் கீழே கிடக்க நேரிடும். எழுந்திருக்க அவன் முயல்வதற்குள் இந்தியர்கள் அவன்மீது பாய்ந்து பிடித்துக்கொண்டுவிடலாம். அவனால் எவ் விதமான தீர்மானத்துக்கும் வரமுடியவில்லை. "பின் னால் போ, ராக், ஒதுங்கிக்கொள்" என்று மட்டும் அவன் நாயை எச்சரிக்கை செய்தான்.

பயத்தை உதறிவிட்டு அவன் கீழே இறங்கலானன். நடுக்கத்தைச் சமாளித்துக்கொண்டு உறுதியுடன் அடி மேலடி வைத்து நகர்ந்தான். "ஹெல்லோ" என்று குரல் அவன் வாயிலிருந்து கிளம்பிற்று. இதற்குள் கீழே கிடந்த அவனுடைய துப்பாக்கியை ஒரு இந்தியன் பார்த்துவிடவே, ஓடிச்சென்று எடுத்துக் கொண்டான். அதைப் பார்த்த மற்றவர்கள் திடுக் கிட்டாலும், தைரியத்துடன் கீழே இறங்கிக்கொண் டிருக்கும் ப்ரௌனியை எதிர்பார்த்துக்கொண்டு அவ னுடைய குதிரையை நெருங்கி நின்றார்கள். ஆவலும் வெறியும் தெறித்த அத்தனை பேருடைய கண்களும் அவனைப் பார்த்தன.

அவர்களில் ஒருவன் ப்ரௌனியைச் சட்டெனக் கீழே இறங்கும்படிக் கத்தினன். மற்றவர்களும் கத்தி னார்கள். விற்களையும் ஈட்டிகளையும் தூக்கிப் பிடித்துக் காட்டிப் பயமுறுத்தினார்கள். ஆக்ரோஷத்துடன் அவர்கள் கூவிக்கொண்டு, அவனை வளைத்து பிடிப்பதற் காக அணிவகுத்து நின்றார்கள். இதன் நடுவே ஒருவன் ப்ரௌனியின் குதிரை மீதிருந்த சேணத்தைக் கழட்டிக் கொண்டான். தப்பிக்க முயன்றால், அவர்களுடைய அம்புகளுக்கு இரையாகவேண்டும் என்று தோன்றவே, வேறு வழியின்றி, ஆனல் துணிச்சலுடன் கீழே இறங்கலானன். நெருங்க நெருங்க, அவர்கள் உற்றுப் பார்த்தார்கள். ஆயுதங்களைத் தூக்கி அவனைத் தாக்கத் தயாரானார்கள்.

"இருங்கள், இருங்கள், நான் உங்களுடைய நண்பன்" என்று கத்தினான் ப்ரௌனி. கம்பீரமான குரலில் அவன் பேசலானான். தலையிலிருந்த தொப்பியைக் கையிலெடுத்துக்கொண்டான். மிகவும் துணிச்சல்காரனைப்போல அவன் கீழே இறங்கி வந்தான். அவர்களுடைய கூச்சலை அமுக்கிக்கொண்டு ராக்கின் குரைப்புச் சப்தம் எழுந்தது. ப்ரௌனி திருப்பிப் பார்த்தபோது, இந்தியர்களுடைய வேட்டை நாய்களுடன் உரண்டைக் கொடுத்துக்கொண்டிருந்தது. அந்த நாய்களோ ராக்கின்மீது பாய்ந்துவிடவே, ராக்கும் ஆக்ரோஷத்துடன் பாய்ந்து பாய்ந்து அவற்றுடன் கட்டிப் புரண்டு சண்டையிட்டது. பிடரி மயிர் சிலிர்த்து, உடம்பு முழுவதும் இரத்த காயமேற்பட்டுச் சிவந்தது. ஒரு வீரனைப்போலப் போராடிக் கொண்டிருந்த நாய் உயிர் தப்ப ஓடவுமில்லை, உதவி கோரித் தயங்கவும் இல்லை. ரண களத்திலே உயிரைத் திருணமாக மதித்து வீராவேசத்துடன் போராடும் வீரனைப்போலவே அது சண்டையிட்டது. எதிரிகளின் கையோங்கிற்று. தேகம் முழுவதும், கடிபட்டு இரத்த விளாறுகிவிட்டது. அது இறந்துவிடக்கூடும் என்றே ப்ரௌனி எண்ணினான். பையிலிருந்த கத்தி கனத்து, உடம்புடன் உராயவே சட்டென அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. கையில் கத்தியை எடுத்துக்கொண்டு, ஓவெனக்கூவிக்கொண்டே இந்தியர்களுடைய நடுவே புகுந்து அவர்களுடைய நாய்களின் தலையில் கத்தியினால் ஓங்கி ஓங்கி யடித்தான். நாய்கள் குறைத்துக்கெண்டே ராக்கை விட்டுவிட்டு, அவன்மீது பாய்ந்தன; கால்களைப் பிராண்டின; ஆடுசதையைக் கடித்து இழுத்தன. உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு ராக்கும், ப்ரௌனிக்கு உதவியாக நாய்களின்மீது பாய்ந்தது. சுழற்றிச் சுழற்றிச் கத்தியினால் நாய்களைத் தாக்கினான் அவன். அடி தாங்காமல் அவை ஊளையிட்டுக்கொண்டு ஓடின. கீழே குனிந்து,

ப்ரௌனி ராக்கைத் தடவிக்கொடுத்தான். அவன் பயந்ததுபோல அது மரண காயமடைந்துவிடவில்லை.

இந்தியர்கள் வாய்விட்டு இரைந்து பேசினார்கள். அவனைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அவனுடைய தீரத்தைப் பாராட்டிப் பேசிக்கொண்டதுபோலவே தோன்றியது. கணநேரத்துக்குள் அவர்களில் ஒருவன் ப்ரௌனிமீது பாய்ந்து கையிலிருந்த சுத்தியைப் பறித்துக்கொண்டான். வேறு இருவர், ஈட்டிகளை நீட்டிப் பிடித்துக்கொண்டு இருபுறமும் வந்து நின்றார்கள். மற்றவர்களோ அவனைச் சுட்டிக் காட்டிப் பேசினாலும், ஆத்திரமடங்கி அமைதியாகச் சம்பாஷித்தார்கள். ப்ரௌனியின் துப்பாக்கியை எடுத்துக்கொண்ட இந்தியனோ, அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அவனுடைய முகத்தில் தெறித்த வெறியும் வெறுப்பும் கண்டு ப்ரௌனி நடுங்கினான். அவர்களுடைய முகத்திலே குரோதமிருந்தது; குரலிலே ஆத்திரம் தொனித்தது. அவர்களுடைய பேச்சு ப்ரௌனிக்கு விளங்கவில்லை என்றாலும் தன்னை விரோதியாகவே கருதுகிறார்கள் என்பது மட்டும் தெரிந்துகொண்டான். சிறு அசைவு ஏற்பட்டாலும், அவர்கள் எச்சரிக்கையடைந்து, தாக்கி விடக்கூடும் என்பதை ஊகித்த ப்ரௌனி, பயத்தை உதறிவிட்டுக் கம்பீரமாக நின்றான்.

அவர்களில் சிலர், ஆத்திரமும் கோபமும் கொண்டு கத்திக்கொண்டேயிருந்தார்கள். கண்களில் சினம் தெறிக்கத் துடித்துக்கொண்டிருக்கும் அவர்களுக்கு ஒரு கிழ இந்தியன் சமாதானம் கூறிக்கொண்டிருந்தான். அவனுடைய பேச்சை ஏற்றுக்கொள்ளாமல் துடித்தாலும், அத்துமீறி ப்ரௌனியின்மீது பாய எவருமே துணியவில்லை.

ஆனால் எவ்வளவு நேரந்தான் அந்தத் துடிப்பை அனுபவித்துக்கொண்டிருக்க முடியும்? கருவிக்கொண்டு

உயிர் குடிக்கக் காத்திருக்கும் வெறியர்களைப் பார்த்துக் கொண்டே நிற்கமுடியும்? பயத்தை அடக்கிக்கொண்டு, அவர்களைப் பார்த்துக்கொண்டோ, அவர்களுடைய கூச்சலைக் கேட்டுக்கொண்டோ இருக்க ப்ரௌனியினால் முடியவில்லை. பொறுமை இழந்துவிட்ட அவனுக்கு ஜீவ மரண போராட்டத்தில் இறங்கிவிடலாமே என்று தான் தோன்றிற்று. மணிக்கணக்காக அவர்கள் கத்திக் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதுபோலவும், நாட் கணக்காக—மாதக் கணக்காக தான் அங்கு காத்து நிற்பதுபோலவும் அவனுக்குத் தோன்றிற்று.

சூரியன் தலைசாய ஆரம்பித்தது. தொலைவில் சென்றுகொண்டிருக்கும் கோஷ்டியிலுள்ள பெற்றோர் கள் தன்னை நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருப் பார்களே என்று எண்ணும்போது ப்ரௌனிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. ப்ரௌனியின் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும்போதுதான் அந்த ஆச்சரியம் நடந்தது. கூப்பாடு போட்டுக் கொண்டிருந்த இந்தியர்கள் பேச்சடங்கி நின்றார்கள். அருகில் குதிரைமீது டிக் சம்மர்ஸ் வந்துகொண்டிருந் தான். தன்னுடைய தீனமான நிலைக்கிரங்கி, பிரார்த் தனைக்குச் செவி சாய்த்து, ஆபத்திலிருந்து மீட்க டிக் சம்மர்ஸை ஆண்டவன் அனுப்பினார் என்றே ப்ரௌனி எண்ணினான்.

அவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்துக்குச் சுமார் இருபது அடி தூரத்தில் டிக் குதிரையை நிறுத்திக்கொண்டு சுங்கானை எடுத்துப் புகையிலையை அடைத்துக்கொண்டான். அங்கிருந்த ஒவ்வொரு இந்தி யனையும் அவன் ஒருமுறை சுற்றிப் பார்த்துக்கொண்டு, மிகவும் நிதானமாக கைகளை அசைத்துச் சாடை காட்டிப் பேசலானான். இந்தியர்களைப்போல அவ னுடைய குரல் தடித்து எழும்பியதை ப்ரௌனி ஆச்சர்யத்துடன் கவனித்தான். "தம்பி, நான் மந்திரம்

போட்டுவிட்டேன், வா" என்று டிக் கூறியபோது அவனுடைய ஆச்சர்யம் எல்லை மீறிவிட்டது.

பருந்துப் பார்வையுள்ள வயது முதிர்ந்த இந்தியன் டிக்சம்மர்ஸுக்குப் பதில் சொன்னான். துப்பாக்கியை வைத்துக்கொண்டிருந்த வாலிபனோ, அதை உபயோகிப்பதற்காகத் துடித்துக்கொண்டிருந்தான். டிக் மீண்டும் கையை ஆட்டிச் சாடை செய்து பேசிக் கொண்டே தூரத்தில் செல்லும் கோஷ்டியைச் சுட்டிக் காட்டினான், கிழ இந்தியனும் அவனும் சிறிது நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களோ அமைதியற்று நின்றார்கள். டிக் சம்மர்ஸின் பேச்சில் அவர்களுக்கு நம்பிக்கை விழவில்லைபோலும். இதன் நடுவே ப்ரௌனி மெல்ல நழுவி டிக் சம்மர்ஸின் அருகே வந்துவிட்டான்.

சிறிதுநேரம் மௌனம் நிலவியது. டிக் சம்மர்ஸ் விளையாட்டாக, இடையிலிருந்த கைத்துப்பாக்கியைக் கையிலெடுத்துக்கொண்டு சுழற்றினான். இந்தியர்கள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். பாறையைச் சார்ந்த புதரில் குருவிக்கூட்டம் அடைந்து கிரீச்சிட்டது: அலட்சியமாக டிக் குறி வைத்தான். டுமீல்! குருவிகளிருந்த இடத்தில் பஞ்சுபோல இறகுகள் பறந்தன. அத்தனையும் செத்து வீழ்ந்தன. இந்தியர்கள் திடுக்கிட்டு ஒருவரை ஒருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்துக்கொண்டார்கள். டிக் அவர்களிடம் ஏதோ சொன்னான். பிறகு "ப்ரௌனி, ஏறு குதிரை மீது, நல்லபடியாக எல்லாமாயிற்று" என்றான்.

"என்னுடைய துப்பாக்கியும் சேணமும் எடுத்துக் கொண்டுவிட்டார்களே" என்றான் ப்ரௌனி.

"போகட்டும், நீ உயிர் தப்பிவிட்டாயே! உயிருக்குப் பதிலாக அவர்கள் அவற்றை எடுத்துக்கொள்ளட்டுமே!" என்றான் டிக்.

ப்ரௌனி குதிரையை அவிழ்த்து அதன் முதுகில் தாவி ஏறினன். இந்தியர்கள் அவனைத் தடுக்கவில்லை.

டிக்கும் ப்ரௌனியும் முன்னே செல்ல, அவர்களைத் தொடர்ந்து கிழவனும், மற்றவர்களும் வந்தார்கள்.

"இந்த இந்தியர்கள் சூ வகுப்பைச் சேர்ந்தவர்கள். பக்கத்தில் எங்கோ முகாமிட்டிருக்கிறார்கள். ஒளிந்திருந்து நம்மைத் தொடர்ந்துவிட்டார்கள்" என்றான் டிக்.

"டிக்....?" மேலே பேசமுடியாமல் ப்ரௌனி தயங்கினன்.

"சொல், தம்பி, அவர்களுக்கு நம்முடைய பேச்சுப் புரியாது."

"என்னைக் காப்பாற்றியதற்கு கடமைப்பட்டுள்ளேன்" என்றான் ப்ரௌனி நாத் தழுதழுக்க.

"பிரமாதம், போ" என்றான் டிக் அலட்சியமாக.

"நான் கோழையாகிவிட்டேன், டிக், உன்னிடம் சொல்வதற்கு நான் வெட்கப்படவில்லை. விலவிலத்துப் போய் திகைத்து நின்றேன்."

டிக் அவனை நெருங்கித் தட்டிக்கொடுத்தான். "இது எல்லாம் சகஜம். திடீர்த் தாக்குதல் ஏற்பட்டால் யாருமே திகைத்துத்தான் போவார்கள்" என்றான்.

"நீ எப்படிச் சமாளித்தாய், இவர்களை?"

"அதுவா" என்று சிரித்தான் டிக். "முதலில் இவர்களை வெள்ளை ராணுவத்தை—அதாவது கர்னல் கிர்னியின் படையை—பார்த்தீர்களா என்று கேட்டேன். நாங்களும் அவர்களைச் சேர்ந்தவர்கள்தான். மேற்கே இருக்கும் பெரிய குளத்துக்கு—சமுத்திரக் கரைக்குச்—செல்கிறோம். உங்களுடைய எதிரிகளைத் தாக்கிகொன்று உங்களுக்கு உதவிசெய்கிறோம். நண்

பர்கள் என்று உங்களை அழைக்கிறேன். முகாமுக்கு வந்தால், முகத்தில் பூசிக்கொள்ள அரிதாரமும் அணிந்துகொள்ள பாசியும் மணியும், குடிப்பதற்குச் சாராயமும் தருகிறேன் என்றேன். அவர்கள் சம்மதித்துப் பின்தொடர்கிறார்கள்."

18. பாலை நிலம்

வளைந்து வளைந்து செல்லும் நதியின் இருகரைகளிலும் புஷ்பங்கள் பூத்துக் குலுங்கின. திராக்ஷைக் கொடிகள் அரும்பு கட்டி அங்குமிங்கும் அலங்கரித்தன. காட்டுக் கோழிகளும் பறவைகளும் புதர்களில் அடைந்து கிரீச்சிட்டுக்கொண்டிருந்தன. பீடபூமியான அந்தப் பகுதியில் இரவில் பனி கொட்டும் குளிரும் பகலில் வறண்ட காற்றும் கடுமையாக வெயிலும் இருந்தது. பீடபூமிப் பிரதேசத்துக்கப்பால் கிரீன் பகுதியை அடைந்து ஒரு கணவாய் வழியாக மலைகளைக் கடந்துவிட்டால் அரிகான் பிரதேசத்தின் ஆரம்பம் தென்பட்டுவிடும். ஆனால் அந்தப் பகுதியை அடைவதற்கும் அவர்கள் நூற்றுக்கணக்கான மைல்களையும் இடையேயுள்ள காடுகளையும், பாலைநிலத்தையும் கடந்தாகவேண்டும். கிரீன் பகுதியையடைய பாலைநிலத்தின் வழியே செல்லும் குறுக்குப் பாதையும், காட்டுவழியேயுள்ள பாட்டையும் இருந்தது. பட்டணவாசமும், சமவெளிகளில் வளர்ந்து பழகியவர்களுமான தன்னுடைய கோஷ்டியாருக்குப் பாலைநிலப் பகுதியிலுள்ள கஷ்டங்களை ஏற்றுப் பிரயாணம் செய்ய முடியுமா என்ற சந்தேகம் டிக் சம்மர்ஸுக்கு இருந்தது. குடிக்கத் தண்ணீர்கூடக் கிடைக்காத அந்த வழியில் நாற்பது மைல்தூரம் எப்படிச் செல்வது என்றுதான் அவன் சிந்தித்தான். ஆனாலும் சுற்று வழியாகச்சென்று நாட்களை வீணாக்கவும் அவன் விரும்பவில்லை. கஷ்ட நஷ்டங்களைத் தாங்கும் ஆற்றல்

அவர்களுக்கு உண்டு. ஆனால் மனிதனோ மிருகமோ நாக்கை நனைத்துக்கொள்ளக்கூட துளித் தண்ணீர் கிடைக்காத இடத்தில் அவர்கள் எப்படிச் செல்வார்கள்?. . . .

டிக்கின் திகைப்பைக் கண்டு இவான்ஸ் நிர்வாக சபையைக் கூப்பிட்டான். "நம்மால் அவ்வளவு கடினமான பிரயாணம் செய்ய முடியுமா என்றுதான் தயங்குகிறேன். சுகமாகப் பாலைநிலத்தைக் கடந்து விடுவது அதிருஷ்டம்தான்" என்றான் டிக், வழியிலுள்ள இடையூறுகளை விவரித்த பிறகு.

"கஷ்டத்தை எதிர்த்துப் போவதில் என்ன லாபம்?" என்று கேட்டான் மாக்.

"குறைந்தபட்சம் இரண்டு நாள் பிரயாணமாவது மிச்சப்படும் என்று நினைக்கிறேன். . . ."

"மிகவும் கடுமையான வழி என்று சொல்கிறாய்? இதுவரையில் நாம் வந்த பாதையைவிடவா கடினம்?" என்று கேட்டான் இவான்ஸ்.

"ஆமாம், மிகவும் சிரமமான பயணம்தான்."

"மலைகளைக் கடக்கும்போது கடினமான சோதனைகளைச் சமாளிக்கவேண்டும் என்று சொன்னாயே?"

"ஆமாம், ஆனால் இந்தக் குறுக்குவழியில் தண்ணீர் கூடக் கிடையாதே. போர்ட் ஹால் தாண்டிவிட்டால் வழி நடை மிகவும் கடினமாகத்தானிருக்கும்."

"சரிதான், இனிமேல் கடினமான பாதைதான் என்றால், இப்போதே நாம் கஷ்டங்களை எதிர்த்துப் போராடத் துவங்கிவிடுவோம்."

ஆகவே அவர்கள் குறுக்குவழியே போக நிச்சயித்தார்கள். மகத்தான கஷ்டங்களைச் சமாளித்து வெற்றி பெற உறுதிகொண்டார்கள். பாலைப் பிரதேசத்துக்கு முன்னேயிருந்த புதர்வெளியே செல்லும்போதே அங்

கங்கு பசுமை தீய்ந்து செடி கொடிகளிருப்பதையும் கள்ளியும் முள்மரங்கள் நிற்பதையும் கண்டார்கள். வாளி, தொட்டி, கெட்டில் என்று கையிலிருக்கும் ஒவ்வொரு பாத்திரத்திலும் நீர் நிரப்பிக்கொண்டு அவர்கள் நாற்பது மைல் நீளமுள்ள வரண்ட நிலப் பரப்பைக் கடக்க ஆயத்தமானார்கள். காலை வெயிலே கடுமையாக இருந்ததால், இரவில் பிரயாணம் செய்து பகலில் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென நிச்சயித்து, வெயிலடங்கிய பிறகு மாலை நான்கு மணிக்கு கூடாரம் பெயர்ந்து புறப்பட்டார்கள். புல்லும் வெளியும் மாறி, மணல்வெளி ஆரம்பமாயிற்று. திட்டுத் திட்டாக மரங்களும் புதரும் காணப்பட்டன. இரவின் மங்கிய ஒளியில், திசையறிந்து, வழிகாட்டிச் செல்ல முடியுமா என்று டிக் சம்மர்ஸ் திகைத்தாலும், முன் வைத்த காலைப் பின்வாங்காது துணிச்சலுடன் சென்றான். ஏரியும், குளமும் வரண்டு உப்புப் படர்ந்திருக்கும் இடங்களையும், கற்குவியல்களையும், மணற் காடுகளையும் தாண்டிச் சென்றார்கள்.

வானம் வெளுத்துச் சூரியோதயமானபோது அவர்கள் பிரயாணத்தை நிறுத்தினார்கள். தொட்டிகளிலிருந்த தண்ணீரை மிகவும் சிக்கனமாகப் பங்கிட்டு கோவேறு கழுதைகளுக்கும் மாடுகளுக்கும் காட்டிவிட்டு, மேய்வதற்காக விரட்டினார்கள். பதப்படுத்திய இறைச்சியையும் ரொட்டியையும் எல்லோரும் பகிர்ந்து சாப்பிட்டுவிட்டு, மீண்டும் வண்டிகளைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். கடுமையான வெயிலிலும் கூட, சிரமம்பாராமல் தொடர்ந்து பிரயாணம் செய்து அந்தப் பாலைப் பிரதேசத்தைக் கடந்துவிடவேண்டும் என்பது டிக் சம்மர்ஸின் திட்டம். தண்ணீரில்லாமல் தவித்துத் துடிப்பதைவிட சூரிய வெப்பத்தைத் தாங்கிக்கொண்டு நகர்வது சுலபம் என்றே அவன் எண்ணினான். ஆயுளிலேயே அனுபவிக்காத வெப்ப

மும், கஷ்டமும் அடைந்து அவன் நீண்ட வழிநடை சென்றான்.

"விரட்டுங்கள், வேகமாக வண்டிகளைத் துரத்துங்கள்! உஷ்ணம் தாங்காமல் சுருண்டு விழுந்தாலும் பரவாயில்லை. பாலை நிலத்தைக் கடந்து பசுமை காணவேண்டும் உறுதியில் முன்னேறுங்கள்! அல்லது தீய்ந்து இங்கே செத்துமடியுங்கள்" என்று டிக் கத்தினான். அசந்து நிற்பவர்களை உத்சாக மூட்டினான். இங்கு மங்கும் திரும்பாமல் ஒரே மூச்சில், ஒரே குறியுடன் அவன் வழிகாட்டிக்கொண்டே முன்னே சென்றான்.

வெயிலின் கொடூரம் தாங்காமல் மக்பி கால்தடுமாறினான். தாடிவளர்ந்த அவனுடைய முகத்தில், மண்ணும் மணலும் ஒட்டிக்கொண்டு பயங்கரத் தோற்றமளித்தது. வெயர்வை ஆறுகப் பெருக அவன் மற்றவர்களுடன் சரியாக நடக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் மூச்சைப் பிடித்துக்கொண்டு நடந்தான். ஒவ்வொரு முகத்திலும், மணலும், தூசியும் வியர்வையும்! வியர்வை பொங்கி ஆறுபோல வழிந்து, முகத்தில் கோடிட்டது. மெர்ஸி நடைதளர்ந்து மயங்கினாள்.

"வண்டிக்குள் ஏறிக்கொள், பெண்ணே, சூடு தாளாமல் சுருண்டு விழுந்துவிடுவாய்" என்றான் டிக். நடுநடுவே அவன் கோஷ்டியின் நடுவே புகுந்து உத்சாக மூட்டிக்கொண்டேயிருந்தான். மணலில் நடக்கமுடியாமல் தலைசாய்த்து ஒரு மாடு விழுந்தது. கண்களைச் செருகிக்கொண்டு கிடக்கும் அந்த மாட்டைக் கிளப்புவது சுலபமாக இல்லை. "தாமதம் செய்துகொண்டிருக்கவேண்டாம்! அந்த மாட்டைக் குற்றுயிராய் விட்டுச் செல்லாதீர்கள். கழுகுகளும் காகங்களும் வட்டமிடுகின்றன. அடித்துக் கொன்றுவிடுங்கள். நிற்காமல் வண்டியை விரட்டுங்கள். கிரீன்பகுதி வருமட்டும் மூச்சைப் பிடித்துக்கொண்டு நடவுங்கள்" என்று ஆணையிட்டான் டிக்.

பெயர்மன் மயங்கி விழுந்தான். ஜுடித் துக்கத்துடன் அழுதாள். டார்டியும் போடும் அனல் காற்றுத் தாங்காது அயர்ந்தார்கள். உதடுகள் வெடித்து, கன்னங்கள் உஷ்ணம் தாங்காமல் கொப்பளித்தன! மண்ணும் மணலும் தொண்டையில் புகுந்து கரகரத்தது.

"தார்க்குச்சி போட்டு மாடுகளை விரட்டுங்கள்! தலைதொங்கி நடைதளரும் மாடுகளை அடித்து விரட்டுங்கள்! அவை ஹுங்காரமிடுகின்றது. 'நாவரண்டு அம்மா என்று கதறிக்கொண்டு செல்கின்றன.' தண்ணீர் வேண்டுமெனத் தவித்துக்கொண்டிருக்கும் மாடுகளையும் நிற்காமல் ஓட்டிச் செல்லுங்கள். அரிகான் போய் விடவேண்டும் என்ற பிடிவாதம் உங்களுடைய மனசில் ஓங்கி நிற்கட்டும்! ஓடுங்கள்! ஓடுங்கள்! அண்ணு, வெதர்பி! எங்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள். நடந்துகொண்டே ஆண்டவனை வேண்டுங்கள்! இந்தப் பகுதியைக் கடந்து செல்லும் ஆற்றலை நமக்கு அருளுமாறு ஆண்டவனைக் கேளுங்கள்!"—டிக் சம்மர்ஸின் குரல்தான் இது.

அவனுடைய ஆணைக்கு எல்லாரும் அடிபணிந்தார்கள். உத்சாகமூட்டும் வார்த்தைகளைக் கேட்டுத் தெம்பு பெற்றூர்கள். ரெபெக்கா தைர்யத்துடன் அடியெடுத்து வைத்து நடந்து வந்தாள். முகத்தில் வழியும் வியர்வையைத் துடைத்துக்கொண்டு இவான்ஸ் வண்டிக்கு வண்டி சென்று ஒவ்வொருவருக்கும் உத்சாகமூட்டினுன். பாச், மாக், புரூவர், ஷீல்ட்ஸ், டாட்லாக் எல்லோருமே ஆவேசத்துடன் நடந்தார்கள். பெண்களும் அவர்களுடன் போட்டியிட்டுக்கொண்டு சென்றூர்கள். புழுதிப்படலத்தைக் கிளப்பிக்கொண்டு மாடுகளும் குதிரைகளும் ஓடின. துக்கம் நெஞ்சிலூற, கண்களில் நீர் பொங்கினுலும், மற்றவர்களுக்குச் சரியாக ஜுடித் நடந்து சென்றுள். அனல்காற்றும் தூசியும் முகத்தில் வீசும்போது கண்களை மூடிக்கொண்டா

லும், இடுங்கிய கண்களை அவ்வப்போது திறந்து கொண்டே மாக்கின் மனைவி மற்றவர்களைத் தொடர்ந்து நடந்தாள். உடலும் சோர்ந்து உள்ளமும் சோர்ந்து விட்டாலும் டார்டி மூச்சைப்பிடித்துக்கொண்டு பின் சென்றான்.

"ஏசுவே, இவர்கள் தைர்யசாலிகள்! உடல்தளர்ந்து அடிதடுமாறும்போதுகூட உறுதியுடன் லட்சியத்தை நாட நடக்கிறார்கள்! இவர்களுடைய உறுதியை நான் போற்றுகிறேன். இவர்கள் சுகமாக இந்த வழிகடந்து செல்ல அருளுவாய்" என்று பிரார்த்தித்தான் டிக்.

அரிகான் பிரதேசத்தின் வளமான மண்ணையும், செழிப்பையும் அவர்கள் நினைத்துக்கொண்டு நடந்தார்கள். பண்ணையும் வீடும் பெற்றுச் சுகமாக வாழலாம் என்ற ஆசை உந்த வேகமாகச் சென்றார்கள். ஏராளமான தான்யம், கன்றுகாலிகள், மீன், பழம், காய்கறி இவை கிடைக்கும் பகுதிக்குச் செல்கிறோம் என்ற நினைப்பு நெஞ்சில் ஊற ஊற தலைவெடிக்கும் வெயிலும் அடிகொதிக்கும் மணலும் அவர்களுக்குப் பொருட்டாகத் தோன்றவில்லை.

மாடுகள் களைத்தன, வண்டிகள் நின்றன. தள்ளுங்கள். ஆர்க்காலில் கைகொடுத்துத் தள்ளுங்கள். பின்புறம் முட்டுக் கொடுத்துத் தள்ளுங்கள்! வியர்வையும் தளர்வும் பொருட்படுத்தாமல் தள்ளுங்கள்!

லிஜி! நீதான் பலாட்டியன்! மாடுபோல உழைக்கும் ஆற்றலுள்ளவன்! பிறர் வருந்தப்பாராத மனமுள்ளவன்! மூச்சுப்பிடித்துக்கொண்டு உந்தித்தள்ளு. மணலில் புதைந்த சக்கரங்களைத் தோள்கொடுத்துத் தூக்கிவிடு. உருளட்டும்! ஓடட்டும்! இதோ—வந்துவிட்டோம்! பாலையின் பெரும்பகுதி கடந்துவிட்டோம். பசுமையை நெருங்கிவிட்டோம்!

மாக், டாட்லாக்! வாருங்கள்—ஒரு கை கொடுத்து நில்லுங்கள்! பாச், ஷீல்ட்ஸ்! ஓடிவாருங்கள். மாடுகளை

அதட்டி ஓட்டுங்கள். பின்புறமாக நின்று கொஞ்சம் வண்டிகளைத் தள்ளுங்கள்!

விஜி! ஊம்—கொஞ்சம்தான், தளராதே! அதோ அதோ பசுமை தெரிகிறது. அடிவானத்தில் கருமை கட்டுகிறதே அங்குதான் காடுகள் ஆரம்பமாகின்றன! நதி ஓடுகிறது! ஆண்டவன்மீது பாரத்தைப்போட்டு வேலை செய்!

தூரத்தில் பசுமை தெரிந்தது. நாவரண்டு நிற்கும் மனிதனுக்கும் மாடுகளுக்கும் தண்ணீர் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. பசிதீர மாடுகளுக்கும் புல் கிடைக்கும்; மனிதனுக்கு இளைப்பாற நிழல் கிடைக்கும். அங்கு செல்வதற்கு ஏறக்குறைய ஆறு மைல்களாவது நடக்கவேண்டும்.

ஒரு மணற்குன்று, பரந்த மணல்வெளி, மீண்டும் ஒரு மேடு, அவ்வளவுதான்! அதற்கப்பால் பசுமை! ஆண்களும் பெண்களும் ஆரவாரித்தார்கள்! இடையே கிடக்கும் நீண்ட பாதையைக் கடந்து செல்லவேண்டுமே என்ற திகைப்பை மறந்து குதித்தார்கள். பசுமை கண்ணுக்குத் தென்பட்டதும் அவர்களுடைய சோர்வு மறைந்துவிட்டது. குடிவெறியில் சாகஸத்துடன் வேலை செய்கிறவர்களைப்போல வெறிமூண்டு அவர்கள் வேகமாக நடக்கலானார்கள். அடிசுடும் மணலைக் கருதாது, பூட்டவிழ்த்துவிட்டு மாடுகளை இளைப்பாற விட்டார்கள்.

சிறிதுநேரம்தான் என்றாலும் அந்த ஓய்வு எல்லோருக்குமே அவசியமாகத்தானிருந்தது. மீண்டும் வண்டிகளைப் பூட்டிக்கொண்டு கிளம்பும்போது இவான்ஸிடம் டிக் சொன்னான்: "கோவேறு கழுதைகளைப் பூட்டியிருக்கும் வண்டிகளை மிகவும் ஜாக்கிரதையாக ஓட்டிச் செல்லவேண்டும். இவான்ஸ், தண்ணீரின் மோப்பம் பிடித்துவிட்டால், கோவேறு கழுதைகள் ஒரே மூச்சில் ஓட ஆரம்பித்துவிடும். வண்டிகளில் பூட்டியிருப்பதைக்

கூட லட்சியம் செய்யாமல் அவை மூர்க்கம்கொண்டு தண்ணீரைத் தேடிக்கொண்டு ஓடக்கூடும். வண்டிகள் நொறுங்கி ஆபத்துச் சம்பவித்துவிடும். நாம் முன்னேற முன்னேற சிறிது எச்சரிக்கையுடன் செல்லவேண்டும்."

"என்ன செய்யவேண்டும், சொல்லேன்" என்று கேட்டான் இவான்ஸ்.

"நாம் கோஷ்டியைப் பிரித்துவிட்டால்கூடப் பரவாயில்லை. கழுதைகளை வண்டிகளிலிருந்து அவிழ்த்துவிடு. மாட்டுவண்டிகள் முன்னே செல்லட்டும். அவை போய்ச் சேர்ந்த பிறகு, திரும்பிவந்து மற்ற வண்டிகளை இழுத்துச் செல்லலாம். உனக்கு எச்சரிக்கை செய்துவிட்டேன். கொஞ்சதூரம் சென்ற பிறகுகூட கழுதைகளை அவிழ்த்துவிடலாம்" என்றான் டிக்.

"உனக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். டிக், உன்னுடைய யோசனையும் உதவியுமில்லாவிட்டால் நான் திறமைவாய்ந்த தலைவன் என்று பெயர் வாங்கிவிட முடியாது" என்றான் நன்றிததும்ப, இவான்ஸ்.

"பரவாயில்லை, இது என்ன உபசாரம்."

"சரி, நான் மாடுகளையும் குதிரைகளையும் பிணையல் தறித்து முன்னால் விரட்டிவிடுகிறேன். ஒன்றுடன் ஒன்று முட்டி மோதிக்கொள்ளாமல் தண்ணீரை நோக்கி ஓட வசதியாக இருக்கும்."

மணற்குன்று ஏறி இறங்கும்போது, தூரத்தில் நதி வளைந்து செல்வது கோடிட்டதுபோலத் தெரிந்தது. வெப்பத்தின் வேகம் குறைந்தது. டிக் எதிர்பார்த்தது போல, மிருகங்கள் ஜில்லென்று காற்று வீசும்போது வெறிகொண்டு, தண்ணீரை நோக்கி நாற்கால்ப் பாய்ச்சலில் கிளம்பின.

அவர்கள் எல்லோரும் சுகமே வந்துவிட்டார்கள்! குறுக்கு வழியின் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு

அதைக் கடந்துவிட்டார்கள்! நாவரண்டு ஒன்றிரண்டு மாடுகள் இறந்ததுதான் நஷ்டம். வேறு எவ்விதச் சேதமுமின்றி அவர்கள் வந்து சேர்ந்துவிட்டார்கள். அயர்வும் தளர்வுமடைந்தவர்கள் அதி சீக்கிரம் தேறி விட்டார்கள். சுருண்டு விழுந்த பெயர்மன்கூடத் தெளிந்து நடக்கலானான்.

எதிரே 'பேர்' நதி ஓடிக்கொண்டிருந்தது. அந்த நதிக்கு காடி நதி என்றே பெயர் வைத்துவிட்டார்கள். ஆம்! அந்தப் பகுதியில் காடிகள் பயமின்றிச் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. சிவப்புக்காடி, கருநிறக்காடி, பனிப்பிரதேசத்தில் வாழும் பெரிய வெள்ளைக்காடி, எறும்புப் புற்றிலும், தேன்கூடுகளிலும் புகுந்து வேட்டையாடும் சிறு காடிகள், மீன்பிடித்துத் தின்ன, நீரருகிலே சஞ்சரிக்கும் காடி—எங்கு பார்த்தாலும் காடிகள்தான்!

வண்டிகளுக்கு முன்னே மக்பி சென்றுகொண்டிருந்தான். இருபுறங்களிலும் புதர்களடர்ந்து நிற்க, வர்ணஜாலம் காட்டிப் புஷ்பங்கள் பூத்துக் குலுங்க கம்பீரமாக இடையே செல்லும் நதியைக் கண்டு அவன் பிரமித்துப் போனான். தாடியைத் தடவிக்கொண்டே "என்ன, அற்புதம்!" என்று சொன்னான் வாய்விட்டு.

டிக் சம்மர்ஸ் வண்டிகளை நதியின் அருகில் கொண்டு வருவதில் கருத்தாக இருந்தான். மணல் மேட்டிலிருந்து சரிவிலிறங்கும்போது மிகவும் நிதானமாக வண்டிகளை ஓட்டிவரச் செய்தான். மணலில் சிக்கித் தவிக்கும் மாடுகளை உத்சாகப்படுத்தி, சக்கரங்களில் கைகொடுத்துத் தள்ளினான்.

தண்ணீரின் அருகே எல்லோரும் வந்து சேர்ந்த போது அவர்களுடைய சந்தோஷம் கரைபுரண்டது. கரை ஓரமாக முழங்காலை மறைத்துவிடும்படி புல் வளர்ந்திருந்தது. காட்டுப் புஷ்பங்கள் மணம் வீசி

மயக்கின. பெண்களும் குழந்தைகளும் குதித்தோடினார்கள். காலால் மண்ணைக் கீறிப் பார்த்த ஆண்களோ, "என்ன செழிப்பு! வளம் நிறைந்த இங்கேயே தங்கி விடலாமா?" என்று யோசிக்கலானார்கள்.

"ஆற்றில் ஏராளமான மீன்களிருக்கின்றன. வாளையும், கெண்டையும் பெரிதுபெரிதாக" என்றான் டிக்.

"இங்கேயே இவ்வளவு வளம் காணப்படுகிறதே! இப்போதுதான் அரிகானைப்பற்றி நம்பிக்கை ஊறுகிறது" என்றான் இவான்ஸ் அருகே வந்த டிக்கிடம்.

"நல்ல இடம், இல்லையா?"

"ஆமாம், டிக், ஏர் பிடித்து என் கை காய்த்துப் போய்விட்டது, போதுமான வருமானம் கிடைக்காததால், விவசாயத்திலே அலுப்புத்தட்டிவிட்டது. இந்த இடத்தைப் பார்த்தபோது என்னுடைய கை பரபரக்கிறது. ஏர்பிடித்து ஓட்டவேண்டும் என்ற ஆசை நெஞ்சில் ஊறுகிறது" என்றான் இவான்ஸ்.

19. துரோகம்

மெர்ஸி மக்பி கூடாரத்துக்குச் சற்று அப்பால் தனியாக உட்கார்ந்திருந்தாள். மனம் சிந்தனை வயப்பட்டாலும் அவ்வப்போது திடுக்கிட்டு அவள் நாற்புறமும் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தாள். உஷ் உஷ் என்று காற்று வீசிக்கொண்டிருந்தது. பாறைகளின்மீது ஓடிக்கொண்டிருக்கும் நதியின் சலசலப்பு காதுக்கு இனிமையாக இருந்தது. அடுப்புகளைத் தூண்டிவிட்டு, சில பெண்கள் சமையல் செய்துகொண்டிருந்தார்கள். வேறு சிலர் இங்குமங்கும் அலைந்துகொண்டிருந்தார்கள். வானத்தில் நட்சத்திரக் கூட்டத்தின் நடுவே சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

மெர்ஸிக்கு உலகமே இருண்டுவிட்டதுபோலத் தோன்றிற்று. ஓடுகிற நதி அங்கேயே முடிந்துவிட்டது

போலக் காட்சியளித்தது. வானம், பூமி, எல்லாமே சுழன்று முடிவைத் தொட்டுவிட்டதுபோலவே இருந்தது. அவளுக்கு! வாழ்க்கையும் சூன்யமாக .... ஆம்! அவளுக்கு வாழ்க்கையில் வெறுப்புத் தட்டிவிட்டது. முடிவு காண உள்ளம் விழைந்தது. அமைதி காணத் துடித்தது. அமைதி! எப்படி, சாவிலா?

மெள்ளத் தலைகுனிந்து தன்னைத்தானே பார்த்துக் கொண்டாள். விம்மும் மார்பகம், அதன்கீழே வளையம் போல மடிப்பு விழுந்து எழும்பும் வயிறு! .... வயிற்றைப் பார்க்கும்போதே, நெஞ்சாழத்திலிருந்து நீண்ட பெருமூச்சு வந்தது ....

"இருக்காது .... அப்படி இருக்கமுடியாது .... இருக்கக்கூடாது .... என் வயிறு அப்படி மோசம் செய்துவிடுமா" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். இன்பமும் துன்பமும் கலந்ததொரு உணர்ச்சி வசப்பட்டுக்கிடந்தாள். தானே, இரண்டு விதமாக, இன்பமும் இளமையும் உள்ள மெர்ஸியாக வும், துயரமும் மெலிவும் கொண்ட மெர்ஸியாகவும், இரு உருவங்களிலிருப்பதுபோலத் தோன்றிற்று. தன்னுடைய நிலையைப்பற்றி அவள் எத்தனையோ தடவை சிந்தித்துப்பார்த்துவிட்டாள், தனிமையாக கூடாரத்திலிருக்கும்போது, தன்னந்தனியே வெளியே செல்லும் வாய்ப்புக் கிடைக்கும்போது, அவள் சிந்தித்து சிந்தித்து எவ்வித முடிவும் காணமல் தவித்தாள். "தன்னுடைய வாழ்வு! .... இல்லை .... இல்லை .... எவ்விதமான தவறும் இல்லை .... ஆபத்துமில்லை ...." அவளுடைய வயிறு புரட்டிற்று. உள்ளே யிருக்கும் ஜீவ பிண்டம் உருண்டது ....

பயத்தால் நெஞ்சு நடுங்கிற்று. பாதாதிகேசம் உடம்பே நடுங்கிற்று. உதறிக்கொண்டு எழுந்தாள். மீண்டும் சிந்தனை, "அம்மாவுக்குத் தெரிந்தால் என்ன சொல்லுவாள்? அழுது வருந்தித் தவிப்பாளே! 'ஆண்

களிடமிருந்து ஒதுங்கி இரு என்று அடித்துக்கொண்டேனே, கேட்டாயா? எல்லாம் தெரிந்த மூஞ்சூறு காடிப்பானையில் விழுந்ததாம். உனக்குத் தெரியும் என்று திரிந்தாயே! அனுபவி, பலனையும் அனுபவி' என்று சாபமிடப்போகிறான். அப்பா என்ன சொல்வார்? அவருக்கு என்னுடைய உள்ளத்தை எப்படிச் சொல்வேன்? மாக் எனக்கிழைத்த தீங்கிற்குப் பரிகாரமாக ஒரு குதிரை அல்லது மாட்டை வாங்கிக்கொண்டு சமரஸம் செய்துவிடுவார். என்னுடைய உள்ளம், உணர்ச்சி, உடல் இவற்றின் பெறுமானம் ஒரு குதிரை தானா . . . .?"

"மாக்கிடம் நான் நிலைமையைச் சொல்லட்டுமா? அவனுடைய நெஞ்சில் தலைபுதைத்துக்கொண்டு அழுது கண்ணீர் விட்டுக் கதறட்டுமா? அவன்தான் என்னைப் பார்ப்பதற்கே கூச்சப்பட்டு ஒதுங்குகிறானே! லாராமியில் கழித்த இரவுக்குப்பின்பு—அந்த இன்ப நாளுக்குப் பிறகு—ஒரே ஒரு நாள் அவனை அணைத்து நின்று பேசியது! . . . . அவனைப் பார்க்காமலா இருக்கிறேன்? அவனுடைய பார்வையும் புன்சிரிப்பும் மனசிலே கிளர்ச்சியூட்டுகின்றன. ஆனால் அவனைத் தனிமையில் சந்தித்து மனத்திலிருப்பதைக் கொட்டித் தீர்க்கச் சந்தர்ப்பம்தான் கிடைக்கவில்லை. அன்றையச் சம்பவத்தை அவன் மறந்துவிட்டானோ? அவனுடைய பார்வையில்—கண்களில்—அன்பும் ஆதரவும் காணவில்லையே! என் மானம்—ரகசியம் எல்லாம் அவனிடம் . . . . அதைக் காப்பாற்றுவானோ? . . . ."

அவளுடைய வயிறு புரட்டிற்று. வாந்தி எடுக்க வேண்டும்போலத் தோன்றிற்று. "ஆண்டவனே, இது என்ன? நான் சந்தேகப்படுவது உண்மையாகிவிடுமா? நான் . . . . என் வயிற்றில் சிசு! . . . . வேண்டாம் . . . . வேண்டாம் ஆண்டவனே, என்னைக் காப்பாற்றும். நான் செய்த தவறுக்கு மனங்கசிந்து அழுகிறேன் . . . .

மாக்கிடம் சொல்லி, அவனையும் மன்னிப்புக்கோரச் சொல்கிறேன் .... அவமானச் சின்னம் வளரவேண்டாம் .... ஆண்டவனே! உமது காலில் விழுந்து இறைஞ்சுகிறேன் .... என்னுடைய பயம் ஆதாரமற்றுப் போய்விடட்டும்." கண்களில் நீர் மல்க, வாய்விட்டு அவள் அழுதாள்.

"மெர்ஸி, நீயா, ஏன் அழுகிறாய்?"

மெர்ஸி திடுக்கிட்டுத் திரும்பினாள். எதிரே ப்ரௌனி நின்றுகொண்டிருந்தான். அவளுக்கு எழுந்திருக்க வேண்டும்போலிருந்தது. ஆனால் கண்கள் இருண்டன. மனசை அடக்கிப் பிடித்துக்கொண்டாள். அழுகையை நிறுத்த முயன்றாள். "இந்தத் தண்ணீரைக் குடித்து உடம்புக்கு ஏற்கவில்லை" என்றாள் சட்டென்று.

ஏதோ சொல்லவேண்டும்போலிருந்தது; சொல்லி விட்டாள். ஆனால் அவளுடைய உள்ளக் கிளர்ச்சியை ப்ரௌனி உணரவில்லை. அவனுக்குத்தான் அவளைப் பார்த்ததே சந்தோஷமாக இருக்கிறதே!

"அப்படியா, மெர்ஸி, நான் பக்கத்தில் உட்காரட்டுமா? யாருடனாவது பேசவேண்டும்போல் இருந்தது, கிளம்பினேன்" என்றான் ப்ரௌனி.

"நான்தானா அகப்பட்டேன், எத்தனையோ பேர் இருக்கிறார்களே?" என்றாள் மெர்ஸி அலுப்புடன். மனசிலிருந்த பயம் விலகிவிட்டாலும் பாரம் அகலவில்லை.

"உன்னோடு பேசுவதில் எனக்குத் தனி ஆனந்தம் இருக்கத்தான் இருக்கிறது. மெர்ஸி, வாயேன், சற்று நேரம் உலாவலாம்?" என்றான் ப்ரௌனி.

"வேலைதான் கெடும். நல்ல அழகு?" என்றாள் அவள். வெளியே செல்லும் மனபாவமோ, அவனுடன் பேசவேண்டும் என்ற ஆசையோ அவளுக்கு இல்லை.

"அழகா, நீதான் அழகு, உன்னைப் பார்ப்பதே அழகு?" என்றான் உணர்ச்சி ததும்ப. அவனுடைய வெள்ளை உள்ளத்திலிருந்து வெளிவந்த வார்த்தைகள் அம்புகளாக மாறி மெர்ஸியைத் தாக்கின. அவனோ உத்சாகத்துடன் காணப்பட்டான். முகம் சிவக்க, வாய்மலர, கண்கள் பிரகாசிக்க, உள்ளத் துடிப்புடன் அவன் பேசிய பேச்சை மெர்ஸி ரசிக்கவில்லை. அவளை அணு அணுவாகத் தாக்கின.

"என்னைப்பற்றி உனக்குத் தெரியாது, ப்ரௌனி. நீ போயேன்" என்றாள் அவள் கெஞ்சும் குரலில்.

"தெரியும், மெர்ஸி, நீ இப்போது கிளம்புகிறாயா மாட்டாயா?" அவனுடைய குழைவும் கொஞ்சலும் அவளைத் தகர்த்துவிட்டன. மறுக்கமுடியவில்லை, உடன் செல்லவும் முடியவில்லை: அவள் தவித்தாள்.

ப்ரௌனியின் அருகே அவனுடைய நாய் ராக், வந்து நின்றது. அந்த நாயின் பார்வையில் கனியும் அன்பும் விசுவாசமும், அவனுடைய கண்களில் காண்பதுபோன்ற பிரமை எழுந்தது. "வெகுநேரம் தாமதிக்கமுடியாது ப்ரௌனி" என்று எழுந்தாள்.

மாக் அவளைக் கைபிடித்துத் தூக்கி நிறுத்துவான். ஆனால் ப்ரௌனி! அவன் உதவி செய்யவில்லை. அவளைப் பார்த்துக்கொண்டே அசடுததும்ப தள்ளி நின்றான்.

"அவனுடைய அன்பும் அணைப்பும் .... சே .... என்ன நினைப்பு" என்று தன்னைத்தானே கடிந்துகொண்டாள் அவள். எழுந்து நடக்கும்போது, அவனருகில், அவனுடைய ஸ்பரிசம் படும்படி நடந்து செல்வதை மெர்ஸி கவனித்தாள்.

"ப்ரௌனி என்னை நேசிக்கிறான். ஆனால் அவன் இப்போதுள்ள என் நிலைமையைத் தெரிந்தால் .... தெரிந்தால் என்ன செய்வான்? பிறகும் என்னை நேசிப்

பானு? அவனுக்குச் சொல்லட்டுமா? அவன் என்ன செய்வான்?" இப்படித்தான் நினைத்தாள் அவள்.

ஆற்றோரமாக, நீரோட்டத்தின் போக்கில் அவர்கள் கூடாரங்களைத் தாண்டிச் சென்றார்கள்.

"மெர்ஸி, அரிகான் சென்றபிறகு நீ என்ன செய்வாய்? எதிர்காலத்தைப்பற்றி நீ ஏதாவது சிந்தித்ததுண்டா?" என்று கேட்டான் ப்ரௌனி.

"இல்லை" என்றாள் அவள் அலட்சியமாக.

"நான் என்ன என்னவோ கனவு காண்கிறேன், மெர்ஸி, நிரம்ப உழைக்கவேண்டும், என்னுடையது என்று ஒரு பண்ணை வேண்டும். வேட்டையாடிக் கொண்டும் மீன் பிடித்துக்கொண்டும் உல்லாசமாகப் பொழுதுபோக்கவேண்டும். இன்னும் எத்தனை எத்தனையோ எண்ணங்கள் .... உன்னைப்பற்றிக்கூட ஆசைகள் .... உன்னிடம் சொல்ல .... அவன் தயங்கினான். நாணத்தால் முகம் சிவந்தது."

அவனுடைய ஆசைகளின் பிரதிபலிப்பை அவள் நெஞ்சில் கண்டாள். ஆனாலும், அவனுடைய ஆசைகளைத் தொடர்ந்து—மனசைத் திறந்து காட்ட அவளால் முடியவில்லை. அவனுடைய தயக்கத்தைச் சிதறடித்து .... முடியாது, முடியாது என்று தலையசைத்துக்கொண்டாள். மனசை அடக்கிக்கொண்டாள். அவனைக் கணவனாக அடைய அவளுக்கு உரிமை கிடையாது. மனத்தில் எழும் ஆசைகளைச் சொல்லக்கூட உரிமை கிடையாது. மனசிலே பயம் படம் விரித்தாட ஆரம்பித்தது. அவளுக்கு எங்கோ ஓடிவிடவேண்டும் போலத் தோன்றிற்று.

அவன் பேசினான், உத்சாகத்துடன் பேசினான்; அவளுடைய மனப் போராட்டத்தை உணராமலே பேசிக்கொண்டே போனான். "எனக்குப் பதினெட்டு வயதுதான், மெர்ஸி, என்னைக் காட்டிலும் சிறுவனாக

இருக்கும்போதே அப்பா கல்யாணம் செய்துகொண் டார். நான் சொல்கிறது உனக்கு விளங்குகிறதா, என்னைப்போலவே நீயும் விரும்பினுல், வேறு தடை களைப்பற்றிக் கவலையில்லை. அரிகானிலிருந்தாலும் சரி வேறு எங்கு சென்ருலும் சரி."

"ப்ரௌனி, உன்னுடைய உள்ளம் எனக்குத் தெரியும். நன்றி தெரிவிப்பதைத் தவிர .... மேலே பேச முடியாமல் அவள் விம்ம ஆரம்பித்தாள். முகத் தைக் கைகளால் மறைத்துக்கொண்டு அழலானுள். அடங்கிக்கிடந்த உணர்ச்சி சர்ப்பம்போலக் கிளம் பிற்று. தோள்மீது அவனுடைய கைகள் விழுவதை மெர்ஸி உணர்ந்தாள்."

"மெர்ஸி, நான் உன்னை விரும்புகிறேன் என்றதற்கா அழுகிருய்? நான் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புவது உனக்கு வருத்தம் தருமானுல் ...."

அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள். "உன்னை முட்டாளாக்க நான் விரும்பவில்லை, ப்ரௌனி" என்ருள் முகத்தைத் திருப்பிக்கொண்டே.

"என்னை முட்டாளாக்கவேண்டாம், மெர்ஸி, ஆனுல் உன் மனம் .... அது எனக்குத் தெரியவேண்டும்." அவ னுடையமோவாயைத்தொட்டு முகத்தைத் தூக்கினுன் ப்ரௌனி. அவனுடைய அன்பு சொரியும் கண்களைப் பார்க்க முடியாமல் மெர்ஸி கண்களை மூடிக்கொண் டாள். சட்டென அவன் குனிந்து அவளுடைய கன்னத்திலும் அதரத்திலும் முத்தங்களைப் பொழிந் தான். தாபங்கொண்ட முத்தங்கள் அல்ல! ஹிருதயத் துடிப்புடன் எழுந்த அன்பின் முத்திரையல்ல! அன் பும் ஆதுரமும் நிறைந்த முத்தம்! பரிவும் பாசமும் காட்டும் முத்தம்!

"மெர்ஸி, நீ எப்போதுமே துயரமே வடிவமாக இருக்கிருயே! உன் கண்களில் சோகத்தின் பிரதிபலிப்

புத்தானே காணப்படுகிறது. உன் மனக்கஷ்டத்தைச் சொல்லேன். என்னால் முடிந்தால் தீர்க்க முயலு கிறேன்" என்று பரிவுடன் கேட்டான் அவன்.

"ப்ரௌனி, நீ நல்லவன், உன்னுடைய இதயம் தூய்மையானது. என்ன நடந்தாலும், எப்பேற்பட்ட செய்தியைக் கேட்டாலும், என்னிடமுள்ள அன்பு மாறாது என்று தெரியும். ஆனால் நான் .... நான் ...." என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் மெர்ஸி. துக்கம் பொங்க, அழுகையை அடக்கிக்கொண்டே அவள் தவிக்கலானாள். பீரிட்டுக்கொண்டுவரும் அழுகையை அடக்க முடியவில்லை. இருவரும் கூடாரத்தை நோக்கி நடந்தார்கள்.

* * *

கொஞ்சம் கொஞ்சமாக ஆரவாரமடங்கி, முகாமில் நிசப்தமேற்பட்டபோது மெர்ஸி, ஆவலே உருவாக இருளில் நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய நெஞ்சு படபடத்தது. ஜிவ் ஜிவ்வென்று வீசும் காற்றின் ஓலமும் தூரத்தில் ஊளையிடும் ஓநாயின் குரலும் இருளில் மிதந்துவந்து இதயத்தைத் தொடும்போது, பயம்தான் மிஞ்சிற்று. ஓநாயின் குரல் கேட்டு, பயந்து நடுங்கும் கன்று, தாயின் பாதுகாப்பை நாடி "அம்மா" என்று குரலெடுத்தது. மாக்கை எதிர் பார்த்து இருளிலே ஊடுருவிப்பார்த்து நின்றாள் மெர்ஸி. அவளுக்குப் பயமாகத்தானிருந்தது. அன்பும், அணைப்பும் பாதுகாப்பும் தேவையாக இருந்தது.

அருகே ஆளரவம் கேட்டது. "அன்ப, மாக்" என்றாள். அடியோசை கேட்டு அவனைக் கண்டுபிடித்து விடும் அளவுக்கு அவனை நெருங்கிவிட்டாள் மெர்ஸி. "மாக், இதோ மெர்ஸி நிற்கிறேன்" என்றாள் மெல்லிய குரலில்.

அவன் மௌனமாக நெருங்கினான். "என்னை அணைத்துக்கொள் .... அன்பே, நான் தாயாகப் போகி

றேன், உன்னுடைய அன்பின் சின்னம்.... ஐயோ பயமாக இருக்கிறதே, மற்றவர்கள் என்ன சொல்வார்கள்! அன்ப, உன் அணைப்பில் அகிலத்தை எதிர்த்து நிற்பேன்—இப்படி எல்லாம் சொல்ல அவள் துடித்தாள். வாயிலிருந்து வார்த்தை பிரியவில்லை.

"மாக், நாம் சற்று தூரம் போகலாமா, நான்.... நான்.... உன்னுடன் பேசவேண்டும்" நாத்தடுமாற அவள் பேசினாள்.

அவளுடைய நடுங்கும் குரலை மாக் கவனித்தானோ என்னமோ, பதில் பேசாமல் அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டு நடக்கலானான். முகாமை விட்டு வெகுதூரம் சென்றபிறகு "உன்னைப் பார்க்காமலிருப்பதே நல்லது என்று தோன்றிற்று, மௌர்ஸி" என்றான் மாக்.

"மாக், எனக்குப் பயமாக இருக்கிறது."

"பயமா; எதற்காக?" என்று கேட்டான் மாக். அவனுடைய குரலில் தெறித்த வெறுப்பும் கண்டிப்பும் அவளை உலுக்கிவிட்டது.

"உனக்குத் தெரியாதா?" என்றாள் அவள் தீனக் குரலில்.

"மௌர்ஸி, வீணாகப் பிராந்திகொண்டு.... உடம்பை அலட்டிக்கொள்ளாதே" என்றான் அவன் அலட்சியமாக.

"உன்னிடம் சொல்லவேண்டும் என்றுதான் இருந்தேன், நடந்தது நல்லதோ கெட்டதோ இருக்கட்டும். நான் என்ன செய்வேன்? என்னுடைய நிலைமையை உனக்கு உணர்த்த விரும்பினேன், உன் மனசு புண்பட.... இடையூறு செய்ய...."

"புண்பட என்ன செய்துவிட்டாய்? என்ன இடையூறு?" என்று மறித்துக் கேட்டான் மாக்.

"உன்னிடமிருந்து ஒளிக்க விரும்பவில்லை."

“நான் வருந்துகிறேன், மெர்ஸி—எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை.”

“ஒன்றுமே தோன்றவில்லையா?”

“மெர்ஸி நீ கல்யாணத்தைப்பற்றி நினைப்பதுண்டோ?”

“யாரைக் கல்யாணம் செய்துகொள்ள?”

“யாரையாவது.”

“உன் பேச்சு விளங்கவில்லையே, மாக்.”

“எனக்கும்தான்.”

அவனிடம் பேசிப் பலனில்லை என்பது அவளுக்கு விளங்கிவிட்டது. “இந்தக் கயவனுடன் என்ன பேச்சு உனக்கு” என்று உள்ளுணர்வு கூறிற்று.

“நான் வருந்துகிறேன், மெர்ஸி, இதைத்தவிர, வேறு எதுமே கூற நான் விரும்பவில்லை” என்று எடுப்பான குரலில், இரக்கமற்றுக் கூறினான் அவன்.

அதன்பிறகு அவன் அங்கு நிற்கவில்லை. அவளைத் தொடவுமில்லை. ஆறுதல் கூறி அணைந்து முத்தமிட்டுச் செல்வான் என்றுதான் அவள் நினைத்தாள். அவளுடைய மனம் ஏங்கிற்று, ஆதரவு நாடித் துடித்தது. அவன் சென்றுவிட்டான். தன்னை மறந்து அவள் நின்றாள்.

தன்னந்தனியே அவள் நின்றாள். தன்னிலையடைந்து அவள் சுற்றிப் பார்த்தபோது, உச்சி முகட்டில் சந்திரன் பவனி வந்துகொண்டிருந்தது. தண்ணீரின் சலசலப்பு! காற்றின் ஓலம்! ஓநாயின் ஊளையிடும் குரல்!

இயற்கைக் கூக்குரல் காதில் ஒலித்தது! இதயத்தில் ஒலித்தது. அவளுக்கு ஆதரவுகாட்ட ஒரே ஒரு ஜீவன் உண்டு. “ஆம், ப்ரௌனி!” அந்தப் பெயர் நினைவில் சிக்கியது.

அவன் என்னை நேசிக்கிறான். அன்புகாட்டி அணைக்கத் துடிக்கிறான். ஆனால் அவனை எப்படி ஏற்பது? அவனுக்குத் துரோகம் செய்துவிட்டேனே! அவனை . . . அவனுடைய வெள்ளை உள்ளத்தை . . . . சிந்தனை மேலே நாடாமல் தடைப்பட்டது..

* * *

மெர்ஸியைப் பிரிந்த கர்டிஸ் மாக் கூடாரத்துக்குச் செல்லவில்லை. அவனுடைய மனம் கொந்தளித்தது. கூடாரத்துக்குச் சென்று மனைவியுடன் சல்லாபிக்கும் நிலையில் அவன் இல்லை. அவள் தூங்குமட்டும் வெளியே தங்க நிச்சயித்தான். முகாமைவிட்டு அவன் விலகிச் சென்றான். மனம் போனபடி, கால் போனபடி, இருட்டில் நடந்தான். குளிர் காற்றும், காட்டு மலர்களின் நறுமணமும் அவனுடைய மன நோய்க்கு மாற்றாக இல்லை. எங்கு சென்றாலும் மெர்ஸியின் தோற்றமும், அவள் சூல் கொண்டிருக்கிறாள் என்ற எண்ணமும் எதிரே நின்றன. அவன் என்ன செய்யமுடியும்? விதி விட்ட வழி என்று சமாதானம் செய்துகொண்டான். காத்திருந்து பார்ப்போம் என்று எண்ணிக்கொண்டான். ஆனால் துயரத்தை—அவமானத்தை—சுமந்து கொண்டிருப்பது அவன் அல்லவே!

அமாந்தாவும் அவனும் சௌஜன்யமாக வாழ ஆரம்பித்து வெகுகாலமாகவில்லை. அதற்குள் ஒரு சோதனை குறுக்கிட்டு விட்டது. மெர்ஸிக்கும் அவனுக்கும் உள்ள உறவு வெளிப்பட்டுவிட்டால் . . . . அமாந்தாவைப்பற்றி . . . . அவளுடைய சீற்றத்தைப்பற்றி அவனால் சிந்தித்துப் பார்க்கவே முடியவில்லை. மெர்ஸியைப்பற்றி நினைக்காமலிருக்கவும் முடியவில்லை. மெர்ஸியைவிட தனக்குத்தான் கவலையும் பொறுப்பும் அதிகம் என்று அவன் எண்ணினான். சின்னஞ் சிறு பெண், கர்ப்பம் தரித்துவிட்டாளே என்று ஏங்கினான். அவளுடைய நிலைமையை அவன் உணர முடிந்தது.

அவளுடன் ஏற்பட்ட உறவும் அவனுக்குத் தெரிந்தது தானே. ஆனால் அவளைக் காப்பாற்றும் வழிதான் அவனுக்குப் புரியவில்லை!

அவன் மெர்ஸியைப் பார்த்தான். சிறுமையடைந்து விட்டாலும், தைரியத்துடனும் கம்பீரத்துடனும் அவள் நின்றுகொண்டிருப்பதுபோலவே தோன்றிற்று. அவளை மீண்டும் சந்திக்கும் துணிச்சல் அவனுக்கு ஏற்படவில்லை. அவளைப் பார்க்கும்போது நெஞ்சிலே விவரிக்க முடியாததொரு உணர்ச்சிதான் ஏற்பட்டது. கால் வீசி நடந்து கூடாரத்தை அடைந்தான். மன ஓட்டத்தை விஞ்சும் வண்ணம் அடியெடுத்து வைக்க வேண்டும் என்ற ஆத்திரம்தான் மிஞ்சிற்று.

கூடாரத்துக்குள் நுழையும்போது, இருட்டிலிருந்து அமாந்தாவின் குரல் கேட்டது "எனக்குத் தூக்கம் வந்து தூங்கியே போய்விட்டேன், கர்டிஸ்" என்றாள் அவள். அமாந்தா தனக்காகக் காத்திருப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். பதில் பேசாமல், இருளில் தடவிக்கொண்டே அவளை நெருங்கிப் படுக்கையில் படுத்தான்.

மனசிலே பெரும் பாரம் ஏறிவிட்டது. என்ன நடந்தாலும் சரி, ஆயுள் உள்ளவரையில், அந்தச் சின்னஞ் சிறு பெண்ணைக் கற்பழித்த பாவம், தன்னை விட்டுப்போகாது. அந்த நினைப்பு அகலாது என்பது மட்டும் நிச்சயம் என்பதை அவன் அறிந்தான்.

20. கல்யாணம்

விஜி இவான்ஸ் குதிரையைத் தட்டிவிட்டான். வண்டிகள் புறப்படத் தயாராக நின்றன. சாமான் களை ஏற்றினார்கள். கிடைக்கும் பொருள்களை அள்ளிப் போட்டுக்கொண்டார்கள். வம்பும் செய்தியும், வழி நெடுகப் பேசி மகிழக்கிடைக்கவே எல்லோரும் குது

கலமாகக் கிளம்பினார்கள். மெர்ஸிக்குக் கல்யாணம் நடந்தது. எதிர்பாராத செய்தி,

வாருங்கள் புறப்படலாம்; நேரமாகிவிட்டது. அரிகானில் பனி விழத்தொடங்கு முன்னே அங்கு போய்ச் சேர்ந்துவிடவேண்டும். மெர்ஸி கிளம்பு. ஸ்ரீமதி ப்ரௌனி கிளம்பு. ஆம், மெர்ஸி ஸ்ரீமதி ப்ரௌனி ஆகிவிட்டாள். அவளுக்கும் ப்ரௌனிக்கும் தான் விவாகம் நடந்தது.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. சில்லென்று காற்று வீசிக்கொண்டிருந்தது. இரவுக்குள் மழை பொழியக்கூடும். குளுகுளுப்பான அந்த நேரம் குதூகலத்துக்கு ஏற்ற நேரம்தான். கல்யாணத்துக்கு, களியாட்டத்துக்கு, ஏற்ற நேரம்தான்! மக்பியின் மானத்தைக் காப்பாற்றக்கூடிய சுபவேளைதான்!

இப்போது மனக் கொந்தளிப்புக்கோ, சென்றதை எண்ணிப்பார்க்கவோ நேரமில்லை; விரும்பத்தக்கது மல்ல. பால் முறிந்துவிட்டது; சிந்தித்துப் பயன் என்ன? மேலே நடக்கவேண்டியதைப்பற்றிச் சிந்திப்பதுதானே புத்திசாலித்தனம்! அரிகானைச் சேர்ந்து, வீடு கட்டுவதும், வாழ்க்கை நடத்த வழி காணுவதும் தான் இனி எண்ணவேண்டியவை. மக்பி குடும்பத்துக்கும் இவான்ஸ் குடும்பத்துக்கும் உறவும் பிரிவும் ஒரேசமயத்தில் ஏற்பட்டது. கல்யாணம் நிச்சயமானதும் இவான்ஸ் மக்பியை ஒதுக்கிவிட்டான். டாட்லாக்கும் புரூவரும் அரிகானுக்குச் செல்வதற்குப் பதிலாக, அங்கிருந்து காலிபோர்னியாவுக்குச் செல்ல நிச்சயித்தார்கள். அவர்களுடன் செல்லவே மக்பியும் விரும்பினான். இவான்ஸ் அவனுடன் விவாதித்து மனத்தை மாற்றுவது வீண் பிரயத்தனம் என்று தெரிந்துகொண்டான். மக்பியின் பிடிவாதத்துக்கு இணை அவனேதான். அவனுடைய மனைவியின் குணத்துக்கும் அவள்தான் ஈடு!

இவான்ஸ் குதிரைமீதிருந்தவாறே திரும்பிப் பார்த்தான். வண்டிகளை வரிசையாக நிறுத்திப் பிரயாண ஆயத்தம் செய்துகொண்டிருந்தான் டிக் சம்மர்ஸ். மனத்தில் கவலை புகுந்துகொள்ளும்போது ஆறுதல் தேட மனிதன் தனிமையை நாடுகிறான். இவான்ஸுக்கும் தனித்து நிற்கவேண்டும் போல்தான் தோன்றிற்று. சென்றுபோன சம்பவங்களை, சென்ற இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் நடந்தவற்றை, அவன் நினைத்துப் பார்த்துக்கொண்டான். மகிழ்ச்சி தரும் சம்பவம் என்றாலும், மனத்தில் எரிச்சல்தான் ஊறியது. மெர்ஸியும் ப்ரௌனியும் விவாகம் செய்து கொள்ள நிச்சயித்த செய்தியை இவான்ஸ் வரவேற்கவில்லை.

அவனுடைய மனம் சஞ்சலமடைந்தது. ஆனால் மக்பி தம்பதிகள் துயரமடையவில்லை, சஞ்சலப்படவில்லை என்பதை அவன் ஊகித்துக்கொண்டான்.

தன்னுடைய குடும்பம் பெருகி, மேலும் ஒரு ஜீவனைக் காப்பாற்றவேண்டுமே என்று அவன் நினைக்கவில்லை. அதேபோல குடும்பத்தில் ஓர் ஆள்ச் சாப்பாடு குறைந்துவிட்டதால் மக்பி தம்பதிகள் சந்தோஷமடைந்துவிட்டார்கள் என்றும் சொல்வதற்கில்லை. தன்னுடைய சோற்றுக்கான உழைப்பை மெர்ஸி செய்துகொண்டுதானிருந்தாள். சமையல் செய்வது, குழந்தைகளைப் பார்த்துக்கொள்வது, மாடுகளைக் கவனித்துக்கொள்வது என்று பல பல வேலைகளை அவள் செய்துவந்தாள். ஆனால் இவான்ஸின் துயரம் . . . ?

முதல் நாள் இரவு நடந்த சம்பவம். ப்ரௌனி இவான்ஸுக்காகக் காத்திருந்தான். மெள்ளமெள்ள அவன் மெர்ஸியைப்பற்றிக் கூறினான். அவளை மணந்து கொள்ள நிச்சயித்துவிட்டதாகவும் சொன்னான்.

"மணக்கப்போகிறாயா? எப்போது?" என்று திடுக்கிட்டுக் கேட்டான் இவான்ஸ்.

"காலையில், அப்பா?" என்றான் ப்ரௌனி மிகவும் அமைதியாக.

"யாரைக் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறாய்?" என்று கேட்டான் இவான்ஸ் ஆச்சரியத்துடன். ப்ரௌனி சொல்வதை நம்பக்கூட அவனால் முடிய வில்லை.

"மெர்ஸியைத்தான். மாக்பியின் மகள் மெர்ஸியை."

"தம்பீ, அவசரப்படாதே! கல்யாணம் என்பது விளையாட்டல்ல. திடீரென முடிவு செய்துவிடக் கூடி யதுமல்ல."

"எல்லாவற்றையும் நான் முடிவு செய்துவிட்டேன் அப்பா" என்றான் ப்ரௌனி நிதானமாக.

எதிரே நின்றுகூடப் பேசமாட்டான் ப்ரௌனி, இன்று அவன் அப்படிப் பேசியது இவான்ஸுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுடைய குரலில் தொனித்த உறுதியும் முகத்தில் இருந்த நிச்சயமும் கண்டு இவான்ஸ் திகைத்தான். அந்த மக்பியையா? மன உறுதியற்ற அவன் . . . .

"நான் அவனைக் கல்யாணம் செய்துகொள்ளவில்லை, அப்பா, அவனுடைய மகள் மெர்ஸியைத்தான்."

"சரி, அவனுடன் பேசினாயோ?"

"இன்னுமில்லை."

"அந்தப் பெண்ணிடம்?"

"அவள் காத்துக்கொண்டிருக்கிறாள்."

"உனக்கு இன்னும் பதினேழு வயதுகூடப் பூர்த்தி யாகவில்லையே? அதற்குள் . . . ."

"என்னைவிடச் சிறுவனாக இருக்கும்போதே நீ கல்யாணம் செய்துகொண்டு விட்டாயாமே!"

"இங்கு எப்படிக் கல்யாணம் செய்வது? அனுமதிப் பத்திரம் வேண்டுமே! சரியான முறையில் கல்யாணம் செய்ய இங்கு வசதி கிடையாதே?"

"நாங்கள் மதபோதகர் வெதர்பியின் முன்னிலையில் கையெழுத்துச் செய்துவிடுகிறோம். மதச் சடங்குகளை அவர் நடத்திவிடுவார்."

"பொறு தம்பீ, அரிகான் போய்ச் சேருமட்டும் காத்துக்கொண்டிரு. அங்கு சென்ற பிறகும் நீ உறுதி குலையாமலிருந்தால், கல்யாணம் செய்துகொள்ளலாம்."

"முடியாது, முடியவே முடியாது. நான் அவளைக் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால், அவள் அரிகானுக்கு வரமாட்டாள். பெற்றோர்களை விட்டு அவள் மட்டும் எப்படித் தனியாக வருவாள்? அவர்களோ கலிபோர்னியா போக விரும்புகிறார்கள் . . . . நான் காத்திருக்க விரும்பவில்லை. மெர்ஸியும் அப்படித்தான்."

"இவள்தான் உனக்கேற்ற மனைவி என்பது உனக்கு எப்படித் தெரியும், தம்பீ. நன்றாக யோசித்தாயா?"

"அவளைப்பற்றித் தவறாக ஏதும் சொல்லாதே, அப்பா. எனக்குத் தெரியும். அவளை முன்னிட்டு நாம் இருவரும் சண்டைபோட்டுக் கொள்வதை நான் விரும்பவில்லை."

இவான்ஸுக்குக் கோபம் தாளவில்லை. ஆனாலும் மனசை அடக்கிக்கொண்டான். "என்னைவிட அவள் பெரிதாகத்தோன்றுகிறதா? உன் தாயாரைவிட அவள் மீது, அந்தப் பெண்மீது, உனக்கு அன்பும் பாசமும் ஏற்பட்டுவிட்டதா? எங்களைவிட அவள் உயர்வாக நினைக்கிறாயா?" என்று கேட்டான்.

ப்ரௌனி மௌனமாக நின்றான். சில நிமிஷநேரம் அவன் பதிலே பேசவில்லை. "பெற்றோர்கள் வேண்டுமா, மெர்ஸி வேண்டுமா என்று தேர்ந்தெடுக்கும் நிலைமை வந்துவிட்டால் அவள்தான் வேண்டும்" என்றான் அவன் மெதுவாக.

"இது விஷயமாக உன் தாயாரிடம் பேசி அவளு டைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்வது உன் கடமை. உன் முடிவு உறுதியானதுதானே? மாற்ற முடியாது என்றே நான் எண்ணுகிறேன்."

"நான் வருத்தமடைகிறேன், அப்பா. உனக்குக் கோபமூட்டும்படி நடக்கவேண்டியிருக்கிறதே என்று எண்ணும்போது வருத்தம் பன்மடங்காகிறது. ஆனாலும் என்னுடைய முடிவு நிச்சயமானது."

"நன்றாக யோசனை செய், ப்ரௌனி. மீண்டும் சிந்தித்துப் பார்."

"நீ வீணாகக் கவலைப்படாதே, அப்பா. நான் நன்றாக யோசித்துவிட்டேன். எனக்கு வேண்டியதையே நான் செய்துகொள்கிறேன்."

"வெதர்பியைச் சந்தித்துச் சொல்லிவிட்டாயா?"

"இன்னும் இல்லை, அப்பா."

"கல்யாணம் செய்துகொண்டால் எங்கே தங்கு வாய்? உனக்காகத் தனியாக ஒரு கூடாரம் போடக் கூட ஏற்பாடு செய்யவேண்டாமா?"

"அதைப்பற்றியும் கவலைப்படாதே, அப்பா. நாங் கள் எப்படியோ சமாளித்துக்கொள்கிறோம். ஒரு வண்டியின் கீழேகூட இரவைக் கழித்துவிடலாம்."

"ப்ரௌனி, நீ வளர்ந்துவிட்டாய். வயதுவந்த வாலிபனாகிவிட்டாய். குழந்தை என்று எண்ணிக் கொண்டு உன்னுடன் பேசுவதில் பலனில்லை. யோசித் துப்பார். நீ செய்வது சரிதானா என்று மீண்டும் சிந்தனை செய். காலையிலும் நீ இதே 'போதை'யிலிருந் தால் நானே வெதர்பியைக் கண்டு பேசுகிறேன்."

இவான்ஸ் இந்த சம்பாஷணையை நினைப்பூட்டிக் கொண்டபோது, தான் பேசியது சரிதான் என்று சொல்லிக்கொண்டான். இதைவிடத் தெளிவாக, அவன்

எப்படிப் பேசியிருக்கமுடியும்? அவனோ வயதுவந்த வாலிபன்! பேச்சு, காரணம், விவாதம் எதுமே அந்தக் கல்யாணத்தை நிறுத்தியிருக்க முடியாது. ஒரே பிடிவாதமாக இவான்ஸும் மறுத்திருந்தால்?.... அப்படித்தான் அவன் செய்யவில்லையே? ப்ரௌனி ஒரே பிடிவாதமாக இருந்தான். வேறு வழியின்றி இவான்ஸும் இணங்கினான்.

இவான்ஸ் குதிரையின்மீதிருந்தவாறே உடம்பை நெளித்தான். சில்லென்ற காற்று முகத்தில் வீசி ஆறுதலளித்தது. அவனுடைய மனம் பிரயாணத்தைப்பற்றி எண்ணிற்று. அங்கிருந்து பாய்ஸுக்கு முன்னூறு மைல்கள்! அங்கிருந்து வாலாவாலா வழியாக அரிகான் செல்லலாம். வேறு மார்க்கமாகவும் செல்லலாம். அரிகான் இன்னும் எண்ணூறு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது! தன்னுடைய லட்சிய பூமி, புது வாழ்வு காணப்போகுமிடம், எண்ணூறு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. குதிரையைத் தட்டிவிட்டு வேகமாகச் சென்றால் பிரயாணத்தை இன்னும் துரிதப்படுத்தினால்....

மீண்டும் பழைய சம்பவங்கள்! ப்ரௌனியின் கல்யாணத்தைப்பற்றிய நினைவுகள்!! மிகவும் அமைதியாக ரெபெக்கா செய்தியை ஏற்றுக்கொண்டாள். தன்னுடைய அபிப்பிராயத்தை அவள் சொல்லவேயில்லை. இதை எதிர்பார்த்து அவள் ஆமோதித்ததுபோல இருந்தது அவளுடைய பேச்சு. அவன் ப்ரௌனியைக் கடிந்துகொண்டது, காத்திருக்கச் சொன்னது— எதைப்பற்றியுமே அவள் விவாதிக்கவில்லை. அவர்கள் பேசிக்கொண்டார்கள். ஆனால் இவான்ஸ் மனதை அடக்கிக்கொண்டான்.

“நான் நினைத்தபடி நடக்கவில்லை, விஜி” என்றாள் ரெபெக்கா வருத்தம் ததும்ப.

"இப்படி நடக்கப்போகிறது என்று நானும் எண்ணவில்லை" என்றான் இவான்ஸ்.

"எப்படியிருந்தாலும்—நீ மனசை அடக்கிக் கொள்ளவேண்டும், விஜி."

"அவனிடம் நான் சொல்லிவிட்டேன். இந்த மோஹம் உனக்கு நிலைத்துவிட்டால், சரி என்றுதான் சொன்னேன்."

"நம்முடைய வாலிபநாட்களை உனக்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன், விஜி."

விஜி நிமிர்ந்து நின்றான். அன்புததும்ப அவளைப் பார்த்தான். "நான் சரியான பெண்ணையே தேர்ந்தெடுத்தேன், பெக்கி" என்றான் பெருமையுடன்.

"அவனும் அப்படிச் செய்திருக்கலாம். மௌரீ சின்னப் பெண். நல்ல பெண். எதையும் அவசரப்பட்டு நாம் தீர்மானித்துவிடக்கூடாது. எப்படியோ அவள் நம்முடைய குடும்பத்துக்கு வந்துவிடப் போகிறாள். அவளிடம் நீ நாசூக்காகப் பழகவேண்டும், விஜி."

அவர்களுடைய சம்பாஷணை முடிந்துவிட்டது. ரெபெக்காவின் அமரிக்கையைக் கண்டு இவான்ஸ் ஆச்சர்யமடைந்தான். அவனுக்கு மட்டும் மனச் சமாதானம் ஏற்படவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தது. அந்தப் பெண்—மணப்பெண் எந்த ஆடையை அணிந்துகொள்வாள், எப்படி அலங்கரித்துக்கொள்வாள் என்று ரெபெக்கா கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள். இந்தப் பெண்களே விசித்திரம்தான். பெக்கி மட்டும் விதிவிலக்கு அல்லவே! இருப்பதற்குள் நல்ல ஆடையை மௌரீ அணிந்து கொண்டாள். காலில் பூட்ஸ் போட்டுக்கொண்டு அவள் மணவாளனைக் கைபிடிக்கத் தயாரானாள். அவளுடைய தலையை வாரி முடிந்திருந்ததைக் கண்டு ரெபெக்கா

மகிழ்ந்தாள். அழகான பெண்தான் என்று சொல்லிக் கொண்டாள்.

வெதர்பி நிலைமையைப் புரிந்துகொண்டார். கல்யாணத்தைப்பற்றி ஒருபுறமிருக்க, அவர்கள் அங்கிருந்து அதிசீக்கிரம், சில மணி நேரத்துக்குள் பிரயாணத்துக்கு ஆயத்தமாகவேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்....

கல்யாணம் நடந்த காட்சியை இவான்ஸ் ஞாபகப் படுத்திக்கொண்டான். மிகவும் எளியமுறையில் நடந்த கல்யாணம். ஆடம்பரத்துக்கு இடம் ஏது? ப்ரௌனியும் மெர்ஸியும் கணவனும் மனைவியுமானார்கள்.

போர்ட்ஹால் முற்றத்தில், சில இந்தியர்கள் கூடியிருந்தார்கள். கோஷ்டியிலுள்ள குடும்பத்தினர் குழுமியிருந்தார்கள். ப்ரௌனி கம்பீரமாக நின்றுகொண்டிருந்தான். வெளுத்த முகத்துடன், பொம்மைபோல, மெர்ஸி அவனுடைய அருகில் நின்றாள். மதகுரு வெதர்பி, கல்யாணத்தை நடத்திவைத்தார். ஒருவரையொருவர் பிரியாமல், துரோகம் செய்யாமல் வாழ்வதாக ஆண்டவன் முன்னிலையில் வாக்குறுதி செய்து கொள்ளுங்கள் என்று அவர் கூறும்போது மக்பியின் மனைவி அழுதுவிட்டாள். மகளைப் பிரிந்து செல்ல வேண்டுமே என்று எண்ணும்போதே அவளுடைய மனம் குழைந்துவிட்டது. மக்பியோ, ஆண்டவன் அருள் என்று கூறிக்கொண்டு எதையுமே லட்சியம் செய்யாமல் இங்குமங்கும் போய்க்கொண்டிருந்தான்.

யாரோ, ஒருவர் இருவர் தவிர, கோஷ்டியிலுள்ள அனைவரும் தம்பதிகளுக்கு ஆசி கூறினார்கள். பொறுங்கள், அரிகான் சென்றதும், உங்களுக்குச் சிறப்பானதொரு வீடுகட்டிப் பரிசளிக்கிறோம் என்று கூறினார்கள். அப்படி நடக்கும் என்பதும் இவான்ஸுக்குத் தெரியும்.

இவான்ஸின் சிந்தனை எதிர்காலத்தை நோக்கி நகர்ந்தது. அரிகான் செல்லுமுன்பு பனிகாலம் வந்து விடும். அல்லது ஆரம்பமாகக்கூடிய சூசகம் ஏற்பட்டு விடும். அழகானதொரு வீடு, அதன் நடுவே குளிர்காய கணப்புச்சட்டி, வெளியே மழையும் பனியும் கொட்டிக் கொண்டிருக்கும். ஜிவ்ஜிவ்வென்று குளிர்காற்று வீசும். பனிக்காற்று நின்றதும் என்ன செய்யவேண்டும் என்று திட்டமிட்டுக்கொண்டே அவன் குளிர்காய்ந்து கொண்டிருப்பான். அவன்மட்டுமா? அவனைச் சூழ்ந்து பெக்கி, ப்ரெளனி, மெர்ஸி எல்லோருந்தானிருப்பார் கள். ராட்டையிலே சுற்றிய நூல்கள் கம்பியில் தொங் கும் ஆடை நெய்யத் தறிபோட ஒரு மூலையில் மரச் சட்டங்கள் கிடக்கும். உள்ளே அலமாரியில் பரங்கியும், பூசனியும் இருக்கும். உக்கிராணத்தில் தான்யமும், தவசமும், பக்குவப்படுத்தப்பட்ட மாமிசமும் கிழங்கு களும் நிரம்பிக்கிடக்கும். சின்னஞ் சிறு வீடு, அழகான அறைகள்! பனிக்கும் வெயிலுக்கும் பாதுகாப்பான வீடு . . . .!

"பொறு தம்பீ, போகட்டும் பார்க்கலாம்" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான் இவான்ஸ்.

21. விபத்து

அலுப்பும் ஆயாசமும் மேலிட இவான்ஸ் நின்று கொண்டிருந்தான். அவனுக்கு ஒருநாளைப் போலவே மறுநாளும், கெட்ட நாளாகத் தோன்றியது. வேலை யும், கவலையும், அலுப்பும் அவனை ஆட்கொண்டன. வெயிலும், காற்றும், தூசியும், இரவும், பகலும் அனுப வித்து அனுபவித்து, அவன் சோர்ந்துவிட்டான். எட்டு மைல், பதினைந்து மைல்கள், இருபத்துமூன்று மைல் கள், இப்போதெல்லாம் தினமொன்றுக்கு எவ்வளவு தூரம் வழிநடந்தோம் என்று அவன் கவலைப்படுவ தில்லை. நடக்க நடக்க வழிமாளாத இந்தப் பிர

தேசத்தை எப்படிக் கடப்போம், எப்போது கடப்போம் என்றுதான் அவன் எண்ணலானான்.

தூசி, ஏற்றம், மலை, குன்று, சரிவு, மலையைக் கடக்க வளைந்து செல்லுதல், சரிவில் இறங்கும்போது நெளிந்து நெளிந்து செல்லுதல், கல்லும் கரடும், மரங்களும்—அவனுக்கு அலுத்துவிட்டது. கல்லிலும் கரட்டிலும் தேய்ந்து தேய்ந்து வண்டிப்பட்டாக்கள் காகிதம் போலாகிவிட்டன. நடந்து நடந்து கால்கள் காய்ப்பேறி விட்டன. இது என்ன பூமி! புல்லும் பூண்டும் அரிதாகி, தண்ணீர் வறண்டு, கல்லும் முள்ளும் நிரம்பிய பாதையில் எத்தனை நாட்கள்தான் செல்ல முடியும்? ஆண்டவன் பூமியைப் படைத்தபோது, அக்னிக்குழம்பு இறுகி, கரடுமுரடான முதல்பிரதேசம் இதுதானோ? கள்ளியும் நாகதாளியும் கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் தெரிந்தன. பாம்புகளும், நரிகளும், முயல்குட்டிகளும் சஞ்சரித்தன. இந்தப் பிரதேசத்துக்கு அப்பால்தான் செழிப்பான அரிகான் நாடு இருக்கிறதா? இவான்ஸ் எத்தனையோ கஷ்டங்களைச் சமாளித்துவிட்டான். ஆனால் இந்தப் பிரதேசம் அவனுடைய தைர்யத்தை அமுக்கிவிட்டது. அவனுடைய நம்பிக்கை தளர ஆரம்பித்தது.

இரண்டு தினங்களுக்கு முன்பு போர்ட்ஹாலிலிருந்து புறப்படும்போதுகூட இவ்வளவு கடுமையான வறண்ட பிரதேசத்தைக் கடக்கவேண்டி நேரிடும் என்று அவன் எண்ணவில்லை. போர்ட்நோ, அமெரிக்க நீர்வீழ்ச்சி என்று ஒவ்வோரிடமாகக் கடந்து வரும்போதுகூட இந்தப் பிரதேசத்தைப்பற்றி அவன் நினைக்கவில்லை. சுனைகளும் அருவிகளும் நிரம்பிய மலைப் பிரதேசத்தில் பச்சைப் பசேலென்ற புல்வெளிகளில் மாடுகளை மேயவிட்டுக்கொண்டே அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். இப்போது, பசும் புற்தரை மாறி மணல் வெளி வந்துவிட்டது. கீழே பாம்பு,

தெளிகிறது, எட்டலில் ஓநாயும் நரியும் ஊளையிடு கின்றன.

நடுநடுவில் திடலாகக்கிடக்கும் பசுமை வெளிகளைக் கடந்து அவர்கள் வறண்ட பூமியில் அடிமேலடி வைத்து நகர்ந்தார்கள். தூரத்தில் நெளிந்து நெளிந்து ஒரு நதி செல்வதுபோல் தெரிந்தது. நதிதானு? அல்லது பிர மையா? உடலும் உள்ளமும் கொதிக்க, நடந்து செல் லும் அத்தனை பேருக்கும் அலுப்பும் ஆத்திரமும் மிஞ்சிற்று.

ஒருநாள் டிக் இவான்ஸை அழைத்துக்கொண்டு மலைவிளிம்பை யடைந்தான். கீழே யிருந்த பள்ளத் தாக்கில் நுரை கக்கிக்கொண்டு நதி ஓடிக்கொண்டிருந் தது. பாறைகளின் மோதிக்கொண்டு அது ஓடும் சப்தம், நூற்றுக்கணக்கான அடிகளுக்கு மேலே நிற்கும் அவர்களுடைய காதில் ஒலித்தது. கீழே குனிந்து பார்க்கும்போது தலைசுழல, இவான்ஸ் நகர்ந்து சென்ருன்.

"நாம், இந்த நதியைக் கடந்து செல்லவேண்டும் இவான்ஸ்" என்ருன் டிக்.

இவான்ஸின் உடம்பு நடுங்கிற்று. "வேண்டாம், நாம் சுற்றி வளைந்து செல்லலாமே? அப்படி ஒரு பாதை இருப்பதாக போர்ட்ஹாலில் யாரோ சொன்ன ஞாபகம் எனக்கு" என்ருன்.

"வாஸ்தவம், வேறு சுற்றுப்பாதை இருக்கிறது. அதற்குள், நம்முடைய கையிருப்பு ஆகாரம் தீர்ந்து பட்டினி கிடக்க நேரிடும். நம்முடன் ஓட்டிக் கொண்டு வந்திருக்கும் ஆடுமாடுகளை இழந்துவிட நீ விரும்புகிருயா? இவான்ஸ், பார்க்கத்தான் இந்த நதி பயங்கரமாக இருக்கிறது. அமைதியான இடத்தில் இதைக் கடக்க நான் ஏற்பாடு செய்கிறேன்" என்ருன் டிக்.

நீண்டதூரப் பிரயாணத்துக்குப் பிறகு, அதுவும் நீரும் புல்லுமில்லாத வறண்ட பிரதேசத்தைக் கடந்த பிறகு செழிப்பான பூமியைப் பார்த்தால் எவருக்குச் சந்தோஷம் ஏற்படாது. வசதியான இடம், நல்ல தண்ணீர், பசுமை நிறைந்த புல்வெளி! எல்லோரும் கலகலப்பாகப் பேசிக்கொண்டு அங்குமிங்கும் திரியலானார்கள். மணல், வெயில், பாம்பு, ஓநாய் இவற்றின் நடுவே மீண்டும் சில தினங்கள் வழி நடந்து, வளைந்து சென்று அந்தப் பிரதேசத்தைக் கடக்கவேண்டும் என்று சொன்னபோது ஆபத்து நிறைந்த மார்க்கமானாலும் ஆற்றைக் கடந்து அப்பால் செல்லவே அவர்கள் தீர்மானித்தார்கள். மணலும், வெளியும், பாம்பும் அவர்களுக்கு பீதி யூட்டவில்லை. அந்த நினைப்பே பயங்கரமாகிவிட்டது.

நதியைக் கடந்து அப்பால் சென்றுவிட்டால் முதல் முதலாக அரிகான் போய்ச் சேரும் கோஷ்டி தங்களுடையதாகவே இருக்கும் என்று டிக் சம்மர்ஸ் கூறினான். இவான்ஸுக்குப் பெருமை தாங்கவில்லை. உடன் வந்திருக்கும் நண்பர்களையும் அவர்களுடைய தீரத்தையும், தனனிடம் அவர்களுக்குள்ள நம்பிக்கையும் எண்ணிப் பார்க்கும்போது 'நானே பாக்கியசாலி' என்று சொல்லிக்கொண்டான்.

திறமைவாய்ந்த வழிகாட்டி, தைர்யம் மிகுந்த சகாக்கள். உடனிருந்த வண்டிகளையும் சாமான்களையும் கன்றுகாலிகளையும் அவன் பெரிதாக எண்ணவில்லை. அவர்களுடைய சாகஸத்தையும் மன உறுதியையும் எண்ணுமபோது அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது, பெருமையாக இருந்தது.

டிக், மலை விளிம்பில் போய் நின்று பார்த்துத் திரும்பினான். "கயிறுகளையும் கொடிகளையும் பிணைத்துப் பாலம் கட்டவேண்டிய அவசியமில்லை என்று

தோன்றுகிறது இவான்ஸ். நதியில் இறங்கிக் கடக்கலாம் என்றே எண்ணுகிறேன்" என்றான்.

இவான்ஸ் அவனுடன் விவாதிக்கவில்லை. "மாக், பெயர்மன், கார்ப்பென்டர்" என்று கூவி மற்றவர்களை அழைத்தான். அவர்கள் அருகே வந்ததும், "நாம் கீழே இறங்கி, நதியைக் கடந்துசெல்லலாம் என்று டிக் சொல்கிறான். முதலாவதாக வரும் வண்டியுடன் நாம் சிலர் போய்ப் பார்க்கலாம். என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

பாச் பதில் சொல்லவில்லை, தன்னுடைய வண்டியையே ஓட்டிவந்து நிறுத்திவிட்டான். டிக் சம்மர்ஸ் மெதுவாக, வளைத்து வளைத்துப் பாதை காட்டி வண்டியை நதியோரமாகக் கொண்டுவந்தான். செங்குத்தாக நின்ற மலையிலிருந்து கீழே இறங்கும்போது, எத்தனைபேர் பிடித்து நின்றாலும் நிற்காமல் உருண்டோடிவிடக்கூடிய சரிவில் அதிசாமர்த்தியமாக அவன் ஒன்றன் பின் ஒன்றாக வண்டிகளை ஓட்டிச் சென்றான். நடுவில் ஒன்றுடன் ஒன்று பக்கமாக இருக்கும் திட்டுக்களுக்கெதிராக ஆற்றிலிறங்க அவர்கள் நிச்சயித்தார்கள்.

"வேகமாகத்தான் ஓடுகிறது. ஆனால் அதிக ஆழம் இருக்காதுபோலிருக்கிறது" என்றான் டிக்.

"எவ்வளவு ஆழமிருக்கும்?" என்று கேட்டான் இவான்ஸ்.

"அதிகமிராது. பார்ப்பதற்குத்தான் பிரமிப்பாக இருக்கிறது. ஆனாலும் இறங்கிப் பார்த்துவிடலாம்" என்றான் டிக்.

இவான்ஸ் தலையசைத்தான். "டிக், அதோ நதியின் மத்தியிலிருக்கும் திடல்களில் புல் செழிப்பாக வளர்ந்திருக்கிறது. ஆடுமாடுகளை அங்கு ஓட்டிவிடுவோம். இதற்குள் அந்திநேரமாகிவிடும். நாம் காலை

யில் அங்கு செல்லலாம். ஆடு மாடுகளும் மேய்ந்து பசியாறும்" என்றான்.

"நல்ல யோசனை" என்றான் டிக்.

மறுநாள் அதிகாலையில் இவான்ஸ் எழுந்துவிட்டான். சிலுசிலுப்பும் ஊதல் காற்றும் அவனுக்குப் பொருட்டாக இல்லை. தன்னைப்போல எல்லாரும் சீக்கிரமே எழுந்து, அக்கரை சேரத் தயாராகவில்லையே என்று அவன் துடிதுடித்தான். வானவெளியில் மேகங்கள் மிதப்பதுபோல எதிரேயிருந்த திடல்கள் ஆற்று நடுவே காட்சியளித்தன. ஆகாரம் உண்ட பின்பு அவர்கள் புறப்படுவார்கள். பெரிய மிருகங்களை நீரில் ஓட்டிவிடுவார்கள். புல்லும் தண்ணீருமருந்தி அவை பலம் பெறும்....

ஒருவர்பின் ஒருவராக ஆற்றோரமாக வந்து கூடிய போது இவான்ஸ் சிந்தனையிலிருந்து மீண்டான்.

டிக் சொன்னான்: "வண்டிகளை மிதக்கவிட்டு, அப்பாலிழுத்துக்கொண்டு போகக்கூடாது, விஜி, இங்கு நீரோட்டத்தின் வேகம் அதிகம். சக்கரம் பூமியில் பதிந்து சென்றால்தான் நல்லது. இல்லாவிட்டால் வண்டி மிதக்கும்போது மாடுகளையும் புரட்டிக்கொண்டு குடைசாய்ந்து, நீரோடு அடித்துக்கொண்டுபோய் விடும்."

ஒவ்வொரு வண்டியிலும் கூண்டின்மீது மரங்களை அடுக்கிப் பளு ஏற்றினார்கள். டிக் சம்மர்ஸ் குரல் காட்டி குதிரையை ஓட்டிக்கொண்டே தண்ணீரில் இறங்கினான். "நான் முதலில் இறங்கி ஆழம் பார்க்கிறேன். பிறகு மற்றவர்கள் வரலாம்" என்றான் அவன்.

இவான்ஸ் டிக் செல்லும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரே ஓரிடத்தில் குதிரை நீந்திச் சென்றது, அங்குதான் நனையாமலிருக்க டிக் எம்பி நின்றுகொண்டான். அவனைத் தொடர்ந்து எல்லோ

ரும் முதல் திடலை வந்து சேர்ந்தார்கள். இவான்ஸ் தன்னுடைய வண்டிகளையே முதலாவதாக நிறுத்தியிருந்தான். தலைவன் என்ற முறையில் லாப நஷ்டங்களை அனுபவிப்பது தன்னுடைய பொறுப்பு என்றே அவன் எண்ணினான். அவனுடைய வண்டிகளுக்குப் பின்னால் மற்றவை அணி வகுத்து நின்றன.

முதல் வண்டியில் மெர்ஸியும் ப்ரௌனியும் வீற்றிருப்பதை இவான்ஸ் கவனித்தான். "தம்பீ, மெர்ஸியையும் அழைத்துக்கொண்டு இதில் உட்கார்ந்திருக்கிறாயே, இறங்கு, பின்னால் வரும் வண்டிகளில் வா" என்றான் இவான்ஸ்.

"நான் அதைப்பற்றி யோசித்துவிட்டேன், அப்பா மெர்ஸி பயப்படவில்லை. முதல் வண்டியிலேயே நாங்கள் செல்கிறோம்" என்றான் ப்ரௌனி.

"ஆயுஸில் உங்களுடன் விவாதம் செய்து நான் ஜயிக்கவில்லை. எப்படியும் போங்கள்" என்று அலுத்துக்கொண்டான் இவான்ஸ். பிறகு "ஜாக்கிரதை, டிக் செல்லும் வழியில் செல்லுங்கள்" என்றான்.

இரண்டாவது வண்டியில் ரெபெக்கா உட்கார்ந்திருந்தாள். "அரிகானை நெருங்கிவிட்டோம், பெக்கி" என்றான் இவான்ஸ் சந்தோஷத்துடன்.

"லிஜி, கொஞ்சம் ஜாக்கிரதை. உன்னுடைய உத்சாகமே என்னைக் கவலையிலாழ்த்துகிறது" என்றாள் ரெபெக்கா.

"புறப்படலாமா, எல்லாரும் தயார்தானா?" என்று கத்தினான் டிக். உடனே அவன் குதிரையுடன் நீரிலிறங்கினான். அவனைத் தொடர்ந்து ப்ரௌனி வண்டியை ஓட்டினான்.

மாடுகள் வண்டியை இழுத்துக்கொண்டு நடந்தன. சிறிது தூரத்தில் ஆழம்; அதன்பிறகு மேடு—அந்த இடத்தில் நீரோட்டம் மெதுவாகவே இருந்தது. முழங்கால் வரையில் நீர்—அவர்கள் மேலும் நடந்தார்

கள். தொடைவரையில் நீர் உயர்ந்தது. மேலும் சில அடிகள் செல்லும்போது இடுப்புமட்டும் உயர்ந்தது.

மாடுகள் தலையைத் தூக்கிக்கொண்டு நீந்தின. நீரின் வேகம் இழுக்க, வண்டிகள் அசைந்தாடின. இவான்ஸ் மாடுகளை அதட்டி ஓட்டினான் "ஹை ஹை! ஓய்—ஹை—ஹை! இந்தா—ஓடு—ஹைஹை!"

திடீரென அவன் ஏறியிருந்த குதிரை கால் தடுமாறியதுபோலத் தோன்றியது. அதற்குள் நீந்த ஆரம்பித்துவிட்டது. மீண்டும் ஆழமான பகுதியைக் கடக்க நேரிட்டது. லகானை இழுத்துப் பிடித்துக் கொண்டே மாடுகளை ஊக்கிக் குரல் கொடுத்துக்கொண்டிருந்தான் அவன்.

மாடுகள் கால்களை ஊன்றி நடக்கலாயின. குதிரையும் நிதானமாக நடந்தது. ஆம், அவர்கள் இரண்டாவது திடலை அடைந்துவிட்டார்கள். ப்ரௌனி சந்தோஷம் தாங்காமல் ஆரவாரித்தான். லிஜி திரும்பிப்பார்த்தான். மற்ற வண்டிகள் மெதுவாகக் கடந்து வந்துகொண்டிருந்தன.

திடலைத் தாண்டி அவர்கள் மீண்டும் தண்ணீரில் இறங்கினார்கள். "இங்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீரின் வேகம் அதிகமாக இருக்கிறது" என்றான் டிக்.

மாடுகளைத் துரத்திக்கொண்டே பக்கத்தில் வந்து கொண்டிருந்த இவான்ஸ், குதிரை நிலைமாறி நீந்த ஆரம்பித்ததும் திடுக்கிட்டான். தலையை உயர்த்திக் கொண்டு மாடுகள் நீந்திக்கொண்டே சென்றன. "நாம் தொலைந்தோம், டிக், தொலைந்தோம்" என்று கத்தினான் இவான்ஸ்.

"ஒன்றுமில்லை பயப்படாதே" என்றான் டிக்.

ஹிக்கின்ஸ் மிகவும் சாகஸத்துடன் வண்டிகளைக் கடத்திக்கொண்டிருந்தான். பூஞ்சையான உடம்பாக

இருந்தாலும் அவனுடைய உள்ளம் வைரம் பாய்ந்தது. குதிரைமீது அமர்ந்து அவன் நதியின் நடுவே சென்று, வண்டிகளை அணைத்துச் சென்றதைப் பார்த்து இவான்ஸ் பிரமித்தான்.

டிக்கின் எச்சரிக்கையினுல், வண்டிக்கு ஆறு சோடி மாடுகளைப் பிணைத்து தண்ணீரில் இறக்கி ஓட்டினுர்கள். ஒன்றன்பின் ஒன்ருக மாடுகள் சென்றுகொண்டிருந்தன. ஆரம்பத்தில் ஒரே ஓரிடத்தில் சிறிது ஆழமாக இருந்தது. அப்பால் மேடு தட்டுப்பட்டு மாடுகள் நடந்து கடக்கலாயின. டிக் முன்னே குதிரையில் செல்ல, சற்றுப் பின்னுல் இவான்ஸ் சென்றுகொண்டிருந்தான். கரையை நெருங்கும்போது ஒரு மாடு கால் தடுக்கி விடவே அது நீரின் வேகம் தாங்காமல் புரண்டுவிட்டது. அத்துடன் நுகத்தடியில் பூட்டியிருந்த மாடும் புரண்டு திரும்பிற்று. இரண்டும் வெள்ளத்திலடித்துக்கொண்டு செல்ல, இவான்ஸின் குதிரையின்மீது தாக்கின. இவான்ஸ் மிரண்டுவிட்டான். இதன் நடுவே அடுத்த நுகத்தடி மாடுகளும் நிலை தடுமாறின. ஹிக்கின்ஸ் ஆபத்தைச் சமாளிக்க, குதிரையை ஓட்டிக்கொண்டு முன்னேறினுன். இவான்ஸின் குதிரையோ மிரண்டுவிட்டது. மாடுகள் நிலை தடுமாறிப்போகவே, நீரின் வேகத்தில் மாடுகளும் வண்டியும் அடித்துக்கொண்டு நகர்ந்தன. தண்ணீரின் ஓட்டத்தில் வண்டி திரும்பி விடவே, அது இரு புறமும் அசைந்து, ஆடி, நீரில் மூழ்கி, மிதந்து செல்லலாயிற்று. மாடுகளோ நீந்திக்கொண்டே மேலும் செல்லலாயின. மாடுகளும் வண்டியும், நீரின் வேகத்தில் அர்த்த சந்திர வளையம்போல முறுக்கிக்கொள்ளவே, நடுவே அகப்பட்டுக்கொண்ட இவான்ஸின் குதிரை நீந்தும் சக்தியற்று அப்படியே நின்றது. நீரின் வேகம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்து மாடு, குதிரை, வண்டி எல்லாவற்றையும் அடித்துச் செல்லலாயிற்று. மாடுகள் மிரண்டன. நீரின்

இழுப்பிலிருந்து காப்பாற்றிக்கொள்ள—உயிர் தப்பும் ஆசையில் ஒவ்வொன்றும் நீந்திக் கரையேற முயன் றன. கட்டு மீறி, மூலைக்கொன்றாக இழுக்கவே வண்டி யின் ஆட்டமும் அசைவும் அதிகரித்தது. நீரில் வேகத் தில் இழுபட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக நதியின் நடுவே அவை நகர்ந்து செல்லலாயின.

கரையிலிருப்பவர்கள் கூகூவென்று கத்தியதை இவான்ஸ் கேட்டான். ஹிக்கின்ஸ் கத்துவதும், டிக் குதிரையுடன் நீரில் குதிப்பதும் இவான்ஸுக்குத் தெரிந்தது. நீரில் மிதந்து சென்ற வண்டி ஆடி ஆடிக் கொண்டே சென்றது! சட்டெனப் புரண்டது. ஆம், நீரில் அழுந்திக் கிடந்த பாறையில் சக்கரம் மோதி வண்டி புரண்டுவிட்டது. வண்டியிலிருந்த பேர்டின் மனைவி தண்ணீரில் தூக்கி எறியப்பட்டாள். காற்றில் மிதக்கும் இறக்கைபோல அவள் தண்ணீரில் மிதந் தாள். புரண்டு புரண்டு வண்டி சென்றது.

கண் மூடித் திறப்பதற்குள் நடந்த சம்பவத்தைக் கண்டு விஜி திடுக்கிட்டான். நீரின் வேகத்தில் அவள் உருண்டு உருண்டு சென்றாள். நீரின் வேகத்தை—சீற்றத்தை—எதிர்த்து நிற்க மனிதனால் முடியவில்லை. விஜி தட்டித் தடுமாறிக்கொண்டே அந்தப் பெண்மணி யைக் காப்பாற்ற முயன்றான்.

சுழன்று சுழன்று ஓடும் அந்த நீரில், அவன் விழி பிதுங்க கையும் காலையும் தட்டிக்கொண்டே மிதந் தான். உள்ளுணர்வு உந்த, ஆவேசத்துடன் அவன் முன்னே சென்றான். தண்ணீரில் முழுகி முழுகி எழுந் திருக்கும் அந்தப் பெண்ணை—அவன் காணமுடிய வில்லை. அவளுடைய நீல அங்கியை அடையாளங் கண்டுதான் அவள் மிதக்குமிடத்துக்குப் பாய முடிந் தது. விஜி இரண்டு வீச்சுப் போட்டுத் தாண்டுவான். அதோ அதோ, பிடித்துவிட்டான். கை எட்டும்போது நழுவிவிடும். மீண்டும் மூச்சுப் பிடித்துக்கொண்டு

ஒரு கை போட்டு நீந்துவான். கடைசியில் அவளைப் பிடித்துவிட்டான். ஆனால் அவனுடைய கை ஓய்ந்து விட்டது. அவளும் அவனும் முழுகி முழுகி எழுந்தார்கள். நீரின் வேகத்தை எதிர்த்து அவன் போராடினான். கரையைவிட்டு அவர்கள் வெகு தூரம் வந்து விட்டார்கள். கையும் காலும் ஓய்ந்து இரும்புக் குண்டு போலக் கனத்தது..

"விஜி! விஜி!"—ஆம், டிக்கின் குரல்தான். விஜி நிமிர்ந்து பார்த்தான். அந்தக் குரலுக்குத்தான் மந்திர சக்தியிருந்ததோ அல்லது அந்தப் பெண்ணின் உயிரையும் தன்னுடைய உயிரையும் காப்பாற்றவேண்டும் என்ற ஆசை உந்த அவன் போராடினானோ, விஜி காலை உந்தி எழும்பினான். டிக் சம்மர்ஸ் இவான்ஸை நோக்கி ஒரு கயிறை வீசினான். இவான்ஸும் அதைப் பிடித்துக்கொள்ள முயன்றான். டிக் வீசுவான், விஜி தாவுவான். காற்றுவேகத்தில் கயிறு இலக்குத் தவறிப் போய்விடும். அல்லது நீரில் மிதந்து தள்ளிச்சென்று விடும். டிக் மீண்டும் கயிறை இழுத்து, இவான்ஸை நோக்கி வீசுவான். கடைசியில் டிக், கயிறை வளைத்து சுருக்காணிட்டு வீசினான். விஜி தாவிப் பிடித்துக் கொண்டான். மெள்ள மெள்ளக் கயிறை இழுத்து அவர்களைக் கரையோரமாகக் கொண்டுவந்த டிக், குதிரையினின்றும் இறங்கி ஸ்ரீமதி பேர்டை இழுத்துக் கரையில் போட்டான். இவான்ஸும் அசதி மேலிட்டுத் தத்தித் தடுமாறிக்கொண்டே கரையேறினான். மற்றவர்கள் ஓடிவந்து சூழ்ந்துகொண்டார்கள்.

"இவள் செத்திருக்கமாட்டாள். நாலு வாய்த் தண்ணீர் குடிக்குமுன்னே நான் தாவிச் சென்றுவிட்டேனே . . ." என்று ஆரம்பித்தான் இவான்ஸ்.

டிக் அவனுடைய பேச்சு முடியுமட்டும் காத்திருக்கவில்லை. செந்தூக்காக அவளைத் தூக்கித் தலையில்

வைத்துத் தட்டாமாலை சுற்றினான். அவளுடைய வாயிலிருந்து தண்ணீர் வெளிவந்தது.

"உனக்கு ஆபத்து ஏதுமில்லையே, விஜி" என்று கேட்டுக்கொண்டே இவான்ஸை நெருங்கினாள் ரெபெக்கா. அவளுடைய கண்களில் தெறித்த ஆத்திரமும் வெறுப்பும் விஜி கவனிக்காமலில்லை."

"இல்லை" என்றான் அவன்.

ஸ்ரீமதி போர்டை டிக் கீழே கிடத்தினான். "நல்ல வேளை அப்பா, சன்னமாக மூச்சு இழுக்கிறது. பிழைத்து விடுவாள்" என்றான் டிக்.

ஸ்ரீமதி போர்டு மெதுவாகக் கண்ணைத் திறந்து சுற்றி நிற்பவர்களை ஒவ்வொருவராகப் பார்த்தாள். அந்தப் பார்வையில் தைன்யமும் வெறுப்பும் தான் தென்பட்டது. ஆற்றோடு நான் போகும்போது நீங்கள் எல்லோரும் கரையில் நின்று வேடிக்கைதானே பார்த்துக் கொண்டிருந்தீர்கள் என்று அவள் குற்றஞ்சாட்டுவது போலிருந்தது அந்தப் பார்வை. ஒவ்வொருவராகப் பார்த்துவிட்டு இவான்ஸிடம் திரும்பும்போது அவளுடைய கண்களில் நீர் கோதத்துவிட்டது, அவள் பிழைத்துவிட்டாள்! அவளைமட்டுமா இவான்ஸ் காப்பாற்றினான்! அவள் நிறைமாதக் கர்ப்பிணி—இரண்டு உயிர்களை அவன் காப்பாற்றினான்.

ஸ்ரீமதி போர்டை கூடாரத்துக்குள் தூக்கிச் சென்றார்கள். இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அன்று அடியெடுத்து வைக்கக்கூட எவருக்கும் விருப்பமில்லை. ரெபெக்கா போர்டின் கூடாரத்துக்குச் சென்றாள். நனைந்த ஆடைகளைக் களைந்துவிட்டு, வேறு ஆடையணிந்து அவளைப் படுக்கவைத்து கம்பளப் போர்வையினால் மூடினாள். சிறிது நேரம் தூங்கட்டும். எல்லாம் சரியாகிவிடும்" என்றாள் அவள்.

இவான்ஸ் களைப்பாறிக் கொண்டிருக்கும்போது டிக் சொன்னான். "அரிகானுக்குச் செல்ல நீ தேர்ந் தெடுத்த பாதை ஆபத்தானது. அதற்குள் யம லோகத்தின் வாசலில் கால்வைத்துத் திரும்பி விட் டாயே?" என்று. அவனுடைய சிரிப்பும் பேச்சும் இவான்ஸுக்குப் புரியவில்லை.

"நஷ்டம் ஏதுமில்லையே!" என்றான் அவன்.

"அதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க அவ காசம் எங்கே கிடைத்தது?"

ஹிக் அவர்களுடைய பேச்சை ரசிக்காதது போலத் தலையசைத்தான். "சில சாமான்கள் நனைந்துவிட்டன, ஒரு மாட்டுக்குக் கொஞ்சம் ஊனமேற்பட்டது. வேறு ஏதுமில்லை என்று நான் நினைக்கிறேன்" என்றான் அவன்.

"ஆடுமாடுகள் கூடச் சேதமில்லையா?"

"ஆற்றோடுபோன வண்டியைக்கூட டிக் இழுத்து விட்டான். அதில் பூட்டியிருந்த மாடுகளும் சாமர்த் தியத்துடன் போராடி நீந்தின, சிறிதுதூரம் சென்ற தும், வண்டி தரைதட்டி நின்றது. கயிறு கட்டி இழுத் துக் கரைசேர்த்து விட்டோம். மாடுகளும் பிழைத்து விட்டன" என்றான் ஹிக்கின்ஸ். அவனுடைய குரலில் சந்தோஷம் தொனித்தது.

* * *

இவான்ஸ் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். ஆற்றின் சலசலப்பும் காற்றின் ஓலமும் கலந்து இனி மையான தொரு ஓசையைக் கிளப்பிக்கொண்டிருந் தது. இயற்கையின் கீதத்தை அனுபவித்துக் கொண்டே அவன் படுக்கையில் கிடந்தான். நேரம் ஆக ஆக காற்றுடன் குளிரும் கலந்து வீசலாயிற்று. வெளியே காலடியோசை கேட்டது, "தொடர்ந்து இவான்ஸ்" என்று யாரோ கூப்பிடும் குரலும் கேட் கவே, "யாரது?" என்று கேட்டுக்கொண்டே இவான்ஸ் எழுந்தான்.

"நான்தான் பேர்டு."

இவான்ஸ் கூடாரத்தைவிட்டு வெளியே வந்தான். "என்ன விசேஷம், இந்த நிசிவேளையில்?" என்றான். அவர்களுடைய குரல் கேட்டு ரெபெக்காவும் விழித்துக்கொண்டாள்.

"என்னுடைய மனைவி பிரசவ வேதனைப்படுகிறாள். வேளை நெருங்கிவிட்டது என்று நினைக்கிறேன்...."

இவான்ஸ் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. நின்ற இடத்திலிருந்தவாறே "பெக்கி" என்று கூப்பிட்டான்.

உள்ளேயிருந்தவாறே ரெபெக்கா பதில் சொன்னாள்: "கேட்டுக்கொண்டுதானிருக்கிறேன். மிஸ்டர் பேர்டு, பின்னாலேயே வருகிறேன், நீங்கள் செல்லுங்கள். கணப்புச் சட்டியைத் தூண்டிவிடுங்கள். தீ நன்றாக எரியட்டும். விஜி, நம்மிடம் மெழுகுவர்த்தியிருக்கிறதா?"

விஜி மெழுகுவர்த்திகளைத் தேடி எடுத்தான். இருவரும் பேர்டின் கூடாரத்திற்குச் சென்றார்கள். ரெபெக்கா குனிந்து கர்ப்பிணியைப் பார்த்தாள். பிறகு, இவான்ஸிடம் திரும்பி "குழந்தைகளை வெளியே அழைத்துக் கொண்டுபோ, விஜி, நம்முடைய படுக்கையில் சிலர் படுக்கட்டும், மற்றவர்களை, பாச், மாக், பெயர்மன் யாருடைய கூடாரத்துக்காவது அனுப்பு" என்றாள்.

பேர்டு குழந்தைகளை எழுப்பினான். "எய், எலிஜபெத், எய் குட்டி, எழுந்திரு, அம்மாவுக்கு உடம்பு சௌகர்யமாக இல்லை" என்று அவன் கத்தினான். குழந்தைகள் கண்களைக் கசக்கிக்கொண்டே படுக்கையில் உட்கார்ந்தன. தூக்கந்தெளியாமல் படுக்கையில் சாய்ந்தன. பேர்டு அவர்களை அழைத்துக்கொண்டு வெளியே சென்றான். இவான்ஸ் கணப்பில் கட்டையைத் தள்ளி நன்றாக எரிய விட்டான். இரண்டு கெட்டில்களில் தண்ணீர் நிரப்பிச் சுடவைத்தான்.

தண்ணீர் சுட்டதும் ரெபெக்காவிடம் இவான்ஸ் சொன்னான்: "பெக்கி, இரண்டு கெட்டில் நிரம்பச் சூடான நீர் இருக்கிறது. பாச்சின் மனைவியையும் அமாந்தாவையும் அழைத்து வருகிறேன். ஜூடித்தை யும் வரச் சொல்லட்டுமா?"

பெக்கி பதில் சொல்லவில்லை. ஸ்ரீமதி போர்டின் முனகலும் விசும்பலும் அதிகரித்தது. அவள் படுக் கையில் புரண்டாள். "போர்டு சொன்னது சரிதான், பிரசவ நேரம் நெருங்கிவிட்டது" என்று வாய்விட்டு பெக்கி சொன்னாள். இவான்ஸ் வெளியே சென்று ஜூடித்தை அழைத்து வந்தான். கெட்டிலிருந்த நீர் கொதிக்க ஆரம்பித்தது. குப்குப்பென்று ஆவி கிளம் பிக் கொண்டிருப்பதையே போர்டு பார்த்துக்கொண் டிருந்தான். இவான்ஸ் அவனருகில் வந்து அமர்ந் தான். துணையாக அங்கிருப்பதைத் தவிர வேறு ஏதுமே செய்வதற்கு அவனுக்குத் தோன்றவில்லை.

இரவுமுழுவதும் ஸ்ரீமதி போர்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். கோழி கூப்பிடும் நேரத்தில் குழந்தை பிறந்தது. ஜீவனற்ற அந்தச் சடலத்தை வெளியே தள்ளி வயிற்றுப் பாரத்தைக் குறைத்துக் கொண்டாள் அவள். ஆற்றிலே மூழ்கி அவள் பட்ட பாட்டை ரெபெக்கா நினைத்துப் பார்த்தாள். பெரிய ஜீவனுக்குப் பதில் சின்ன ஜீவனை சாவு பலிக் கொண்டது.

எவ்விதச் சடங்குமின்றி அந்தச் சிசுவைப் புதைத் தார்கள். வெதர்பி பிரார்த்தனை நடத்தினார். வண்டி யில் படுக்கைபோட்டு, ஸ்ரீமதி போர்டை அழைத்துக் கொண்டு எல்லோரும் போர்ட் பாய்ஸை நோக்கிப் புறப்பட்டார்கள்.

22. மாக்கின் உதவி

ஆற்றங்கரை யோரமாக, பள்ளத்தாக்கில் பிரயாணம் செய்து அவர்கள் பாய்ஸ் கோட்டையை அடைந்தார்கள். கூடாரத்துக்கு வெளியே, நதி தீரத்தில் இவான்ஸூம் மற்ற நிர்வாக சபை அங்கத்தினர்களும் கூடினார்கள். டாட்லாக்கும், புரூவரும் போய்விட்டதால் அவர்களுக்குப் பதிலாக பாச்சும் ஷீல்ட்ஸூம் பதவி ஏற்றுக்கொண்டார்கள். இந்தப் புதிய நிர்வாக சபை, முன்பு இருந்ததை விடத் திறமைவாய்ந்ததாகவும் ஒற்றுமையுள்ளதாகவும் இருந்தது.

''இனிமேல்தான் பிரயாணம் மிகவும் கடுமையாக இருக்கும். கன்று காலிகளை ஓட்டிக்கொண்டு மலைமீது ஏறுவது எப்படி என்றுதான் யோசிக்கிறேன்'' என்றான் இவான்ஸ்.

''நாம் அவைகளை ஓட்டிக்கொண்டு செல்வோம். இதுவரையில் நாம் செய்த பிரயாணத்தைவிடக் கஷ்டமான பாதையாக இருக்காது என்று எனக்குத் தோன்றுகிறது. டல்லாஸிலிருந்து வில்லாமிட்டி வரையில் தானே கடினம்?'' என்றான் பாச்.

''இனிமேல் காட்டு வழியைப்பற்றிப் பேசிப் பலனில்லை. டிக் சம்மர்ஸ் மனம் வைத்தால்தான் நாம் காட்டுவழியை நம்பிச்செல்ல முடியும்!'' என்றான் இவான்ஸ்.

''அவனுக்கு என்ன வந்தது? நம்முடன்தானே வருகிறான்?'' என்று கேட்டான் ஷீல்ட்ஸ் ஆச்சரியம் ததும்பும் குரலில்.

''அவன் வழிகாட்டுவதாகத்தான் சொல்கிறான். ஆனாலும்....''

''ஆனாலும் என்ன? விளக்கமாகத்தான் சொல்லேன்.''

"டல்லாஸ் போய் சேருமட்டும் தான் அவன் வழி காட்டவேண்டும் என்று ஒப்பந்தம். அதற்காக மட்டுமே நாம் கூலிபேசினோம். நாம் எதிர்பார்த்ததை விட அதிகப் பொறுப்புடனும் சாகஸத்துடனும் அவன் கடமையைச் செய்துவிட்டான்."

"புதிதாக ஒப்பந்தம் செய்துகொள்வதில் தடை இருக்காது என்று எண்ணுகிறேன். இவான்ஸ், டிக் சம்மர்ஸுக்கு நாம் இன்னும் பணம் கொடுக்கலாம்" என்றான் மாக்.

"ரொம்ப சரி, உன்னைப்போலவே மற்றவர்களும் தயாராக இருக்கிறார்களா என்பது தெரியவேண்டும்" என்றான் இவான்ஸ் அமைதியாக.

"இவான்ஸ், நீ ஒப்பந்தத்தை முடித்துவிடு. மற்றவர்களைப்பற்றிக் கவலையில்லை. நானே கொடுத்துவிடுகிறேன். எல்லாருக்குமாகச் சேர்த்து" என்றான் பளிச்சென்று.

"அது முடியுமா? யோசிக்கத்தான் வேண்டும்" என்றான் இவான்ஸ்.

"இதற்கு யோசனை?" என்று கேட்டான் மாக்.

இவான்ஸ் பதில் சொல்லவில்லை. மாக்கின் யோசனையை ஏற்றுக்கொள்ள அவனுடைய தன்மதிப்பு இடங்கொடுக்கவில்லை. அவன் ஏழையல்ல, பாச்சும், பெயர்மனும் பிறர் தயவில் வாழ விரும்பமாட்டார்கள். மாக்கின் தர்ம சிந்தனையை ஏற்றுக்கொண்டு தம் தம் மதிப்பைக் குறைத்துக்கொள்ள எவருமே விரும்பமாட்டார்கள்.

மாக் விழித்துக்கொண்டான். "தன்னிடமிருந்து எவருமே தர்மம் கோரவில்லை, தயவு நாடவில்லை. எவருமே அதை விரும்பவில்லை, விரும்பமாட்டார்கள்" இப்படித்தான் எண்ணினான் அவன். இவான்ஸ்

யோசிக்கும்போது உடனே அவன் சொன்னன். "நான் கொடுத்துவிடுகிறேன் என்பதை நீங்கள் எவரும் தவருக நினைக்கவேண்டாம். நான் உங்களுக்காக முன் பணம் கொடுத்துவிடுகிறேன். சந்தர்ப்பம் வாய்த்த போது அவரவர் பங்குத்தொகையை என்னிடம் திருப் பிக் கொடுத்துவிடுங்கள். இந்த யோசனையை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்" என்ருன்.

இவான்ஸ் சந்தோஷத்துடன் தலையசைத்தான். "நல்ல யோசனைதான். ஆனல் வேறு மார்க்கம் இருக் கிறதா என்றும் நாம் ஆலோசிக்கவேண்டும்" என்ருன்.

"கன்று காலிகளை ஓட்டிச் செல்வது பற்றி டிக் என்ன சொல்லுகிருன்?" என்று கேட்டான் ஷீல்ட்ஸ்.

"அவன் சம்பந்தப்பட்ட மட்டில் வேண்டாம் என்றுதான் சொல்கிருன். சுற்றி வளைத்துக்கொண்டு போகாமல், காட்டுவழியை நம்பிக்கொண்டு நேராக வடக்கே சென்று வாலாவாலாவை அடைந்து விட லாம்" என்ருன் இவான்ஸ்.

"சுற்றிச் சென்ருல் எவ்வளவுதூரம் அதிகமா கும்?" என்று கேட்டான் பாக்.

"சுற்றிச் செல்வதில் காலதாமதம் மட்டுமல்ல, வழியிலிருக்கும் காவல் கோட்டையில் நம்முடைய மாடுகளை நிறுத்தி விடுவார்கள். வான்குவாரை நோக்கி நாம் செல்லுவதால் வியாபார அனுமதிச் சீட்டு வழங் கிய பிறகே அங்கிருந்து கிளம்பமுடியும். சாதாரண மாக அவர்கள் அனுமதிச் சீட்டுக் கொடுத்து விடுகிருர் கள் என்றே கேள்விப்படுகிறேன்."

"அதை நிச்சயமாக நம்ப முடியாது, அல்லவா? ஒரு வேளை அவர்கள் மறுத்துவிடக்கூடும்?" என்று சந்தேகத்தை எழும்பினன் பெயர்மன்.

"மேலும் ஒரு கஷ்டமும் இருக்கிறது. வாலாவாலா விலிருந்து நாம் நதியைக் கடந்து செல்லவேண்டும்.

அதற்கும் பணச் செலவு ஏற்படும். படகின் மூலமாகத் தான் நாம் மறுகரைக்குப்போக முடியும். படகோட்டும் இந்தியர்களுக்கு, பொன்னும் மணியும் நாணயங்களும் தரவேண்டும்."

"மாடுகளையும் கன்றுகளையும் அழைத்துச் செல்ல வேண்டுமே. வழியிலே பட்ட கஷ்டங்களும் நஷ்டங்களும் எண்ணும்போது பிரமிப்பாகத்தானிருக்கிறது."

"கஷ்டமான பிரயாணம் என்ற சொல்லே நாராசமாக இருக்கிறது எனக்கு. மேலும் மேலும் கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு செல்வதா?" என்றான் ஷீல்ட்ஸ்.

"ஹிக்கின்ஸ், பாட்டர், இன்ஸ்கோ, மாஸ்—போன்ற தனிக்கட்டைகளும் பிரம்மச்சாரிகளும் என்ன செய்யப்போகிறார்கள்? நம்முடன் இருப்பார்களா? அரிகான் நகரத்துக்குச் செல்வார்களா?" என்று கேட்டான் பாச்.

"அப்படித்தான் ஒப்பந்தம்" என்றான் பெயர்மன்.

"அவர்கள் கன்று காலிகளை ஓட்டிவரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மாட்டார்களா?"

"அமயம் சமயம் என்றால் பரவாயில்லை. முழுப் பொறுப்பையும் அவர்களுடைய தலையில் கட்டிவிட முடியாது" என்றான் இவான்ஸ்.

"சரி, நான் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்" என்றான் மாக் பளிச்சென்று.

"எங்களைப் போல்தான் நீயும், மாக். அதிகப் பொறுப்பு ஏற்றுக்கொள்வதை ...."

"என்னிடம் விட்டு விடுங்கள். உங்கள் எல்லாரையும்விட என்னிடம்தான் அதிகமாக மாடுகள் இருக்கின்றன. அவற்றைக் கவனித்துக்கொள்ள ஆளும் இருக்கிறான்" என்றான் மாக்.

"அப்படியானால் அமாந்தா என்ன செய்வாள்?"

"ஏன், உங்களுடன் வருகிறாள். வரக்கூடாதா?"

"அதற்காக சொல்லவில்லை, மாக். இனிமேல் நாம் வண்டிகளில் செல்லமுடியாது என்று டிக் சொல்கிறான். ஒன்று குதிரை சவாரி, அல்லது நடை...."

"குதிரைமீது அவள் சவாரி செய்வாள். என்னுடைய சாமான்களை, உங்களில் ஒருவர், நதி மூலமாகக் கடத்தி விடுங்கள். சுற்று வழியில் செல்லாமல் நதியைக் கடந்துசெல்ல நீங்கள் துணிந்தால் என் மனைவியும் உங்களுடன் வருவாள்" என்றான் மாக்.

"சரி" என்றான் இவான்ஸ். பிறகு அவன் ஒவ்வொருவராக அபிப்பிராயம் கேட்டான். கஷ்டத்தையும் சுகத்தையும் அவர்கள் ஒன்றாக இருந்து அனுபவிக்கவே விரும்பினார்கள். மாக், தன்னுடைய நிலைமையை உணர்ந்தான். மிகவும் பெரியதொரு பொறுப்பை வலிய ஏற்றுக்கொண்டிருப்பதை அறிந்தான். அவனிடமுள்ள பணத்தைப் பகிர்ந்துகொள்ள எவரும் முன்வரவில்லை. ஆனால், அவனுடைய உழைப்பைப் பெற்றுக்கொள்ள எவரும் தயங்கவில்லை. அது சரியான முடிவாகவே அவனுக்கும் தோன்றிற்று.

"மாக்கின் தியாகத்தை, மாக்கின் துணிச்சலைப் பாராட்டவேண்டும்" என்றான் பெயர்மன் இவான்ஸிடம்.

மாக் எழுந்தான். "நம்முடைய முடிவு ஏகோபித்ததுதானே! நானும் பிரம்மச்சாரிகளும் இந்த நிமிஷமே பொறுப்பேற்றுக்கொள்ளுகிறோம்" என்றான்.

மற்றவர்கள் ஆமோதித்தார்கள்.

23. மலைமீது......

பாய்ஸிலிருந்து டல்லாஸ் மார்க்கம்தான் கடைசிக் கட்டம். மேலே மேலே, அவர்கள் ஏறிச்செல்லவேண்

டும். செங்குத்தான குன்று, கிடு கிடு பாதாளம், மலைச்சரிவு, ஏற்றம். கடைசிச் சோதனை! இயற்கையின் சவாலை எதிர்க்கும்-ஏற்கும் கட்டம்! பல வருஷங்களுக்கு முன்பு, ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால், சமவெளிகளிலிருந்த மனிதர்கள் கண்ட கனவுக்குப் பதில் இப்போது கிடைத்துவிட்டது, மனித சாகஸத்துக்கு அப்பால்பட்ட செய்கை என்று எண்ணியதை அவர்கள் சாதித்துவிட்டார்கள். சந்தேகம், சஞ்சலம், பயம் என்று மனத்துடிப்புடனிருந்த நாட்கள் கழிந்துவிட்டன. இனிச் சம்சயத்துக்கு இடமில்லை. கனவு நனவாகும் நன்னாள் நெருங்கிவிட்டது. மனசை அடக்கிக்கொண்டு, மேலே செல்லவேண்டும். பனிதோய்ந்த அதோ அந்தச் சிகரங்களை எட்டிப்பிடித்து மறுபுறம் பார்த்தால், விசாலமான பள்ளத்தாக்கில் கம்பீரமாக ஓடும் கொலம்பியா நதியைப் பார்க்கமுடியும்.

போகும் வழியில் இவான்ஸின் வண்டிகள் அச்சு முறிந்து நொருங்கின. சக்கரம் தேய்ந்து விழுந்தன. குறுகலான பாறை வழியில், பயங்கரமான பள்ளத்தாக்குக் கீழே தெரிய, அவர்கள் பன்னிரண்டு மைல் தூரம் நடந்து முகாம் அடித்தார்கள். படுக்கையை விரித்துப் படுக்கும்போது ஒவ்வொருவர் மனத்திலிருந்தும் பாரம் இறங்கிவிட்டது. கடுமையான பாட்டைகளைக் கடந்துவிட்டோம் என்று சந்தோஷத்துடன் நெட்டுயிர்ப்பு விட்டு உறங்கலானார்கள்.

ஆனால் அவர்களுடைய சந்தோஷம் நீடிக்கவில்லை. கடினமான சில பாறைகளும், பாட்டைகளும் அவர்களை எதிர் நோக்கியிருந்தன.

மூன்று நாட்களாகத் தொடர்ந்து, இவான்ஸும் மற்றவர்களும், அந்த மலைப்பிரதேசத்தில், ஆபத்து நிறைந்த பாறைவழிகளில் சென்றுகொண்டேயிருந்தார்கள். பனிகாலம் நெருங்கிவிட்டாலும், நல்லவேளை

யாக, மலைத் தாழ்வரைகளில் பனிபடரவில்லை. நாற்புற மும் கம்பீரமாக, நீலநிறங் காட்டி நிற்கும் சிகரங்கள் அழகும், பிரமிப்பும் வசீகரமும் பயமும் காட்டி நின் றன. பனிகாலம் ஆரம்பமாகவில்லை என்றாலும் அவ்வப் போது மழையும், பனித்தூவானமும் வீசிக்கொண் டிருந்தது. மரங்களிலிருந்த இலைகள் பழுப்பேறி உதிர ஆரம்பித்தன. அந்தப் பிரதேசத்தைத் தாண்டிவிட் டாலும் பனிகாலம் ஆரம்பமாவதற்குள் அரிகான் பிர தேசத்தை யடைந்து, மழையும் பனியும் தாக்காது ஒதுங்க, வீடுகளைக் கட்டிக்கொள்ள அவகாசமிருக் குமா என்று எண்ணுவதில்தான் இவான்ஸின் பொழு தில் பெரும் பகுதி கழிந்தது.

வளைந்து வளைந்து ஒருவர்பின் ஒருவராக வரும் ஜனக்கூட்டத்தை அவன் நின்று கவனித்தான். ஆண் களும் பெண்களும், சிறுவர்களும் சிறுமிகளும், பால் குடிக்கும் கைக்குழந்தைகளும் இருந்தார்கள். மாடு களும் கன்றுகளும், குதிரைகளும் கோவேறு கழுதை களும் இருந்தன. குடும்பத்துக்கு வேண்டிய சாமான் களும் பின்னே வந்துக்கொண்டிருந்தன. அவ்வளவு பேர்களும் சாமான்களும்....லட்சிய பூமியை நோக் கிச் செல்ல....இவான்ஸின் மனம் பூரிப்படைந்தது.

மறுநாள் அவர்கள் ஒரு மலையேறி அப்பால் இறங் கினார்கள். ஐந்தாறு குன்றுகளையும் பள்ளத்தாக்கு களையும் கடந்து சென்றார்கள். இயற்கையின் பூர்ணப் பொலிவைக் கண்டு அவர்கள் திகைத்து நின்றார்கள்.

நாற்புறமும் ஓங்கி உயர்ந்து நிற்கும் மலைகளின் நடுவே, மலைத்தாழ்வரையில் பத்து மைல்கள் கடந்து முகாமிட்டார்கள். மறுநாள் ஒன்பது மைல்கள் கடந்து நீல மலைகளின் தாழ்வரைகளின் எல்லையை அடைந் தார்கள்.

போகப் போக அவர்களுடைய பாட்டை சரிந்து சென்றது, மரங்களும் செடிகளும் பின்தங்க, அவர்கள்

இறங்கி இறங்கிச் சமவெளியை நோக்கி நடந்தார்கள். பச்சைப் பசேலென்ற புல்வெளியும், உமாதிலா பிரதேசமும் கடந்து, மீண்டும் சில குன்றுகளைக் கடந்து மலைச்சரிவில் ஏறத்துவங்கினார்கள். பனி படர்ந்திருக்கும் சிகரங்கள் வானைத் தொட்டு நிற்பதும், அதன் கீழே நின்றுக்கொண்டு அந்தக் காட்சியை அனுபவிப்பதும் இவான்ஸுக்கு உணர்ச்சி யூட்டியது. தாழ்வரையைத் தாண்டி அப்பால் சென்றுவிட்டால், கொலம்பியா பள்ளத்தாக்குதான். முகட்டிலேறிச் செல்லும்போது, தூரத்தில் பசுமைப் போர்வையுடன் வளைந்து செல்லும் கொலம்பியா நதி ஓடிக்கொண்டிருப்பது தென்பட்டது.

மலைப்பிரதேசத்துக்கும் பள்ளத்தாக்குக்கும் இடையே இருந்த வறண்ட பிரதேசத்தைக் கடந்து அவர்கள் முன்னேறினார்கள். ஜன சந்தடியற்று, பயங்கரமாக இருக்கும் அந்தப் பகுதியில், கம்பீரமான தோற்றத்துடன் நதி ஓடிக்கொண்டிருந்தது.

பாறைகளும், முகடுகளும் தாண்டி ஓடிக்கொண்டிருந்தது. கீழேயிருக்கும் கூழாங்கற்களும் மணலும் தெரியும்படித் தெளிந்த நீரோட்டம். ஆம்! இந்த நதி வழியே அவர்கள் அரிகானுக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். இதுதான் பிரயாணத்தின் கடைசிக் கட்டம்.

“டல்லாஸுக்கு இன்னும் நான்குநாள் பிரயாணம் தான்” என்று டிக் சொன்னதும் இவான்ஸ் அவனை ஆச்சர்யத்துடன் பார்த்தான். சந்தோஷமும் பிரமையும் சூழ அவன் திகைத்து நின்றான்.

24. அரிகான் வாழ்க!

டல்லாஸிலிருந்து ஐம்பது மைல் தூரம் அவர்கள் வந்துவிட்டார்கள். வான்குவாரை நோக்கிச் செல்லும் அந்த வழியில் ஆறுமைல் தூரத்தில் வில்லாமெட்டி

இருக்கிறது. நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டு, வந்த வழியைத் திரும்பிப் பார்த்தான் இவான்ஸ், நதியினூடே வந்த குறுகிய பூமியிலும், பிறகு படகுகளிலும் பிரயாணம் செய்து அவர்கள் வந்துவிட்டார்கள். பயங்கரமான பாறைகளையும், சுழல்களையும் சமாளித்துக்கொண்டுமுன்னேறி விட்டார்கள். "பாய்கட்டிவிட்டு, காற்றுக்காக காத்திருக்கவேண்டியதுதான்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான் இவான்ஸ்.

நதியின் ஓரமாக இருந்த குறுகிய அந்தப் பாதையில் மிகவும் துணிச்சலுடன் அவர்கள் பிரயாணம் செய்தார்கள். சின்னஞ்சிறு பொருளைக்கூட இழக்காமல் அத்தனை சாமான்களையும், மனிதர்களையும் இவான்ஸ் அப்புறப்படுத்திக்கொண்டு வந்து விட்டான்.

மேற்கே சாய்ந்துகொண்டிருந்த சூரியனை இவான்ஸ் பார்த்துக்கொண்டே, "இருட்டும் வரையில் இங்கு தங்கிச் செல்லலாம்" என்று எண்ணினான். டல்லாஸிலிருந்து அவர்கள் படகுகளில் பிரயாணமானார்கள். படகுகளாவது? வண்டிகளை மிதக்கவிடச் செய்த கட்டுக்கோப்பு! மனிதர்களைத் தூக்கிச் செல்ல இணைத்த கட்டுமரம்! மிகவும் துணிச்சலுடன் அவர்கள் இந்தப் படகுகளில் பிரயாணம் செய்தார்கள். இவான்ஸ், பேர்ட், பெயர்மன், ஒவ்வொருவரும், தனித்தனியே பிரயாணம் செய்தார்கள்.

ஓங்கி வளர்ந்த மலைகளின் நடுவே அமைதியாக ஓடும் நதியைப் பிளந்துகொண்டு செல்வதுபோல அவர்களுடைய படகுகள் வரிசையாகச் சென்றன. இருபுறமும் பிரம்மாண்டமாக உயர்ந்து நிற்கும் அந்த மலைகள் பார்ப்பதற்குப் பயங்கரமாகவும் ரம்மியமாகவும் இருந்தன. அதோ—அதோ—அவர்களுடைய லட்சிய பூமி! அரிகான்! அரிகானை அவர்கள் நெருங்கிவிட்டார்கள்.

டல்லாஸில் அவர்கள் சிறு சிறு கோஷ்டிகளாகப் பிரிந்தார்கள். மாக், வண்டிகளை ஓட்டிக்கொண்டு தரைமார்க்கமாக வருவதாகச் சொல்லி நின்றுவிட்டான். பாச்சும் மற்றவர்களும், கூலிக்குப் படகுகள் கிடைக்கும்வரை காத்திருக்க வேண்டியதாயிற்று. டார்டி, சொந்தமாகவே ஒரு கட்டுமரம் கட்டுவதில் முனைந்துவிட்டான்.

இவான்ஸ் அவர்களிடம் சுமுகமாக விடை பெற்றுக்கொண்டான். அவர்களைவிட்டுப் பிரிகிறோமே என்ற வருத்தமோ, ஆதங்கமோ கொள்ளவில்லை. ஆனால் டிக் விடை பெற்றுக்கொண்டபோதுதான் அவனுக்குத் தாங்காத துயரமளித்தது. தங்களுடன் வந்து அரிகானில் ஸ்திரவாச மேற்றுக்கொண்டு விடுமாறு அவன் பன்முறை டிக்கைக் கேட்டுக்கொண்டிருக்கிறான். ஒவ்வொரு தடவையும் அவனுக்குக் கிடைத்த பதில் புன்சிரிப்புத்தான். இனிமேல் அவர்களுக்கு டிக் சம்மர்ஸின் உதவி வேண்டியதில்லை. அவனுடைய ஆலோசனையோ, சாகஸமோ வேண்டியதில்லை. அவனுடைய கடமை முடிந்துவிட்டது. டிக் விடைபெற்றுக்கொள்ள விரும்பினான். இவான்ஸ் பதில் சொல்லவில்லை. டிக் சம்மர்ஸை விட்டுவிட அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. அவன் சிறந்த நண்பன், உபகாரி, துணிச்சலும் அறிவும் நிரம்பிய தலைவன். அவனை தங்களுடன் நிறுத்திக்கொள்வதற்கான மார்க்கத்தைப் பற்றி இவான்ஸ் யோசிக்கலானான்.

''டிக், இனிமையான இரவு, நல்ல காற்று'' என்று ஆரம்பித்தான் இவான்ஸ்.

''ஆமாம், இந்தக் கடற்கரைப் பிரதேசம் பிடித்துவிட்டால் நல்ல இடம்தான்.''

''கடற்கரைப் பிரதேசமாக இருந்தால் என்ன?''

''ஒன்றுமில்லை, எனக்கு என்னுடைய தேசம்தான் உயர்வாகத் தோன்றுகிறது.''

"இங்கே தங்கிவிட்டால் பழகிப்போய்விடும். இந்த நாட்டையும் விரும்ப ஆரம்பித்துவிடுவாய்."

"என்னால் முடியாது."

"டிக், எங்களுடன்தான் சிலகாலம் தங்கிப் பாரேன்."

"முடியாது, நான் விரும்பவில்லை."

"நீ என்ன செய்யப்போகிறாய்?"

"வந்த வழியே திரும்பி நம்முடைய ஊர் செல்லப் போகிறேன்."

"எப்போது?"

"நாளையே திரும்ப உத்தேசிக்கிறேன்."

"டிக், நன்றாக யோசித்தாயா? உன்னிடம் இப் போது குதிரைகூட இல்லையே? வசதியில்லாமல் எப் படிச் செல்வாய்?"

"போகும் வழியில் எங்காவது குதிரை கிடைத்து விடும். என்னிடமுள்ள துப்பாக்கி போதும் வழித் துணைக்கு."

"டிக், ஒரு மனிதன் ஆயுள் முழுவதும் அலைந்து கொண்டேயிருப்பது விரும்பத்தக்கதல்ல."

"அவன் எப்போதுமே தனியாக இருப்பதில்லை, விஜி!"

"போகட்டும், எங்களுடன் சிலகாலம் தங்கிச் செல்லலாம், டிக்."

"நான் விரும்பவில்லையே, விஜி."

"மற்றவர்களைச் சார்ந்து நீ வாழப்போவதில்லையே. கன்னிமண்ணை ஓட்டி நீயும் பாடுபடலாம். அரிகானில் எங்களுடைய கோஷ்டிக்குத் தலைவனாகப் பெருமை யுடன் வாழலாம்."

"எனக்கு பதவியில் ஆசை இல்லே, விஜி, உன்னுடைய அன்பிலும் சந்தேகம் கொள்ளவில்லே. நான் திரும்பிச் செல்ல நிச்சயித்துவிட்டேன்."

"எங்களுடன் நீ வாழவேண்டும் என்று மீண்டும் ஒருமுறை உன்னே மனப்பூர்வமாக அழைக்கிறேன்."

"விஜி, உன்னே எனக்குத் தெரியும். உன்னுடைய வழிகளே வேறு—என்னுடைய பாதையே வேறு."

"சரி, இப்போது எங்கே செல்லப்போகிருய்?"

"நிச்சயப்படுத்தவில்லே. பிரிட்ஜ்ஜர் பகுதிக்குச் செல்வேன். கரடிகள் நிறைந்த பிரதேசம் அல்லது இந்தியர்கள் வாழும் பகுதிக்குக்கூட ...."

"நீ மலேப்பிரதேசத்தைத் தாண்டுவதற்குள் பனி காலம் ஆரம்பமாகிவிடுமே, டிக்?"

"ஆமாம்."

"உன்னேப் போன்ற அறிவாளிகளுக்கு இத்தனே பிடிவாதம் கூடாது."

"தவருக எடுத்துக்கொள்ளாதே, விஜி, உன்னேயோ உன்னுடைய குடும்பத்தாரையோ பிடிக்காமல் நான் செல்கிறேன் என்று நினேக்காதே."

"டிக், அரிகானில் நாம் குடியேறி இந்த நாட்டை அமெரிக்காவின் பகுதியாகச் செய்வது பெரிய காரியமல்லவா?"

"வாஸ்தவம், நீங்கள் எல்லாரும் இருக்கிறீர்களே! நான் மீண்டும் ஒருமுறை போபோ அஜியைப் பார்க்க விரும்புகிறேன்."

"போபோ அஜியா?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டான் விஜி. அது என்ன? எங்கே இருக்கிறது. ஏன் அதைப்பார்க்க டிக் விரும்புகிருன் என்று விஜி கேட்கவில்லே. அதைப்பற்றி அவன் கவலேப்படவும் இல்லே.

"காலையில் சந்திக்கிறேன், இவான்ஸ்" என்று டிக் விடைபெற்றுக்கொண்டான்.

"நிச்சயமாகவா?" என்று கேட்டான் இவான்ஸ்.

ஆனால் மறுநாள் அவன் இவான்ஸைச் சந்திக்கவில்லை. இவான்ஸ் அதிகாலையில் எழுந்திருக்குமுன்னேயே—மற்றவர்கள் எழுந்திருக்குமுன்னேயே—இருட்டில் அவன் மறைந்துவிட்டான்.

பாறைகளும், பசுமை நிறைந்த குன்றுகளும் இருபுறமும் இருக்க, பரந்த வெளியில் நதி விரிந்து ஓடிக்கொண்டிருந்தது. தலைக்குமேல் நீலவானமும், எட்டவில் இருபுறமும் வானைத்தொடும் மலைகளும் தாண்டி அவர்கள் சென்றார்கள். ஆரமும் அணிகலனும் போட்டுக்கொண்டதுபோல மலைகளில் அருவிகள் பளிச்சிட்டு வழிந்துகொண்டிருந்தன. பகல், இரவு, அதிகாலை, அந்திநேரம் எப்போதுமே, காற்றின் வேகத்திலும் கைவலிமையிலும், மெதுவாகப் படகுகள் செல்ல அவர்கள் போய்க்கொண்டேயிருந்தார்கள். கஷ்டங்கள் விலகி, இன்ப நாட்கள் எதிரே நின்றன. அமைதியான இரவு, ஓய்வு நிறைந்த தூக்கம், ரொட்டியும், அரிசியும், மீனும் நிறைந்த சாப்பாடு!

டிக்கின் பிரிவு இவான்ஸின் நெஞ்சிலேயுள்ள நரம்பைத் தொட்டுவிட்டது. இடையூறுகள், இன்னல்கள், துன்பம், துயரம், பிரிவு! எல்லாம் சகித்துக்கொண்டு அவர்கள் முன்னேறிவிட்டார்கள்! துன்பத்தில் தான் இன்பம் காணமுடியும் என்பது லிஜிக்குத் தெரியும். துயரமில்லாவிட்டால் இன்பத்தின் சுவை இனிக்காது என்பது அவன் அறிந்ததுதான். வேரூன்றி, இனிமையான சுகவாழ்வுபெற, துன்பமும் துயரமும் உரமாக இருக்கவேண்டும்.

அதோ—அதோ—பசுமை நிறைந்த சமவெளிக்கு அப்பால், அடிவானத்தில், கோடிட்டதுபோல

வான்குவார் கோட்டையின் உருவம் தெரிகிறதே! அதோ கடற்கரையில் ஒரு கப்பல் நிற்பதுபோலத் தோன்றுகிறதே! அதற்கிடையே நெருங்கிய மரங்கள் அடர்ந்த கானகத்துக்கு அப்பால் வில்லாமெட்டி இருக்கிறது.

இவான்ஸ் நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். அவனுடைய படகை நெருங்கினாற்போல பேர்டின் படகும் பெயர்மனின் படகும் வந்துகொண்டிருந்தன. லட்சிய பூமியை அடைந்து விட்டோம் என்ற திருப்தியும் சந்தோஷமும் பொங்க, பெக்கி மெர்ஸியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். ப்ரௌனியும் அங்கு இருப்பதை இவான்ஸ் கவனித்தான்.

மெர்ஸி, வீட்டுக்குச் சந்தோஷமூட்ட, அழகான குழந்தையைப் பெறப் போகிறாள் என்று ரெபெக்கா சந்தோஷமடைந்தாள். 'என்னுடைய பாரம்பரை, இரத்தத்தின் ரத்தம்' என்று இவான்ஸ் நினைத்தான். ஆனால் அது? அவனுடைய வம்சத்தின் . . . .

சந்தோஷம் பொங்க, திருப்தியும் நிறைவும் ஏற்பட அவன் ரெபெக்காவைப் பார்த்தான். ஆனந்த மிகுதியால் அவனுடைய தொண்டை கரகரத்தது. கனைத்துக் கொண்டு அவன் "பெக்கி" என்று கூப்பிட்டான். பிறகு உரத்த குரலில் "வாழ்க அரிகான்" என்று கத்தினான்.

எதிர்ப்படம்

முன்பு வண்டிகள் போன புழுதி நிறைந்த வழி இப்பொழுது மோட்டார் செல்லும் பாதையாக மாறியுள்ளது. இதை ஆட்டுமந்தை ஒன்று கவலையின்றிக் கடந்துபோவதைக் காண்கிறோம்.

பின்புறப்படம்

ஒருகாலத்தில் அடைய முடியாதபடி உபயோக மற்றனவாய்க் கிடந்த மலைக்கூட்டங்கள் இப்பொழுது பல்லாயிர அமெரிக்க விவசாயிகளுக்கு மின்சாரமும், நீர்ப்பாசன வசதியும் அளிக்கும் மாபெரும் கருங்கல் அணைக்கட்டைத் தாங்கி நிற்கின்றன.